1136

ஸ்ரீ

முமுக்ஷுப்படியும்,

அதன் வ்யாக்யானமான

திருமந்த்ரார்த்தமும்.

சே. கிருஷ்ணமாசாரியர்,
தமிழ்ப்பண்டிதர்,

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தகசாலை,
திருவல்லிக்கேணி.

விலை ரூ. 1 8 0

O22:417
N23
68167

ஸ்ரீ

பிள்ளைலோகாசார்யர்

திருவாய்மலர்ந்தருளின

முமுக்ஷுப்படியும்,

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

திருமந்த்ரார்த்தம்

என்கிற

வ்யாக்யாநமும்,

அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு இவைகளுடன்

சே. கிருஷ்ணமாசாரியரால்

திருவல்லிக்கேணி

ஸக்ஸஸ் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

துந்துபி௵ 1923 ரூபா 1—8—0

சே. கிருஷ்ணமாசாரியர்,

தமிழ்ப்பண்டிதர், ப்ரொப்ரைடர்,

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தகசாலை,

19, தென்னண்டை மாடவீதி,

திருவல்லிக்கேணி.

O122:417
N23
68167

இப்புத்தகத்தில் அடங்கியவை.

20 JUN 1923

		பக்கம்.
க.	தனியன்கள் ...	1
உ.	முமுக்ஷுப்படியின் வ்யாக்யாந அவதாரிகை	5
ங.	திருமந்த்ரப்ரகரணம் ...	7
ச.	த்வயப்ரகரணம்	84
ரு.	சரமஸ்லோகப்ரகரணம் ...	129
சா.	*ப்ரமாணத்திரட்டு ...	187

---

* இந்த ப்ரமாணத்திரட்டும், அரும்பதவுரையும் - நமது ஸ்ரீவை. மூ. கோபால க்ருஷ்ணமாசாரியரால் எழுதிச் சேர்க்கப்பட்டன.

ஸ்ரீமந். மணவாளமாமுனிகள்.



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

20 JUN 1923

ரஹஸ்யங்களைத்

தொடங்ும்போது அநுஸந்திக்கும் தனியன்கள்.

பொதுத்தனியன்கள்.

(அழகியமணவாளன் அருளிச்செய்தது.)

[illegible]
[illegible]

[ஸ்ரீசைலேஶதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்।
யதீந்த்ரப்ரவணம்வந்தே ரம்யஜாமாதரம்முநிம்.]

(ஆழ்வான் அருளிச்செய்தது.)

[illegible]
[illegible]

[லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்।
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தேகுருபரம்பராம்.]

(ஆளவந்தார் அருளிச்செய்தது.)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[மாதாபிதா யுவதயஸ் தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவ நியமேந மதந்வயாநாம் ।
ஆத்யஸ்யநஃகுலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்நா.]

(பட்டர் அருளிச்செய்தது.)

𑌭𑍂𑌤𑌂 𑌸𑌰𑌶𑍍𑌚 𑌮𑌹𑌦𑌾𑌹𑍍𑌵𑌯 𑌭𑌟𑍍𑌟𑌨𑌾𑌥
𑌶𑍍𑌰𑍀𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌾𑌰𑌕𑍁𑌲𑌶𑍇𑌖𑌰 𑌯𑍋𑌗𑌿𑌵𑌾𑌹𑌾𑌨𑍍 ।
𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌰𑍇𑌣𑍁𑌪𑌰𑌕𑌾𑌲 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌮𑍁𑌨𑌿𑌂 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 ॥

[பூதம்ஸரஸ்சமஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலஶேகர யோகிவாஹாந் ।
பக்தாங்க்ரிரேணுபரகால யதீந்த்ரமிஶ்ராந்
ஸ்ரீமத்பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மிநித்யம்.]

ரஹஸ்யார்த்த ஸம்ப்ரதாயபரம்பரையின் ஒட்டுத்தனியன்.

𑌲𑍋𑌕𑌗𑍁𑌰𑍁𑌂 𑌗𑍁𑌰𑍁𑌭𑌿𑌸𑍍𑌸𑌹 𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌃 𑌕𑍂𑌰𑌕𑍁𑌲𑍋𑌤𑍍𑌤𑌮𑌦𑌾𑌸𑌮𑍁𑌦𑌾𑌰𑌮𑍍 । 𑌶𑍍𑌰𑍀𑌨𑌗𑌪𑌤𑍍𑌯𑌭𑌿𑌰𑌾𑌮𑌵𑌰𑍇𑌶𑍌 𑌦𑍀𑌪𑍍𑌰𑌶𑌯𑌾𑌨𑌗𑍁𑌰𑍁𑌂𑌚 𑌭𑌜𑍇𑌹𑌮𑍍 ॥

[லோககுரும் குருபிஸ்ஸஹபூர்வைஃ கூரகுலோத்தமதாஸமுதாரம். ஸ்ரீநகபத்யபிராமவரேஶௌ தீப்ரஶயாநகுருஞ்ச பஜேஹம்]

பூர்வோக்தகுருபரம்பரைக்கு ப்ரத்யேக தனியன்கள்.

ஈயுண்ணி பத்மநாபர் அருளிச்செய்தது.

பிள்ளைலோகாசார்யர் தனியன்.

𑌲𑍋𑌕𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌯 𑌗𑍁𑌰𑌵𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌾𑌦𑌸𑍍𑌯 𑌸𑍂𑌨𑌵𑍇 ।
𑌸𑌂𑌸𑌾𑌰𑌭𑍋𑌗𑌿𑌸𑌨𑍍𑌦𑌷𑍍𑌟 𑌜𑍀𑌵𑌜𑍀𑌵𑌾𑌤𑌵𑍇 𑌨𑌮𑌃 ॥

[லோகாசார்யாயகுரவே க்ருஷ்ணபாதஸ்யஸூநவே ।
ஸம்ஸாரபோகிஸந்தஷ்ட ஜீவஜீவாதவேநமஃ]

திருவாய்மொழிப்பிள்ளை அருளிச்செய்த

கூரகுலோத்தமதாஸர் தனியன்.

𑌲𑍋𑌕𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌕𑍃𑌪𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌕𑍌𑌣𑍍𑌡𑌿𑌨𑍍𑌯𑌕𑍁𑌲𑌭𑍂𑌷𑌣𑌮𑍍 ॥
𑌸𑌮𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌗𑍁𑌣𑌾𑌵𑌾𑌸𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌕𑍂𑌰𑌕𑍁𑌲𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।

[லோகாசார்யக்ருபாபாத்ரம் கௌண்டிந்யகுலபூஷணம் ।
ஸமஸ்தாத்மகுணவாஸம் வந்தேகூரகுலோத்தமம்॥]

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

திருவாய்மொழிப்பிள்ளை தனியன்.

𑌨𑌮𑌃𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑌨𑌾𑌥𑌾𑌯 𑌕𑍁𑌨𑍍𑌤𑍀𑌨𑌗𑌰𑌜𑌨𑍍𑌮𑌨𑍇 ।
𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌲𑌬𑍍𑌧𑌪𑌰𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌕𑍈𑌙𑍍𑌕𑌰𑍍𑌯𑌶𑌾𑌲𑌿𑌨𑍇 ॥

[நமஶ்ஶ்ரீஶைலநாதாய குந்தீநகரஜந்மநே ।
ப்ரஸாதலப்தபரம ப்ராப்ய கைங்கர்யஶாலிநே ॥]

மணவாளமாமுனிகளுக்கு மாதாமஹரான

கோட்டூரழகியமணவாளப்பெருமாள்பிள்ளை தனியன்.

𑌲𑍋𑌕𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑌦𑌾𑌮𑍍𑌭𑍋𑌜 𑌰𑌾𑌜𑌹𑌂𑌸𑌾𑌯𑌿𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌜𑌲𑌧𑌿𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌸𑍌𑌮𑍍𑌯𑌵𑌰𑌂 𑌗𑍁𑌰𑍁𑌮𑍍 ॥

[லோகாசார்ய பதாம்போஜ ராஜஹம்ஸாயிதாந்தரம் ।
ஜ்ஞாநவைராக்யஜலதிம் வந்தேஸௌம்யவரம்குரும் ॥]

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாதரண்ணரையர் தனியன்.

𑌶𑍍𑌰𑍀𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌵𑌦𑌧𑍀𑌶𑌦𑌾𑌸𑌮𑌮𑌲𑌮𑌶𑍇𑌷𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌦𑌮𑍍 ।
𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌵𑌰𑌗𑍁𑌰𑍁𑌕𑌰𑍁𑌣𑌾𑌕𑌨𑍍𑌦𑌲𑌿𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑍍𑌦𑌿𑌰𑌂 𑌕𑌲𑌯𑍇 ॥

[ஸ்ரீஜிஹ்வாவததீஶதாஸமமல மஶேஷஶாஸ்த்ரவிதம் ।
ஸுந்தரவரகுருகருணாகந்தளித ஜ்ஞாநமந்திரம்கலயே॥]

ஸ்ரீஶைலேஶ தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் ।
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ॥ *

சாற்றும்போது அநுஸந்திக்கும் தனியன்கள்

(வாநமாமலைசீயர் அருளிச்செய்தது.)

கோதிலுலகாசிரியன் கூரகுலோத்தமதாதர்
தீதில்திருமலையாழ்வார் செழுங்குரவைமணவாளர்
ஓதரியபுகழ்த்திருநாவீறுடையபிரான்தாதருடன்
போதமணவாளமுனிபொன்னடிகள்போற்றுவனே.

வாழியுலகாசிரியன் வாழியவன்மன்னுகுலம்
வாழிமுடும்பையென்னுமாநகரம்—வாழி
மனஞ்சூழ்ந்தபேரின்பமல்குமிகுநல்லா
ரினஞ்சூழ்ந்திருக்குமிருப்பு.

ஓதுமுடும்பையுலகாசிரியனரு
ளேதுமறவாதவெம்பெருமான்—†நீதி
வழுவாச்சிறுநல்லூர் மாமறையோன்பாதந்
தொழுவார்க்குவாராதுயர்.

இதன்பிறகு "நமஶ்ரீசைல" என்று தொடங்கி ஸ்வாசார்ய பரம்பரைத் தனியன்களை முன்போல் அநுஸந்தித்து முடிக்கவேண்டும்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

சீயர் திருவடிகளே ஶரணம்.

---

* இதன்பிறகு ஸ்வாசார்யபரம்பரைத் தனியன்களை அநுஸந்திக்க வேண்டும்.

† 'நீதிவழி' என்ற பாடம் தளைதட்டும்.

முமுக்ஷுப்படியின் வ்யாக்யாந

அவதாரிகை.

ஸ்ரீய:பதியாய் ஸ்ரீவைகுண்டநிகேதநனாய் நித்யமுக்தாநுபாவ்யனாய் நிரதிஶயாநந்தயுக்தனாயிருக்கிற ஸர்வேஶ்வரன், அந்த நித்யஸூரிகளோபாதி தன்னை யநுபவித்து நித்யகைங்கர்யரஸராய் வாழுகைக்கு ப்ராப்தி யுண்டா யிருக்கச்செய்தேயும் அத்தை யிழந்து (க) ‘‘𑌅𑌸𑌨𑍍𑌨𑍇𑌵’’ [அஸந்நேவ] என்கிறபடியே அஸத்கல்பராய்க்கிடக்கிற ஸம்ஸாரிசேதநருடைய இழவை அநுஸந்தித்து, அத்யந்தவ்யாகுலசித்தனாய், இவர்கள் கரணகளேபரங்களை யிழந்து இறகொடிந்தபக்ஷி போலே கிடக்கிற தஶையிலே கரணாதிகளைக்கொடுத்து, அவற்றைக்கொண்டு [1] வ்யபிசரியாதே தன்னையாஶ்ரயித்து உஜ்ஜீவிக்கைக்கு உடலாக, அபௌருஷேயமாய் நித்யநிர்தோஷமாய் ஸ்வத:ப்ரமாணமான வேதத்தையும் ததுபப்ரும்ஹணங்களான ஸ்ம்ருதி இதிஹாஸ புராணாதிகளையும் ப்ரவர்த்திப்பித்தவிடத்திலும் அந்த ஶாஸ்த்ராப்யாஸத்துக்கு அநேகயோக்யதை வேண்டுகையாலே அவ்வழியாலே ஜ்ஞாநம்பிறந்து சேதநர் உஜ்ஜீவிக்கை அரிதாயிருக்கிறபடியைத் திருவுள்ளம்பற்றி, ஸகல ஶாஸ்த்ர தாத்பர்யங்களையும் ஸங்க்ரஹமாக இவர்கள் அறியலாம்படி பண்ணவேணுமென்று, ஸ்வரூபோபாயபுருஷார்த்த [2] யாதாத்ம்ய ப்ரதிபாதகமான ரஹஸ்யத்ரயத்தையும், ஸ்வயமேவ ஆசார்யனாய்நின்று ப்ரகாஶிப்பித்தருளினான்.

அதில், திருமந்த்ரத்தை ஸ்ரீபதரிகாஶ்ரமத்திலே ஸ்வாம்ஶபூதனான நரன்விஷயமாக ப்ரகாஶிப்பித்தான். த்வயத்தை ஸ்ரீவிஷ்ணுலோகத்திலே ஸ்வமஹிஷியான பிராட்டி விஷயமாக ப்ரகாஶிப்பித்தான். சரமஶ்லோகத்தைத் திருத்தேர்த்தட்டிலே ஸ்வாஶ்ரிதனான அர்ஜுநன்விஷயமாக ப்ரகாஶிப்பித்தான். ஆகையாலிறே, (உ) ‘‘𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂’’ [லக்ஷ்மீநாதஸமாரம்பாம்] என்று குருபரம்பராதியிலே ஈஶ்வரனை யநுஸந்திக்கிறது.

---

1. வ்யபிசரித்தல்—கண்டபடி திரிதல்.
2. யாதாத்ம்யப்ரதிபாதகம்—உண்மையான தன்மையை ப்ரதிபாதிப்பது.

இனி இந்த ரஹஸ்யத்ரயந்தான், ஶப்தம் ஸுஸங்க்ரஹமாயிருந்ததே யாகிலும் அர்த்தம் உபதேஶகம்ய மாகையாலும், அதறிந்தே எல்லார்க்கும் உஜ்ஜீவிக்க வேண்டுகையாலும், அந்த ரஹஸ்யத்ரயத்திலும் பூர்வாசார்யர்களுடைய உபதேஶபரம்பராப்ராப்தமான அர்த்தவிஶேஷங்களை ஸர்வர்க்கும் ஸுஸங்க்ரஹமாகவும் ஸுவ்யக்தமாகவும் பிள்ளைலோகாசார்யர் தம்முடைய பரமக்ருபையாலே இப்ரபந்தமுகேந அருளிச்செய்கிறார். முன்பே ரஹஸ்யத்ரயவிஷயமாக மூன்றுப்ரபந்தம் இட்டருளியிருக்கச்செய்தேயும், அதில் யாத்ருச்சிகப்படி அதிஸங்க்ரஹமாகையாலும், பரந்தபடி அதிவிஸ்த்ருதமாகையாலும், ஸ்ரீயஃபதிப்படி உபயதோஷமுமின்றிக்கே இருந்ததேயாகிலும் ஸம்ஸ்க்ருதவாக்ய பஹுளமாகையாலே பெண்ணுக்கும் பேதைக்கும் அதிகரிக்கப்போகாமையாலும், த்ரிவிததோஷமு மில்லாதபடி இன்னமும் ஒரு ப்ரபந்தமிடவேணுமென்று திருவுள்ளம்பற்றி எல்லாவற்றுக்கும் பின்பிறே முமுக்ஷுப்படியாகிற இப்ரபந்தம் இட்டருளிற்று.

ஆகையிறே, அல்லாத ப்ரபந்தங்கள் கிடக்க, இத்தை எல்லாரும் அதிகரித்துப்போருகிறது. இன்னமும் பூர்வப்ரபந்தங்களில் அநுக்தமான அர்த்தவிஶேஷங்களும் இப்ரபந்தத்திலே உண்டாகையாலும், இதுவே எல்லார்க்கும் ஆதரணீயமாயிருக்கும்.

வ்யாக்யாந அவதாரிகை முற்றிற்று.

—o—

முமுக்ஷுப்படி

திருமந்த்ரப்ரகரணம்.

மூலம்:—

(க) முமுக்ஷுவுக்கு அறியவேண்டும் ரஹஸ்யம் மூன்று.

வ்யாக்யாநம்:-(முமுக்ஷுவுக்கு அறியவேண்டும் ரஹஸ்யம் மூன்று.) முமுக்ஷுவாகிறான் மோக்ஷத்திலே இச்சையுடையனானவன். *"முச்ல் மோக்ஷணே" [முச்ல் மோக்ஷணே] யிறே தாது; இத்தால், ஸம்ஸார விமோசநத்தில் இச்சைபிறந்தவனுக்கு என்றபடி. ஆத்மப்ராப்தி காமனுக்கும் முமுக்ஷுத்வமுண்டேயாகிலும், இவ்விடத்தில் அவன் விவக்ஷிதனன்று. அவனுக்கு ரஹஸ்யத்ரயஜ்ஞாநாபேக்ஷை யில்லை யிறே. ஆகையால், இவர் முமுக்ஷுவென்கிறது, [1] பகவத்ப்ராப்தி காமதயா ஸம்ஸார நிவ்ருத்தியில் இச்சைபிறந்தவனை. [2] ஏவம்பூதனானவனுக்கு 'அறியவேண்டும் ரஹஸ்யம் மூன்று' என்றது—இவனுக்கு அவஶ்யம் ஜ்ஞாதவ்யமாயுள்ளது ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களாகையாலும், அவற்றை இந்த ரஹஸ்யத்ரயம் உள்ளபடி ப்ரதிபாதிக்கையாலும், ரஹஸ்யத்ரயமுமே அறியவேண்டுவதென்கை. (ங) "ஸ்வஜ்ஞாநம் ப்ராபகஜ்ஞாநம் ப்ராப்யஜ்ஞாநம் முமுக்ஷுபி: । ஜ்ஞாநத்ரயமுபாதேயம் ஏதத் அந்யந்ந கிஞ்சந" [ஸ்வஜ்ஞாநம் ப்ராபகஜ்ஞாநம் ப்ராப்யஜ்ஞாநம் முமுக்ஷுபி:—ஜ்ஞாநத்ரயமுபாதேயம் ஏதத் அந்யந்ந கிஞ்சந] என்னக்கடவதிறே. 'ரஹஸ்யம் மூன்று' என்று இவர் உத்தேஶிக்கிறது-திருமந்த்ரமும் த்வயமும் சரமஶ்லோகமுமாகிற இவற்றை யென்னுமிடம், மேலே ஸுஸ்பஷ்டம். இவற்றை ரஹஸ்யங்க

---

* ஸப்-வி-துதாதி.

1. பகவத்ப்ராப்திகாமதயா-எம்பெருமானைப் போய்ச் சேர்வதில் விருப்பமுடையவனாயிருத்தலாலே.

2. ஏவம்பூதன்-இப்படிப்பட்டவன்.

ளென்கிறது, ஸகலவேதாந்தஸாரார்த்த 1. ப்ரதிபாதகதயா 2. பரமகுஹ்யங்களாகையாலே. ஆக, இவ்வாக்யத்தால், அதிகாரி நிர்தேஶமும் தத் 3. ஜ்ஞாதவ்ய நிர்தேஶமும் பண்ணியருளினாராய்த்து.

இனி, அந்த ரஹஸ்யத்ரயத்திலும் ப்ரதமரஹஸ்யமேதென்னும் ஆகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார்

மூ (உ) அதில் ப்ரதமரஹஸ்யம்-திருமந்த்ரம்.

(வ்யா) 'அதில் ப்ரதமரஹஸ்யம் திருமந்த்ரம்' என்று; அதாவது-அந்த ரஹஸ்யத்ரயத்திலும் வைத்துக்கொண்டு, இவ்வதிகாரிக்கு ப்ரதமம் ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யம், ஸ்வரூபயாதாத்ம்யபரமாய் த்யாஜ்யோபாதேயவிபாகஜ்ஞாநத்தைப் பரிபூர்ணமாகப் பிறப்பிக்குமதான திருமந்த்ரமென்கை. அநந்யார்ஹஶேஷத்வம் அநந்யஶரணத்வம் அநந்யபோக்யத்வமாகிற ஆகாரத்ரயத்தையும் ப்ரதிபாதிக்கையாலே சேதநஸ்வரூப யாதாத்ம்ய ப்ரதிபாதநபரமாய், ததநுகுணமான த்யாஜ்ய உபாதேயவிபாகத்தையும் ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதியாநின்றுள்ள இம்மந்த்ரத்தாலே ஸுஶிக்ஷிதமான ஸ்வரூபத்தையுடையவனுக்கிறே, மற்றை ரஹஸ்யங்களிரண்டாலும் ப்ரதிபாதிக்கப்படுகிற உபாயோபேயங்களில் அபேக்ஷை ஜநிப்பது. ஆகையால், ஸ்வரூபயாதாத்ம்யபரமான திருமந்த்ரம், ப்ரதமரஹஸ்யமென்னக் குறையில்லை. இன்னமும், ப்ரணவத்துக்கு மந்த்ரஶேஷம் விவரணமானாற்போலே மந்த்ரஶேஷத்துக்கு த்வயம் விவரணமாய், த்வயத்துக்குச் சரமஶ்லோகம் விவரணமாயிறே இருப்பது. அந்த ந்யாயத்தாலும், இதினுடைய 4. ப்ராதம்யம் ஸித்தமிறே. ஆக, இவையெல்லாவற்றையும் திருவுள்ளம் பற்றியாய்த்து, 'ப்ரதமரஹஸ்யம் திருமந்த்ரம்' என்று இவர் அருளிச்செய்தது. இத்தை மந்த்ரமென்கிறது-(ச) "மந்தாரம் த்ராயதஇதி மந்த்ர:" [மந்தாரம் த்ராயத இதி மந்த்ர:] என்கிறபடியே ஶப்தஶக்தியாலும் அர்த்தபோதநத்தாலும்

---

1. ப்ரதிபாதகதயா-ப்ரதிபாதிப்பதாக இருப்பதால்.

2. பரமகுஹ்யங்கள்-அந்யர்காதிற் படாதபடி மிகவும் மறைக்கக் கூடியவை.

3. ஜ்ஞாதவ்யம்-அறியத்தகுந்தது.

4. ப்ராதம்யம்-முதன்மை.

தன்னை யநுஸந்திப்பார்க்கு ரக்ஷகமாகையாலே. ஶப்தஶக்தியாலே ரக்ஷகமாம், ஜபஹோமாதிகளாலே கார்யங்கொள்ளும் உபாஸகர்க்கு. அர்த்தபோதநத்தாலே ரக்ஷகமாம், ஈஶ்வரனே உபாயோபேய மென்றிருக்கும் ப்ரபந்நர்க்கு. அர்த்தபோதநத்தாலே ரக்ஷகமாகையாவது-(ரு) ''தேஹாஸக்தாத்மபுத்திர்யதி பவதி பதம் ஸாது வித்யாத்த்ருதீயம் ஸ்வாதந்த்ர்யாந்தோ யதி ஸ்யாத் ப்ரதமம் இதரஶேஷத்வதீஶ்சேத் த்விதீயம் । ஆத்மத்ராணோந்முகஶ்சேந் நம இதி ச பதம் பாந்தவாபாஸலோலஶ் ஶப்தம் நாராயணாக்யம் விஷயசபலதீஶ்சேத் சதுர்த்தீம் ப்ரபந்ந:''
[தேஹாஸக்தாத்மபுத்திர்யதிபவதிபதம்ஸாதுவித்யாதத்ருதீயம் ஸ்வாதந்த்ர்யாந்தோயதிஸ்யாத்ப்ரதமம் இதரசேஷத்வதீஸ்சேத்த்விதீயம்-ஆத்மத்ராணோந்முகஸ்சேந்நமஇதிசபதம்பாந்தவாபாஸலோலஶ் ஶப்தம் நாராயணாக்யம் விஷயசபலதீஸ்சேத் சதுர்த்தீம் ப்ரபந்ந:] என்று பட்டர் அருளிச்செய்தபடியே தன்னை அநுஸந்திப்பார்க்கு தேஹாத்மாபிமாநமும், ஸ்வாதந்த்ர்யமும், அந்யஶேஷத்வமும், ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமும், அபந்துஸங்கமும், விஷயப்ராவண்யமும் மேலிடாதபடிபண்ணி ஸ்வரூபாநுரூபமாக நடக்கும்படி நோக்குகை.

இனிமேல் இம்மந்த்ரத்தினுடைய வைபவத்தை விஸ்தரேண ப்ரதிபாதிப்பதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் இதனுடைய அநுஸந்தாநக்ரமகதநமுகத்தாலே இதன்வைபவத்தை அருளிச்செய்கிறார்

மூ-(௬) திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப் போரும்படி ப்ரேமத்தோடே பேணியநுஸந்திக்கவேணும்.

(வ்யா.) 'திருமந்த்ரத்தினுடைய' என்று தொடங்கி. திருமந்த்ரத்துக்குச்சீர்மையாவது (ரூ) ''ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச । ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்ஸ்தம்'' [ருசோயஜூம்ஷிஸாமாநிததைவாதர்வணாநிச-ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்தம்] என்கிறபடியே ஸகல வேத ஸங்க்ரஹமாய், † ''மற்றெல்லாம்பேசிலும்'' என்கிறபடியே 1. ஜ்ஞாதவ்ய ஸகலார்த்த ப்ரதிபாதகமாய், (எ) ''மந்த்ராணாம் பரமோ மந்த்ரோ குஹ்யாநாம் குஹ்யமுத்தமம் । பவித்ரஞ்ச பவித்ராணாம் மூலமந்த்ர: ஸநாதந:'' [மந்த்ராணாம் பரமோ மந்த்ரோ குஹ்யா

† பெ-திருமொழி-8-10-3. 1. ஜ்ஞாதவ்யம்-அறியவேண்டியவை.

நாம் குஹ்ய முத்தமம் - பவித்ரம்சபவித்ராணும் மூலமந்த்ரஸ்ஸநாதந:] என்கிறபடியே மந்த்ரங்களில் வைத்துக்கொண்டு பரமமான மந்த்ரமாய், 1. குஹ்யங்களில் வைத்துக்கொண்டு உத்தமமானகுஹ்யமாய், பவித்ரங்களுக்கும் பவித்ரமாயிருக்கிற கௌரவம். சீர்மைக்குப் போரும்படி என்றது-தகும்படி யென்கை. ப்ரேமத்தோடே பேணியநுஸந்திக்கையாவது - இத்தை அநுஸந்திக்குமளவில் 2. ஶுஷ்கஹ்ருதயனுயிருந்து அநுஸந்திக்கை யன்றிக்கே, 3. இதன் வைலக்ஷண்ய ஜ்ஞாநமடியாக இதன்பக்கல் தனக்குஉண்டான ப்ரேமத்தோடே குஹ்யாநாம் குஹ்யமான இது அநதிகாரிகள் செவிப்படாதபடி (அ) ''மந்த்ரம்யத்நேநகோபயேத்'' [மந்த்ரம்யத்நேநகோபயேத்] என்கிறபடியே பேணிக்கொண்டு அநுஸந்திக்கை. இப்படி அநுஸந்திக்க வேணு மென்கையாலே, ப்ரகாராந்தரேண அநுஸந்திக்கலாகாதென்கிற நியமம் தோற்றுகிறது.

'இப்படி, தன்பக்கல் ப்ரேமமுண்டாகவே இம்மந்த்ரம் இவனுக்குக் கார்யகரமாமோ?' என்ன, அருளிச்செய்கிறுர்

மூ.-(௪) மந்த்ரத்திலும் மந்த்ரத்துக்கு உள்ளீடான வஸ்துவிலும் மந்த்ரப்ரதனுன ஆசார்யன்பக்கலிலும் ப்ரேமம் கநக்க உண்டானுல் கார்யகரமாவது.

(வ்யா.) 'மந்த்ரத்திலும்' என்று தொடங்கி. அதாவது - ஜ்ஞாதவ்யார்த்தஜ்ஞாபகமான இம்மந்த்ரந்தன்னிலும், ஶேஷித்வ ஶரண்யத்வ ப்ராப்யத்வங்களாகிற ஆகாரத்ரயயுக்ததயா இம்மந்த்ரத்துக்கு 4. வாச்யவஸ்துவாயிருக்கிற ஈஶ்வரவிஷயத்திலும்(க) ''தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம்'' [தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம்] என்கிறபடியே இம்மந்த்ரம் ஆசார்யாதீநமா யிருப்பதொன்றுகையாலே இத்தை 5. யதாப்ரதி

1. குஹ்யம்-மறைக்கத்தகுந்தது. 2. ஶுஷ்கஹ்ருதயனுய்-உலர்ந்தமனமுடையவனுய; ப்ரேமஶூந்யனுய். 3. இதன் வைலக்ஷண்யம்-ஸகலஶாஸ்த்ர ஸங்க்ரஹமாயிருத்தலும், அர்த்த பஞ்சகங்களையும் தெரிவிப்பதாதலும், பரமகுஹ்யமாயிருத்தலும் முதலானவை. வைலக்ஷண்யம்-அஸாதாரணத்தன்மை. 4. வாச்யவஸ்து-சொல்லப்படும்பொருள். 5. யதாப்ரதிபத்தியுக்தன்-எப்படி ப்ரதிபத்திசெய்ய வேண்டுமோ, அப்படிப்பட்ட ப்ரதிபத்திசெய்தவன்; ஶாஸ்த்ரோக்தமான ப்ரதிபத்தியுடையவன்.

பத்தியுக்தனைக்கொண்டு, தனக்கு உபகரித்த ஆசார்யவிஷயத்திலும் 1. தத்தத்வைலக்ஷண்யாநுரூபமாக ப்ரேமம் அதிஶயேந உண்டானால், இம்மந்த்ரம் இவனுக்குக் கார்யகரமாவதென்கை. (௧௦) "𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇 𑌤𑌦𑍍𑌦𑍇𑌵𑌤𑌾𑌯𑌾𑌂 𑌚 𑌤𑌥𑌾 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌦𑍇 𑌗𑍁𑌰𑍌 । 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁 𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌦𑌾 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾 𑌸𑌾 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑌾𑌧𑌨𑌮𑍍" [மந்த்ரே தத்தேவதாயாம்ச ததா மந்த்ரப்ரதே குரௌ-த்ரிஷுபக்திஸ்ஸதாகார்யா ஸாஹிப்ரதமஸாதநம்] என்னக்கடவதிறே.

இனி, இம்மந்த்ரத்தினுடைய அவதரணப்ரகார 2. கதநமுகத்தாலே இதனுடைய 3. அப்ரதிமவைபவத்தை அருளிச்செய்கிறார்

ஸூ.-(௫) ஸம்ஸாரிகள் தங்களையும் ஈஸ்வரனையும் மறந்து, ஈஸ்வரகைங்கர்யத்தையும் இழந்து, இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட, ஸர்வேஸ்வரன் தன் க்ருபையாலே இவர்கள் தன்னையறிந்து கரைமரஞ்சேரும்படி, தானே ஶிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான்.

(வ்யா.) 'ஸம்ஸாரிகள்' என்று தொடங்கி. ஸம்ஸாரிகளாகிறார்- அநாத்யசித்ஸம்பந்தத்தாலே 4. ப்ரவாஹரூபேணவருகிற 5. அவித்யா கர்மவாஸநாருசிவிவஶராய் ஜந்மமரணாதி 6. க்லேஶபாகிகளாய்த்திரிகிற பத்தசேதனர். 'தங்களையும் ஈஸ்வரனையும் மறந்து' என்றது- (௧௧) "𑌦𑌾𑌸𑌭𑍂𑌤𑌾𑌃 𑌸𑍍𑌵𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 । 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌬𑌨𑍍𑌧𑍇 𑌮𑍋𑌕𑍍𑌷𑍇 𑌤𑌥𑍈𑌵 𑌚" [தாஸபூதா

---

1. தத்தத்வைலக்ஷண்யம்-மந்த்ரம் தேவதை ஆசார்யன் என்ற மூவரின் வைலக்ஷண்யம். 2. கதநம்-சொல்லுதல். 3. அப்ரதிமவைபவம்-ஒப்பில்லாமஹிமை. 4. ப்ரவாஹரூபேணவருகிற-வ்யக்திபேதமிருப்பினும் முன்னுள்ள நாமரூபங்களோடு வருகிற. 5. அவித்யா-அஜ்ஞாநம்: இங்கே, தேஹாத்மாபிமாநமும் ஸ்வதந்த்ரனென்கிற அபிமாநமும். கர்மம்-அவ்வபிமானத்தினால் விளையும் புண்யபாபம். வாஸநை-விஷம் முதலியன காணும்போது அஞ்சுதல் முதலியவற்றிற்குக் காரணமான அவித்யாவாஸநையும், த்ருணச்சேதாதிகளில் ப்ரவர்த்திக்கக் காரணமான கர்மவாஸநையும். விவஶர்-பரவஶர். 6. க்லேஶபாகிகள்-துன்பத்தையடைந்தவர்.

ஸ்ஸவதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:-நாந்யதாலக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷேததைவச] என்கிறபடியே ஸ்வதஸ்ஸித்தமான பகவச்சேஷத்வத்தை லக்ஷணமாகவுடையராயிருக்கிற தங்களேயும் (கஉ) "பதிம்விஶ்வஸ்ய" [பதிம்விஸ்வஸ்ய] (கரு) "ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்த்திதம்" [ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்த்திதம்] இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே தங்களுக்கு 1. நிருபாதிகஶேஷியாயிருக்கிற ஈஶ்வரனேயும் அறியாதேயென்கை. ஆனல், 'அறியாமலென்னுதே மறந்தென்பான் என்? முன் ஒருகால் நினைத்துப் பின்பு அந்நினைவுக்கு 2. ப்ரச்யுதி வந்தவிடத்திலிறே மறந்து என்னலாவது' எனில்,—* "மறந்தேனுன்னை முன்னம்" என்கிறபடியே ஸ்வதஸ்ஸித்தமான ஸம்பந்தத்தையுணர்ந்தால் முன்பு நினைத்திருந்த அர்த்தத்தை மறந்தாற்போல இருக்கும் ஸம்பந்தத்தில் 3. உறைப்பை நினைத்து அருளிச்செய்தாராமித்தனை. 'ஈஶ்வர கைங்கர்யத்தையும் இழந்து' என்றது- கீழ்ச்சொன்ன அஜ்ஞாநத்தாலே 4. வகுத்த ஶேஷியான ஈஶ்வர விஷயத்தில் கைங்கர்யமாகிற பரமபுருஷார்த்தத்தையும் 5. ப்ராபிக்கப்பெறுதேயென்கை. 6. புருஷார்த்தத்தினுடைய கௌரவத்தையும், 7. அதுக்கிட்டுப் பிறந்துவைத்துக் கிட்டப்பெறுமல் 8. கிடந்தபடியையும் நினைத்து, 'இழந்து' என்கிறுர். 'இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே' என்றது- ஸ்வஸ்வரூபபரஸ்வரூபஜ்ஞாநமும் புருஷார்த்தஜ்ஞாநமும் இல்லாமையாலே, 9. ஸ்வஶேஷத்வாநுரூபமான ஶேஷிவிஷயகைங்கர்யரூப புருஷார்த்தத்தை இழந்தோமென்கிற 10. அலாபக்லேஶந்தானுமின்றிக்கே யென்கை. 'ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலேவிழுந்து நோவு

---

* பெ-திருமொழி-சூ-உ-உ. 1. நிருபாதிகஶேஷி-ஒருகாரணத்தைப் பற்றியன்றிக்கேயிருக்கிற தலைவன். 2. ப்ரச்யுதி-நழுவுதல்; நாசமென்றபடி. 3. உறைப்பு-ஊன்றியிருப்பது; தார்ட்யம். 4. வகுத்தஶேஷி-ப்ராப்தஶேஷி. 5. ப்ராபிக்க-அடைய. 6. புருஷார்த்தத்தின்கௌரவம்-தன்னேடொத்ததும் மிக்கதும் இல்லாமையோடு பகவந்நிர்ஹேதுகக்ருபையால் அடையக்கூடியதாதலும், சேதநனுடைய போக்த்ருத்வகந்தத்தையும் பொறுதொழிகையும். 7. அதுக்கிட்டுப்பிறந்துவைத்து-அப்புருஷார்த்தத்தைப் பெறுவதன்பொருட்டே கரசரணுதிகளையுடைய தேஹத்தோடு பிறந்து என்றபடி; வைத்து-அசைச்சொல். 8. கிடந்த-விஷயாந்தரப்ரவணராய்க் கிடந்த என்றபடி. 9. ஸ்வஶேஷத்வாநுரூபமான-தன் அடிமைக்கு ஏற்றதான. 10. அலாபக்லேஶம்-கிடைக்காத வருத்தம்.

பட' என்றது - (கச) ''ஸம்ஸாரஸாகரம் கோரம் அநந்தக்லேஶ பாஜநம்'' [ஸம் ஸாரஸாகரம் கோரம் அநந்தக்லேஶபாஜநம்] என்கிறபடியே 1. அநந்தக்லேஶபாஜநமாய், ஒருவராலும் ஸ்வயத்நத்தால் கரைகாண அரிதாம்படியிருக்கிற ஸம்ஸாரமாகிற 2. மஹாஸமுத்ரத்துக்குள்ளேவிழுந்து 3. தாபத்ரயாபிபூதராய்க்கொண்டு க்லேஶப்படவென்கை. இத்தால், தங்களையும் ஈஶ்வரனையும் அறியாமையாலும், புருஷார்த்தத்தை யறியாமையாலும், ஸம்ஸார ஸமுத்ரத்துக்குள்ளே கிடந்து நோவுபடாநிற்க விரோதியான ஸம்ஸாரந்தன்னையும் 4. தந்நிஸ்தரணோபாயத்தையும் அறியாமையாலும், ஜ்ஞாதவ்யமான 5. அர்த்தபஞ்சகத்திலும் ஒன்றையும் அறியாமற் கிடந்தார்களென்கை. (கரு) ''ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம்'' [ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம்] இத்யாதிப்படியே ஸகலஶாஸ்த்ரங்களும் ப்ரதிபாதிப்பது அர்த்தபஞ்சகத்தையுமிறே. இவ்வர்த்தங்களை இவர்களுக்கு ஸங்க்ரஹமாக அறிவிக்கைக்காக, ஸகலஶாஸ்த்ர ஸங்க்ரஹமான திருமந்த்ரத்தை ஸர்வேஶ்வரன் வெளியிட்ட ப்ரகாரத்தைச் சொல்லுகிறது மேல். 'ஸர்வேஶ்வரன் தன்க்ருபையாலே' என்றது-(கசு) ''ஶேஷித்வஸம்பந்தாந் நிதம்ப்ரதமாதபி'' [ஶேஷித்வ ஸம்பந்தாந் நிதம்ப்ரதமாதபி] என்கிறபடியே அநாதியாக ஸர்வரோடுமுண்டான

1. அநந்தக்லேஶபாஜநமாய்-மிகப்பலவான க்லேஶங்களைச்சேதநர் அநுபவிப்பதற்கு ஆதாரமாய். 2. மஹாஸமுத்ரம்-பெருங்கடல்: கரையில்லாத சமுத்திரம். 3. தாபத்ரயாபிபூதராய்—ஆத்யாத்மிகம் ஆதிபௌதிகம் ஆதிதைவிகம் என்கிற மூன்றுவகைத் தாபங்களால் உபத்ரவிக்கப்பட்டவராய்: இவற்றுள், ஆத்யாத்மிகமாவது-தன்னைப்பற்றிவருந்துன்பம்; அது-ஶாரீரம் மாநஸம் என்று இரண்டுவகை. ஶாரீரஆத்யாத்மிகம்-தலைவலி கண்ணோய் ஜ்வரம் குஷ்டம் முதலியனவாக உடம்பில்வரும் வியாதிகள். மாநஸ ஆத்யாத்மிகம்-காம க்ரோதாதிகளும் ஶோகஅஸூயாதிகளுமாகப் பலவகையாம். ஆதிபௌதிகம்-மநுஷ்யவ்யாக்ரஸர்ப்பாதிகளாலும் பிஶாசராக்ஷஸராதிகளாலும் நேருந்துன்பம். ஆதிதைவிகம்-காற்று பனி மழை வெயில் இடிமுதலியவற்றால் தைவிகமாக நேருந் துன்பம். 4. தந்நிஸ்தரணஉபாயம்-அந்தஸம்ஸார ஸமுத்ரத்தைக் கடக்கும் உபாயம். 5. அர்த்தபஞ்சகங்கள்-ஸ்வஸ்வரூபம் பரஸ்வரூபம் உபாயஸ்வரூபம் புருஷார்த்தஸ்வரூபம் விரோதிஸ்வரூபம் என்பன.

ஈஶ்வரஶேஷித்வ ஸம்பந்தத்தையுடையனான எம்பெருமான், (௧௭) "ஏவம் ஸம்ஸ்ருதிசக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி: । ஜீவே து:காகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே" [ஏவம்ஸம்ஸ்ருதிசக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:—ஜீவே து:காகுலே விஷ்ணோ: க்ருபாகாப்யுபஜாயதே] என்கிறபடியே இவர்கள்படுகிற து:கதர்ஶநமாத்ரத்தாலுண்டான தன்னுடைய நிர்ஹேதுகக்ருபையாலேயென்கை. 'இவர்கள் தன்னையறிந்து 1 கரைமரம்சேரும்படி' என்றது- இப்படி ஸம்ஸாரஸாகரத்திலே கிடந்து நோவுபடுகிற இவர்கள் (௧௮) "த்வாமேவ ஶரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண:" [த்வாமேவஶரணம்ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண:] என்றும், (௧௯) "ஸம்ஸாரார்ணவமக்நாநாம் விஷயாக்ராந்தசேதஸாம் । விஷ்ணுபோதம் விநா நாந்யத் கிஞ்சிதஸ்தி பராயணம்" [ஸம்ஸாரார்ணவமக்நாநாம் விஷபாக்ராந்தசேதஸாம்-விஷ்ணுபோதம் விநாநாந்யத் கிஞ்சிதஸ்தி பராயணம்] என்றும் சொல்லுகிறபடியே ஸம்ஸார 2.நிஸ்தரணோபாயபூதனான தன்னையறிந்து ஸம்ஸாரஸாகரத்தைக் கடந்து அக்கரைப்படும்படியென்கை. 'தானே ஶிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று' என்றது-* "நரநாரணனாயுலகத்தறநூல் 3.சிங்காமைவிரித்தவன்" என்கிறபடியே நரநாராயணரூபேண அவதரித்து நரனான தான் ஶிஷ்யனுமாய், நாராயணனான தான் ஆசார்யனுமாய் நின்று என்கை. 'திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான்' என்றது-ஸகலஶாஸ்த்ர ஸங்க்ரஹமாய், அந்த ஶாஸ்த்ர தாத்பர்யமான அர்த்தபஞ்சகத்தையும் ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதியாநிற்கும் திருமந்தரத்தை ப்ரகாஶிப்பித்தருளினனென்கை. அருளிச்செய்தானென்னாதே வெளியிட்டருளினனென்றது - இப்போது, தான் ஒன்றை 4.நிர்மித்துச்

---

* பெ-தி-மொ. ௧௦-௬-௧.

1. கரைமரம் சேர்தல்-(விஷ்ணுவான) மரக்கலத்தால் அக்கரைசேர்தல்; அல்லது கரையிலுள்ள மரத்தைச் சேர்தல். வாஸுதேவனை இளைப்பாறுதற்கு உரிய தருவாகச் சொல்லியிருப்பது காண்க. 2. நிஸ்தரண உபாயபூதனை-கடப்பதற்கு உபாயமாக இருப்பவனை. 3. சிங்காமை-சிதைந்து போகாமே. 4. நிர்மித்தல்-புதிதாக உண்டாக்குதல்.

சொன்னானல்லன், அநாதியானத்தை ப்ரகாஶிப்பித்தானித்தனை என்னுமிடமும், அதிகுஹ்யமாயுள்ளத்தை இவர்கள் 1. துர்க்கதி கண்டு ஸஹிக்கமாட்டாமையாலே ப்ரகாஶிப்பித்தானென்னுமிடமும் தோற்றுகைக்காக.

'ஆனால், ஆசார்யனாய்நின்று வெளியிட்டருளிவிட அமையாதோ? ஶிஷ்யனாய்நின்றது எதுக்காக?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.-(சூ) ஶிஷ்யனாய் நின்றது-ஶிஷ்யனிருக்கு மிருப்பு நாட்டாரறியாமையாலே அத்தை யறிவிக்கைக்காக.

(வ்யா.) 'ஶிஷ்யனாய்' என்று தொடங்கி. அதாவது-ஆசார்யனாய் நின்று வெளியிட்டருளின அளவன்றிக்கே, தானே ஶிஷ்யனுமாய்க்கொண்டு நின்றது, (உ0) [illegible] [ஆஸ்திகோ தர்மசீலஶ்ச ஶீலவாந்வைஷ்ணவஶ்ஶுசி - கம்பீரஶ்சதுரோ தீரஶ் ஶிஷ்யஇத்யபிதீயதே] (உக) [illegible] [ஶரீரம்வஸுவிஜ்ஞாநம் வாஸ:கர்மகுணாநஸூந்-குர்வர்த்தம்தாரயேத்யஸ்து ஸஶிஷ்யோ நேதரஸ் ஸ்ம்ருத:] (உஉ) [illegible] [ஸத்புத்திஸ்ஸாதுஸேவீஸமுசிதசரிதஸ்தத்வ போதாபிலாஷீ ஶுஶ்ருஷுஸ்த்யக்தமாந:ப்ரணிபதநபர: ப்ரஶ்நகாலப்ரதீக்ஷ:- ஶாந்தோதாந்தோநஸூயுஶ்ஶரணமுபகதஶ்ஶாஸ்த்ரவிஶ்வாஸஶாலீ ஶிஷ்ய:ப்ராப்த:பரீக்ஷாம் க்ருதவிதபிமதஸ்தத்வதஶ்ஶிக்ஷணீய:] இத்யாதிகளிற் சொல்லுகிற 2. படிகளும் 3. ஸாத்யாந்தர நிவ்ரு

1. துர்க்கதி-கஷ்டமான நிலைமை. 2. படிகளும்-சிஷ்யலக்ஷணங்களும். 3. ஸாத்யாந்தர நிவ்ருத்தி-த்யக்தமாந: என்பதில் ஆசார்யாநுவர்த்தநமாகிற ஸாத்யத்துக்கு விரோதியான அஹங்கார நிவ்ருத்தியும், 'தத்வபோதாபி

த்தியும், பலஸாதநஶுஶ்ரூஷையும், ஆர்த்தியும், ஆதரமும், அநஸூ யையும் உடையனு யிருக்கையுமாகிற ஶிஷ்யலக்ஷணம் லோகத்தி லுள்ளார் அறியாமையாலே அத்தை ஸ்வாநுஷ்டாநத்தாலே அறிவிக் கைக்காக வென்கை. உபதேஶத்தாலே அறிவிக்குமளவில் ஸ்வோத் கர்ஷம் தேடிக்கொள்ளவந்தானித்தனை யென்று நினைக்கவுங் கூடும்; அநுஷ்டாநத்தாலே அறிவிக்குமளவில் நமக்கும் இது வேணு மென்று விஸ்வஸித்துப் 1. பரிக்ரஹிக்கைக்கு உடலாயிருக்குமிறே.

'இப்படி ஶிஷ்யனுப்நின்று இம்மந்த்ரஶிக்ஷைபண்ணி இவ்வழி யாலே ஜ்ஞாநம் பிறக்கவேணுமோ? * "ஞானக்கலைகள்" ' என்கிறபடி யே ஸகலஶாஸ்த்ரங்களும் ஜ்ஞாநஸாதநமாயன்றே இருப்பது; அவற் றை அப்யஸித்து அவ்வழியாலே ஜ்ஞாநம் பிறந்தாலோ?' என்ன, ஶாஸ்த்ரஜந்யஜ்ஞாநத்துக்கும் இம்மந்த்ர 2. ஜந்யஜ்ஞாநத்துக்கும் உண் டான விஶேஷத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிருர்

மூ.-(எ) ஸகலஶாஸ்த்ரங்களாலும் பிறக்கும் ஜ்ஞா நம் ஸ்வயமார்ஜிதம் போலே, திருமந்த்ரத்தால் பிறக் கும் ஜ்ஞாநம் பைத்ருகதநம்போலே.

(வ்யா.) 'ஸகலஶாஸ்த்ரங்களாலும்' என்று தொடங்கி. அதா வது-தத்வஜ்ஞாந 3. ஜநகங்களான ஶ்ருதிஸ்ம்ருத்யாதி ஸகலஶாஸ் த்ரங்களாலும் சேதநருக்குப் பிறக்கும் ஜ்ஞாநம் 4. ஸ்வயம் ஆர்ஜித தநம்போலே அத்யாயாஸலப்யமாயிருக்கும். ஆசார்யோபதேஶம்

லாஷீ' என்பதில் ஆசார்யனிடத்தில் சிஷ்யன் அபேக்ஷிக்கின்ற ஜ்ஞாநரூப பலமும், 'ஶுஶ்ரூஷு:' என்பதில் அந்தபலத்திற்கு ஸாதநமான ஆசார்யபரி சர்யையும், "ப்ரஶ்நகாலப்ரதீக்ஷ:' என்பதில் ஆர்த்தியும் [ஆர்த்தியாவது-இல் லாமையாலுண்டான துக்கம்,] 'ப்ரணிபதநபர:' என்பதில் ஆதரமும் வேண்டு மென்பது பெறப்படும். 'ஸத்புத்தி:' என்றுதொடங்குகின்ற ஶ்லோகமும் "ஆஸ்திக:" என்று தொடங்குகின்ற ஶ்லோகமும் சிஷ்யலக்ஷணத்தையும், "ஶரீரம்வஸு" என்று தொடங்குகின்ற ஶ்லோகம் சிஷ்யனுக்கு உண்டா கவேண்டிய தன்மையையும் தெரிவிப்பனவாகும்.

1. ப்ரக்ரஹிக்கை-அங்கீகரித்து மேற்கொள்ளுதல். உடலாயிருக்கும்-அங்கமாக இருக்கும். 2. ஜந்யம்-உண்டாவது. 3. ஜநகம்-உண்டாக்குவது. 4. ஸ்வயம் ஆர்ஜிததநம்-தானே ஸம்பாதித்த திரவியம்.

* திருவாய்-க-கூ-அ.

அடியாகத் திருமந்த்ரத்தால் பிறக்கும் ஜ்ஞாநம், 1. பைத்ருகதநம்போலே அநாயாஸலப்யமா யிருக்குமென்கை. (உ௩) "𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌬𑌹𑍁𑌕𑍍𑌲𑍇𑌶𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌶𑍍𑌚𑌲𑌨𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 । 𑌉𑌪𑌦𑍇𑌶𑌾𑌦𑍍𑌧𑌰𑌿𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌵𑌿𑌰𑌮𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑍁" [ஶாஸ்த்ரஜ்ஞாநம்பஹுக்லேஶம் புத்தேஶ்சலநகாரணம் - உபதேஶாத்தரிம்புத்வா விரமேத்ஸர்வகர்மஸு] என்னக்கடவதிறே. இத்தால், ஶாஸ்த்ரங்களிற்காட்டில் தத்ஸங்க்ரஹமான திருமந்த்ரத்துக்கு உண்டான வைபவம் சொல்லிற்றாயிற்று.

'2. ஆனால், 3. ஶாஸ்த்ரங்களொழிந்ததாகிறது; பகவந்மந்த்ரந்தான் இதொன்றுமன்றே, பின்னையும்பலவில்லையோ?' என்கிறஶங்கையிலே, மந்த்ராந்தரங்களிற்காட்டில் இதுக்கு உண்டான வைபவத்தை அருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி

௩.—(அ) பகவந்மந்த்ரங்கள் தான் அநேகங்கள்.

(வ்யா.) 'பகவந் மந்த்ரங்கள் தான் அநேகங்கள்' என்கிறார். அதாவது - (உ௪) "𑌆𑌸𑍍𑌤𑌾𑌂 𑌤𑍇 𑌗𑍁𑌣𑌰𑌾𑌶𑌿𑌵𑌦𑍍 𑌗𑍁𑌣𑌪𑌰𑍀𑌵𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌂 𑌜𑌨𑍍𑌮𑌨𑌾𑌂 𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾" [ஆஸ்தாந்தே குணராஶிவத் குணபரீவாஹாத்மநாம் ஜந்மநாம் ஸங்க்யா] (உ௫) "𑌬𑌹𑌵𑍋 𑌨𑍃𑌪 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌾𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇" [பஹவோ ந்ருப கல்யாணகுணாః புத்ரஸ்யஸந்திதே] (உ௬) "𑌤𑌵𑌾𑌨𑌨𑍍𑌤𑌗𑍁𑌣𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌷𑌡𑍇𑌵 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇 𑌗𑍁𑌣𑌾𑌃" [தவாநந்தகுணஸ்யாபி ஷடேவப்ரதமேகுணாః] (உ௭) "𑌬𑌹𑍂𑌨𑌿 𑌮𑍇 𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑌾𑌨𑌿 𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿 𑌤𑌵 𑌚𑌾𑌰𑍍𑌜𑍁𑌨" [பஹூநிமேவ்யதீதாநி ஜந்மாநிதவசார்ஜுந] என்றும் * "எண்ணில் தொல்புகழ்" என்றும் † "எங்கின்றயோனியுமாய்ப்பிறந்தாய்"

---

* தி-வா-மொ-௩-௩.

† திரு-விருத்-க.

1. பைத்ருகதநம்—பிதாவினிடத்தினின்று கிடைத்த திரவியம். 2. ஆனால்-ஶாஸ்த்ரங்களைக்காட்டிலும் திருமந்த்ரம் ஸுலபமாக உண்மை ஞானத்தை உணர்த்துவதானலென்றபடி. 3. ஶாஸ்த்ரங்களொழிந்ததாகிறது-ஶாஸ்த்ரங்கள் ஞானத்தை உண்டாக்கும்போது பஹுக்லேஶ ஜநகங்களாகையால் விடப்பட்டம் என்றபடி.

என்றும் இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே பகவத்குணங்களும் 1.குணபரீவாஹரூபங்களான அவதாரங்களும் 2.அஸங்க்யாதமாயிருக்குமாபோலே 3.அவற்றை அநுபந்தித்திருக்கும் மந்த்ரவிசேஷங்களும் (உஅ) "அநந்தாவை பகவந் மந்த்ரா:" [அநந்தாவை பகவந் மந்த்ரா:] என்கிறபடியே அநேகங்களாயிருக்குமென்கை.

'அவையெல்லாந்தான் ஏகவர்க்கமோ?' என்ன,

மூ.-(கூ) அவைதான், வ்யாபகங்களென்றும் அவ்யாபகங்களென்றும் இரண்டுவர்க்கம்.

(வ்யா.) 'அவைதான் வ்யாபகங்களென்றும் அவ்யாபகங்களென்றும் இரண்டுவர்க்கம்' என்கிறார்; அதாவது-4.ஸர்வவ்யாபகமான பகவத்ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கையாலே வ்யாபகங்களென்றும், பகவதவதாரகுண சேஷ்டிதங்களில் ஓரொன்றை ப்ரதிபாதிக்கையாலே அவ்யாபகங்களென்றும் உபயவர்க்கமாயிருக்குமென்கை.

'வர்க்கத்வயமும் தன்னிலொக்குமோ?' என்ன,

மூ.-(க௦) அவ்யாபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் ஸ்ரேஷ்டங்கள்.

(வ்யா.) 'அவ்யாபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் ஸ்ரேஷ்டங்கள்' என்கிறார். அதாவது - அவ்யாபகங்களாயிருந்துள்ள ஸகலமந்த்ரங்களிலும் (உக) "நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி, தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத்" [நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி, தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத்] என்று விஷ்ணுகாயத்ரியில் ஓதப்படுகிற வ்யாபகமந்த்ரங்கள் மூன்றும் ஸ்ரேஷ்டங்களாயிருக்குமென்கை.

5. இந்தவிஷ்ணுகாயத்ரியிலே நாராயண வாஸுதேவ விஷ்ணு சப்தங்கள் அந்தமந்த்ரத்ரயத்துக்கும் ப்ரதாநபூத நாமத்ரயங்கள்;

---

1. குணபரீவாஹரூபங்களான-குணப்ரவாஹரூபங்களான: குணப்ரகாசகங்களான என்றபடி. 2. அஸங்க்யாதம்-அளவற்றவை. 3. அவற்றை அநுபந்தித்திருக்கும்-அந்தக்குணங்களையும் அவதாரங்களையும் அநுஸரித்திருக்கும். 4. ஸர்வவ்யாபகமான-ஸர்வவஸ்து வ்யாபகமான. 5. 'நாராயண வாஸுதேவ விஷ்ணுசப்தங்கள் அவ்வம்மந்திரங்கட்கு வாசகமாமோ?' என்ற சங்கையைப் போக்குவதற்காக, இந்த விஷ்ணுகாயத்ரியிலே என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

ஆகையாலே, ஸாதாரணப்ரணவ நமஸ்ஸுக்களோடேகூடின மந்த்ர த்ரயத்துக்கும் 1. உபலக்ஷணமாகக்கடவது.

'இந்தவ்யாபகமந்தரத்ரயமும் தன்னிலொக்குமோ?' என்ன,

மூ.–(கக) இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரியதிருமந்த்ரம் ப்ரதாநம்.

(வ்யா.) 'இவைமூன்றிலும் வைத்துக்கொண்டு பெரியதிருமந்த்ரம் ப்ரதாநம்' என்கிறார். அதாவது - அவ்யாபகங்களிற்காட்டில் ஶ்ரேஷ்டமாயிருந்துள்ள இந்த வ்யாபகமந்த்ரங்கள் மூன்றிலும் 2. வைத்துக்கொண்டு(உக) "நாராயணாயவித்மஹே" [நாராயணாயவித் மஹே] என்று 3. ப்ரதமோபாத்த மாகையாலும், 4 அர்த்தபூர்த்யாதி களாலும், (ஙo) "நாஸ்திசாஷ்டாக்ஷராத்பர:" [நாஸ்திசாஷ்டாக்ஷ ராத்பர:] (ஙக) "நமந்த்ரோஷ்டாக்ஷராத்பர:" [நமந்த்ரோஷ்டாக்ஷ ராதபர:] என்னும்படியான பெருமையையுடைய திருமந்த்ரம் ப்ரதா நமாயிருக்குமென்கை.

'மற்றை வ்யாபகத்வயத்துக்கும் தாழ்வு ஏது?' என்ன,

மூ.–(கஉ) மற்றையவை யிரண்டுக்கும் அஶிஷ்டபரிக்ரஹமும் அபூர்த்தியும் உண்டு.

(வ்யா.) 'மற்றையவையிரண்டுக்கும் அஶிஷ்டபரிக்ரஹமும் அபூர்த்தியும் உண்டு' என்கிறார். அதாவது - வாஸுதேவவிஷ்ணுஶப்த ங்களான மற்றை வ்யாபகமந்த்ரங்களிரண்டுக்கும், நாராயணஶப்தம் போலே 5. ஸ்வரூபரூபகுணாதிகளை யெல்லாம் ப்ரதிபாதியாதே 6. ஸ்வ ரூபமாத்ரத்தை ப்ரதிபாதிக்கையாலே, 7. நிர்விஶேஷசின்மாத்ரவஸ்து

---

1. உபலக்ஷணம்-ஒருமொழி தன் இனத்தைக் காட்டுவது; இங்கே ஸூசகமென்னலாம் 2. வைத்துக்கொண்டு-சாரியை. 3. ப்ரதமோபாத்தம்-முதலில் சொல்லப்பட்டது. 4. அர்த்தபூர்த்யாதிகளால் என்ற இடத்தில் 'ஆதி' ஶப்தத்தால் ஶிஷ்டபரிக்ரஹத்தைச் சொல்லுகிறது. 5. ஸ்வரூபம்-திவ்யாத்மஸ்வரூபம், ரூபம்-திவ்யமங்களவிக்ரஹம், ஆதிஶப்தம்-விபூதியைக்காட்டும். 6. ஸ்வரூபமாத்ரத்தை-வ்யாபகமான ஸ்வரூபமாத்ரத்தையென்றபடி. 7. நிர்விஶேஷ சின்மாத்ர வஸ்துவாதிகள்-விஶேஷண ஶூந்யமான சித்ஸ்வரூபமே தத்வமென்று வாதிப்பவர்கள்: ஶங்கரன்முதலியோர். நிர்விஶேஷவஸ்து-ஸஜாதீயவிஜாதீய ஸ்வகதபேத ஶூந்யமான வஸ்து; ஜ்ஞாத்ருஜ்ஞேயஜ்ஞானமென்கிற வேறுபாடு இல்லாதசின்மாத்ரமான வஸ்து எனினுமாம். குத்ருஷ்டிகள் - வேதத்துக்கு அபார்த்தம்பண்ணுகிற மாயாவாதிகள் என்னலாம்.

வாதிகளான குத்ருஷ்டிகள், மிகவும் ஆதரித்துப்போருகையாகிற அஶிஷ்டபரிக்ரஹமும், 1. வ்யாப்யாத்யாஹாராதிஸாபேக்ஷதை யாகிற அபூர்த்தியும் உண்டென்கை. 2. "ஷடக்ஷரி-வ்யாப்யபதார்த்தங்களையும், வ்யாபகப்ரகாரத்தையும், வ்யாப்திபலத்தையும், வ்யாபகனுடையகுணங்களையும் சொல்லாதே வ்யாப்திமாத்ர ப்ரகாஶகமாகையாலே அபூர்ணம்; 3. வ்யாபகப்ரகாரத்தைச் சொல்லாநிற்கச்செய்தேயும், வ்யாப்யபதார்த்தங்களுக்கு வாசகஶப்தம் இல்லாமையாலும், "ஸர்வம்வஸதி" [ஸர்வம்வஸதி] என்று 4. அர்த்தபலத்தாலே ஸர்வஶப்தம் புகுந்தாலும் அதில் குணம் அந்வயியாமையாலும், இனிக் குணஸித்திக்காக பகவச்சப்தத்தைக் கூட்டிக்கொள்ள வேண்டுகையாலும், வ்யாப்திபலத்தைச் சொல்லாமையாலும், 5. திருத்வாதஶாக்ஷரியும் அபூர்ணம்; 6. இம்மந்த்ரம், அவைபோலன்றியிலே, வ்யாப்ய

---

1. வ்யாப்யம்-வ்யாபிக்கப்பட்ட வஸ்துக்கள். 2. ஷடக்ஷரி-'ஓம்நமோவிஷ்ணவே' என்கிற ஆறு அக்ஷரங்களையுடைய மந்த்ரம். ஸர்வத்ர வேவிஷ்டே இதி-விஷ்ணு:என்று வ்யுத்பத்தி. 3. வாஸுதேவ ஶப்தத்துக்கு - ஸர்வம் அஸ்மிந் வஸதீதி வாஸுதேவ: என்று அதிகரணேயும், ஸர்வத்ரவஸதிஇதி வாஸுதேவ: என்று கர்த்தரியும் எனஇரண்டு விதமான வ்யுத்பத்தி உண்டு. கர்த்தரிவ்யுத்பத்தியில் அந்தர்யாமித்வமாகிறவ்யாபகப்ரகாரம் ஏற்படுதல் காண்க. 4. வஸதிஎன்ற இருப்பதால்எங்கேவஸிக்கிறுன் என்று ஒருகேள்வி யுண்டாக, ஸர்வத்ர [எங்கும்]என்று அதிகரணத்தை [இடப்பொருளை]க் காட்டக்கூடிய ஶப்தத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டிய அவஶ்யம் கர்த்தரிவ்யுத்பத்தியிலுள்ளதுபோலவே ஸர்வம் அஸ்மிந்வஸதி என்ற அதிகரேணவ்யுத்பத்தியிலும் ஸர்வஶப்தம்வந்தாலும், கர்த்தரிவ்யுத்பத்தியில் அத்யாஹரித்துக்கொண்ட ஸர்வத்ர என்ற சொல்லே இங்கு மாறிக்கிடத்தலால், அங்குக் குணத்துக்குள்ளேவ்யாப்தியில்லாமையால் அது ஒழிந்தவைகளையே கொள்ள வேண்டியதாக நேர்ந்ததுபோலவே இங்கும் குணம் ஒழிந்தனவே இவனிடத்து உள்ளன என்று ஏற்படுமென்பது 'அர்த்த பலத்தாலே ஸர்வஶப்தம் புகுந்தாலும் அதில் குணம் அந்வயியாமையாலும்' என்பதன் தாத்பர்யம். 5. திருத்வாதஶாக்ஷரி-"ஓம்நமோபகவதே வாஸுதேவாய" என்பது. இதற்குத் திருஎன்று விஶேஷணமிட்டுச் சொன்னது-பெரியபெருமாளுடைய மந்த்ரமாகையாலே. 6. திருவஷ்டாக்ஷர மந்த்ரம்-நாரஶப்தத்தால் வ்யாப்ய பதார்த்தங்களையும், நாராயணஶப்தத்தில் பஹுவ்ரீஹி [நாரா:அயநம் யஸ்ய ஸ:] ஸமாஸத்தால் வ்யாபகப்ரகாரமான அந்தர்யாமித்வத்தையும், தத்புருஷ[நாராணாம்அயநம்] ஸமாஸத்தால் அவ்வவ்வஸ்துக்களின் நிர்வாஹகத்வமாகிய வ்யாப்திபலத்தையும்; நாரஶப்தத்தாலேயே ஜ்ஞாநஆநந்த அமலத்வாதிகளான கல்யாண குணகணங்களையும் ஸம்யக் தெரிவிக்கும்.

பதார்த்தங்களோடு வ்யாபகப்ரகாரத்தோடு வ்யாப்திபலத்தோடு வ்யாபகனுடைய குணங்களோடு வாசியற 1.ஶாப்தமாகக் காட்டுகையாலே, அவற்றிற்காட்டில் இதுக்கு 2.அர்த்தபௌஷ்கல்யநிபந்தநமான ஆதிக்யம் உண்டு" என்று, மற்றை வ்யாபகமந்த்ரங்களிரண்டினுடைய அபூர்த்தியையும் திருமந்த்ரத்தினுடைய அர்த்தபூர்த்தியையும் ஸுஸ்பஷ்டமாக ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தாரிறே.

'இது தனக்கு ஶிஷ்டபரிக்ரஹம் உண்டோ'? என்ன, அருளிச்செய்கிறார்

ஸூ.-(கரு) இத்தை வேதங்களும், ருஷிகளும், ஆழ்வார்களும், ஆசார்யர்களும் விரும்பினார்கள்.

(வ்யா.) 'இத்தை' என்று தொடங்கி. அதாவது-விஷ்ணுகாயத்ரியிலே வ்யாபகமந்த்ரத்ரயத்தையுஞ் சொல்லுகிறவளவில் ப்ரதமத்திலே நாராயணஶப்ததனை ப்ராதாந்யேந ப்ரதிபாதிக்கையாலும், (கஉ) "விஶ்வம் நாராயணம்" [விஶ்வம் நாராயணம்] என்று தொடங்கி, (கங) "நாராயண பரம்ப்ரஹ்ம தத்த்வம் நாராயணః பரः। நாராயண பரோ ஜ்யோதி ராத்மா நாராயணః பரः। யச்ச கிஞ்சிஜ்ஜகத்யஸ்மிந் த்ருஶ்யதே ஶ்ரூயதேபி வா। அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித:" [நாராயணபரம்ப்ரஹ்ம தத்வம்நாராயண: பர:, நாராயணபரோஜ்யோதி ராத்மா நாராயண: ப்ர:, யச்சகிஞ்சிஜ்ஜகத்யஸ்மிந் த்ருஶ்யதே ஶ்ரூயதேபி வா, அந்தர்ப் பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித:] என்று ஸகலவேதாந்த ஸாரபூதமான நாராயணாநுவாகத்திலும், (கச) "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேஶாநோ நேமே த்யாவாப்ருதிவீ" [ஏகோஹவை நாராயண ஆஸீத் நப்ரஹ்மா நேஶாநோ நேமே த்யாவாப்ருதிவீ] என்று மஹோபநிஷத்திலும், (கரு) "வக்ஷாஶ்ச த்ரஷ்டவ்யஶ்ச நாராயணः, ஶ்ரோதாஶ்ச ஶ்ரோதவ்யஶ்ச நாராய

---

1. ஶாப்தமாகக் காட்டுதல்-சப்தத்தாலேயே தெரிவித்தல். 2. அர்த்தபௌஷ்கல்யம்-பொருள்நிரம்பியிருத்தல்.

ணஃ" [சக்ஷுஶ்சத்ரஷ்டவ்யஞ்ச நாராயணஃ, ஶ்ரோத்ரஞ்சஶ்ரோத வ்யஞ்சநாராயணஃ] என்று தொடங்கி (௩௬) "திஶஶ்ச ப்ரதிஶஶ்ச நாராயணஃ" [திஶஶ்சப்ரதிஶஶ்சநாராயண:] என்று முடிவாக, நடுவு அடைய[1] ஸுபாலோபநிஷத்திலும், (௩௭) "யஸ்யாத்மா ஶரீரம் யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்" [யஸ்யாத்மாஶரீரம் யஸ்யப்ருதிவீ ஶரீரம்] என்று தொடங்கி (௩௮) "யஸ்ய ம்ருத்யுஶ்ஶரீரம்" [யஸ்யம்ருத்யுஶ்ஶரீரம்] என்கிறது ஈறாக நடுவுள்ளபர்யாயங்கள்தோறும் (௩௯) "ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயணஃ" [ஏஷஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோநாராயண:] என்று அந்தர்யாமிப்ராஹ்மணத்திலும் வாஸுதேவ விஷ்ணுஶப்தங்களை அநாதரித்து நாராயணஶப்தத்தை யிட்டு பகவத்ஸ்வரூபாதிகளை நிர்த்தேஶிக்கையாலும், அபௌருஷேயமாய் நித்யநிர்த்தோஷமாய் ஸ்வத:ப்ரமாணங்களான வேதங்களும் விரும்பிற்றின. (௪௦) "யதா ஸர்வேஷு தேவேஷு நாஸ்தி நாராயணாத் பரஃ। ததா ஸர்வேஷு மந்த்ரேஷு நாஸ்தி சாஷ்டாக்ஷராத் பரஃ" [யதாஸர்வேஷு தேவேஷு நாஸ்தி நாராயணாத்பர:- ததாஸர்வேஷு மந்த்ரேஷு நாஸ்திசாஷ்டாக்ஷராத்பர:] (௪௧) "பூத்வோர்த்வபாஹுரத்யாத்ர ஸத்யபூர்வம் ப்ரவீமி வஃ। ஹே புத்ர ஶிஷ்யாஃ ஶ்ருணுத ந மந்த்ரோ(அ)ஷ்டாக்ஷராத் பரஃ" [பூத்வோர்த்வபாஹுரத்யாத்ர ஸத்யபூர்வம் ப்ரவீமிவ:-ஹேபுத்ரஶிஷ்யாஶ்ஶ்ருணுத நமந்த்ரோஷ்டாக்ஷராத்பரஃ] (௪௨) "ஸர்வவேதாந்தஸாரார்த்தஃ ஸம்ஸாரார்ணவதாரகஃ। கதிரஷ்டாக்ஷரோ ந்ருணாம் அபுநர்பவகாங்க்ஷிணாம்" [ஸர்வவேதாந்தஸாரார்த்தஸ் ஸம்ஸாரார்ணவதாரக: - கதிரஷ்டாக்ஷரோந்ருணாம் அபுநர்ப்பவகாங்க்ஷிணம்] (௪௩) 'ஆர்த்தா விஷண்ணாஶ் ஶிதிலாஶ்ச பீதாஃ கோரேஷு ச வ்யாதிஷு வர்த்தமாநாஃ। ஸங்கீர்த்ய நாராயணஶப்தமாத்ரம் விமுக்ததுஃகாஸ் ஸுகிநோ பவந்தி" [ஆர்த்தாவிஷண்ணாஶ்ஶிதிலாஶ்சபீதாஃ

1. நடுவு அடைய-நடுவெல்லாம்.

கோரேஷு சவ்பாதிஷு வர்த்தமாநா:-ஸங்கீர்த்ய நாராயணஶப்தமாத்ரம் விமுக்தது:காஸ்ஸுகிநோ பவந்தி] (சச) “நாராயணேதி ஶப்தோஸ்தி வாகஸ்தி வஶவர்த்திநீ । ததாபி நரகே கோரே பதந்தீதி கிமத்புதம்” [நாராயணேதிஶப்தோஸ்தி வாகஸ்திவஶவர்த்திநீ। ததாபிநரகேகோரேபதந்தீதிகிமத்புதம்] (சரு) “கிம் தத்ர பஹுபிர் மந்த்ரை: கிம் தத்ர பஹுபிர் வ்ரதை: । நமோ நாராயணாயேதி மந்த்ரஸ்ஸர்வார்த்தஸாதக:” [கிந்தத்ரபஹுபிர்மந்த்ரை: கிந்தத்ர பஹுபிர்வ்ரதை:-நமோநாராயணாயேதி மந்த்ரஸ்ஸர்வார்த்தஸாதக:] இத்யாதிகளாலே வேதார்த்தோபப்ரும்ஹணங்களா யிருக்கிற 1. ஸ்வப்ரபந்தங்களிலே பல விடங்களிலும் இத்தை ஶ்லாகித்துக்கொண்டு சொல்லுகையாலே, வேதார்த்த விஶதீகரண ப்ரவ்ருத்தரான வ்யாஸாதி பரமருஷிகளும் விரும்பினார்கள்; * “வண்புகழ்நாரணன்” † “செல்வநாரணன்” என்று தொடங்கி ‡ “வாழ்புகழ் நாரணன்” என்று முடிவாக, ஆதிமத்யாவஸாநமாக நம்மாழ்வார் அருளிச்செய்கையாலும், § “நாடுநகரமும் நன்கறிய நமோ நாராயணாய” என்று தொடங்கி ** “ஓவாதே நமோ நாரணா வென்பன்” என்று பெரியாழ்வாரும், †† “நாத்தழும்பெழ நாரணா” என்று தொடங்கி ‡‡ “நலந்திகழ்நாரணன்” என்று பெருமாளும், §§ “நான்முகனை நாராயணன் படைத்தான்” என்று தொடங்கி *** “எட்டெழுத்து மோதுவார்கள் வல்லர் வானமாளவே” என்று திருமழிசைப்பிரானும், *† “நான் கண்டுகொண்டேன் நாராயணா வென்னும் நாமம்” என்று உபக்ரமதஶையிலே ஒருகால் சொன்னாற்போலே ஒன்பதின்கால் சொல்லி *‡ “நாராயணாவோ! மணிவண்ணா! நாகணையாய்! வாராய்” என்று திருமங்கையாழ்வாரும் உபக்ரமத்தோடு உபஸம்ஹாரத்தோடு வாசியற அருளிச்செய்கையாலும், *§ “நன்மாலைகொண்டு நமோ நாரணா வெனனும் சொன்மாலை கற்றேன்” என்றும,

---

1. ஸ்வப்ரபந்தங்களிலே—ஸ்வபுராணங்களிலே யென்றபடி.

* தி-வா-க-உ-க0, † தி-வா-க-க0-அ, ‡ தி-வா-க0-கூ-க. § திருப்பல்லாண்டு-ச. ** பெ-ஆ-தி-ரு-கங. †† பெ-மா-தி-உ-ச. ‡‡ பெ-மா-தி-க0-கக. §§ நாலாந்திரு-வ-க. *** தி-ச-எஎ. *† தி-மொ-க-க-க. *‡ சி-தி-ஙு0. *§ முதல்-தி-ருஎ.

*"நாரணனென்றே வாதுரைக்கு முறையுண்டே" என்றும், † "ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு" ‡ "நாரணன்தன் நாமங்கள்" § "பகற்கண்டேன் நாரணனைக்கண்டேன்" என்றும், ** "நாமம்பல சொல்லி நாராயணா" என்றும் முதலாழ்வார்களும் அருளிச்செய்கையாலும், †† "மயர்வறமதிநல மருளினன்" என்கிறபடியே நிர்ஹேதுக பகவத் கடாக்ஷத்தாலே 1. ஸமதிகத ஸமஸ்த வஸ்து வாஸ்தவரான ஆழ்வார்களெல்லாரும் விரும்பினார்கள். இதரமந்த்ரங்களை அநாதரித்து இத்தையே தந்தாமுக்குத் தஞ்சமாக அநுஸந்தித்து, உபதேஶவேளையிலும் தந்தாமைப் பற்றினவர்களுக்கும் இத்தையே உஜ்ஜீவநஹேதுவாக உபதேஶித்துப்போருகையாலே, அவ்வாழ்வார்களைப் பின்சென்ற ஆசார்யர்களெல்லாரும் விரும்பினார்களென்கை.

இத்தால், மந்த்ராந்தரங்களிற்காட்டில் இம்மந்த்ரத்துக்கு உண்டான வைபவம் சொல்லிற்றாயிற்று.

இனி, வாச்யந்தன்னிலும் இதுக்கு உண்டான வைபவத்தை அருளிச் செய்கிறார்

மூ.-(கச) வாச்யப்ரபாவம் போல் அன்று, வாசக ப்ரபாவம்.

(வ்யா.) 'வாச்யப்ரபாவம்போலன்று, வாசகப்ரபாவம்' என்று. அதாவது-இதுக்கு 2. வாச்யனாயிருந்துள்ள ஈஶ்வரனுடைய பெருமை போலன்று, தத்வாசகமான இதன் பெருமை என்றபடி.

'அதுதான் எது?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.-(கரு) அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டி நின்று உதவும்.

(வ்யா.) 'அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டிநின்று உதவும்' என்று. அதாவது இதுக்கு வாச்யனானவன் 3. ஸந்நிஹிதனன்றிக்கே

---

* முதல்-தி-கரு. † இரண்-தி-க. ‡ இரண்-தி-உ0. § இரண்-தி-அக. ** மூண்-தி-அ. †† தி-க-கக.

1. ஸமதிகத - செவ்வையாக அடைந்த, ஸமஸ்தவஸ்துவாஸ்தவர்-எல்லாப் பொருள்களையும் பற்றிய யதார்த்தஜ்ஞாநமுள்ளவர். 2. வாச்யன்- சொல்லப்படுபவன்: அர்த்தமாக இருப்பவன். 3. ஸந்நிஹிதன் - அருகிலிருப்பவன்.

தூரஸ்தனுயிருந்தகாலத்திலும், வாசகமான இது[1] ஆஸந்நமாய்நின்று, தன்னை 2. வசித்தவர்கள் அபேக்ஷிதங்களை ஸாதித்துக் கொடுக்குமென்கை.

'இப்படி வாச்யன் தூரஸ்தனுயிருக்க, வாசகம் உதவின இடம் உண்டோ?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.-(கசு) த்ரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தது திருநாமமிறே.

(வ்யா.) 'த்ரௌபதிக்கு ஆபத்திலே புடைவைசுரந்தது திருநாமமிறே' என்று. அதாவது-3. மஹாஸதஸ்ஸிலே துஶ்ஶாஸநன் வஸ்த்ராபஹாரம் பண்ணுகிறபோது (சரு) "மஹத்யாபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவாந் ஹரி:" [மஹத்யாபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோபகவாந்ஹரி:] என்று முன்பே ஸ்ரீவஸிஷ்டமஹர்ஷி சொல்லிவைத்ததை நினைத்து (சசு) "ஶங்கசக்ரகதாபாணே த்வாரகாநிலயாச்யுத। கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷ மாம் ஶரணாகதாம்" [ஶங்க சக்ரகதாபாணே த்வாரகாநிலயாச்யுத-கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷ மாம் ஶரணாகதாம்] என்று ஶரணம்புகுந்த த்ரௌபதிக்கு அவ்வாபத்திலே(சஎ) "கோவிந்தேதி யதாऽऽக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம்" [கோவிந்தேதியதாऽऽக்ரந்தத் க்ருஷ்ணாமாம்தூரவாஸிநம்] என்கிறபடியே வாச்யனான க்ருஷ்ணன் தூரஸ்தனுயிருக்கச்செய்தேயும் வஸ்த்ரத்தை வர்த்திப்பித்துக்கொடுத்தது, அவ்வவதாரத்துக்கு வாசகமான கோவிந்தனென்கிற திருநாமமிறேயென்கை. 4. நாராயணஶப்தார்த்தத்தில் ஏகதேஶத்துக்கு வாசகமான ஒருதிருநாமம் செய்தபடி கண்டால், இதன்ப்ரபாவம் 5. கிம்புநர்ந்யாயஸித்தமிறேயென்று கருத்து.

---

1. ஆஸந்நமாய - அருகிலிருப்பதாய். 2. வசித்தவர்கள் - சொன்னவர்கள். 3. மஹாஸதஸ்-பெரியஸபை. 4. 'திருமந்த்ரத்துக்கு ஏற்றஞ்சொல்லுகிற இந்தப்ரகரணத்தில் கோவிந்தஶப்தத்தினேற்றத்தைச் சொல்லுவதில் பயனென்?' என்று தோன்றும் ஶங்கைக்கு ஸமாதாநம் அருளிச்செய்கின்றார் 'நாராயணஶப்தார்த்தத்தில்' இத்யாதியால். 5. கிம்புநர்ந்யாயமாவது-மலையைவிழுங்கின மஹாதேவனுக்கு கதவுஎவ்வளவு? என்றாற்போலவருவது.

இன்னம் ஒருப்ரகாரத்தாலே இதன் வைபவத்தை அருளிச்செய்கிறார்

மூ.-(கஎ) சொல்லும் க்ரமம் ஒழியச் சொன்னாலும் தன்ஸ்வரூபம் கெட நில்லாது.

(வ்யா.) 'சொல்லும்க்ரமம் ஒழிபச் சொன்னாலும்' என்று தொடங்கி. அதாவது - ஏதேனும் ஒருமந்த்ரமும் தன்னைத் தஞ்சமாக விஶ்வஸித்துச் சொன்னவர்களுக்கு ஒழியத் 1. தன் கார்யம் செய்யாதேயாகிலும், இது அங்ஙனன்றிக்கே தன்னைத் தஞ்சமாக விஶ்வஸித்துச் சொல்லுகையாகிற க்ரமம் ஒழிய, (சஅ) “ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யம் வா ஸ்தோபம் ஹேலநமேவவா” [ஸாங்கேதயம் பாரிஹாஸ்யஞ்ச ஸ்தோபம் ஹேலநமேவவா] என்கிறபடியே சொல்லிலும், சொன்னவர்களுக்கு ரக்ஷகமாகையாகிற தன் ஸ்வரூபத்தில் நழுவதில்லாதென்கை.

இனி, இதன் ஸர்வாபேக்ஷிதப்ரதத்வமாகிற வைபவத்தை அருளிச்செய்கிறார்

மூ.-(கஅ) இதுதான் “குலந்தரும்” என்கிறபடியே எல்லா வபேக்ஷிதங்களையும் கொடுக்கும்.

(வ்யா.) 'இதுதான்' என்று தொடங்கி. அதாவது-இம்மந்த்ரந்தான் * 2.“குலந்தரும்” என்றுதொடங்கி ஆழ்வார் அருளிச்செய்தபடியே, அதிகாராநுகுணமான அபேக்ஷிதங்களையெல்லாம் கொடுக்குமென்கை.

அத்தை விஶதீகரிக்கிறார்

மூ.-(கக) ஐஶ்வர்ய கைவல்ய பகவல்லாபங்களை ஆசைப்பட்டவர்களுக்கு அவற்றைக் கொடுக்கும்.

(வ்யா.) 'ஐஶ்வர்ய' இத்யாதியாலே. அதாவது- (சக) “பௌமாத்ரிகம் ஐஶ்வர்யம் ஸ்வர்காத்யம் வா ஐஹலௌகிகம். கைவல்யம்

* பெ-தி-மொ-க-க-க.

1. தன்கார்யம்-ரக்ஷணம். 2. குலந்தரும் - ஶேஷத்வஜ்ஞாநமாகிற குலத்தைத் தரும்.

ஸமவஷ்ஞ்ச ஐஷ்ஜாடயம் ஸாதயிஷ்யதி" [ஐஹலௌகிக மைஶ்வர்யம் ஸ்வர்க்காத்யம் பாரலௌகிகம் - கைவல்யம் பகவந்தஞ்ச மந்த்ரோயம் ஸாதயிஷ்யதி] என்கிறபடியே ஐஹிகமாயும் 1.பாரலௌகிகமாயுமிருக்கும் ஐஸ்வர்யத்தையும் 2. ஆத்மப்ராப்திரூபமான கைவல்யத்தையும் பரமபுருஷார்த்தமான பகவல்லாபத்தையும் ஆசைப்பட்ட அதிகாரிகளுக்கு ஜபஹோமாதிகளாலே ஸ்வயம் ஸாதநமாய் நின்று, அவ்வோபுருஷார்த்தங்களைக் கொடுக்குமென்கை.

இனி கர்மாத்யுபாய ஸஹகாரித்வரூபமான இதன் வைபவத்தை அருளிச்செய்கிறார்

மூ.-(௨௦) கர்மஜ்ஞாநபக்திகளிலே இழிந்தவர்களுக்கு விரோதியைப் போக்கி அவற்றைத் தலைக்கட்டிக் கொடுக்கும்.

(வ்யா.) 'கர்மஜ்ஞாந' இத்யாதியாலே. அதாவது - கர்மயோகத்தில் இழிந்தவர்களுக்கு ஜபஹோமாதிகளாலே தன்னை ஸஹாயமாகக்கொள்ளுமளவில், கர்மயோகாரம்ப விரோதியான பாபத்தைப் போக்கி, அந்தக்கர்மத்தினுடைய 3. அவிச்சேதாபாதகமாய்க் கொண்டு அத்தைத் தலைக்கட்டிக்கொடுக்கும். ப்ரதமத்திலே, ஜ்ஞாநயோகத்திலே இழிந்தவர்களுக்குத் தன்னை ஸஹாயமாகக் கொள்ளுமளவில், கர்மஸாத்யமான 4. ஜ்ஞாநாரம்பவிரோதி பாபநிவ்ருத்தியைப் பண்ணி அந்தஜ்ஞாநத்துக்கு நாடோறும் அதிஶயத்தைப்பண்ணுநின்றுகொண்டு, அதனைத் தலைக்கட்டிக் கொடுக்கும். பக்தியோகத்திலே இழிந்தவர்களுக்குத் தன்னை ஸஹாயமாகக் கொள்ளுமளவில், பக்தியோகாரம்பவிரோதியான பாபத்தைப்போக்கிப் பக்திவிவ்ருத்திஹேதுவாய்க்கொண்டு அத்தைத் தலைக்கட்டிக் கொடுக்குமென்கை.

5. இங்ஙனன்றிக்கே, ப்ரபந்நர்க்கு இது செய்யும் உபகாரவைபவத்தை அருளிச்செய்கிறார்

1. பாரலௌகிகம் - பரலோகத்தில் உண்டாகுவது. 2. ஆத்மப்ராப்தி - ஆத்மா தன்னைத்தானே யநுபவிக்கப்பெறுகை. 3. அவிச்சேதாபாதகமாய்-நடுவில் விச்சித்தி[தடை] வராமையைச்செய்வதாய். 4. ஜ்ஞாநாரம்பவிரோதி-ஜ்ஞாநயோகாரம்பத்துக்கு விரோதி. 5. இங்ஙனன்றிக்கே-ஸ்வயத்நஸாத்யங்களான கர்மாதி உபாயங்களிலே இழிகையன்றிக்கே என்றபடி.

மூ.-(உக) ப்ரபத்தியிலே இழிந்தவர்களுக்கு ஸ்வரூபஜ்ஞாநத்தைப் பிறப்பித்துக் காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கும் ஹேதுவாயிருக்கும்.

(வ்யா.) 'ப்ரபத்தியிலே' என்று தொடங்கி. அதாவது-கீழ்ச்சொன்னவைபோலே துஸ்ஸகமுமாய் ஸ்வரூபவிருத்தமுமாய் இருக்கையன்றிக்கே1. ஸுஸகமுமாய் 2. ஸ்வரூபாநுரூபமுமான ப்ரபத்யுபாயத்திலே இழிந்தவர்களுக்கு, ததநுரூபமான பகவத்பாரதந்த்ர்யரூப ஸ்வரூபஜ்ஞாநத்தை விஶதமாகப் பிறப்பித்து அர்த்தாநுஸந்தாநாதிகளாலே போதுபோக்குகைக்கும் ஹேதுவாய், * "எனக்கென்றுந் தேனும்பாலுமமுதுமாய திருமால்திருநாமம்" என்கிறபடியே 3. ப்ரதிபாத்யவஸ்துவைப்போலே ஸ்வயம்போக்யமாயிருக்கையாலே போகத்துக்கும் ஹேதுவாயிருக்குமென்கை.

இனி 4. ஜ்ஞாதவ்ய ஸகலார்த்த ப்ரதிபாதகத்வமாகிற இதன் வைபவத்தை அருளிச்செய்கிறார்

மூ.-(உஉ) "மற்றெல்லாம் பேசிலும்" என்கிறபடியே அறியவேண்டும் அர்த்தமெல்லாம் இதுக்குள்ளே உண்டு.

(வ்யா.) 'மற்றெல்லாம் பேசிலும்' என்று தொடங்கி. அதாவது-"† நின் திருவெட்டெழுத்துங் கற்று - மற்றெல்லாம் பேசிலும்" என்கிறபடியே, ஆத்மோஜ்ஜீவநத்துக்கு உடலாக அறியவேண்டும் அர்த்தவிஶேஷங்களெல்லாம் இம்மந்த்ரத்துக்குள்ளே உண்டென்கை.

'அறியவேண்டும் அர்த்தமெல்லாம் ஆகிறது எது?' என்னும் ஆகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார்

---

* பெ-மொ-சு-கo-சு. † பெ-தி-மொ-அ-கo-ரு.

1. ஸுஸகம்-ஸுலபமாகச் செய்யக்கூடியது. 2. ஸ்வரூபாநுரூபம்-பாரதந்த்ர்யத்தையுடைய ஆத்மஸ்வரூபத்துக்கு ஏற்றது. 3. ப்ரதிபாத்ய வஸ்து-திருமந்திரத்தாற் ப்ரதிபாதிக்கப்படுகின்ற எம்பெருமானாகிய வஸ்து. 4. ஜ்ஞாதவ்யஸகலார்த்தமென்றது - அர்த்தபஞ்சகத்தை; அவை-ஜீவாத்மஸ்வரூபம் முதலியன.

மூ.-(உ௩) அதாவது - அஞ்சர்த்தம்.

(வ்யா.) 'அதாவது அஞ்சர்த்தம்' என்று. ஸ்வஸ்வரூப பரஸ்வரூப புருஷார்த்தஸ்வரூப உபாயஸ்வரூப விரோதிஸ்வரூபங்களாகிற அர்த்தபஞ்சகமும் என்றபடி. (௫0) "[Grantha text] [ப்ராப்யஸ்யப்ரஹ்மணோரூபம் ப்ராப்துஸ்சப்ரத்யகாத்மந: - ப்ராப்த்யுபாயம்பலம் ப்ராப்தே: ததாப்ராப்திவிரோதிச—வதந்தி ஸகலாவேதாஸ் ஸேதிஹாஸபுராணகா:—முநயஸ்சமஹாத்மாநோ வேதவேதார்த்தவேதிந:] என்கிறபடியே, ஸகலவேதஸாஸ்த்ரங்களும் ப்ரதிபாதிப்பது இவ்வர்த்தபஞ்சகத்தையு மாகையாலே, தத்ஸங்க்ரஹமான இம்மந்த்ரத்துக்கும் ப்ரதிபாத்யம் இதுவேயிறே. இம்மந்த்ரந்தான் - ப்ரணவத்தாலே 1.ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்தையும், நமஸ்ஸாலே விரோத்யுபாயஸ்வரூபங்களையும், நாராயணபதத்தாலே 2.பரஸ்வரூபத்தையும், அதில் சதுர்த்தியாலே 3. பலஸ்வரூபத்தையும் ப்ரதிபாதிக்கக் கடவதாயிறே இருப்பது.

இம்மந்த்ரார்த்தவைபவத்தை அருளிச்செய்கிறார் மேல்

மூ.-(உ௪) பூர்வாசார்யர்கள் இதில் அர்த்தம் அறிவதற்குமுன்பு, தங்களைப் பிறந்தார்களாக நினைத்திரார்கள்; இதில் அர்த்தஜ்ஞாநம் பிறந்த பின்பு, "பிறந்த பின் மறந்திலேன்" என்கிறபடியே இத்தையொழிய வேறொன்றால் காலக்ஷேபம் பண்ணியறியார்கள்.

(வ்யா.) 'பூர்வாசார்யர்கள்' என்று தொடங்கி. அதாவது-நாதயாமுந யதிவராதிகளான நம்பூர்வாசார்யர்கள், * "4. அன்றுநான்

---

* திருச்ச-௬௪.

1. ஸ்வம் ப்ரதி அஞ்சதி (தன்னைக் குறித்துத்தான் ப்ரகாஸிப்பது) என்று ப்ரத்யக்சப்தத்துக்கு வ்யுத்பத்தி யாகையாலே, ப்ரத்யகாத்மா என்றது-ஜீவாத்மாவைக் காட்டும். 2. பரஸ்வரூபம்- பரமாத்மஸ்வரூபம். 3.பலஸ்வரூபம்-புருஷார்த்தஸ்வரூபம். 4. அன்றுநான்பிறந்திலேன்-இந்தச்சேதநனது

பிறந்திலேன்" என்கிறபடியே, இம்மந்த்ரத்தில் அர்த்தம் அறிவதற்கு முன்பு தங்களைப் பிறந்தார்களாக நினைத்திரார்கள்; இதில் அர்த்த ஜ்ஞாநம் தங்களுக்கு உண்டானபின்பு *"பிறந்தபின் மறந்திலேன்" என்று ஆழ்வார் திவ்யஸூக்தியிற் சொல்லுகிறபடியே இம்மந்த்ரார்த்தத்தை யொழிய மற்றென்றால் காலக்ஷேபம் பண்ணியறியார்களென்கை. வேதஶாஸ்த்ரங்கள், ஆழ்வாரருளிச்செயல்கள் இவற்றால் போதுபோக்கும்போதும் இம்மந்த்ரார்த்தத்தை யுட்கொண்டே அநுஸந்திக்கையாலே, 'இத்தை யொழிய வேறென்றால் காலக்ஷேபம் பண்ணி யறியார்கள்' என்னத் தட்டில்லை.

1.'வாசகஶக்தி 2 ஸர்வத்தையும் ஸாதித்துக்கொடுக்கவற்றாயிருக்க, இதனுடைய 3.வாச்யத்திலே இவர்களூன்றுகைக்குஹேது ஏது?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.-(உரு) வாசகத்திற்காட்டில் வாச்யத்திலே ஊன்றுகைக்கு அடி - ஈஶ்வரனே உபாயோபேயமென்று நினைத்திருக்கை.

(வ்யா.) 'வாசகத்திற்காட்டில்' என்று தொடங்கி. அதாவது- ஸர்வபலத்துக்கும் ஸ்வயம் ஸாதநமாயும், ஸாதநாந்தரங்களுக்கும் ஸஹகாரியாய்நின்று தலைக்கட்டிக் கொடுத்தும் போருகிற இதனுடைய வாசகஶக்திதானே அமைந்திருக்கச்செய்தே, அதிலுங்காட்டிற் கீழ்ச் சொன்னபடியே இம்மந்த்ரத்தினுடைய வாச்யத்திலே பூர்வாசார்யர்களூன்றுகைக்கு அடி - 4. உபேயாந்தரபரராய் இத்தை ஸாதநமாகக் கொண்டு ஸாதித்தல், 5.உபாயாந்தரபரராய் இத்தை 6. ஸஹகாரியாகக்கொள்ளுதல் செய்யுமவர்களைப் போலன்றிக்

உஜ்ஜீவநார்த்தமாக ஈஶ்வரன் க்ருஷிபண்ணுகிற அந்தக்காலத்திலே நான் ஜ்ஞாநரூபஜந்மத்தை யடைந்தேனில்லை,பிறந்தபின் மறந்திலேன்-ஜ்ஞாநஜந்மத்தை யடைந்தபின்பு அதற்கு ஒருகேடுஉண்டாகப்பெற்றிலேன்என்றபடி.

1. வாசகசக்தி-ஶப்தஶக்தி. 2. ஸர்வத்தையும் - ஐஶ்வர்யம் முதலான ஸகலத்தையும். 3. வாச்யம்-அர்த்தம். 4. உபேயாந்தரம்-பகவானைத் தவிர வேறொருஉபேயம்; உபேயம் - உபாயத்தால் அடையவேண்டிய வஸ்து. 5. உபாயாந்தரபரர்-ஈஶ்வரனைத் தவிரக் கர்மயோகம் முதலியவற்றை உபாயங்களாகக் கொள்ளுவார். 6. ஸஹகாரி-ஒத்தாசை.

* திருச்ச—சுஉ.

கே, உபாயோபேயங்களிரண்டும் ஈஶ்வரனே யென்று ப்ரதிபத்தி பண்ணி யிருக்கை யென்றபடி.

ஆக, "திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப் போரும்படி" என்று தொடங்கி இவ்வளவும் 1. வாய்வந்தபடி அநுஸந்திக்கவொண்ணாத படியான இதனுடைய கௌரவத்தையும், ஈஶ்வரன் தானே ஶிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று வெளியிட்டருளுகையால் வந்த ஏற்றத்தையும், ஸகலஶாஸ்த்ரங்களிலும் ஸகலமந்த்ரங்களிலும் 2. வாச்யந்தன்னிலுங் காட்டில் இதுக்கு உண்டான பெருமையையும், 3. அக்ரமமாகச் சொல்லிலும் தன்கார்யம் செய்யும் ஆதிக்யத்தையும், அபேக்ஷிதஸகலபலப்ரதத்வரூபமாஹாத்ம்யத்தையும, கர்மாத்யுபாயஸஹகாரித்வரூபமான உத்கர்ஷத்தையும், ஜ்ஞாதவ்யஸகலார்த்தப்ரதிபாதகதயா வந்த மாஹாத்ம்யத்தையும், ஏதத்ப்ரதிபாத்ய அர்த்தகௌரவவிஶேஷத்தையும் அருளிச்செய்கையாலே, இம்மந்த்ரத்தினுடைய வைபவத்தை எல்லாரும் அறியும்படி தர்ஶிப்பித்தருளினாராயிற்று.

இனிமேல் இம்மந்த்ரத்துக்கு, வாக்யார்த்தம் இரண்டுபடியாக அருளிச்செய்கிறார்

மூ.-(உரு) இதுதன்னில் சொல்லுகிற அர்த்தம்-ஸ்வரூபமும் ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யமும்; ஸ்வரூபமும் உபாயமும் பலமு மென்னவுமாம்.

(வ்யா.) 'இதுதன்னில்' என்று தொடங்கி. அதாவது-இம்மந்த்ரந் தன்னில் சொல்லுகிற அர்த்தம்-இவ்வாத்மாவினுடைய ஶேஷத்வபாரதந்த்ர்யங்களாகிற ஸ்வரூபமும், அந்த 4. ஸ்வரூபத்துக்கு அநுரூபமாயிருந்துள்ள கைங்கர்யமாகிற ப்ராப்யமும்; அன்றிக்கே, ஶேஷத்வமாகிற ஸ்வரூபமும், அந்த ஸ்வரூபாநுரூபமான உபாயமும், உபாய

---

1. வாய்வந்தபடி-வாய்க்குவந்தபடி; ப்ரீதியில்லாமல் என்றபடி. 2. வாச்யம்-அர்த்தமானஎம்பெருமான். 3. அக்ரமமாகச் சொல்லிலும்-இதனிடத்துப்ரீதியில்லாமலும் அநதிகாரிகளின் செவியிற்படும்படியும் சொன்னாலும் என்றபடி. 4. ஸ்வரூபத்துக்கு அநுரூபமாயிருந்துள்ள கைங்கர்யம்-ஸ்வப்ரயோஜநபுத்தியும் ஸ்வகர்த்ருத்வபுத்தியும் நீங்கிக் கேவலபகவந்முகோல்லாஸார்த்தமாகச் செய்யப்படும் கைங்கர்யம்.

லப்யமான பலமும் என்று சொல்லவுமாமென்கை. 1. இதில் ப்ரதம யோஜநையில் 2. ப்ரணவ நமஸ்ஸுக்களாலே ஸ்வரூபமும், நாராயணபதத்தாலே ப்ராப்யமும் சொல்லுகிறது. அநந்தரயோஜநையில் ப்ரணவத்தாலே ஶேஷத்வமும், 3. நமஸ்ஸாலே உபாயமும், நாராயண பதத்தாலே பலமும் சொல்லுகிறது.

'பலவேஷந்தா னிருக்கும்படி எங்ஙனே?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.–(உஎ) பலமிருக்கும்படி ப்ரமேயஶேகரத்திலும் அர்ச்சிராதிகதியிலும் சொன்னோம்.

(வ்யா.) 'பலமிருக்கும்படி' என்று தொடங்கி. அதாவது-இவ்வாத்மாவுக்கு ப்ராப்யமான பலந்தான் - அர்ச்சிராதிமார்க்கத்தாலே பரமபதத்திலே போய்ப் பரிபூர்ண பகவதநுபவத்தைப் பண்ணி அவ்வநுபவஜநிதப்ரீதிப்ரேரிதனாய்க்கொண்டு பண்ணும் 4. அஶேஷஶேஷவ்ருத்திபாகையாலே, அது இருக்கும்படியை ஸங்க்ரஹேண ப்ரமேயஶேகரமாகிற ப்ரபந்தத்திலும், விஸ்தரேண அர்ச்சிராதிகதியாகிற ப்ரபந்தத்திலும் விஶதமாகச் சொன்னோம்; அவற்றிலே கண்டுகொள்வதென்கை.

இனி, இம்மந்த்ரத்துக்கு 5. ப்ரதிபதம அர்த்தம் அருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் இதனுடைய அக்ஷரஸங்க்யையையும், பதஸங்க்யையையும் அருளிச்செய்கிறார்

மூ.–(உஅ) இதுதான்–எட்டுத்திருவக்ஷரமாய் மூன்று பதமாயிருக்கும்.

(வ்யா.) 'இதுதான்' என்று தொடங்கி. அதாவது-இம்மந்த்ரந்தான் (ருக) "ஓமித்யேகாக்ஷரம், நம இதி த்வே அக்ஷரே, நாராய

---

1. இதில்-இவற்றில்: இந்த இரண்டுவிதயோஜநையில். 2. ப்ரணவத்தாலே ஶேஷத்வமாகிற ஸ்ரூபமும், நமஸ்ஸாலே பாரதந்த்ர்யமாகிற ஸ்வரூபமுமென்கை. ஸகண்டமான நமஸ்ஸு 'ம: ந' [எனக்குஉரியன் அன்று] என்று பிரிந்து, ஸ்வரக்ஷணத்தில் தான் அஶக்தனென்பதைத் தெரிவிப்பதன் மூலமாக, ஈஶ்வரனுக்குப் பரதந்த்ரனென்பதைத் தெரிவிக்குமென்று அறிக. 3. நமஶ்ஶப்தம் ஸ்வஸ்வாதந்த்ர்யநிவ்ருத்தியாகிற அர்த்தபலத்தாலே ஈஶ்வரனே உபாயமென்று அகாரத்திற்சொல்லப்பட்ட ரக்ஷணத்திற்கு ஈஶ்வரனே கர்த்தனென்பதைக் காட்டும் என்றபடி. 4. அஶேஷஶேஷவ்ருத்தி-ஸமஸ்தமான அடிமைத்தொழில். 5. ப்ரதிபதம்-பதந்தோறும்.

ணாயெதி வஞாக்ஷராணி, ஐதய்ஷாக்ஷரம் ஸநுஸாமாயதீ்ரெவெதி" [ஓமித்யேகாக்ஷரம், நம இதி த்வே அக்ஷரே, நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி, இத்யஷ்டாக்ஷரஞ் சந்தஸா காயத்ரீசேதி] (ருஉ) "ஓமிதய்ரெவ்யாஹரெக, நம ஐதிவஸ்ராக, நாராயணாயெதய்ஹவரிஷ்ாக" [ஓமித்யக்ரே வ்யாஹரேத், நம இதி பஸ்சாத், நாராயணாயேத்யுபரிஷ்டாத்] என்கிறபடியே எட்டுத்திருவக்ஷரமாய், மூன்றுபதமா யிருக்குமென்கை. இதனுடைய அஷ்டாக்ஷரத்வம் சொல்லுகிறவிடத்திலே, (ருக) "ஓமிதெ்யகாக்ஷரம்" [ஓமித்யேகாக்ஷரம்] என்று ப்ரணவத்தை ஓரக்ஷரமாகவும் (ருக) "நம ஐதி வெ்அக்ஷரெ" [நமஇதி த்வேஅக்ஷரே] என்று நமஸ்ஸை இரண்டக்ஷரமாகவும் (ருக) "நாராயணாயெதி வஞாக்ஷராணி" [நாராயணாயேதிபஞ்சாக்ஷராணி] என்று நாராயணபதத்தை அஞ்சக்ஷரமாகவும் ஸ்ருதி சொல்லுகையாலே, ஸமஸ்தபதமான நாராயணபதத்தில், நார பதத்தைப் பிரித்து ஷடக்ஷரமாக்கி, ப்ரணவத்தையொழிய அஷ்டாக்ஷரத்வம் சொல்லுமவர்களுடைய பக்ஷம் அவைதிகமாகையாலே அநாதரணீயமாகக் கடவது.

'இதில் பதத்ரயமும் எவ்வர்த்தத்தைச் சொல்லுகிறது?' என்னும் ஆகாங்க்ஷையிலே,

மூ.-(உகூ) மூன்று பதமும் மூன்று அர்த்தத்தைச் சொல்லுகிறது.

(வ்யா.) "மூன்றுபதமும் மூன்றர்த்தத்தைச் சொல்லுகிறது' என்கிறார்.

அவ்வர்த்தங்கள்தம்மை விஶதமாக அருளிச்செய்கிறார்

மூ.-(ங.0) அதாவது - ஶேஷத்வமும், பாரதந்த்ர்யமும், கைங்கர்யமும்.

(வ்யா.) 'அதாவது - ஶேஷத்வமும், பாரதந்த்ர்யமும், கைங்கர்யமும்' என்று. 'ஸ்வரூபமும் ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யமும்' என்று முதற்சொன்ன வாக்யார்த்தம் இத்தை நினைத்திறே.

'இப்பதத்ரயத்திலும் ப்ரதமபதந்தான் எது?' என்ன,

மூ.-(௩௧) இதில் முதற்பதம் ப்ரணவம்.

(வ்யா.) 'இதில் முதல்பதம் ப்ரணவம்' என்கிறார். (௫௨) "𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑌗𑍍𑌰𑍇 𑌵𑍍𑌯𑌾𑌹𑌰𑍇𑌤𑍍" [ஓமித்யக்ரே வ்யாஹரேத்] என்றிறே ஶ்ருதி சொல்லிற்று. ஸ்ம்ருதியும், (௫௩) "𑌪𑍍𑌰𑌣𑌵𑌾𑌦𑍍𑌯𑌂 𑌨𑌮𑍋𑌮𑌧𑍍𑌯𑌂 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌪𑌦𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌮𑍍 । 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌕𑌰𑌂 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍" [ப்ரணவாத்யம்நமோமத்யம் நாராயணபதாந்திமம்-மந்த்ரமஷ்டாக்ஷரம் வித்யாத் ஸர்வஸித்திகரம் ந்ருணாம்] என்றதிறே.

இனி, ப்ரணவத்துக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக, இதனுடைய அக்ஷரத்ரயாத்மகதையை அருளிச்செய்கிறார்

மூ.-(௩௨) இது 'அ' என்றும் 'உ' என்றும் 'ம' என்றும் மூன்று திருவக்ஷரம்.

(வ்யா.) 'இது அ என்றும், உ என்றும், ம என்றும் மூன்று திருவக்ஷரம்' என்று. இப்ரணவந்தான், 1. அஸம்ஹிதாகாரத்தாலே மூன்றக்ஷரமாய், மூன்றுபதமாய், 2. மூன்றர்த்தப்ராகாஶகமாய், 3. ஸம்ஹிதாகாரத்தாலே ஏகாக்ஷரமாய், ஏகபதமாய், ஏகார்த்தப்ராகாஶகமாயிறே இருப்பது.

இந்தஅக்ஷரத்ரயத்தினுடையவும் உத்பத்திக்ரமத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார்

மூ.-(௩௩) மூன்றுதாழியிலே தயிரை நிறைத்துக் கடைந்து வெண்ணெய் திரட்டினாற்போலே மூன்று வேதத்திலும் மூன்றக்ஷரத்தையும் எடுத்தது.

---

1. "ஓமித்யேகாக்ஷரம்" என்று ஶ்ருதி சொன்னதற்கு விரோதமாக, மூன்று திருவக்ஷரமென்று அருளிச்செய்தது எங்ஙனே பொருந்தும்?' என்ற கேள்விக்கு உத்தரம் அருளிச்செய்கிறார் 'அஸம்ஹிதாகாரத்தாலே' என்று தொடங்கி. அஸம்ஹிதாகாரம்-பிரிந்திருக்கும் நிலையிலுள்ள ரூபம். 2. லுப்த சதுர்த்தியோடுகூடின அகாரம் - பகவச்சேஷத்வத்தையும், உகாரம் - அநந்யார்ஹத்வத்தையும், மகாரம் - அநந்யார்ஹபகவச்சேஷத்வத்துக்கு ஆஶ்ரயமாகும் ஜ்ஞாதாவான ஜீவனையும் காட்டுமென்க. 3. ஸம்ஹிதாகாரம் - சேர்ந்திருக்கும் நிலையிலுள்ள ரூபம்.

(வ்யா.) 'மூன்றுதாழியிலே' என்று தொடங்கி. (௫௪) "பூரிதி ருக்வேதாதஜாயத, புவ இதி யஜுர்வேதாத், ஸுவரிதி ஸாமவேதாத், தாநி ஶுக்ராண்யப்யதபத் - தேப்யோऽபிதப்தேப்யஸ்த்ரயோ வர்ணா அஜாயந்த, அகார உகார மகார இதி, தாநேகதா ஸமபரத் ததேததோமிதி" [பூரிதிருக்வேதாதஜாயத, புவஇதி யஜுர்வேதாத், ஸுவரிதி ஸாமவேதாத், தாநி ஶுக்ராண்யப்யதபத், தேப்யோऽபிதப்தேப்யஸ்த்ரயோ வர்ணா அஜாயந்த, அகார உகார மகார இதி, தாநேகதா ஸமபரத் ததேததோமிதி] என்றும், (௫௫) "அகாரஞ்சாப்யுகாரஞ்ச மகாரஞ்ச ப்ரஜாபதி:। வேதத்ரயாந்நிரதுஹத் பூர்புவஸ்ஸுவரிதீச" [அகாரஞ்சாப்யுகாரஞ்ச மகாரஞ்சப்ரஜாபதி:- வேதத்ரயாந்நிரப்ருஹத் பூர்ப்புவஸ்ஸுவரிதிச] என்றும் ஶ்ருதி ஸ்ம்ருதிகளிற் சொல்லுகிறபடியே ருக்யஜுஸ்ஸாமரூபமான வேதத்ரயத்தில் நின்றும், "பூ: புவ: ஸுவ:" என்கிற வ்யாஹ்ருதித்ரயத்தையும் தோற்றுவித்து, அந்தவ்யாஹ்ருதி த்ரயத்தையும் பொன் ஓடவைக்குமாபோலே தன்ஸங்கல்பத்தாலே ஓடவைத்து அவற்றில்நின்றும் அகார உகார மகாரங்களாகிற அக்ஷரங்கள் மூன்றும் அடைவே தோன்றும்படி பண்ணி, இப்படி ஸர்வேஶ்வரன் ஸமுத்தரித்தபடியைத் திருவுள்ளம்பற்றி, பாத்ரத்ரயகதமான தயிரைத் தனித்தனியே கடைந்து, தத்ஸாரமான வெண்ணெயை வாங்கித் திரட்டினாற்போலே, மூன்றுவேதத்திலும் மூன்றக்ஷரத்தையும் எடுத்தது என்கிறார்.

இதனால் பலித்ததத்தை அருளிச்செய்கிறார்

மூ.-(௨௪) ஆகையால், இது ஸகலவேதஸாரம்.

(வ்யா.) 'ஆகையால் இது ஸகலவேதஸாரம்' என்று. அதாவது - அக்ஷரத்ரயமும் ஓரோ வேதத்தினுடைய ஸாரமாக [1] ஸமுத்த்ருதமாகையாலே இவ்வக்ஷரத்ரயாத்மகமான ப்ரணவம் ஸகலவேதஸாரம் என்றபடி.

ஆக, "இது தன்னிற்சொல்லுகிற அர்த்தம்" என்று தொடங்கி இவ்வளவும் - இம்மந்த்ரத்தினுடைய வாக்யார்த்தத்தையும், அக்ஷர

---

1. ஸமுத்த்ருதம் - எடுக்கப்பட்டது.

ஸங்க்யையையும், பதஸங்க்யையையும், பதத்ரயமும் அர்த்தத்ரய ப்ரதிபாதகமென்னுமத்தையும், அதில் ப்ரதமபதம் இன்னதென்னுமத்தையும், அதுதான் அக்ஷரத்ரயாத்மகமாயிருக்குமென்னுமத்தையும், அவ்வக்ஷரத்ரயமும் வேதத்ரயஸாரமாக உத்பந்நமாகையாலே தத்ஸமுதாயமான ப்ரணவம் ஸகலவேதஸாரமென்னுமத்தையும் அருளிச்செய்தாராயிற்று.

இனி, இவ்வக்ஷரத்ரயத்துக்கும் அடைவே அர்த்தம் அருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் அகாரார்த்தத்தை அருளிச்செய்கிறார்.

மூ.–(நடு) 1. இதில் அகாரம்-ஸகலஶப்தத்துக்கும் காரணமாய் நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே, ஸகலஜகத்துக்கும் காரணமாய் ஸர்வரக்ஷகனான எம்பெருமானைச் சொல்லுகிறது.

(வ்யா.) 'இதில் அகாரம்' என்று தொடங்கி. அதாவது - இவ்வக்ஷரத்ரயத்திலும் வைத்துக்கொண்டு ப்ரதமாக்ஷரமான அகாரம் - (ருகூ) 2. "𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌂 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌨𑌮𑍍। 𑌵𑍇𑌦𑌶𑌬𑍍𑌦𑍇𑌭𑍍𑌯 𑌏𑌵𑌾𑌦𑍌 𑌦𑍇𑌵𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌚𑌕𑌾𑌰 𑌸𑌃" [நாமரூபஞ்ச பூதாநாம் க்ருத்யாநாஞ்சப்ரபஞ்சநம் - வேதஶப்தேப்யஏவாதௌ

1. இந்த வாக்யத்துக்கு இரண்டு யோஜனை உண்டு; அவை வருமாறு:- முதல் யோஜனை:- 'நாராயணபதம்' ஸமஸ்தவஸ்து ஶரீரகனென்று தெரிவிப்பதன் மூலமாக, ஈஶ்வரனே உபாதாநகாரணனென்று தெரிவித்தும் ஸர்வரக்ஷகனென்று தெரிவித்தும் போருகையாலே, அந்த நாராயணஶப்தத்தின் ஸங்க்ரஹமான அகாரமும் - ஸகல ஶப்தத்துக்கும் காரணமாயிருக்குந் தனது தன்மையால் தன்னால் ப்ரதிபாதிக்கப்படுபவன் ஸகல வஸ்துக்களுக்கும் காரணனென்பதையும், 'அவ-ரக்ஷணே' என்கிற தாதுவினடியாகப் பிறப்பதால் ரக்ஷகனென்பதையும் தெரிவிக்குமென்பது கருத்து. 'ஸகல ஶப்தத்துக்குங் காரணமாய்' என்ற மூலத்தின்பின் 'அவ-ரக்ஷணே' என்ற தாதுவிலிருந்து நிஷ்பந்நமாய்' என்று அத்யாஹரித்துக்கொள்ளவேணும். இரண்டாம் யோஜனை:- அகாரம் தான் ஸகல ஶப்தத்துக்கும் காரணமாயிருக்கையாலே ஸகலஜகத்காரணனான எம்பெருமானைச் சொல்லுகின்றது; நாராயணபத ஸங்க்ரஹமாயிருத்தலாலே ஸர்வரக்ஷகனான எம்பெருமானைச் சொல்லுகின்றது என்பது. 2. 'நாமரூபஞ்ச' என்பது முதல் நான்கு ப்ரமாணங்கள்-அகாரம் ஸகல ஶப்தத்துக்குங் காரணமாகும் வழியை நிரூபிப்பன.

தேவாதீநாஞ்சகாரஸ:]என்கிறபடியே லௌகிகஸகலஶப்தங்களுக்கும் வேதம் காரணமாய், (ரு௭) "ப்ரணவாத்யாஸ்ததாவேதா:" [ப்ரணவாத்யாஸ்ததாவேதா:] (ரு௮) "ஓங்காரப்ரபவாவேதா:" [ஓங்காரப்ரபவாவேதா:] இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே அந்தவேதங்களுக்கும் ப்ரணவம் காரணமாய், (ரு௯) "தஸ்யப்ரக்ருதிலீநஸ்ய" [தஸ்யப்ரக்ருதிலீநஸ்ய] என்கிறபடியே அந்தப்ரணவந்தனக்குத் தான் காரணமாயிருக்கையாலே (௬௦) "அகாரோவைஸர்வாவாக்" [அகாரோவைஸர்வாவாக்] (௬௧) "ஸமஸ்தஶப்தமூலத்வாதகாரஸ்யஸ்வபாவத:" [ஸமஸ்தஶப்தமூலத்வா தகாரஸ்ய ஸ்வபாவத:] என்கிறபடியே ஸகலஶப்தத்துக்குங் காரணமாய், ஸர்வேஶ்வரன் ஸமஸ்தவஸ்துஶரீரதயா ஸர்வரக்ஷகனு யிருக்கும்படியை ப்ரதிபாதிக்கிற நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே (௬௨) "யதோவா இமாநிபூதாநிஜாயந்தே, யேநஜாதாநிஜீவந்தி" [யதோவா இமாநிபூதாநிஜாயந்தே, யேநஜாதாநி ஜீவந்தி] (௬௩) "ஸஏவ ஸ்ருஜ்யஸ்ஸசஸர்க்ககர்த்தா ஸஏவபாத்யத்திசபால்யதேச" [ஸஏவ ஸ்ருஜ்யஸ்ஸசஸர்க்ககர்த்தா ஸஏவபாத்யத்திச பால்யதேச] இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே எல்லாஜகத்துக்குங் காரணமாய் எல்லார்க்கும் ரக்ஷகனுமிருக்கும் எம்பெருமானைச் சொல்லுகிறதென்கை. இத்தால், இவ்வக்ஷரத்தில் 1. ப்ரக்ருத்யர்த்தமான காரணத்வமும், தாத்வர்த்தமான ரக்ஷகத்வமும் சொல்லிற்றாயிற்று. இவ்வகாரத்துக்கு 2. நாராயணபதஸங்க்ரஹதயா ரக்ஷகவாசித்வம் சொல்லும்போதும், தாதுஸித்தவேஷத்தை அவலம்பித்தே சொல்லவேணுமிறே.

'ரக்ஷிக்கையாவதுதான் எது?' என்னும் ஆகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார்

---

1. தான் ஸர்வஶப்தங்களுக்கும் ப்ரக்ருதியாயிருக்குந் தன்மைக்கு ஏற்பத் தனக்கு வாச்யனை [அர்த்தமான] ஈஶ்வரனும் ஸகல வஸ்துக்களுக்குங் காரணனுவனென்பதும். 2. நாராயணபத ஸங்க்ரஹதயா ரக்ஷகவாசித்வம் சொல்லுவது - இரண்டாவது யோஜனையில்: அந்தயோஜனையிலும் அகாரத்துக்கு ரக்ஷகவாசித்வம் மூலத்திற் சொல்லப்படாமலிருந்தாலும், 'அவ' என்ற தாதுவிலிருந்து தோன்றிய ஶப்தமென்பதுபற்றியே அந்த அகாரத்துக்கு ரக்ஷகத்வம் சொல்லவேண்டியிருப்பது போலவே முதல் யோஜனையிலும் சொல்லிக்கொள்ளவேணுமென்பது வாக்யத்தின் கருத்து.

மூ.- (௩௬) ரக்ஷிக்கையாவது-விரோதியைப் போக்குகையும், அபேக்ஷிதத்தைக் கொடுக்கையும்.

(வ்யா.) 'ரக்ஷிக்கையாவது' என்று தொடங்கி. அதாவது-ரக்ஷகத்வந்தான் 1. அநிஷ்டநிவர்த்தகத்வ 2. இஷ்டப்ராபகத்வ ரூபேண த்விவித மாகையாலே, ஈஸ்வரன் சேதநரை ரக்ஷிக்கையாவது அவர்களுக்கு துக்காவஹமான விரோதியைப் போக்குகையும், ஸுகாவஹமான அபேக்ஷிதத்தைக் கொடுக்கையும் என்கை.

'இவர்களுக்கு இவன் போக்கும் விரோதி ஏது? கொடுக்கும் அபேக்ஷிதம் ஏது?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.- (௩௭) இவை யிரண்டும் சேதநர் நின்றநின்ற அளவுக்கு ஈடாயிருக்கும்.

(வ்யா.) 'இவையிரண்டும் சேதநர் நின்ற நின்ற அளவுக்கு ஈடாயிருக்கும்' என்று. 'சேதநர் நின்ற நின்ற அளவுக்கு ஈடாயிருக்கும்' என்றது - தத்ததநதிகார அநுகுணமா யிருக்கு மென்றபடி.

இதுதன்னை 3 வ்யக்தமாக அருளிச்செய்கிறார் மேல்:—

மூ.- (௩௮) ஸம்ஸாரிகளுக்கு விரோதி-ஶத்ருபீடாதிகள், அபேக்ஷிதம்- அந்நபாநாதிகள்; முமுக்ஷுக்களுக்குவிரோதி-ஸ்ம்ஸாரஸம்பந்தம், அபேக்ஷிதம்-பரமபதப்ராப்தி; முக்தர்க்கும் நித்யர்க்கும் விரோதி - கைங்கர்யஹாநி, அபேக்ஷிதம்-கைங்கர்யவ்ருத்தி.

(வ்யா.) 'ஸம்ஸாரிகளுக்கு' இத்யாதி. அதாவது- 4. தேஹாத்மாபிமாநாதிகளும் ஶப்தாதிவிஷயாநுபவமுமே 5. யாத்ரையாயிருக்கும் ஸம்ஸாரிகளுக்கு நிவர்த்யமான விரோதி - ஶத்ருக்களால வரும் நலிவு தொடக்கமானவை; ப்ராப்யமான அபேக்ஷிதம்- சோறு தண்ணீர் முதலானவை யென்கை. 'ஶத்ருபீடாதிகள்' என்கிற விடத்தில்

1. அநிஷ்டநிவர்த்தகத்வம் - அநிஷ்டங்களைப் போக்குபவனுகை. 2. இஷ்டப்ராபகத்வம்-இஷ்டங்களை அடையச்செய்பவனுகை. 3. வ்யக்தமாக-ஸ்பஷ்டமாக. 4. தேஹாத்மாபிமாநம்-தேஹமே ஆத்மா என்ற அபிமாநம்; 'ஆதி' ஶப்தத்தால், ஸ்வஸ்வாதந்த்ர்யத்தை நினைக்கிறது. 5. யாத்ரை - போதுபோக்கு.

'ஆதி' ஶப்தத்தாலே 1·ஆதிவ்யாதி முதலானவற்றால் வரும் பீடைக ளைச் சொல்லுகிறது. 'அங்கபாகாதிகள்' என்கிறவிடத்தில் 'ஆதி' ஶப் தத்தாலே 2·ஸ்ரக் வஸ்த்ர ஆபரண அங்கராக அங்காலிங்கநாதிக ளைச் சொல்லுகிறது.

'முமுக்ஷுக்களுக்கு' இத்யாதி. அதாவது:—ஸம்ஸாரத்தில் 3,அடிக்கொதித்துப் பரமபதத்திலே போக ஆசைப்படாநிற்கும்முமு க்ஷுக்களுக்கு நிவர்த்யமான விரோதி- 4.*பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்புமாய்க்கொண்டு இவ்விபூதியி லேயிருக்கையாகிற ஸம்ஸாரஸம்பந்தம்; ப்ராப்யமான அபேக்ஷிதம்- பகவதநுபவாதிகளுக்கு அநுகூலமான பரமபதத்தை ப்ராபிக்கை யென்கை.

'முக்தர்க்கும்' இத்யாதி. அதாவது:—நிவ்ருத்தஸம்ஸாராயும் 5. அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தராயும், 6- பகவதநுபவ ஜநிதப்ரீதிகாரித கைங்கர்யபராயு மிருக்கும் முக்தர்க்கும் நித்யர்க்கும் விரோதி- 7. வ குத்தஶேஷியான ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே ஸ்வரூபாநுரூப மாகப் பண்ணிக்கொண்டு போருங் கைங்கர்யத்துக்கு வரும் 8. விச்சே தம்; அபேக்ஷிதம் - உத்தரோத்தரம் அடிமை செய்துசெல்லுகையா கிற கைங்கர்யவ்ருத்தி யென்கை.

ஆக, இப்படி அதிகாராநுகுணம் விரோதியைப்போக்கி அபே க்ஷிததத்தைக் கொடுக்கையால் ஈஶ்வரனே ஸர்வரக்ஷகனென்னுமிடம் சொல்லிற்றாயிற்று.

---

1. ஆதி-மாநஸிகமான ஸங்கடம். 2. ஸ்ரக்-புஷ்பமாலே. அங்கராகம்- உடம்பிற் பூசிக்கொள்ளும் சந்தநம் முதலியன. 3. அடிக்கொதித்து - கேட் டை விளக்குமென்ற அறிவு தலையெடுத்து என்றபடி. 4. பொய்ந்நின்ற ஞானம்-தேஹாத்மாபிமானம். பொல்லாவொழுக்கு - அந்தத்தேஹாத்மாபி மானவாஸனை. 5. அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தர்-ஸம்ஸாரத்தின் ஸம்பந்தம் ஒருபோதும் இல்லாதவ ரென்றபடி. 6. பகவதநுபவஜநித ப்ரீதிகாரித கைங்கர்யபரர்-பகவானே அநுபவித்தலா லுண்டாகும் ப்ரீதியினால் செய்விக் கப்பட்ட [தூண்டப்பட்ட] கைங்கரியத்தில் மனம் ஊன்றினவர். 7. வகு த்த ஶேஷி-ப்ராப்தனான ஶேஷி. 8 விச்சேதம்-இடைவிடுகை.

* திருவிரு-க.

'இப்படி ஈஶ்வரனேயோ பின்னை எல்லாரையும் ரக்ஷிக்கிறவன்? லோகத்திலே மாதா பித்ரு ப்ரப்ருதி தேவதாந்தர பர்யந்தமாக ரக்ஷகராய்ப் போருகிறவர்கள் பலரும் இல்லையோ?' என்ன, அருளிச் செய்கிறார்

மூ.-(௩௯) 'ஈஶ்வரனை யொழிந்தவர்கள் ரக்ஷகரல்லர்' என்னுமிடம் ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னோம்.

(வ்யா.) 'ஈஶ்வரனை யொழிந்தவர்கள் ரக்ஷகரல்ல ரென்னுமிடம் ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னோம்' என்று. அதாவது- 1. நிருபாதிக பந்துவாய், ஸர்வகாலமும் கைவிடாதே நோக்கிக்கொண்டு போரும் ஸர்வேஶ்வரனை யொழிந்த 2. ஔபாதிக பந்துக்களான மாதாபித்ராதிகளும், 3. அர்வாசீநரான தேவதாந்தரங்களும் ரக்ஷக ரல்லரென்னுமிடம் ஸஹேதுகமாக ப்ரபந்நபரித்ராண மென்கிற ப்ர பந்தத்திலே சொன்னோம்; அதிலே கண்டுகொள்வதென்கை.

அநந்தரம், அர்த்தபலத்தாலே இப்பதத்தில் அநுஸந்திக்கப் படும் ஶ்ரிய:பதித்வத்தை அருளிச்செய்கிறார்

மூ.-(௪0) ரக்ஷிக்கும்போது பிராட்டிஸந்நிதி வேண்டுகையாலே, இதிலே, ஶ்ரீஸம்பந்தமும் அநுஸந்தேயம்.

(வ்யா.) 'ரக்ஷிக்கும்போது' என்று தொடங்கி. அதாவது- (௯௪) "𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌹 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑍋 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌰𑍂𑌪𑌯𑌾 । 𑌰𑌕𑍍𑌷𑌕𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑍇 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍇𑌽𑌪𑌿 𑌚 𑌗𑍀𑌯𑌤𑍇" [லக்ஷ்ம்யாஸஹ ஹ்ருஷீகேஶோ தேவ்யாகாருண்யரூபயா - ரக்ஷகஸ்ஸர்வஸித்தாந்தே வேதாந்தேபிசகீயதே] என்கிறபடியே ரக்ஷகனான ஈஶ்வரன் சேதநரை ரக்ஷிக்குந் தசையில் இவர்களுடைய அபராதங்களைக் கண்டாதல், தன் ஸ்வாதந்த்ர்யத்தாலேயாதல் உபேக்ஷியாமற் செய்கைக்கு

---

1. நிருபாதிகபந்து - காரணத்தாலான பந்துத்வ மில்லாமல் ஸ்வதஸ் ஸித்தமான பந்துத்வமுள்ளவன். 2. ஔபாதிகபந்துக்கள் - காரணத்தால் பந்துவாக இருப்பவர்கள். 3. அர்வாசீநர்-பிற்பட்டவர்கள்; புதிதாய்த் தோன்றினவர்க ளென்றபடி.

உறுப்பான க்ருபையை ஜநிப்பிக்கும் புருஷகாரபூதையான பிராட்டி ஸந்நிதி அவஶ்யாபேக்ஷிதமாகையாலே, ரக்ஷகனான அவனைச் சொல்லுகிற இவ்வகாரத்திலே அவனுடைய லக்ஷ்மீஸம்பந்தமும் அநுஸந்தேயமென்கை. 'லக்ஷ்மீ' என்னாதே 'ஸ்ரீ' என்றது-(௬௫)'ஶ்ரயத' இதி ஸ்ரீஃ, [ஶ்ரயத இதி ஸ்ரீ:] என்கிறபடியே அவனை நித்யஸேவைபண்ணுகையாலே அவனோடு இவளுக்கு உண்டான 1. அவிநாபாவமும், (௬௬)'ஶ்ரீயத இதி ஸ்ரீஃ'[ஸ்ரீயத இதி ஸ்ரீ:] என்கிறபடியே சேதநருக்கு இவள் நித்யஸேவ்யையாயிருக்குமென்னுமதுவும் தோற்றுகைக்காக.

இன்னமும் இவ்வகாரத்தில் ஈஶ்வரனுடைய லக்ஷ்மீஸம்பந்தம் நியமேந தோற்றுமென்னுமத்தை ஆப்தவசநத்தாலே தர்ஶிப்பிக்கிறார்

மூ.-(௨௪) அத்ர பகவத்ஸேநாபதிமிஶ்ரர்வாக்யம்:- "அவன்மார்பு விட்டுப் பிரியில் இவ்வக்ஷரம் விட்டுப் பிரிவது."

(வ்யா.) 'அத்ர' இத்யாதியால். அதாவது-இவ்விடத்திலே ஜ்ஞாநாதிகரான ஸ்ரீஸேநாபதிசியர் அருளிச்செய்யும் வார்த்தை '* "அகலகில்லேனிறையும்" என்று அவன் திருமார்பிலே நித்யவாஸம் பண்ணும் இவள், அம்மார்பைவிட்டுப் பிரியிலாயிற்று, அவனுக்கு ப்ரதிபாதகமான இவ்வக்ஷரத்தை விட்டுப் பிரிவதென்று' என்கை. 'என்று' என்கிற இத்தனையுங் கூட்டாதபோது, கீழோடு இவ்வாக்யம் அந்வயியாது.

இத்தால், அவன்திருமார்பில் ஸம்பந்தம் இவளுக்கு நித்யமாகையாலே அவன் தோற்றுமிடத்திலே இவளும் தோற்றுகை நிஶ்சிதமாகையால், அவன் திருமார்பில் 2 அந்வயத்தோபாதி, அவனுக்கு வாசகமான அகாரத்தில் அந்வயமும் இவளுக்குநித்யமென்றதாயிற்று.

இன்னமும் 3. இவ்வர்த்தத்தை ஸ்திரீகரிக்கைக்காக ஈஶ்வரசேதந வாசகங்களான அகார மகாரங்களிரண்டிலும் இவளுக்கு உண்டான 4 அநவரதாந்வயத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார்

---

1. அவிநாபாவம்-விட்டுப்பிரியாமலிருக்கை. 2. அந்வயத்தோபாதி-ஸம்பந்தம்போலவே. 3. இவ்வர்த்தத்தை-எம்பெருமான் தோற்றுமிடத்தில் லக்ஷ்மியும் தோன்றுவளென்ற விஷயத்தை. 4. அநவரதாந்வயம்-இடைவிடாத ஸம்பந்தம்.

* திருவாய்மொ-௬-௧௦-௧௦.

மூ.-(சஉ) பர்த்தாவினுடைய படுக்கையையும் ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாதே யிருக்கும் மாதாவைப் போலே ப்ரதம 1. சரம பதங்களை விடாதே யிருக்கும் இருப்பு.

(வ்யா.) 'பர்த்தாவினுடைய' என்று தொடங்கி. அதாவது-ஶேஷபூதையான தன்ஸ்வரூபத்துக்குச் சேரும்படி அவனை ரஸிப்பிக்கைக்காகப் பர்த்தாவினுடைய படுக்கையையும் விடாதே ரக்ஷகையான தன்ஸ்வரூபத்துக்கும் பொரும்படி தத்ரக்ஷணம் பண்ணுகைக்காக ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாதே இருக்கும் மாதாவானவளைப்போலே, இவளும் பர்த்ருபூதனான ஈஶ்வரனுக்கு ப்ரதிபாதகமா யிருந்துள்ள ப்ரதமபதமான அகாரத்தையும், ப்ரஜாபூதரான சேதநர்க்கு ப்ரதிபாதகமாயிருந்துள்ள சரமபதமான மகாரத்தையும் தத்தத்விஷயத்தில் தனக்கு உண்டான ஸம்பந்தத்துக்கு ஈடாக ரஸிப்பிக்கை ரக்ஷிக்கையாகிற இவற்றைப்பற்ற, விடாதே யிருக்கு மிருப்பு என்கை.

கீழ்ச்சொன்ன த்ருஷ்டாந்தத்தை ஒருவிஶேஷ நிஷ்டமாக்கி அருளிசசெய்கிறார்

மூ.-(சங) ஸ்ரீநந்தகோபரையும் க்ருஷ்ணனையும் விடாத யஶோதைப்பிராட்டியைப் போலே.

(வ்யா.) 'ஸ்ரீநந்தகோபரையும் க்ருஷ்ணனையும் விடாத' என்று தொடங்கி. அதாவது-பார்யையான தன்ஸ்வரூபாநுகுணமாக ரஸிப்பிக்கைக்காக பர்த்தாவான ஸ்ரீநநதகோபரையும் விடாதே, மாதாவான தன்ஸ்வரூபாநுகுணமாக ரக்ஷிக்கைக்காகப் புத்ரனான க்ருஷ்ணனையும் விடாதே *"அம்பரமே" என்கிற பாட்டிற் சொல்லுகிறபடியே மத்யேவர்த்திக்கும் யஶோதைப்பிராட்டியைப்போலே ப்ர

1. 'அகாரத்தில் இவளுக்கு ஸம்பந்தமுண்டு' என்பதற்கு த்ருஷ்டாந்தம் அருளிச்செய்பவர் 'மகாரத்தில் இவளுக்கு அந்வயமுண்டு' என்பதற்கும் த்ருஷ்டாந்தம் அருளிச்செய்தது - லக்ஷ்மிக்கு ஈஶ்வரகோடியில் அந்தர்ப்பாவமே தவிரச் சேதனகோடியில் அந்தர்ப்பாவமில்லை யென்கின்ற பக்ஷத்தை நிரஸிக்கைக்காக; லக்ஷ்மி அகாரத்தில் தோன்றுவது அர்த்தபலத்தாலே யென்றும், ஶப்தஶக்தியாலே இவளைத் தெரிவிப்பது மகாரமே யென்றும் கொள்க.

* திருப்பா-கள.

தம சரம பத வாச்யரான ஈஸ்வர சேதனர்களிருவரையும் விடாதே இவளும் வர்த்திக்கும்படி யென்கை.

'ஈஸ்வரஶேஷத்வமாத்ர மொழியப் பிராட்டிக்கும் ஶேஷமென்னுமிடம் 1. இவ்வாசகத்தில் இன்றிக்கே யிருக்கச்செய்தேயும், இவளுக்கும் ஶேஷம் என்று நாம்கொள்ளுகிறபடி எங்ஙனே?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.–(சச) 2. ஒருவனடிமைகொள்ளும்போது க்ருஹிணிக்கென்றன்றே ஆவணவோலையெழுதுவது; ஆகிலும், பணிசெய்வது க்ருஹிணிக்கிறே. அதுபோலே நாம் பிராட்டிக்கு அடிமையாயிருக்கும்படி.

(வ்யா.) 'ஒருவன்' என்று தொடங்கி. அதாவது - லோகத்திலே ஒருவன் தாஸதாஸிகள்முதலான ஓரடிமையைக் கொள்ளும்போது தனக்கென்றே எழுதிக்கொள்ளுமதொழிய, தன் க்ருஹிணிக்கென்றன்று விலையோலை யெழுதிக்கொள்வது; ஆயிருக்கச்செய்தேயும், அடிமைத்தொழில் செய்வது க்ருஹிணிக்கிறே; அதுபோலே ஈஸ்வரஶேஷம் என்னும் அளவை இவ்வகாரம் சொல்லிற்றேயாகிலும் நாம் பிராட்டிக்கு அடிமையாயிருக்கும்படி யென்கை.

கீழ்ச்சொன்ன ஹேதுக்களையெல்லாம் அநுவதித்துக்கொண்டு, ஈஸ்வரனுக்கும் பிராட்டிக்கும் ஒருகாலும் ப்ருதக்ஸ்திதியில்லாமையை அருளிச்செய்கிறார்

மூ.–(சரு) ஆக, பிரித்து நிலையில்லை.

(வ்யா.) 'ஆக, பிரித்து நிலையில்லை' என்று.

இந்த 3. ப்ருதக்ஸ்தித்யபாவத்துக்கு இரண்டு த்ருஷ்டாந்தம் அருளிச்செய்கிறார்

---

1. இவ்வாசகத்திலின்றிக்கேயிருக்க-இவ்வகாரத்தில் ஶப்தசக்தியாலே சொல்லப்படாமலிருக்க. 2 பதிக்கு ஶேஷமானவை பத்நிக்கும் ஶேஷமென்கிற ந்யாயத்தாலே, நாம் பிராட்டிக்கு அடிமையென்று இந்த அகாரத்தில் ஶாப்தமாகச் சொல்லப்படாமலிருந்தாலும் அவனுக்கு ஶேஷமென்ற மாத்திரத்திலேயே அவளுக்கும் சேஷமென்பது தன்னடையே ஸித்திக்குமென்பது கருத்து. 3. ப்ருதக்ஸ்தித்யபாவம்-ப்ருதக்-தனியே, ஸ்திதி-இருத்தல், அபாவம்-இல்லாமை; விட்டுப்பிரியாமல்எப்போதும்சேர்ந்தேயிருக்கை யென்றபடி

மூ.-(சகூ) ப்ரபையையும் ப்ரபாவானையும், புஷ்பத்தையும் மணத்தையும் போலே. 1.

(வ்யா.) 'ப்ரபையை' என்று தொடங்கி. அதாவது- 2.ப்ரபைக்கும் 3. ப்ரபாவானுக்கும் ப்ருதக்ஸ்திதி யில்லாதாப்போலவும் புஷ்பத்துக்கும் பரிமளத்துக்கும் ப்ருதக்ஸ்திதி இல்லாதாப்போலவுமென்கை. (கூஎ) "அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா" [அநந்யாராகவேணாஹம்பாஸ்கரேணப்ரபாயதா] (கூஅ) "அநந்யா ஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா" [அநந்யாஹிமயாஸீதா பாஸ்கரேண ப்ரபாயதா] என்று, ப்ரபாப்ரபாவான்களைப் போலே இருவருக்கும் ப்ருதக்ஸ்திதியில்லை யென்னுமிடம், இருவர் வாக்காலும் சொல்லப் பட்டதிறே. (கூகூ) "ப்ரஸூநம் புஷ்யந்தீமபி பரிமலர்த்திம் ஜிகதிஷூ:" [ப்ரஸூநம்புஷ்யந்தீமபிபரிமலர்த்திம்ஜிகதிஷூ:] என்கிறவிடத்திலே ஈஶ்வரனைப் புஷ்பஸ்தாநேயாகவும், பிராட்டியைப் பரிமளஸ்தாநேயாகவும் பட்டர் அருளிச்செய்கையாலே, புஷ்பபரிமளங்களுக்குப்போலே, இருவர்க்கும் ப்ருதக்ஸ்திதி இல்லை யென்னுமிடம் அர்த்தாத் ஸித்தம்.

இந்த ப்ருதக்ஸ்தித்யபாவத்தை அநுவதித்துக்கொண்டு, இச்சேர்த்தியே சேதநர்க்கு உத்தேஶ்யமாய்த் தலைக்கட்டினபடியை அருளிச்செய்கிறார்

மூ.-(சஎ) ஆக, இச்சேர்த்தி உத்தேஶ்யமாய்விட்டது.

(வ்யா.) 'ஆக, இச்சேர்த்தி உத்தேஶ்யமாய்விட்டது' என்று. 'இச்சேர்த்தி உத்தேஶ்யம்' என்கையாலே, இவர்களைத் தனித்தனியே விரும்புகை உத்தேஶ்யம் அன்று என்றபடி. இருவரையும் பிரித்து விரும்பினால், ராவணஶூர்ப்பணகைகளுக்குப்போலே, அநர்த்தமே பலிக்குமத்தனை. இருவரையும் பற்றினாலிறே, ஸ்ரீவிபீஷணாழ்வானைப்போலே வாழலாவது.

இனிமேல், இதில் விபக்த்யர்த்தம் அருளிச்செய்வதாக ப்ரதமம் விபக்திதன்னை நிர்த்தேஶிக்கிறார்

---

1. ப்ரபையையும் மணத்தையும் போலே, பிரித்து நிலைஇல்லையென்று கீழ்வாக்கியத்தோடு சேரும். 2. ப்ரபை - ஒளி. 3. ப்ராபாவான் - ஒளியையுடைய பொருள்.

மூ.-(சஅ) இதிலே, சதுர்த்தி 1. யேறிக்கழியும்.

(வ்யா.) 'இதிலே சதுர்த்தியேறிக் கழியும்' என்று. அதாவது- இவ்வகாரத்திலே சதுர்த்தியேறி * "ஸுபாம்ஸுலுக்" [ஸுபாம்ஸுலுக்] இத்யாதி ஸூத்ரத்தாலே லுப்தமாய்ப்போமென்கை.

'விபக்த்யந்தமெல்லாங் கிடக்க, இவ்வகாரத்தில் சதுர்த்தியேறினபடிதான் எங்ஙனே?' என்கிற ஶங்கையை அநுவதிக்கிறார்

மூ.-(சகூ) 'சதுர்த்தியேறினபடியென்?' 2. என்னில்,-

(வ்யா.) 'சதுர்த்தியேறினபடியென் என்னில்' என்று.

அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார்

மூ.-(ரு०) நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே.

(வ்யா.) 'நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே' என்று. அதாவது - இவ்வகாரம், சதுர்த்யந்தமான நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாகையாலே, இதிலும் சதுர்த்தி யேறிற்றென்கை. இங்ஙன் அன்றாகில், இரண்டுக்கும் ஸங்க்ரஹவிவரணத்வம் ஸித்தியாதிறே.

'இத்தாற் சொல்லுகிற அர்த்தம்தான் ஏது?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.-(ருக) இத்தால், ஈஶ்வரனுக்கு ஶேஷமென்கிறது.

(வ்யா.) 'இத்தால், ஈஶ்வரனுக்கு ஶேஷமென்கிறது' என்று. அதாவது-இதுதான் [எ०] "தாதர்த்த்யே சதுர்த்தீ" [தாதர்த்த்யே சதுர்த்தீ] ஆகையாலே, இச்சதுர்த்தியால் ஈஶ்வரனுக்கு ஶேஷமென்னுமிடம் சொல்லுகிறதென்கை.

(எக) "ஸர்வம்பரவஶம்துக்கம்" [ஸர்வம்பரவஶம்துக்கம்] (எஉ) "ஸேவாஶ்வவ்ருத்தி:" [ஸேவாஶ்வவ்ருத்தி:] என்கிற

---

1. ஏறிக்கழிதல்-புணர்ந்துகெடுதல். 2. முதலில் சதுர்த்தி வந்ததனால் அதன்பொருளான ஶேஷத்வமும், விபக்தி காணப்படாமையால் கழிந்ததென்பதும் பெறப்படும். விபக்தி-வேற்றுமை யுருபு.

* அஷ்டா-எ-க-ருஅ.

லௌகிகந்யாயத்தைக்கொண்டு சேஷத்வத்தை துக்கரூபமாக நினைத்திருக்குமவர்கள் பண்ணும் ப்ரஸ்நத்தை [1] அநுவதிக்கிறார்

மூ.-(ரு௨) 'சேஷத்வம் துக்கரூபமாகவன்றோ நாட்டிற் காண்கிறது' என்னில்,-

(வ்யா.) 'சேஷத்வம் துக்கரூபமாக வன்றோ நாட்டிற் காண்கிறது என்னில்' என்று.

அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார்

மூ.-(ருரு) அந்த நியமம் இல்லை; உகந்த விஷயத்துக்கு சேஷமாயிருக்கும் இருப்பு ஸுகமாகக் காண்கையாலே.

(வ்யா). 'அந்தநியமமில்லை' என்று தொடங்கி. அதாவது-நாடு தன்னிலே * "பணிமின்திருவருள்" இத்யாதிப்படியே 2. அபிமத விஷயத்துக்கு சேஷமாயிருக்கும் இருப்பு ஸுகரூபமாகக் காண்கையாலே, சேஷத்வமாகில் துக்கரூபமாயிருக்குமென்கிற நியமமில்லையென்கை.

'அபிமதவிஷயத்தில் சேஷத்வம் ஸுகமாகிறது, அவ்விஷயத்தில் குணம் அடியாக வந்ததாகையாலேயன்றோ?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ. -(ருச) அகாரத்திலே கல்யாணகுணங்களைச் சொல்லுகையாலே, இந்த சேஷத்வமும் குணத்தாலே வந்தது.

(வ்யா.) 'அகாரத்திலே' என்று தொடங்கி. அதாவது-ஈஶ்வரனுடைய ரக்ஷகத்வப்ரதிபாதகமான அகாரத்திலே அந்த ரக்ஷணோபயோகியான கல்யாணகுணங்களைச் சொல்லுகையாலே, ஈஶ்வர விஷயமான இந்த சேஷத்வமும் அந்த குணங்களடியாக வந்ததென்கை. ஆகையால், இதுவும் ஸுகரூபமாயிருக்கக் குறையில்லையென்று கருத்து.

---

1. அநுவதித்தல்-முன் கூறியதை மீண்டும் எடுத்துச் சொல்லுதல்.
2. அபிமதவிஷயம்-இஷ்டமான விஷயம்: பத்நீ முதலிய விஷயம்.
* திருவாய்-ச-க-டு.

'ஆனால், 1. ஔபாதிகமான இது ஸ்வரூபமன்றே?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.-(ருரு) ஶேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம்.

(வ்யா.) 'ஶேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம்' என்று. அதாவது - உகந்தவிஷயத்தில் 2. இதன்ஸௌகரூபத்துக்கு 3. குணக்ருதத்வத்தை ஹேதுவாகச் சொல்லுகையாலே அந்த குணக்ருதத்வம் இங்கும் உண்டென்னுமிடத்துக்குச் சொன்ன இத்தனையொழிய, 4. அர்த்தஸ்திதியை நிரூபித்தால் (எங) "ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்" [ஸ்வத்வமாத்மநிஸஞ்ஜாதம்ஸ்வாமித்வம்ப்ரஹ்மணிஸ்திதம்] (எச) "ஆத்மதாஸ்யம் ஹரேஸ்ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர" [ஆத்மதாஸ்யம் ஹரேஸ்ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்சஸதாஸ்மர] (எரு) "தாஸபூதாஸ்ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:। நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச" [தாஸபூதாஸ்ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந:பரமாத்மந:- நாந்யதாலக்ஷணந்தேஷாம் பந்தேமோக்ஷே ததைவச] இத்யாதிகளிலே 5. இத்தை ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமாகச்சொல்லுகையாலே, ஶேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம் என்கை.

'ஶேஷத்வமேயென்று 6. அவதரிப்பானேன், ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமான ஆத்மவஸ்துவுக்கு? 7. அல்லாதபோதும் ஸ்வரூபம் இல்லையோ?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.- (ருசா) ஶேஷத்வம் இல்லாதபோது ஸ்வரூபம் இல்லை.

(வ்யா.) 'ஶேஷத்வமில்லாதபோது ஸ்வரூபமில்லை' என்று. 8. ஶேஷத்வமில்லாதபோது ஆத்மாபஹாரரூபமான ஸ்வாதந்த்ர்ய

---

1. ஔபாதிகம் - காரணத்தால்வந்தது. 2. இதன் - ஶேஷத்வத்தின். 3. குணக்ருதம் - குணங்களாலே வந்தது. 4 அர்த்த ஸ்திதி-இங்கே, ஆத்மவஸ்து இருக்கும்இருப்பு. 5 இத்தை-ஶேஷத்வத்தை 6 அவதரித்தல்-அவதாரணப்பொருளைக் காட்டும் ஏகாரத்தை இட்டுச் சொல்லுதல்; அவதாரணப்பொருள் - நிஶ்சயப்பொருள்; பிரிநிலைப்பொருளை உட்கொண்ட தேற்றப்பொருள். 7 அல்லாதபோது-ஶேஷமாகாதபோது. 8 ஶேஷத்வம் இல்லாதபோது-தான் பகவானுக்கு ஶேஷமென்கிற ஜ்ஞாநமில்லாதபோது.

புத்தி நடக்கையாலே, ஸ்வரூபம் அழிந்துவிடும் என்னுமத்தை தர்ஶிப்பிக்கிறார், மேலிரண்டு வாக்யத்தாலே:-

மூ.- (௫௭) ஆத்மாபஹாரமாவது - ஸ்வதந்த்ரமென்கிற நினைவு; ஸ்வதந்த்ரமாம்போது இல்லையாய்விடும்.

(வ்யா.) 'ஆத்மாபஹாரமாவது' என்று தொடங்கி. அதாவது- (௭௬) "𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌥𑌾 𑌸𑌨𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌕𑌿𑌂 𑌤𑍇𑌨 𑌨 𑌕𑍃𑌤𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌚𑍋𑌰𑍇𑌣𑌾𑌽𑌽𑌤𑍍𑌮𑌾𑌪𑌹𑌾𑌰𑌿𑌣𑌾" [யோऽந்யதா ஸந்தமாத்மாநம் அந்யதாப்ரதிபத்யதே- கிந்தேந ந க்ருதம்பாபம் சோரேணாத்மாபஹாரிணா] என்று ஸர்வபாபமூலமாகச் சொன்ன ஆத்மாபஹாரமாவது-தன் ஸ்வரூபம் ஸ்வதந்த்ரம் என்கிற ப்ரதிபத்தி; ஸ்வதந்த்ரம் ஆமளவில் (௭௭) "𑌅𑌸𑌨𑍍𑌨𑍇𑌵" [அஸந்நேவ] என்கிறபடியே 1. ஸ்வரூபம் இல்லையாய்விடும் என்கை. ஆகையால், ஶேஷத்வம் இல்லாதபோது ஸ்வரூபமில்லை என்னத்தட்டில்லையென்று கருத்து.

ஆக, ப்ரக்ருத்யர்த்தமான ஈஶ்வரனுடைய காரணத்வமும், தாத்வர்த்தமான ரக்ஷகத்வமும், அர்த்தபலத்தால்வந்த ஶ்ரிய:பதித்வமும், 2. ப்ரத்யயஸித்தமான சேதனஶேஷத்வ 3, ப்ரதிஸம்பந்தியான ஶேஷித்வமும் ஆகிற அகாரார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

அநந்தரம் மத்யமாக்ஷரமான உகாரத்துக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக உபக்ரமிக்கிறார்

---

1 தான் ஶேஷனென்கிற உணர்ச்சியில்லாதவன் 'அஸத்' [ஸத்தையற்றவன்] என்று சொல்லப்படுகையாலே, ஸ்வரூபமில்லையென்றது; அன்றி, 'தான் பகவானுக்கு ஶேஷபூதன்' என்கிற உண்மைஞான மில்லாதவனுக்கு 'தான் ஸ்வதந்த்ரன்' என்கிற அஜ்ஞானமேநிலைநிற்கையால், ஜ்ஞானமும்ஜ்ஞாந விஶேஷமான ஆநந்தமும்இல்லையாகையாலே, ஸ்வரூபமில்லை யென்றுசொன்னதாகவுமாம். 2 ப்ரத்யயம்-இங்கே, அகாரத்துக்குப்பின்னே லோபித்துள்ள சதுர்த்தீவிபக்தி. 3 ப்ரதிஸம்பந்தி-எதிர்த்தட்டானஸம்பந்தமுள்ளவன்; ஆத்மா பகவானுக்கு ஶேஷன் என்றால், 'பகவான் ஆத்மாவுக்கு ஶேஷி' என்று ஏற்படுதல் காண்க. [ஶேஷன்-அடியவன், ஶேஷி-தலைவன்.]

மூ.- (ரு அ) 1. ஸ்தாநப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணார்த்தம்.

(வ்யா.) 'ஸ்தாநப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணார்த்தம்' என்று. அதாவது - (எஅ) "𑌤𑌦𑍇𑌵 𑌭𑍂𑌤𑌂 𑌤𑌦𑍁 𑌭𑌵𑍍𑌯𑌮𑌾 𑌇𑌦𑌂" [ததேவபூதந் தது பவ்யமா இதம்] என்றும், (எகூ) "𑌤𑌦𑍇𑌵𑌾𑌗𑍍𑌨𑌿𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌾𑌯𑍁𑌸𑍍𑌤𑌦𑍁 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌤𑌦𑍁 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾𑌃" [ததேவாக்நிஸ்தத்வாயுஸ் தத ஸூர்யஸ்ததுசந்த்ரமா:] என்றும் இத்யாதிகளிலே ஏவகாரஸ்தாநத்திலே உகாரத்தை ப்ரயோகிக்கக் காண்கையாலே, ஸ்தாநப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணத்தை அர்த்தமாக உடைத்தாயிருக்குமென்கை.

'அவதாரணத்துக்கு அர்த்தம் 2. அயோகவ்யவச்சேதமாதல் அந்யயோகவ்யவச்சேதமாதல் ஆகையாலே, இவ்வவதாரணத்தாற் சொல்லுகிறது எது?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.- (ருகூ) இத்தால், பிறர்க்கு சேஷம் அன்று என்கிறது.

(வ்யா.) 'இத்தால, பிறர்க்கு சேஷமன்றென்கிறது' என்று. அதாவது - 3. அவதாரணவாசகமான இவ்வுகாரத்தால், கீழ் ஈஸ்வர சேஷமாகச் சொன்ன இவ்வாத்மவஸ்து அந்யர்க்கு சேஷமன்று

---

1. ஸ்தாநப்ரமாணம் - ஒருபதம் இருக்கவேண்டிய இடத்தில் வேறொரு பதம் இருந்தால், அந்தப்பதத்தின் பொருள்தான் இதுக்கும் பொருள்என்று கொள்வது; ஏவகாரம் இருக்கவேண்டிய இடங்களில் உகாரம் இருத்தலால், உகாரத்துக்கு ஏவகாரத்தின் பொருளைக் கொள்ளவேண்டியதாயிற்றென்க. 2. அயோகவ்யவச்சேதம்-சம்பந்தமில்லாமையை நிவர்த்திப்பிக்கை: ஸம்பந்தமுண்மையைத் தெரிவிக்கையென்றபடி; சங்க: பாண்டரஏவ [வெண்மையே] என்றாற்போல விசேஷணத்தோடு சேர்ந்த ஏவகாரம் 'சங்கம் வெண்மையோ அன்றோ?' என்று தோன்றும் ஐயத்தை யொழித்து வெண்மைதானென்ற எண்ணத்தை நிலைநிறுத்துதலால், அயோகவ்யவச்சேதமாம். அந்யயோகவ்யவச்சேதமாவது-வேறொன்றன் சம்பந்தமுண்மையை நிவர்த்திப்பது; பிறிதினியைபுநீக்குவது என்று தமிழராற் சொல்லப்படும்; 'பார்த்தஏவ தநுர்த்தர: [அர்ச்சுனனே வில்லாளி] என்றாற்போல விசேஷ்யத்தோடு சேர்ந்த ஏவகாரம் வேறொருவரும் வில்லாளிகளல்லரென்ற கருத்தைத் தருதலால், அந்யயோகவ்யவச்சேதமாம். 3. அகாரமென்ற விசேஷ்யத்தோடு ஏவகாரார்த்தமான உகாரம் சேர்ந்திருத்தலால், இங்கும் அந்யயோகவ்யவச்சேதமே பொருளாம்.

என்னுமிடத்தைச் சொல்லுகிற தென்கை. 1. 'சதுர்த்தியாலே ஈஶ்வர ஶேஷத்வம் ப்ரதிபாதிதமாகச்செய்தே, அந்யஶேஷத்வம் ப்ரஸ்துத மாமோ?' என்னில், 'லோகத்திலே ஒருவனுக்கு ஶேஷமான க்ருஹ க்ஷேத்ரபுத்ரதாஸாதிகள், வேறேயுஞ் சிலர்க்கு ஶேஷமாயிருக்கக் காண்கையாலே, அப்படிப்பட்ட அந்யஶேஷத்வம் இந்தஸ்தலத்திலும் உண்டோ?' என்று ஒருஶங்கை உதிக்குமிறே; ஆகையாலே, தாதரு ஶமான அந்யஶேஷத்வம் இங்கு இல்லையென்னுமிடத்தை ப்ரதிபா திக்கிறது, உகாரம்.

அங்ஙனன்றிக்கே, இவ்வுகாரத்தாலே லக்ஷ்மீஶேஷத்வம் சொல் லுகிறது என்பாரும் உண்டென்கிறார்

மூ.- (கூ0) பெரியபிராட்டியார்க்கு ஶேஷமென்கிற தென்றுஞ் சொல்லுவர்கள்.

(வ்யா.) 'பெரியபிராட்டியார்க்கு ஶேஷமென்கிறது என்றுஞ் சொல்லுவர்கள்' என்று. அதாவது-(அ0) "அகாரஶ்சித்ஸ்வரூபஸ்ய விஷ்ணோர்வாசக இஷ்யதே। உகாரஶ்சித்ஸ்வரூபாயா ஶ்ரியோவாசீ ததாவிதா:। மகாரஸ்துதயோர்தாஸ இதி ப்ரணவலக்ஷணம்" [அகாரஶ்சித்ஸ்வரூபஸ்ய விஷ்ணோர்வாசக இஷ்யதே - உகாரஶ்சித் ஸ்வரூபாயாஶ் ஶ்ரியோவாசீ ததாவிதா:- மகாரஸ்துதயோர்தாஸ இதி ப்ரணவலக்ஷணம்] என்றும், (அக) "அகாரேணோச்யதே விஷ்ணு ஸர்வலோகேஶ்வரோ ஹரி:- உத்ருதா விஷ்ணுநா லக்ஷ்மீ ருகாரேணோச்யதே ஸதா - மகாரஸ்து தயோர்தாஸ ஶ்ரீநாராயணயோ ஸதா-ஆத்மநஶ்ஶேஷபூதஸ்ய வாசக ஶ்ருதிசோதித:" [அகா ரேணோச்யதே விஷ்ணுஸ் ஸர்வலோகேஶ்வரோ ஹரி: - உதத்ருதா விஷ்ணுநாலக்ஷ்மீ ருகாரேணோச்யதேஸதா - மகாரஸ்துதயோர்விப்ர ஶ்ரீநாராயணயோஸ்ஸதா - ஆத்மநஶ்ஶேஷபூதஸ்ய வாசகஶ்ஶ்ருதி சோதித:] என்றும் இத்யாதிகளாலே பகவச்சாஸ்த்ரத்திலே அகாரத் தை பகவத்வாசகமாகவும், உகாரத்தை லக்ஷ்மீவாசகமாகவும், மகார

1 'லோபித்த சதுர்த்திக்குப் பின்னே உகாரம் சேருகையாலும், அங்கே அந்யஶேஷத்வம் சொல்லப்படாமையாலும், அதை நிவர்த்திப்பிக்கவேண்டிய அவசியமென்?' என்பது, ஶங்கைக்குக் கருத்து.

த்தை தது பயஶேஷபூத ஜீவவாசகமாகவுஞ் சொல்லுகையாலே, உகார த்தை அவதாரணவாசகமாகக் கொள்ளாதே, லக்ஷ்மீவாசகமாகக்கொ ண்டு, இவ்வுகாரத்தாலே பெரியபிராட்டியார்க்கு ஶேஷமென்கிறதெ ன்றும் நிர்வஹிப்பர்களென்கை.

1. அத்தைப் பற்றவும் பூர்வயோஜனையே முக்யமென்னுமத்தை அருளிச்செய்கிறார்.

மூ.-(சூக) அதிலும், அந்யஶேஷத்வம் கழிகையே ப்ரதாநம்.

(வ்யா.) 'அதிலும் அந்யஶேஷத்வம் கழிகையே ப்ரதாநம்' என்று. அதாவது - பெரியபிராட்டியார்க்கு ஶேஷமாகையாகிற அதி லுங்காட்டில் கீழ்ச்சொன்ன பகவச்சேஷத்வத்துக்கு விரோதியான அந்யஶேஷத்வம் கழிகையே ப்ரதாநாபேக்ஷிதம் என்கை.

'அந்யஶேஷத்வம் இப்படி க்ரூரமோ?' என்ன, அதன் க்ரௌர் யத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார்

மூ.-(சூ௨) தேவர்களுக்கு ஶேஷமான புரோடாஶத் தை நாய்க்கு இடுமாபோலே, ஈஶ்வரஶேஷமான ஆத்ம வஸ்துவை ஸம்ஸாரிகளுக்கு ஶேஷமாக்குகை.

(வ்யா.) 'தேவர்களுக்கு' என்று தொடங்கி. அதாவது- ஆராத்யரான இந்த்ராதி தேவர்களுக்கு போக்யதயா ஶேஷமாகக் கல்பிதமான 2. புரோடாஶத்தை தர்ஶநஸ்பர்ஶநாதிகளுக்கு அநர்

---

1. ஸ்ரீபாஞ்சராத்ரத்திலே உகாரத்தை லக்ஷ்மீவாசக மாகச் சொல்லி யிருக்கவும், உகாரத்துக்கு அவதாரணார்த்தம் கொள்கையே முக்கியமென்ன லாமோ வென்னில்,-ப்ரணவார்த்தத்தை விவரிக்கிற ஶ்ருதிதானே 'பகவத எவ அஹம் அஸ்மி' என்று ஏவகாரார்த்தமாக விவரிக்கையாலும், "கண்ணபுர மொன்றுடையானுக்கு அடியேனொருவற்குரியேனோ" என்பது முதலிய இடங்களில் ஆழ்வார்கள் உகாரார்த்தம் அந்யஶேஷத்வநிவ்ருத்தி யென்பது தோன்ற அருளிச் செய்கையாலும், உகாரத்துக்கு அவதாரணார்த்தம் கொள் ளாத பக்ஷத்தில் அவஶ்யாபேக்ஷிதமான அந்யஶேஷத்வ நிவ்ருத்திக்காக 'ஸர் வம்வாக்யம் ஸாவதாரணம்' என்கிற ந்யாயத்தினாலாவது அவஶ்யமாக அவதார ணார்த்தக ஏவகாரத்தை அத்யாஹரிக்கவேண்டி யிருத்தலாலும், பதிபத்நீ ந்யாயத்தாலே லக்ஷ்மீஶேஷத்வம் தன்னடையே வித்தித்துவிடுமாகையா லும், ஓரான்வழியாய்ப் பூர்வாசார்யர்கள் இங்ஙனே அருளிச்செய்து வருவத னாலு மென்க. 2. புரோடாஶம்-ஹவிஸ்.

ஹமாம்படி நிஹீநமாயிருக்கிற நாய்க்கு இடுமாபோலே இருப்ப தொன்று, 1. ப்ராப்தஶேஷியான ஈஶ்வரனுக்கு ஶேஷமான ஆத்ம வஸ்துவை ஸர்வப்ரகாரத்தாலும் 2. ஹேயரான ஸம்ஸாரிகளுக்கு ஶேஷமாக்குகை யென்கை.

'இப்படி க்ரூரமான அந்யஶேஷத்வம் கழிகையே ஆத்மாவுக்கு ப்ரதாநாபேக்ஷிதம்'என்று கீழ்ச்சொன்ன அர்த்தத்தை ஸ்திரீகரிக்கிறார்

மூ.–(௬௩) பகவச்சேஷத்வத்திலும் அந்யஶேஷத்வம் கழிகையே ப்ரதாநம்.

(வ்யா.) 'பகவச்சேஷத்வத்திலும் அந்யஶேஷத்வம் கழிகையே ப்ரதாநம்' என்று. அதாவது - லக்ஷ்மீஶேஷத்வத்திலுங்காட்டில் ப்ர தாநம் என்ற 3. அளவேயன்று, பகவான் தனக்கு ஶேஷமாயிருக்குமதி லுங்காட்டில் அந்யவிஷயத்தில் ஶேஷத்வம கழிகையே ஆத்மாவுக்கு ப்ரதாநாபேக்ஷிதமென்கை.

இதுக்கு ப்ரமாணம் காட்டுகிறார்

மூ.–(௬௪) "மறந்தும்புறந்தொழாமாந்தர்" என்கை யாலே.

(வ்யா.) 'மறந்தும்புறந்தொழா மாந்தர்' என்கையாலே' என்று. அதாவது - யமகிங்கரஸம்வாதத்தைத் திருமழிசைப்பிரான் அருளிச் செய்த * "திறம்பேன்மின்கண்டீர்" என்கிற பாட்டிலே பாகவத லக்ஷணஞ்சொல்லுகிறவளவில், 'திருவடிதன்னாமம் மறந்தும் புறந் தொழாமாந்தர்' என்று ஸ்வாமியுடைய திருநாமத்தை மறந்தார்களா கிலும் மற்றொருவிஷயத்தில் ஶேஷவ்ருத்திபண்ணாதவர்கள் என்று சொல்லுகையாலே யென்கை.

ஈஶ்வரஶேஷமான ஆத்மவஸ்துவுக்கு ஸ்வஶேஷத்வ பரஶேஷத் வங்களிரண்டும் அந்யஶேஷத்வமாகையாலே, உபயத்தையும் இவ்வு காரம் கழிக்கிறதென்று சொல்லி நிகமிக்கிறார்

மூ.–(௬௫) இத்தால், தனக்கும் பிறர்க்கும் உரித்தன் று என்கிறது.

---

1. ப்ராப்தஶேஷி - வகுத்தஶேஷி. 2. ஹேயர்–நிக்ருஷ்டர்.
3. அளவு - மாத்ரம்.
* நான்காந் திரு. ௬அ.

(வ்யா.) 'இத்தால், தனக்கும் பிறர்க்கும் உரித்தன்றென்கிறது' என்று. அதாவது-அந்யஶேஷத்வநிவர்த்தகமான இவ்வுகாரத்தாலே, [1] அந்யரில் அந்யதமத்வம் அவிஶிஷ்டமாகையாலே, இவ்வாத்மவஸ்து தனக்கும் உரித்தன்று, தன்னையொழிந்த ஸம்ஸாரிகளுக்கும் உரித்தன்று என்னுமிடஞ் சொல்லுகிறதென்கை.

ஆக, உகாரார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

அநந்தரம், த்ருதீயாக்ஷரமான மகாரார்த்தத்தை அருளிச்செய்கிறார்

மூ.-(௩௩) மகாரம், இருபத்தஞ்சாம் அக்ஷரமாய் ஜ்ஞாநவாசியுமா யிருக்கையாலே, ஆத்மாவைச் சொல்லுகிறது.

(வ்யா.)'மகாரம்' என்றுதொடங்கி. அதாவது-(அஉ) "பூதானி கவர்க்கேண சவர்க்கேணேந்த்ரியாணி ச। டவர்க்கேண தவர்க்கேண ஜ்ஞாநகந்தாதயஸ்ததா ॥ மந: பகாரேணைவோக்தம் பகாரேண த்வஹங்க்ருதி:। பகாரேண ஹகாரேண மஹாந் ப்ரக்ருதிருச்யதே ॥ ஆத்மா து ஸமகாரேண பஞ்சவிம்ஶ: ப்ரகீர்த்தித:" [பூதானி கவர்க்கேண சவர்க்கேணேந்த்ரியாணி ச। டவர்க்கேண தவர்க்கேண ஜ்ஞாநகந்தாதயஸ்ததா ॥ மந:பகாரேணைவோக்தம் ஃபகாரேணத் வஹம்க்ருதி: । பகாரேணஹகாரேண மஹாந்ப்ரக்ருதிருச்யதே ॥ ஆத்மாதுஸமகாரேண பஞ்சவிம்ஶ: ப்ரகீர்த்தித:] என்கிறபடியே, ப்ருதிவ்யாதி ப்ரக்ருத்யந்தமான இருபத்துநாலு தத்வத்துக்கும் வாசகமாயிருந்துள்ள ககாராதிஹகாராந்தமான இருபத்துநாலு அக்ஷரமும்போலன்றிக்கே மகாரம் இருபத்தஞ்சாமக்ஷரமாய் [2] *"மந ஜ்ஞாநே" [மந-ஜ்ஞாநே] என்கிற தாதுவிலே யாதல், †"மநு அவபோதநே" [மநு-அவ்போதநே] என்கிற தாதுவிலேயாதல் நிஷ்பந்நமாகையாலே, ஜ்ஞாநவாசியுமாயிருக்கையாலே, (அ௩) "பஞ்சவிம்

1. அந்யரில் அந்யதமத்வம் அவிஶிஷ்டம் - பகவானிலும் வேறுபட்டவரென்றால் அவ்வாறு வேறுபட்டிருக்கை யென்பது ஸ்வவிஷயத்திலும் ஸமானம் [அவிஶிஷ்டம்-ஸமானம்]. 2. மந்யதே இதி ம் மநுதே இதி ம் என்றுவது மகாரத்துக்கு வ்யுத்பத்தி.

* தாது-திவாதி-ஶ்யந்விகரணி. † தாது-தநாதி-உவிகரணி.

ஶாரயம் வ⁻ரு⁻ஷ:" [பஞ்சவிம்ஶோ'யம்புருஷ:] (அச) வது விம்ஶ:கூ தூூவதி" [பஞ்சவிம்ஶ ஆத்மா பவதி] என்கிறபடியே 1. பஞ்சவிம்சகனும் (அரு) "விஜ்ஞாநா தூவ⁻ரு⁻ஷ:" [விஜ்ஞாநாத்மா புருஷ:] (அசூ) "விஜ்ஞாதாரமரெ கெந விஜாநீயாக" [விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத்] என்கிறபடியே ஜ்ஞாநஸ்வரூபனுமாய், ஜ்ஞாநகுணகனுமாயிருக்கிற ஆத்மாவைச்சொல்லுகிறதென்கை.

கீழ்ச்சொன்ன ஶேஷத்வம் 2. ஸர்வஸாதாரணமாகையாலே 3. த்ரிவிதாத்மவர்க்கத்தையும் இதிலே சொல்லவேண்டுமாகையாலே, அருளிச்செய்கிறார்

மூ.-(கூஎ) இதுதான் ஸமஷ்டிவாசகம்.

(வ்யா.) 'இதுதான் ஸமஷ்டிவாசகம்' என்று. அதாவது-இப்படி ஆத்மவாசகமான இம்மகாரந்தான் 4. ஆத்மஸமஷ்டிக்கு வாசகமென்கை.

'ஏகவசநம் ஸமஷ்டிவாசகமாமோ?' என்கிற ஶங்கையிலே அருளிச்செய்கிறார்

மூ.-(கூஅ) ஜாத்யேகவசநம்.

(வ்யா.) 'ஜாத்யேகவசநம்' என்று. அதாவது-வ்ரீஹிஸமூஹத்தைச் சொல்லுகிறவன், 'இது ஒரு நெல்' என்றால், அந்த ஏகவசநம், 5. ஜாதிபரமானாற்போலே, இதுவும் ஆத்மஜாதிபரமான ஏகவசநமென்கை.

'இம்மகாரத்தால், ஆத்மாவினுடைய 6. எவ்வாகாரஞ் சொல்லுகிறது?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.- (கூகூ) இத்தால், ஆத்மா ஜ்ஞாதாவென்று, தேஹத்தில் வ்யாவ்ருத்தி சொல்லிற்றாயிற்று.

---

1 பஞ்சவிம்ஶகன்-இருபத்தைந்தாந் தத்துவமானவன். 2 ஸர்வஸாதாரணம்-ஸர்வாத்மஸாதாரணம். 3 த்ரிவித ஆத்மவர்க்கம்-பத்தர் முக்தர் நித்யர் என்ற மூன்று வகையான ஆத்மஸமூஹம். 4 ஆத்மஸமஷ்டி – ஆத்மஸமூஹம். 5 ஜாதிபரம்-ஜாதியைக்காட்டுங் கருத்தைக் கொண்டது. 6 ஆத்மாவுக்கு ஶேஷத்வம் ஜ்ஞாநஸ்வரூபத்வம் ஜ்ஞாநாஶ்ரயத்வம் என்ற மூன்று வகையான தன்மையுள்ளதனால் இம்மூன்றில் எந்த ஆகாரம் மகாரத்தாற் சொல்லப்படுவது என்று ஶங்கை.

(வ்யா.) 'இத்தால்' என்று தொடங்கி. அதாவது-பஞ்சவிம்ஶாக்ஷரமாய் ஜ்ஞானவாசியுமா யிருந்துள்ள இம்மகாரத்தால், 'ஶேஷத்வாஶ்ரயமான ஆத்மா-ஜ்ஞாநாஶ்ரயபூதனானவன்' என்று, அசேதநமான 1. தேஹத்திற்காட்டில் ஆத்மாவின் 2. வ்யாவ்ருத்தி சொல்லிற்றாயிற்று என்கை.

'தேவோऽஹம், மநுஷ்யோऽஹம், ஸ்த்தூலோऽஹம், க்ருஶோऽஹம் என்று 3. தேஹத்திலே அஹம்புத்தி வ்யவஹாரங்கள் நடவாநிற்க, அஹமர்த்தபூதனான ஆத்மா, தேஹத்தில் 4. வ்யாவ்ருத்தனென்றுசொல்லுகிறபடிதான் எங்ஙனே?' என்ன, அருளிச்செய்கிறார்

ஸூ.-(எ०) தேஹத்தில் வ்யாவ்ருத்தி தத்வஶேகரத்திலே சொன்னோம்.

(வ்யா.) 'தேஹத்தில் வ்யாவ்ருத்தி தத்வஶேகரத்திலே சொன்னோம்' என்று. அதாவ்து-அநேக ஹேதுக்களாலே தேஹத்தினுடைய 5. அநாத்மத்வத்தை ஸாதியாநின்றுகொண்டு, ஆத்மாவினுடைய தத்வ்யாவ்ருத்தியைத் தத்வஶேகரமாகிற ப்ரபந்தத்திலே வ்யக்தமாகச் சொன்னோம்; அதிலே கண்டுகொள்வதென்கை.

6. 'தர்மிஸ்வரூபகதநபூர்வகமாக தத்தர்மமான ஶேஷத்வத்தைச் சொல்லுகை ப்ராப்தமாயிருக்க, இப்ரணவந்தன்னிலே ப்ரதமம் ஶே

1. ஆத்மா ஜ்ஞாதா என்னுமல் ஜ்ஞாநம் என்றாலும் தேஹத்தில் வ்யாவ்ருத்தி சொல்லப்பட்டதாம்; ஆயினும், பரமபதத்தில் ஶுத்தஸத்வமான அசித்து ஸ்வயம்ப்ரகாஶ மாகையாலும், ஜ்ஞாநத்வமென்பது ஸ்வயம்ப்ரகாஶத்வ ரூபமாகையாலும், அந்த அசித்தின் வ்யாவ்ருத்திக்காக 'ஜ்ஞாதா' என்ன வேண்டியதாயிற்று; ஜ்ஞாதா.- தர்மபூதமான ஜ்ஞாநத்துக்கு ஆஶ்ரயன். 2 வ்யாவ்ருத்தி - வேறுபாடு. 3 தேஹத்தில் அஹம்புத்திவ்யவஹாரங்கள். 'நான் என்பதன் பொருள் இவ்வுடல்தான்' என்ற எண்ணமும், அதற்கு எற்ற சொல்வழக்கும். 4 வ்யாவ்ருத்தன் - வேறுபட்டவன். 5 அநாத்மத்வம்-ஆத்மாவாகாமை. 6. தர்மிஸ்வரூபகதந பூர்வகமாக - ஆத்மஸ்வரூபலக்ஷணமானஜ்ஞாத்ருத்வத்தை முந்துறச்சொல்லி யென்றபடி. ப்ரணவத்தில் ஜீவஸ்ரூபம் முக்கியமாகையாலே, முதலில் மகாரத்தைவைத்து அதன்பிறகு எம்பெருமானுக்கு ஶேஷபூதனென்பதைத் தெரிவிப்பதாய்ச் சதுர்த்திவிபக்தி மறையப்பெற்றதான அகாரம் வைக்கப்படவேண்டாவோ? என்று தோன்றுகிற ஶங்கையை இங்கு அநுவதிக்கிறாரென்று அறிக.

ஷத்வத்தைச் சொல்லி, பின்னை ஆத்மாவைச் சொல்லுவானென்?' என்கிற ஶங்கையிலே, அப்படி சொல்லுகைக்கு ஹேதுவை அருளிச் செய்கிறார்

மூ.-(எக) மணத்தையும் ஒளியையுங்கொண்டு பூவையும் ரத்நத்தையும் விரும்புமாபோலே, ஶேஷமென்று ஆத்மாவை யாதரிக்கிறது; அல்லாதபோது *"உயிரினாற் குறைவிலம்" என்கிறபடியே த்யாஜ்யம்; அதுதோன்ற, ஶேஷத்வத்தைச் சொல்லிப் பின்னை ஆத்மாவைச் சொல்லுகிறது.

(வ்யா.)'மணத்தையும்' இத்யாதிவாக்யத்ரயத்தாலே. அதாவது-மணத்துக்கு ஆஶ்ரயமென்று பூவை விரும்புமாபோலேயும் ஒளிக்கு ஆஶ்ரயமென்று ரத்நத்தை விரும்புமாபோலேயும், ஶேஷத்வத்துக்கு ஆஶ்ரயமென்றாயிற்று, ஆத்மாவை ஆதரிக்கிறது; ஶேஷத்வ ஆஶ்ரயமல்லாதபோது, * "உயிரினாற்குறைவிலம்" என்று புகவச் சேஷத்வ ரஹிதமான ஆத்மாவால் அபேக்ஷை யுடையோமல்லோம் என்கிறபடியே, த்யாஜ்யமாய்விடுமித்தனை- இப்படியிருந்துள்ள ஶேஷத்வத்தின் ஊற்றந் தோற்ற, ஶேஷத்வத்தை முந்துறச் சொல்லி, பின்னை ஆத்மாவைச் சொல்லிற்றென்கை.

பதத்ரயாத்மகமான இப்ரணவத்தாற் சொல்லித் தலைக்கட்டின அர்த்தத்தை அருளிச்செய்கிறார்

மூ.-(எஉ) ஆக, ப்ரணவத்தால் † "கண்ணபுரமொன்றுடையானுக்கு அடியேன் ஒருவர்க்' குரியேனோ" என்கிறபடியே ஜீவபரஸம்பந்தஞ் சொல்லிற்று.

(வ்யா.) 'ஆக' என்று தொடங்கி. அதாவது-கீழ்ச்சொன்ன எல்லாவற்றாலும், ப்ரணவத்தால் † "கண்ணபுரமொன்றுடையானுக்கு" என்று சதுர்த்யந்தமான அகாரார்த்தத்தையும், "அடியேன்" என்று ஶேஷத்வாஶ்ரயவாசியான மகாரத்தில் அர்த்தத்தையும், "ஒருவர்க் குரியேனோ" என்று அந்யஶேஷத்வநிவர்த்தகமான உகாரார்த்தத்தையும் சொல்லாநின்றுகொண்டு ப்ரணவார்த்தத்தை அநுஸந்தித்த

* திரு-வா-ச-அ-கஂ † பெ-தி-மொ-அ-கூ-ரு

திருமங்கையாழ்வார் ஸ்ரீஸூக்திப்படியே, ஜீவபரர்களுக்கு உண்டான ஶேஷஶேஷிபாவஸம்பந்தத்தைச் சொல்லிற்றென்கை.

இன்னமும் பொய்கையாருடைய திவ்யஸூக்தியாலே 'ஶேஷத்வ ப்ரதிஸம்பந்தி ஒருமிதுநம்' என்னுமிடந் தோற்ற, இந்தஜீவபர ஸம்பந்தத்தை அருளிச்செய்கிறார்

மூ.-(எ௩) இத்தால், * "தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" என்றதாயிற்று.

(வ்யா.) 'இத்தால் * "தாமரையாள் கேள்வன்" என்று தொடங்கி. அதாவது - இப்ரணவத்தால், "தாமரையாள் கேள்வன்" என்று-அகாரவாச்யனாய் ஶேஷத்வ ப்ரதிஸம்பந்தியான ஸ்ரிய:பதியையும், * 'ஒருவனையே நோக்கும்' என்று-சதுர்த்யுகாரங்களாற் சொல்லுகிற அநந்யார்ஹஶேஷத்வப்ரயுக்தமான ஆத்மாவினுடைய 1. ததேகபரதையையும், 'உணர்வு' என்று - அந்த ஶேஷத்வ ஆஶ்ரயமாக மகாரத்தாற் சொல்லப்பட்ட ஜ்ஞாநைகநிரூபணீயனான ஆத்மாவையும் சொல்லுகிற ஸூக்தியிற்படியே, 2. ஜீவபரஸம்பந்தம் சொல்லிற்றாயிற்றென்கை.

அகாரத்தில் ப்ரத்யயார்த்த ப்ராதாந்யமாக ப்ரணவார்த்தத்தை யோஜித்தார் கீழ்; அதில் தாத்வர்த்தப்ராதாந்யமாக, ப்ரணவத்துக்கு இன்னமும் ஒருயோஜனை அருளிச்செய்கிறார்

மூ.-(எ௪) அகாரத்தாலும் மகாரத்தாலும், ரக்ஷகனையும் ரக்ஷ்யத்தையும் சொல்லிற்று; சதுர்த்தியாலும் உகாரத்தாலும், ரக்ஷணஹேதுவான ப்ராப்தியையும் பலத்தையும் சொல்லிற்று.

(வ்யா.) 'அகாரத்தாலும்' என்று தொடங்கி. அதாவது-அகாரத்தாலே ரக்ஷகனான ஈஶ்வரனைச் சொல்லிற்று; மகாரத்தாலே தத்ரக்ஷ்யமான ஆத்மவஸ்துவைச் சொல்லிற்று; சதுர்த்தியாலே ரக்ஷிக்

---

1. ததேகபரதை-அந்த ஸ்ரிய:பதியொருவனிடத்தில் தானே மனம் பற்றியிருக்கை. 2. ஜீவபரஸம்பந்தம் - ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு ப்ரதாநமாக உள்ள ஸம்பந்தம் என்றபடி.

* முதல்-திரு-௬௭.

கைக்கு ஹேதுவான ஶேஷத்வமாகிற 1.ப்ராப்தியைச் சொல்லிற்று; இப்படி ரக்ஷிக்கிறதற்கு பலம் - இவ்வாத்மவஸ்து அத்தலைக்கு அநந்யார்ஹமாக 2.விநியோகப்படுகை யாகையாலே, அவ்வநந்யார்ஹ ஶேஷத்வ வாசியான உகாரத்தாலே ரக்ஷணபலத்தைச் சொல்லிற்றென்கை.

ஆக, இம்மந்த்ரத்திற் ப்ரதமபதமான ப்ரணவார்த்தத்தை அருளிச்செய்தா ராயிற்று.

இனி மேலிற்பதங்களுக்கும் அர்த்தம் அருளிச்செய்வதாக, 3.மந்த்ரஶேஷமும் 4.இதுக்கு விவரணமா யிருக்கும்படியை முந்துற அருளிச்செய்கிறார்

மூ.-(எரு) இனிமேல் ப்ரணவத்தை விவரிக்கிறது.

(வ்யா.) 'இனிமேல் ப்ரணவத்தைவிவரிக்கிறது' என்று "இவ்விடத்தில் விவரணமாகிறது - ப்ரஸ்துதமான அர்த்தத்துக்கு உபயுக்தமான அர்த்தத்தைச் சொல்லிக்கொண்டு பூர்வோக்தமான அர்த்தத்தை விஶதீகரிக்கை" என்றுதீபப்ரகாஶத்திலும், (அஎ) "𑌉𑌕𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌶𑌦𑍀𑌕𑌾𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌬𑍋𑌧𑌨𑌮𑍍 । 𑌮𑌤𑌂 𑌵𑌿𑌵𑌰𑌣𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌮𑌹𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌾𑌮𑍍" [உக்தார்த்த விஶதீகார யுக்தார்த்தாந்தரபோதநம் | மதம் விவரணம் தத்ர மஹிதாநாம் மநீஷிணாம்] என்று ரஹஸ்யத்ரயார்த்தவிவரணக்ரமம் அருளிச்செய்த ப்ரபந்தத்திலும், விவரணலக்ஷணத்தைச் சீயர் அருளிச் செய்தாரிறே.

'விவரிக்கிறபடிதான் எங்ஙனே?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.-(எசு) உகாரத்தை விவரிக்கிறது - நமஸ்ஸு; அகாரத்தை விவரிக்கிறது - நாராயணபதம்; மகாரத்தை விவரிக்கிறது-சதுர்த்தி; நாரபதமென்றுஞ் சொல்லுவர்கள்.

(வ்யா.) 'உகாரத்தை விவரிக்கிறது நமஸ்ஸு' என்று தொடங்கி. அதாவது-அந்யஶேஷத்வத்தைக் கழிக்கிற இடத்தில் அந்யரி

---

1. ப்ராப்தி-ஸம்பந்தமென்னலாம். 2. விநியோகப்படுகை-உபயோகப்படுகை. 3. மந்த்ரஶேஷம் - மந்த்ரத்தின் மிச்சமான பாகம்: நமஸ்ஸும் நாராயணஶப்தமும். 4. இதுக்கு-ப்ரணவத்துக்கு.

லே அந்யதமனாகச் சொல்லப்பட்ட 1. தன்னை வெளியாகச்சொல்லிக் கழிக்கையாலே, உகாரத்தை விவரிக்கிறது நமஸ்ஸு; ரக்ஷகனான ஈஶ்வரனுடைய ஸ்வரூபத்தையும் ரக்ஷ்யபூத சேதநாசேதநங்களையும் ரக்ஷணோபயோகியான குணாதிகளையும் ரக்ஷணப்ரகாரத்தையும் விஶதமாகச்சொல்லுகையாலே, அகாரத்தை விவரிக்கிறது நாராயணபதம்; (௮௮) “நாகிஞ்சித்குர்வதஶ்ஶேஷத்வம்” [நாகிஞ்சித்குர்வதஶ்ஶேஷத்வம்] (௮௯) “அகிஞ்சித்கரஸ்ய ஶேஷத்வாநுபபத்தி:” [அகிஞ்சித்கரஸ்ய ஶேஷத்வாநுபபத்தி:] என்கிறபடியே 2. கிஞ்சித்காரமில்லாதபோது ஶேஷத்வஸித்தி யில்லாமையால், தத்ஸித்திக்கு உறுப்பான கிஞ்சித்காரத்தை ப்ரதிபாதிக்கிற சதுர்த்தி, ஶேஷத்வாஶ்ரயமான ஆத்மவஸ்துவைச் சொல்லுகிற மகாரத்தைவிவரிக்கிறது. மகாரவாச்யனான ஆத்மாவினுடைய நித்யத்வம், ஏகரூபத்வம், பஹுத்வம் தொடக்கமானவற்றை ப்ரதிபாதிக்கையாலே, மகாரத்தை விவரிக்கிறது நாரபதமென்றுஞ் சொல்லுவர்கள் என்கை.

‘அக்ஷரக்ரமத்திலே விவரியாதே 3. வ்யுத்க்ரமமாக விவரிப்பானேன்?’ என்ன, அருளிச்செய்கிறார்

ஸூ.-(௭௭) அடைவே விவரியாதொழிகிறது, விரோதி போய் அநுபவிக்கவேண்டுகையாலே.

(வ்யா.) ‘அடைவே’ என்று தொடங்கி. அதாவது-அக்ஷரக்ரமத்திலே விவரியாதொழிகிறது-அகாரவிவரணமான நாராயணபதத்தில் பகவதநுபவத்துக்கு விரோதியான அஹங்கார மமகாராதிகள் நமஸ்ஸாலே கழியுண்டுபோய்ப் பின்னை அநுபவிக்கவேண்டுகையாலேயென்கை.

இனி மத்யமபதமான நமஸ்ஸுக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக, அதில் 4. அவாந்தரபதபேதத்தை அருளிச்செய்கிறார்

ஸூ.-(௭௮) நமஸ்ஸு - “ந” என்றும், “ம:” என்றும் இரண்டுபதம்.

---

1. நமஸ்ஸு ‘ம:-ந’ என்று பிரிந்து ‘எனக்கு உரியனல்லேன்’ என்ற ஸ்வஶேஷத்வத்தை வெளிப்படையாகக் கழித்தல் காண்க. 2. கிஞ்சித்காரம்-ஏதேனும் குற்றேவல் செய்கை. 3. வ்யுத்க்ரமம் - பதம் இருக்கின்ற வரிசைக்கு மாறான முறைமை. 4. அவாந்தரபதபேதம்-நமஸ்ஸினுள் உள்ள பதப் பிரிவு.

(வ்யா.) 'நமஸ்ஸு - "ந" என்றும் "ம:" என்றும் இரண்டுபதம்' என்று.

'இவ்விரண்டுபதங்களுக்கும் அர்த்தம் எது?' என்ன, அருளிச் செய்கிறார்

மூ.-(எக) "மஃ" என்கிற இத்தால், 'தனக்கு உரியன்' என்கிறது; "ந" என்று அத்தைத் தவிர்க்கிறது.

(வ்யா.) 'ம: என்கிற இத்தால்' என்று தொடங்கி. அதாவது - "மஃ" என்று ஷஷ்ட்யந்தமான இம்மகாரத்தால் மகாரவாச்யனான ஆத்மாவுக்குக் 1. கீழ்ச்சொன்ன தாதர்த்யப்ரதிகோடியான ஸ்வார்த்ததவம் தோற்றுகையாலே, 'தனக்கு உரியன்' என்னுமத்தைச் சொல்லுகிறது; "ந" என்று 2. நிஷேதவாசியான நஞ்ஞாலே, அத்தைக் கழிக்கிறது என்கை.

உபயபதத்தாலும் சொன்ன அர்த்தத்தைச் சேரப்பிடித்து அருளிச்செய்கிறார்

மூ.-(அ௦) ஆக "நமஃ" என்கிற இத்தால், 'தனக்கு உரியனன்று' என்கிறது.

(வ்யா.) 'ஆக நம: என்கிற இத்தால் தனக்கு உரியன் அன்றென்கிறது' என்று. பதகரமத்திலே அர்த்தஞ்சொல்லாதே, வ்யுத்க்ரமமாகச் சொல்லுகிறது 3. நிஷேத்யத்தைச்சொல்லி நிஷேதிக்க வேண்டுகையாலே; 4. க்ரமத்திலே சொல்லும்போது "*வீடுமின் முற்றவும்" என்னுமாபோலே நிஷேதபூர்வகமாக நிஷேத்யத்தைச் சொல்லுகிறதென்று யோஜிக்கவேணும். அதுதானும் பரந்தபடியிலே இவர் தாமே அருளிச்செய்தார்.

'தனக்கும் பிறர்க்கும் உரித்தன்று' என்று அந்யசேஷத்வத்தை நிஷேதித்த உகாரத்தை விவரிக்கிறதாகில்,பிறர்க்கு உரித்தன்றென்றத்

---

1. கீழ்ச்சொன்ன தாதர்த்யம்-அகாரத்தில் லோபித்துள்ள சதுர்த்தியின் அர்த்தமான தாதர்த்யம்; தாதர்த்யப்ரதிகோடி-ததர்த்தமாக [பகவதர்த்தமாக] இருக்கையென்பதற்கு எதிர்த்தட்டானது. 2. நிஷேதவாசி - எதிர்மறைப் பொருளைச் சொல்லுவது. 3. நிஷேத்யம் - நிஷேதிக்கப்பட வேண்டியது. 4. பதக்ரமத்திலே சொல்லியுள்ள இடத்திற்கு உபபத்தி அருளிச்செய்வது, 'க்ரமத்திலே' என்று தொடங்கும் வாக்யம்.

* திரு-வா-மொ-க-உ-க.

த்தையும் விவரியாமல், 'தனக்குரியனன்று' என்ற இத்தையே விவரிப்பானேன்? என்கிற ஶங்கையிலே அருளிச்செய்கிறார்

மூ.-(அக) 1. பிறர்க்கு உரியனுன அன்று தன்வைலக்ஷண்யத்தைக் காட்டி மீட்கலாம்; தனக்கென்னுமன்று யோக்யதையும் கூட அழியும்.

(வ்யா.) 'பிறர்க்கு உரியனுனவன்று' என்று தொடங்கி. அதாவது-அந்யஶேஷபூதனுன அன்று, ஶேஷத்வத்துக்கு இசைகையாலே, அந்யரிற்காட்டில் தனக்குஉண்டான ஸர்வகாரணத்வ ஸர்வரக்ஷகத்வ ஸர்வஶேஷித்வாதியான வைலக்ஷண்யத்தைக் காட்டி அந்நிலையில்நின்றும் மீட்கலாம்: 'தனக்குரியன்' என்று நிற்குமன்று(அசு)‹‹த்வம்மே›› [த்வம்மே] என்றால், (சுo) ‹‹அஹம்மே›› [அஹம்மே] என்னுமது ஒழிய ஶேஷத்வத்துக்கு இசையாமையாலே, மீட்கைக்கு யோக்யதையுங்கூட இல்லையாய்விடுமென்கை.

'இந் நமஸ்ஸால் செய்கிற அம்ஶந்தான் எது?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.-(அஉ) இத்தால், விரோதியைக் கழிக்கிறது.

(வ்யா.) 'இத்தால் விரோதியைக் கழிக்கிறது' என்று.

'அதுதான் ஒன்றோ? பலவோ?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.-(அரு) விரோதிதான்-மூன்று.

(வ்யா.) 'விரோதிதான் மூன்று' என்று.

அம்மூன்றுந்தான் எது? என்ன, அருளிச்செய்கிறார்

மூ.-(அச) அதாவது- ஸ்வரூபவிரோதியும், உபாயவிரோதியும், ப்ராப்யவிரோதியும்.

(வ்யா.) 'அதாவது-ஸ்வரூபவிரோதியும், உபாயவிரோதியும், ப்ராப்யவிரோதியும்' என்று. இத்தால் ப்ரதமபதத்திற்சொன்ன 2. ஸ்வரூ

---

1. எம்பெருமானுக்கு ஶேஷனுகைக்கு யோக்யதையை யுண்டாக்குகிற அந்யஶேஷத்வத்தைக் காட்டிலும், எம்பெருமானுக்கு அடிமைப்படுதலையும் அழிக்கிற ஸ்வஶேஷத்வம் [நான் எனக்கு உரியேன் என்பது] அதிக்ரூரமாகையாலே அத்தைக்கழிக்கிற நமஸ்ஸாலே அந்யஶேஷத்வம் தானே கழியுண்டுபோமென்பது, இந்த மூலவாக்யத்தின் கருத்து. 2. ஸ்வரூபத்துக்கு - பகவதநந்யார்ஹஶேஷத்வ ஸ்வரூபத்துக்கு.

பத்துக்கு விரோதியும், 1. இப்பதத்தில் ஆர்த்தமாக ஸித்திக்கிற உபாயத்துக்கு விரோதியும், உத்தரபதத்திற்சொல்லுகிற ப்ராப்யத்துக்கு விரோதியும் என்கை. இந்நமஸ்ஸுதான் 2. காகாக்ஷிந்யாயத்தாலே பூர்வோத்தரபதங்களிற் சொல்லுகிற ஸ்வரூப ப்ராப்யங்களினுடைய விரோதிகளைக் கழிக்கககடவதாயிறே இருப்பது.

'இவ்விரோதித்ரயமும் கழிகையாவது தான் ஏது?' என்ன, அது தன்னை அடைவே அருளிச்செய்கிறார், மேல் மூன்று வாக்யத்தாலே.

மூ.-(அரு) ஸ்வரூபவிரோதி கழிகையாவது - "*யானே நீ என்னுடைமையும் நீயே" என்றிருக்கை; உபாய விரோதி கழிகையாவது - "† களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்" என்றிருக்கை; ப்ராப்யவிரோதி கழிகையாவது - "மற்றை நங்காமங்கள் மாற்று" என்றிருக்கை.

(வ்யா.) 'ஸ்வரூபவிரோதி' இத்யாதி. அதாவது - 3. ஸ்வரூபத்துக்கு விரோதி "*யானே என்தனதே" என்றிருக்கை யாகையாலே, அது கழிகையாவது "*யானே நீ யென்னுடைமையும் நீயே" என்று - 4. ஆத்ம ஆத்மீயங்கள் இரண்டும் 5. அத்தலைக்கு ப்ரகாரதயா ஶேஷம் என்றிருக்கை யென்கை. 'உபாயவிரோதி' இத்யாதி. அதாவது - 6. உபாயத்துக்கு விரோதி 7. ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமாகையாலே, அது 8. கழிகையாவது - "† களைவாய் துன்பம் களை

1. இப்பதத்தில் ஆர்த்தமாக ஸித்திக்கிற-இப்பதத்துக்கு அர்த்தமான ஸ்வஸ்வாதந்த்ர்யநிவ்ருத்தியாகிறதின்பலத்தால் ஏற்படுகிற. 2.காகாக்ஷிந்யாயத்தாலே-காகத்துக்குக் கண்விழி ஒன்றேயிருந்ததேயாயினும் அது தானே இரண்டு கண்களிலும் ஸஞ்சரித்துப்பார்வையையுண்டாக்குவதுபோலே,நடுவில் நிற்கும் நமஸ்ஸு தனக்குப்பூர்வபதமான ப்ரணவத்திலும் உத்தரபதமான நாராயண பதத்திலும் அந்வயிக்கையாலே என்றபடி. 3. ஸ்வரூபத்துக்கு - ஸ்வரூப ஜ்ஞாநத்துக்கு. 4. ஆத்மஆத்மீயங்கள்-தானும் தன்னுடைமையும். 5. அத்தலைக்குப்ரகாரதயா ஶேஷமென்றிருக்கை-ஈஶ்வரனுக்கு சரீரமாய்க்கொண்டு ஶேஷமென்றுகொள்ளுகை. 6. உபாயத்துக்கு - உபாயத்வாத்யவஸாயத்துக்கு.7.ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம்-தன்னைக் காத்துக்கொள்வதில் தனக்கு ஸம்பந்த முண்டாகை. 8. ம: ந-நான் எனக்கன்று [அதாவது-என்னுடைய ரக்ஷணத்தில் உரிமை யுடையவனன்று] என்று பொருள்பட்டு, பகவதேகரக்ஷகனென்ற கருத்தை விளக்குவதாகி, உபாயவிரோதியைக் கழித்தல் காண்க.

* திருவா-மொ-உ-கூ-கூ. † திருவா-மொ. ரு-அ-அ.

யாதொழிவாய் களைகண் மற்றிலேன்'' என்று - 'துக்கத்தைப் போக்குவாய் போக்காதொழிவாய், வேறொரு ரக்ஷகவஸ்துவையுடையேனல்லேன்' என்றிருக்கை யென்கை. 'ப்ராப்யவிரோதி' இத்யாதி. அதாவது - 1. ப்ராப்யத்துக்கு விரோதி ஸ்வப்ரயோஜநபுத்தியாகையாலே, அது கழிகையாவது-"*மற்றைநங்காமங்கள் மாற்று" என்று-'உன்னுகப்புக்குப் புறம்பான எங்களுடைய ஆசையைப் போக்கு' என்றிருக்கை என்கை.

இப்படி ஸ்வரூப உபாய புருஷார்த்தங்கள் மூன்றுக்கும் விரோதியாகிறது - இவனுடைய அஹங்கார மமகாரங்களாகையாலே, 2. அதனுடைய க்ரௌர்யத்தையும், தந்நிவ்ருத்தியிலுண்டான நன்மையையும் அருளிச்செய்கிறார்

மூ. (அசு) "மம" என்கை-ஸ்வரூபநாசம்; "நம:" என்கை - ஸ்வரூபோஜ்ஜீவநம்.

(வ்யா.) 'மம என்கை - ஸ்வரூபநாசம், 'நம:' என்கை - ஸ்வரூபோஜ்ஜீவநம்' என்று. அதாவது-(கூக) "சேதநஸ்ய யதா மம்யம் ஸ்வஸ்மிந் ஸ்வீயே ச வஸ்துநி। மம இத்யக்ஷரத்வந்த்வம் ததா மம்யஸ்ய வாசகம்" [சேதநஸ்ய யதாமம்யம் ஸ்வஸ்மிந் ஸ்வீயே ச வஸ்துநி-மம இத்யக்ஷரத்வந்த்வம் ததாமம்யஸ்ய வாசகம்] என்கிறபடியே, 'மம' என்கிற இதிலே 3. அஹங்கார மமகாரங்கள் இரண்டுமுண்டாகையாலே அதிலே அந்விதனாகை, இவ்வாத்மாவினுடைய ஸ்வரூபத்துக்கு நாசம்; 'நம:' என்று அதில் அந்வயமற்றிருக்கை, ஸ்வரூபத்துக்கு உஜ்ஜீவநம் என்கை. (கூஉ) "த்வ்யக்ஷரஸ்து பவேந்ம்ருத்யு: த்ர்யக்ஷரம் ப்ரஹ்மண: பதம்। மமேதி த்வ்யக்ஷரோ ம்ருத்யுர் நமமேதி ச சாஸ்வதம்" [த்வ்யக்ஷரஸ்துபவேந்ம்ருத்யுஸ் த்ர்யக்ஷரம் ப்ரஹ்மண: பதம் - மமேதி த்வ்யக்ஷரோ ம்ருத்யுர் நமமேதிச சாஸ்வதம்] என்னக்கடவதிறே.

---

1. ப்ராப்யம்-புருஷார்த்தம். 2. அதனுடைய-அகங்காரமமகாரங்களினுடைய. 3. 'உடையது' என்ற பொருளைக் காட்டுகிற மமதையிலும் அஹங்காரமமகாரங்கள் வருவது காண்க.

* திருப்பாவை-உக.

இப்படி ஸ்வரூப உபாய புருஷார்த்த விரோதிகளைக் கழிக்கிற அளவன்றிக்கே. இந்நமஸ்ஸுதான் ஸ்வரூபாதித்ரயத்தையும் ப்ரகாஶிப்பிக்கும் என்கிறார்

மூ.- (அஎ) இதுதான் - ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையும் காட்டும்.

(வ்யா.) 'இதுதான் 1. ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையும் காட்டும்' என்று.

இதுதன்னை உபபாதிக்கிறார், மேல் மூன்று வாக்யத்தாலே:—

மூ.-(அஅ) "* தொலைவில்லிமங்கலந் தொழும்" என்கையாலே, ஸ்வரூபம் சொல்லிற்று; "† வேங்கடத்து உறைவார்க்கு நம" என்கையாலே, உபாயம் சொல்லிற்று; ‡ "அந்தி தொழுஞ் சொல்" என்கையாலே, பலம் சொல்லிற்று.

(வ்யா.) "தொலைவில்லிமங்கலம்" இத்யாதி. அதாவது - "* தொலைவில்லிமங்கலந்தொழும்" என்று, அவன் உகந்தருளின நிலத்தளவும் செல்ல ஶேஷமாயிருக்கும்படியைச் சொல்லுகிறவளவில், "தொழும்" என்று நமஸ்காரத்தைச் சொல்லுகையாலே, ஸ்வரூபம் சொல்லிற்று என்கை. 'வேங்கடத்து' இத்யாதி. அதாவது - † "வேங்கடத்துறைவார்க்கு நம:" என்று - 'திருவேங்கடமுடையானுக்கு ஶேஷம் நான், எனக்குரியேனல்லேன்' என்று ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத ஸ்வரூபபாரதந்த்ர்யத்தைச் சொல்லுகையாலே, அவனே உபாயமென்னுமிடம் ஸித்திக்கையாலே, உபாயம் சொல்லிற்று என்கை. ‡ 'அந்திதொழுஞ்சொல்' இத்யாதி. அதாவது - ‡ "அந்திதொழுஞ் சொல்" என்று தாஸ்யரஸம் அதிஶயித்

1. ஸ்வஶேஷத்வம் போய்ப் பகவதநந்யார்ஹஶேஷத்வம்ப்ரகாசிப்பது இந்நமஸ்ஸிலேயாகையாலே இது, ஸ்வரூபத்தைக்காட்டும்; ஈஶ்வரன்கையையே பார்த்திருக்கையாகிற பாரதந்த்ர்யம் ஸித்தித்து அவனே உபாயமென்பது தெளிவாவது-ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம் நிவர்த்தித்தபின்பே ஆதலால் அதனைத்தெரிவிக்கும் இது, உபாயத்தையும்காட்டும்; ஈஶ்வரவிஷயத்திற்செய்யும் கைங்கர்யத்தில் ஸ்வபோக்யதாபுத்தி கழிந்தாலல்லது ஈஶ்வரனுடைய திருவுள்ளத்துக்கு உகப்பானது என்ற கருத்தோடு செய்யப்படவேண்டிய கைங்கர்யரூபபலஞ் சித்தியாமையாலே, ஸ்வபோக்யதா நிவ்ருத்தியைக் காட்டுகிற இது, பலத்தையும் காட்டும்.

* திருவா. ௩-௫-௧. † திருவா. ௩-௩-௩. ‡ திருவா. ௧௦-௮-௭.

தால் அதனுடைய சரமதசையிலே சொல்லக்கடவ "தொழுஞ் சொல்" என்று நமஸ்ஸப்தத்தைச் சொல்லுகையாலே, பலம் சொல்லிற்று என்கை.

இப்பதத்திலே, ததீயஶேஷத்வமும் ஆர்த்தமாக அநுஸந்தேயமாகையாலே, அத்தை அருளிச்செய்கிறார்

மூ.-(அகூ) "† உற்றதும் உன்னடியார்க்கடிமை" * என்கிறபடியே, இதிலே பாகவதஶேஷத்வமும் அநுஸந்தேயம்.

(வ்யா.) 'உற்றதும்' என்று தொடங்கி. அதாவது - "† நின் திருவெட்டெழுத்துங் கற்று நானுற்றதும் உன்னடியார்க்கு அடிமை" என்று- திருமந்த்ரங்கற்றதால் நான்உற்றதும் உன்னடியார்க்கு அடிமை என்னும் இவ்வர்த்தத்திலே' என்கிறபடியே, அஹங்கார மமகாரங்கள் நிவ்ருத்தமாப் பகவச்சேஷத்வம் உள்ளபடி ப்ரகாஶிக்கிற இந்நமஸ்ஸிலே, தத்காஷ்டையான பாகவதஶேஷத்வமும் அநுஸந்திக்கவேணு மென்கை.

இப்படி ஆர்த்தமாக அநுஸந்திக்கப்படும் பாகவதஶேஷத்வந் தான், இந்நமஸ்ஸிலன்றிக்கே ஸ்தலாந்தரங்களிலே சொல்லுவாருமுண்டாகையாலே, அத்தை அருளிச்செய்கிறார்

மூ.-(கூ0) இது - அகாரத்திலே என்றுஞ் சொல்லுவர்கள்; உகாரத்திலேயென்றுஞ் சொல்லுவர்கள்.

(வ்யா.) 'இது அகாரத்திலே என்றுஞ் சொல்லுவர்கள், உகாரத்திலே என்றுஞ் சொல்லுவர்கள்' என்று. அதாவது - சதுர்த்தியாலே ஆத்மாவினுடைய பகவச்சேஷத்வத்தைச் சொல்லுகையாலே, பகவச்சேஷத்வகாஷ்டையான இந்தப்பாகவதஶேஷத்வாநுஸந்தாநம் அகாரத்திலே யென்றும் சிலர் சொல்லுவர்கள். அநந்யார்ஹஶேஷத்வத்துக்கு எல்லை ததீயஶேஷத்வபர்யந்தமாக நிற்கையாகையாலே, அநந்யார்ஹத்வப்ரதிபாதகமான உகாரத்திலே யென்றும் சிலர் சொல்லுவர்களென்கை 1. ஆர்த்தமாகையாலே, அவ்வவஸ்தலங்களிலும் சொல்லலாயிருந்ததேயாகிலும், 2. கந்தல்கழிந்தவிடத்திலே சொல்லுகையே உசிதம் என்று கருத்து.

---

† பெரிய தி-மொ-அ-கo-ந. * என்கையாலே என்று சில ஸ்ரீகோசங்கள்.

1. ஆர்த்தமாகையாலே-அர்த்தபலத்தாலே கொள்ளுமதாகையாலே.
2. கந்தல்-அஹங்கார மமகாரங்கள்.

இந்நமஸ்ஸுக்குப் பூர்வத்திற் பிறந்த ப்ரதிபத்தியைப் பற்ற இதிற் பிறந்த ப்ரதிபத்திக்கு உண்டான வாசியை அருளிச்செய்கிறார்

மூ.-(௬௧) ஈஸ்வரன் தனக்கேயாயிருக்கும்; அசித்துப் பிறர்க்கேயாயிருக்கும்; ஆத்மா தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருக்கும் என்று முற்பட்ட நினைவு; அங்ஙனன்றிக்கே, அசித்தைப்போலே * தனக்கே யாக எனைக் கொள்ளவேணு மென்கிறது நமஸ்ஸால்.

(வ்யா.) 'ஈஸ்வரன் தனக்கேயாயிருக்கும்' என்று தொடங்கி. அதாவது-(௬௩) "ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் பகவத:" [ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் பகவத:] என்கிறபடியே, ஸ்வாதந்த்ர்யமே ஸ்வரூபமான ஈஸ்வரன், ஸ்வார்த்தபரனாயே இருக்கும்; சைதந்யரஹிதமாகையாலே தனக்கே என்கைக்கு யோக்யதை யின்றிக்கே பாரதந்த்ர்யஸ்வரூபமா யிருக்கும் அசித்து, பரார்த்தமாயே இருக்கும். சதுர்த்தியிற் சொன்ன சேஷத்வத்தையும் மகாரத்திற்சொன்ன ஜ்ஞாத்ருத்வத்தையும் உடையனான ஆத்மா 1. ஜ்ஞாத்ருத்வபலத்தாலே ஸ்வார்த்ததைக்கும், சேஷத்வத்தாலே பரார்த்ததைக்கும் பொதுவாயிருக்கும் என்று, 2. நமஸ்ஸுக்குப் பூர்வபதத்திற் பிறந்த ப்ரதிபத்தி; அப்படி யன்றிக்கே, 3. பரார்த்ததைகவேஷமான அசித்துப்போலே * "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்கிறபடியே 4. அத்தலைக்கே 5. ரஸமாம்படி விநியோகங்கொள்ளவேணும் என்று அபேக்ஷிக்கிறது, இந்நமஸ்ஸாலே என்கை.

"தனக்கேயாக" என்றத்தை உபபாதிக்கிறார்

மூ.-(௬௨) அதாவது - போகதசையில் ஈஸ்வரன் அழிக்கும்போது நோக்கவேணுமென்று அழியாதொழிகை.

---

1. ஜ்ஞாத்ருத்வபலத்தாலே- ஜ்ஞாநத்துக்கு ஆஸ்ரயமாக இருப்பனென்ற ப்ரபலஹேதுவினாலே. 2. நமஸ்ஸுக்குப் பூர்வபதம்-ப்ரணவம். 3. பர அர்த்ததா ஏகவேஷம் ஆன-அயலார் பொருட்டாக இருத்தலையே ஸ்வரூபவுடைய. 4. அத்தலைக்கே-அவ்விடத்துக்கே: ஈஸ்வரனாகிய தனக்கே என்றபடி. 5. ரஸம் ஆம்படி-ஆநந்தமாம்படி.

* திரு-வா-௨-௯-௪.

(வ்யா.) ‘அதாவது’ என்று தொடங்கி. இத்தால் அத்தலைக்கே ரஸமாம்படி விநியோகப்படுகையாவது-தன்னோடே கலந்து பரிமாறுந் தசையில் போக்தாவான ஈஶ்வரன்† “ஆட்கொள்வானொத்து என்னுயிருண்டமாயன்” என்கிறபடியே, அடிமை கொள்வாரைப்போலே புகுந்து தன் வ்யாமோஹத்தாலே 1. தாழநின்று பரிமாறி இத்தலையில் ஶேஷத்வத்தை அழிக்கும்போது ‘நம்ஶேஷத்வத்தை நாம் நோக்கவேணும்’ என்று 2. நைச்யம் பாவித்து 3. இறாய்த்து 4. அவன் போகத்தை அழியா தொழிகை யென்கை.

‘இப்படி இவன் அழிக்கைக்கு ஹேது என்?’ என்ன, அருளிச் செய்கிறார்.

ஸூ.-(௯௩) அழிக்கைக்கு ஹேது-கீழே சொல்லிற்று; மேலுஞ் சொல்லும்.

(வ்யா.) ‘அழிக்கைக்கு ஹேது’ என்று தொடங்கி. அதாவது, ஈஶ்வரன் மேல்விழுந்து 5. விநியோகங்கொள்ளுகிற தசையிலே இவன் நைச்யம்பாவித்து இறாய்த்து அவன் போகத்தை அழிக்கைக்கு ஹேது-‘ஶேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம்’ என்கையாலே கீழே 6. ப்ரணவத்திலே சொல்லிற்று; சதுர்த்தியிலே கிங்கரஸ்வபாவனாகச் சொல்லுகையாலே, மேலிற் பதத்திலும் சொல்லு மென்கை.

---

1. தாழநின்று பரிமாறி இத்தலையில் ஶேஷத்வத்தை அழிக்கும்போது-ஈஶ்வரன் தன்னைச் சேர்ந்த சேதநனைத் தனக்கு ஶேஷிபோல வைத்துத் தான் ஶேஷமாக நின்று அநுபவித்து, இவன்பண்ணும் கைங்கர்யத்தைத் தடுத்துத் தான் இந்தச் சேதநன் விஷயத்தில் ஶேஷவ்ருத்தியைச் செய்து அதை ஏற்றுக்கொள்ளும்படி செய்கின்ற ஸமயத்தில். 2. நைச்யம்-நீசத்தன்மை: தாழ்மை. “நம்ஶேஷத்வத்தை நாம் பாதுகாத்துக்கொள்ளவேணும்” என்று தன்னுடைய நைச்யத்தை அநுஸந்தித்தால் அப்போது ஸ்வரூபத்தில் மமகாரமும் ஸ்வரக்ஷணவிஷயத்தில் ஸ்வ ப்ரயத்நமு மென்றவை ஶேஷத்வத்துக்கு மாறாகத் தோன்றுகையாலே ‘நைச்யத்தை பாவித்து’ என்றது. 3. இறாய்த்து-பின்வாங்கி. 4. அவன்போகத்தை-அவனுடைய முகவிகாஸத்தை. 5. விநியோகங் கொள்ளுதல் - உபயோகித்துக் கொள்ளுதல். 6. ப்ரணவத்தில் தாதர்த்யமும் நாராயணபதத்திலுள்ள சதுர்த்தியில் தாதர்த்யத்துக்கு ஏற்ற கைங்கர்யமும் ப்ரதிபாதிக்கப்பட்டாலும், மகாரத்தால் ஆத்மாவுக்கு ஏற்பட்டுள்ள ஜ்ஞாத்ருத்வத்தாலே ‘நம் ஶேஷத்வத்தை நாம் நோக்கிக்கொள்ளவேணும்’ என்கிற ஸ்வஸ்வாதந்த்ரிய நினைவைப் போக்கமாட்டா என்க.

† திருவா-௯-௯-௭.

இனி, இப்பாரதந்தர்ய ப்ரதிபத்தியினுடைய வைபவத்தைப் பல படியாக அருளிச்செய்யாநின்றுகொண்டு, இப்பதத்தை நிகமித்தருளுகிறார் மேல்:—

மூ.-(கூசு) இந்நினைவு பிறந்த போதே க்ருதக்ருத்யன்; இந்நினைவு இல்லாதபோது எல்லா துஷ்க்ருதங்களும் க்ருதம்; இந்நினைவிலே எல்லா ஸுக்ருதங்களும் உண்டு; இது இன்றிக்கே யிருக்கப் பண்ணும் யஜ்ஞாதிகளும் ப்ராயச்சித்தாதிகளும் நிஷ்ப்ரயோஜநங்கள்; இதுதன்னாலே எல்லாப்பாபங்களும் போம், எல்லாப் பலங்களும் உண்டாம்.

(வ்யா.) 'இந்நினைவு பிறந்தபோதே க்ருதக்ருத்யன்' என்றது- * 'தனக்கேயாக எனைக்கொள்ளவேணும்' என்னும் இவ் 1. அத்யந்த பாரதந்த்ர்யப்ரதிபத்தி பிறந்தபோதே தன்னுடைய ஹிதத்துக்கு 2 உடலாகச் செய்யவேண்டுவதெல்லாம் செய்து தலைக்கட்டினவனென்கை.

'இந்நினைவு இல்லாதபோது எல்லா துஷ்க்ருதங்களும் க்ருதம்' என்றது-இப்பாரதந்த்ரயப்ரதிபத்தி இல்லாதபோது, (கூசு) "கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா" [கிந்தேந நக்ருதம்பாபம் சோரேணாத்மாபஹாரிணா] என்கிறபடியே ஸகலதுஷ்க்ருதங்களும் இவனாலே செய்யப்பட்டதாய்விடுமென்கை.

'இந்நினைவிலே எல்லா ஸுக்ருதங்களும் உண்டு' என்றது - இது உண்டாகவே எல்லா ஸுக்ருதமும் பண்ணினாற் பிறக்கும் ப்ரீதி ஈஶ்வரனுக்கு விளைகையாலே, இந்தப்பாரதந்த்ர்யப்ரதிபத்தியிலே ஸகலஸுக்ருதமும் உண்டு என்கை.

'இது இன்றிக்கே யிருக்கப் பண்ணும் யஜ்ஞாதிகளும் ப்ராயஶ்சித்தாதிகளும் நிஷ்ப்ரயோஜநங்கள்' என்றது - இந்தப் பாரதந்த்ர்ய ப்ரதிபத்தி யின்றிக்கேயிருக்கச்செய்தே, ஈஶ்வர 3. ப்ரீணநார்த்தமாக

1. அத்யந்தபாரதந்த்ர்யம் - மிகவும் பரதந்த்ரனாயிருக்கை. 2. உடலாக - அங்கமாக. 3. ப்ரீணநம்-ஸந்தோஷிக்கச் செய்கை.

இவன் பண்ணும் யாகாதி கர்மங்களும், தன் பாபவிமோசநார்த்தமாகப் பண்ணும் க்ருச்ச்ரசாந்த்ராயணாதிகளாகிற ப்ராயஸ்சித்தாதிகளும் ஈஸ்வரப்ரீதிக்கும் ஸ்வபாபவிமோசநத்துக்கும் உடலாகாமையாலே நிஷ்ப்ரயோஜநங்களென்கை.

'இது தன்னாலே எல்லாப்பாபங்களும் போம், எல்லாப் பலங்களும் உண்டாம்' என்றது - இந்தப் பாரதந்த்ர்யப்ரதிபத்தியாலே ஈஸ்வரன் இவனளவிலே அநுக்ரஹாதிஶயத்தைப் பண்ணுகையாலே, அவனுடைய நிக்ரஹாத்மகமான ஸகலபாபங்களும் போம்; * "உன்னடியார்க்கு என்செய்வனென்றே யிருத்தி நீ" என்கிறபடியே இவனுக்கு எத்தைச் செய்வோமென்று மேன்மேலும் உபகரிக்கையாலே ஸம்ஸாரநிவ்ருத்தி தொடக்கமான கைங்கர்யப்ராப்தி பர்யந்தமாக ஸகல பலங்களும் உண்டாமென்கை.

ஆக, மத்யமபதார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

அநந்தரம் நாராயணபதார்த்தத்தை அருளிச்செய்கிறார்

மூ.-(சுரு) நாராயண னென்றது - நாரங்களுக்கு அயந மென்றபடி.

(வ்யா.) 'நாராயணனென்றது' என்று தொடங்கி. அதாவது - நாராயணபதந்தான் "நாராணும் அயநம் யஃ, ஸஃ, நாராயணஃ" என்றும் "நாராஃ அயநம் யஸ்ய, ஸஃ நாராயணஃ" என்றும் தத்புருஷபஹுவ்ரீஹி ரூப ஸமாஸத்வய ஸித்த மாகையாலே, அதில் தத்புருஷனில் அர்த்தத்தை முந்துற அருளிச்செய்கிறார், "நாரங்களுக்கு அயநமென்றபடி' என்று.

'நாரங்களாகிறவைதாம் எவை?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.-(சுசு) நாரங்களாவன - நித்யவஸ்துக்களினுடைய திரள்.

(வ்யா.) 'நாரங்களாவன-நித்யவஸ்துக்களினுடைய திரள்' என்று. நாரபதம் "நர" என்றும் "நார" என்றும் "நாராஃ" என்றுமாய் "ரிஜ் க்ஷயெ" [ரிங்க்ஷயே] என்கிற தாதுவிலே "ர" என்று பதமாய் க்ஷயிக்கும் வஸ்துவைச் சொல்லி, நகாரம் அத்தை நிஷேதித்து, "நர"

---

* பெரியதிருவந்-ருங.

என்று க்ஷயமில்லாத நித்யவஸ்துவைக் காட்டி, ஸமூஹார்த்தத்திலே அண்' ப்ரத்யயமும் ஆதிவ்ருத்தியுமாய் "நார" என்று - நித்யவஸ்து ஸமூஹத்தைச் சொல்லி, "நாரா:" என்று பஹுவசந மாகையாலே ஸமூஹபாஹுள்யத்தையும் சொல்லுகையால், 'நித்யவஸ்துக்களி னுடையதிரள்' என்கிறார். இதில் 'நித்ய' என்கையாலே நரஶப்தார்த்த மும், 'வஸ்துக்கள்' என்கையாலே நாரஶப்தார்த்தமும், அவற்றி னுடைய 'திரள்' என்கையாலே பஹுவசநார்த்தமும் சொல்லப்பட்ட திறே.

1. 'தாத்ருஶங்களானவை தாம் எவை? என்ன, அருளிச்செய் கிறார்

மூ.-(௬௭) அவையாவன - ஜ்ஞாநாநந்தாமலத்வாதி களும், ஜ்ஞாநஶக்த்யாதிகளும், வாத்ஸல்ய ஸௌஶீல் யாதிகளும், திருமேனியும், காந்தி ஸௌகுமார்யாதிக ளும், திவ்யபூஷணங்களும், திவ்யாயுதங்களும், பெரிய பிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்களும், நித்ய ஸூரிகளும், சத்ரசாமராதிகளும், திருவாசல் காக்கும் முதலிகளும், கணங்களும், முக்தரும், பரமாகாஶமும், ப் ரக்ருதியும், பத்தாத்மாக்களும், காலமும், மஹதாதி விகா ரங்களும், அண்டங்களும், அண்டத்துக்கு உட்பட் தேவாதிபதார்த்தங்களும்.

(வ்யா.) 'அவையாவன' என்று தொடங்கி. ஜ்ஞாநாநந்தாமலத்வா திகள் ஆவன- 2. ஸ்வரூபநிரூபக தர்மங்கள். 'ஆதி' ஶப்தத்தாலே, அநந் தத்வத்தைச் சொல்லுகிறது. 'ஜ்ஞாநஶக்திபாதிகள்' ஆவன- 3. நிரூபித

1. தாத்ருஶங்கள்—அப்படிப்பட்டவைகள்; நித்யவஸ்துக்களின் திரள் என ப்பட்டவை. 2. ஸ்வரூபநிரூபக தர்மங்கள்-ஸ்வரூபம் இன்னபடியானது என்று நிரூபித்துக் காட்டுதற்கு அவசியமான தர்மங்கள்; 'பகவத்ஸ்வரூபம் எப்படி உள்ளது? என்றால் ஜ்ஞாநமாயும் ஆநந்தமாயும் அமலமாயும் உள்ளது என்ன வேண்டியதாதல் காண்க. 3. நிரூபித ஸ்வரூப விஶேஷணங்கள்-இப்படி நிரூ பிக்கப்பட்ட ஸ்வரூபத்தைச் சார்ந்துள்ள குணங்கள்; ஸமஸ்தகல்யாணகுணங் களும் ஸ்வரூபத்துக்கு விஶேஷணங்களாகும்.

ஸ்வரூப விஶேஷணங்களான ஸமஸ்த 1. கல்யாணகுணங்களுக்கும் 2. ப்ரதாநமாயிருந்துள்ள 3. ஜ்ஞாந ஶக்தி பல ஐஶ்வர்ய வீர்ய தேஜஸ்ஸுக்களாகிற ஷட்குணங்கள். 'வாத்ஸல்யஸௌஶீல்யாதிகள்' ஆவன-அந்த 4. ஷாட்குண்யாயத்தமான வாத்ஸல்ய ஸௌஶீல்ய ஸ்வாமித்வ ஸௌலப்யாதி அஸங்க்யேயகல்யாணகுணவிஶேஷங்கள். 'திருமேனி' ஆவது-அஸாதாரணமான திவ்யமங்களவிக்ரஹம். ஏகவசநம் ஜாத்யபிப்ராயமாய், நித்யமான திவ்யவிக்ரஹத்தையும் ஐச்சிகமாகப் பரிக்ரஹிக்கும் விக்ரஹாந்தரங்களையும் சொல்லுகிறது; அல்லாத போது, ஒரோ ஸமூஹமாக எண்ணிவருகிற ப்ரகரணத்துக்குச் சேராது. இதுதான் நடுவிற்றிருவீதிப்பிள்ளைபட்டர் ஆச்சான்பிள்ளை இவர்கள் அருளிச்செய்த ப்ரபந்தங்களிலே ஸுஸ்பஷ்டம். 'காந்தி ஸௌகுமார்யாதிகள்' ஆவன-அந்த விக்ரஹகுணங்களான ஸௌந்தர்ய ஸௌகுமார்ய ஸௌகந்த்ய லாவண்ய யௌவநாதிகள். 'திவ்ய

1-கல்யாணகுணம் - நிர்த்தோஷமாய் மங்களமாயிருக்கிற குணங்கள். 2. ஜ்ஞாநாதி ஷட்குணங்களுக்கும் ப்ராதாந்யம்—இந்தஷட்குணங்களினாலேயே மற்றவை விளங்குவதாகை. எம்பெருமானது ஜ்ஞாநகுணத்தினாலேபிறர் துக்கத்தை யறிந்து நோவுபடுதலாகிய க்ருபையுண்டாவதாதலும், ஶக்தியினாலே தன்னையடைந்தாரது குற்றத்தை நற்றமாகக் கொள்ளும் வாத்ஸல்யம் உண்டாவதாதலும் காணலாம்; இவ்வாறே மற்றைக்குணங்களையும் ஊகித்தறிய வேணும். 3. ஜ்ஞாநமாவது - எப்போதும் ஸ்வதஃ ஏககாலத்தில் பஞ்சேந்த்ரியங்களினாலும் அறியக்கூடியவற்றை யெல்லாம் ஸாக்ஷாத்கரிக்கை. ஶக்தியாவது - ஸ்வஸங்கல்ப மாத்ரத்தால் அஸங்க்யேயமான புவநங்கட்கும் உபாதாநகாரணமாகை. பலமாவது - ஸமஸ்தசித் அசித் ஸமூஹங்களையும் சிறிதும் இளைப்பின்றித் தாங்கும்வல்லமை. ஐசுவர்யமாவது-ஸ்வாதந்த்ர்யத்தோடு எங்குந் தடையின்றிச்செல்லும் ஸங்கல்பத்தையுடைமை. வீர்யமாவது-தான் உபாதாநகாரணமாகிச் சேதநாசேதநங்களை யுண்டாக்கியும் தனக்கு ஒருவிகாரமின்றிக்கேயிருக்கை. தேஜஸ்ஸாவது-வேறொருதவியின்றி அடைந்தாரது தாபங்களைப் போக்கியும், எதிரிகட்குத் தாபத்தைத் தந்தும் போருந் தன்மை: ஷட்குணங்களுக்கும் இவ்வாறு ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் உத்தரஶதகத்தில் லக்ஷணங் கூறியிருப்பதைக் காணலாம். 4. ஷாட்குண்ய ஆயத்தமான - ஜ்ஞாநாதி ஷட்குணங்களின் வசமாய்த் தோன்றுவதான. வாத்ஸல்யம்-குற்றத்தை நற்றமாகக்கொள்ளுங் குணம்: ஸ்வாமித்வம்-எப்பொருட்குந் தலைவனாகை. ஸௌஶீல்யம்-மஹானாயிருந்தும் மந்தரோடு வேற்றுமையின்றிக் கலக்கும் குணம். ஸௌலப்யம் - ஸகலமநுஷ்யர்கண்களுக்கும் விஷயமாகும் குணம்.

பூஷணங்கள்' ஆவன-ஆபரணசூர்ணையிலே பாஷ்யகாரர் அருளிச்செய்த படியே கிரீடாதி நூபுராந்தமாக அத்திருமேனிக்குச் சாத்தும் அஸங்க்யேயமான திருவாபரணங்கள். 'திவ்யாயுதங்கள்' ஆவன-அழகுக்கும் ஆஶ்ரிதவிரோதிநிரஸநத்துக்கும் உடலாயிருந்துள்ள ஶங்க சக்ர கதா அஸி ஶார்ங்காதி அஸங்க்யேய ஆயுதவிஶேஷங்கள். 'பெரியபிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்' ஆவார்-(கூ௫) "ஸ்ரீவல்லப வசம்வத பூமி நீளா நாயக" [ஸ்ரீவல்லப வசம்பூதபூமிநீளாநாயக] (கூகூ) "தேவீத்வா மநு நீளயா ஸஹ மஹீ தேவ்யஸ் ஸஹஸ்ரம் ததா" [தேவித்வா மநு நீலயாஸஹ மஹீதேவ்யஸ்ஸஹஸ்ரந்ததா] என்கிறபடியே ப்ரதாநமஹிஷியான பெரியபிராட்டியார் முதலாகத் தத்ஸமாநைகளான பூமிநீளைகளும், மற்றும் அநேகராகச்சொல்லப்படுகிறவர்களும். "லக்ஷ்மீப்ரப்ருதி மஹிஷீவர்க்கங்களும்' என்றிறே ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தது. நித்யஸூரிகள் ஆவார்-அநந்தகருட விஷ்வக்ஸேநாதிகளாயிருந்துள்ள அஸங்க்யேயரான ஸூரிஜநங்கள். சத்ரசாமராதிகள் ஆவன-கைங்கர்ய உபகரணங்களான சத்ர சாமர [1]தாலவ்ருந்த ப்ருங்கார பதத்க்ரஹாதிகள். 'திருவாசல்காக்கும்முதலிகள்' ஆவார்-சண்ட ப்ரசண்ட பத்ர ஸுபத்ர ஜய விஜயாதிகள். 'கணநிபர்' ஆவார்-குமுத குமுதாக்ஷ புண்டரீக வாமந ஶங்குகர்ண ஸர்வநேத்ர ஸுமுக ஸுப்ரதிஷ்டிதாதிகள். 'முக்தர்' ஆவார்-* "கரைகண்டோர்" என்கிறபடியே ஸம்ஸார ஸாகரத்தைக் கடந்து அக்கரைப்பட்டு நித்யஸூரிகளோடு ஸமாநாகாரராய் நிகிலகைங்கர்ய நிரதராயிருக்கும் அஸங்க்யேயரான சேதநர். பரமாகாஶம் ஆவது-[2]பஞ்சோபநிஷந்மயமான பரமபதம்; இதுதான் பஞ்சோபநிஷந்மயமாகையாலே ஸமூஹாத்மகமாயிறே யிருப்பது. ஆகையால், ஸமூஹகணனைக்கு விரோதமில்லை. "பஞ்சோபநிஷந்மயமாகையாலே, பரமபதமும் ஸமூஹாத்மகமாயிருக்கும்" என்றிறே, ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தது.

---

1. தாலவ்ருந்தம்-விசிறி. ப்ருங்காரம்-வெற்றிலைப்பெட்டி. பதத்க்ரஹம்-தம்பலப் படிக்கம். 2. பஞ்சோபநிஷத்துக்கள்-பரமேஷ்டி புமாந் விஶ்வ: நிவ்ருத்த ஸர்வ: என்பன: இந்தலீலாவிபூதியில் பஞ்சபூதங்களைப்போல அந்தப் பரமபதத்தில் பஞ்சோபநிஷத்துக்களுள்ளனவென்றும், அவை சுத்தஸத்வங்களென்றும் அறிக. * திருவாய். அ-ரு-௧0.

ஆக, 'ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும்' என்று தொடங்கி இவ்வளவும்-ஸ்வரூபநிரூபகதர்மங்களையும், நிரூபிதஸ்வரூபவிசேஷணங்களான கல்யாணகுணங்களையும், அக்குணங்களுக்கு ப்ரகாசகமான திவ்ய மங்களவிக்ரஹத்தையும், விக்ரஹகுணமான ஸௌந்தர்யாதிகளையும், அந்த ஸௌந்தர்யாதிகளோபாதி பூத்தாற்போலே சாத்தின திவ்யாபரணங்களையும், அவ்வாபரணங்களோடு விகல்பிக்கலாம்படியான திவ்யாயுதங்களையும், இவையித்தனையும் காட்டிலெறித்த நிலாவாகாதபடி அருகேயிருந்து அநுபவிக்கிற நாய்ச்சிமாரையும், அச்சேர்த்தியிலே அடிமை செய்கிற நித்யஸூரிகளையும், அவர்களுக்குக் கைங்கர்யோபகரணங்களான சத்ரசாமராதிகளையும், 'இச்சேர்த்திக்கு என் வருகிறதோ?' என்று வயிறுஎரிந்து நோக்கும் திருவாசல் காக்கும் முதலிகளையும், அப்படி மங்களாஶாஸநபரராய்த் திருப்படைவீட்டுக்கு அடையக் காவலாயிருக்கும் கணாதிபரையும், நிவ்ருத்தஸம்ஸாரராய் அவர்களோடு ஒருகோவையாய் அடிமைசெய்கிற முக்தரையும், அவ்வடிமைக்கு வர்த்தகமான பரமபதத்தையும் அருளிச்செய்தாராயிற்று.

[1] லீலாவிபூதியிலுள்ளவற்றை அருளிச்செய்கிறார் மேல்: 'ப்ரக்ருதி' ஆவது - குணத்ரயாத்மகதயா ஸமூஹாத்மிகையாயிருக்கும் [2] மூலப்ரக்ருதி; "குணத்ரயாத்மிகையாகையாலே மூலப்ரக்ருதியும் ஸமூஹாத்மிகையாயிருக்கும்" * என்றிறே, இதுக்கும் ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தது. 'பத்தாத்மாக்கள்' ஆவார் - உரைமெழுகிற் பொன்போலே இப்ப்ரக்ருதிக்குள்ளே உருமாய்ந்து கிடக்கிற ஆத்மாக்கள். 'காலம்' ஆவது - அஹோராத்ராதி [3] விபாகயுக்ததயா ஸமூஹாத்மகமாயிருக்கும் அசித்விசேஷம்; "அஹோராத்ராதி விபாகங்கள் அநேகமாகையாலே, காலமும் ஸமூஹாத்மகமாயிருக்கும்"* என்றிறே, இதுக்கும் ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தது.

ஆக, இவ்வளவும் - ஸ்வரூபேண நித்யங்களான வஸ்துக்களைச் சொல்லிற்று. மேல் ப்ரவாஹரூபேண நித்யங்களைச் சொல்லுகிறது. ஸ்வரூபேண நித்யத்வமாவது - ஸத்தானபதார்த்தத்தினுடைய உத்பத்தி

---

1. லீலாவிபூதியிலுள்ளவற்றை - லீலாவிபூதியிலுள்ள நாசபதார்த்தங்களை. 2- மஹாந்முதல் ப்ருதிவீவரையிலு முள்ள தத்வங்கட்கெல்லாம் காரணமான ப்ரக்ருதி-மூலப்ரக்ருதி யெனப்படும். 3. விபாகயுக்ததயா - பிரிவையுடையதாயிருத்தலாலே. * பரந்தரஹஸ்யம்.

விநாஶ [1] அத்யந்தாபாவம். ப்ரவாஹரூபேண நித்யத்வமாவது - [2] உத்பத்திவிநாஶயோகியாகாநிற்கச்செய்தேயும், [3] பூர்வகாலத்தி லுண்டான நாமரூபலிங்காதிகளுடைய [4] அநந்யதாபாவம்.

இதில் 'மஹதாதி விகாரங்கள்' ஆவன - மஹத்தத்த்வம் தொடங்கி ப்ருதிவியளவாக உண்டான இருபத்துமூன்று தத்த்வமும். 'அண் டங்கள்' ஆவன - இம்மஹதாதிகளாலே [5] ஆரப்தங்களாய் (கள) "அண்டாநாம் து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநி ச" [அண்டாநாந்து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநிச] என்கிறபடி யே, அஸங்க்யேயமாயிருக்கிற அண்டவிஶேஷங்கள். 'அண்டத்துக்கு உட்பட்ட தேவாதிபதார்த்தங்கள்' ஆவன - அண்டாந்தர்வர்த்திகளான தேவ மநுஷ்ய திர்யக் ஸ்தாவரங்கள்.

ஆக, நாரபதார்த்தம் அருளிச்செய்தாராயிற்று.

மேல், அயநபதார்த்தத்தை அருளிச்செய்கிறார்

மூ.-(கஅ) அயந மென்றது - இவற்றுக்கு ஆஶ்ரய மென்றபடி.

(வ்யா.) 'அயநமென்றது-இவற்றுக்கு ஆஶ்ரய மென்றபடி' என் று; அதாவது-அயநஶப்தம் ஆஶ்ரயவாசியாகையாலே, இவற்றுக்கு அயநமென்றது இவற்றுக்கு ஆஶ்ரய மென்றபடி யென்கை.

பஹுவ்ரீஹி ஸமாஸார்த்தத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(கக) அங்ஙனன்றிக்கே, இவைதன்னை ஆஶ்ரயமாகவுடைய னென்னவுமாம்.

(வ்யா.) 'அங்ஙனன்றிக்கே, இவைதன்னை ஆஶ்ரயமாக வுடைய னென்னவுமாம்' என்று. அதாவது - இவற்றுக்கு ஆஶ்ரயமென்று தத்புருஷனாகச் சொல்லுகையன்றிக்கே, 'இவைதன்னை ஆஶ்ரயமாக வுடையன்' என்று பஹுவ்ரீஹியாகச் சொல்லவுமா மென்கை.

---

1. அத்யந்த அபாவம் - அடியோடில்லாமை. 2. உத்பத்தி விநாஶயோகி- உத்பத்தியையும் விநாஶத்தையும் கொண்டது. 3. பூர்வகாலத்தில் - ப்ரதம ஸ்ருஷ்டியில். 4. அநந்யதாபாவம் - வேறுவிதமாக ஆகாமலிருக்கை; முன்போல வேயிருக்கை யென்றபடி. 5. ஆரப்தங்கள்-ஆனவை.

[1] 'இவற்றுக்கு ஆஶ்ரயம்' என்கிறவிடத்தில் குணங்களையும் சொல்விற்றே யாகிலும், 'இவைதன்னை ஆஶ்ரயமாகவுடையன்' என்கிற இடத்தில், குணங்களை யொழியச் சொல்லவேணும்: அக்குணங்களுக்கு [2] வ்யாப்யத்வம் சொல்லு மளவில், [3] ஆத்மாஶ்ரயமும் [4] அநவஸ்தையுமாகிற தோஷங்கள் வரு மாகையாலே. "தன்குணங்களிலே ஈஶ்வரன் வ்யாபிக்கும்போது குணவிஶிஷ்டனாயே வ்யாபிக்கவேணும்: நிர்க்குணமாய் வஸ்து இராமையாலே; அப்போது, வ்யாப்ய குணங்களே வ்யாபககுணங்களாய் வ்யாபககுணங்களே வ்யாப்யகுணங்களா யறுகையாலே, ஆத்மாஶ்ரயதோஷ முண்டாம்; அதுக்கு மேலே, தன்குணங்களிலே குணி வ்யாபிக்க வென்று புக்கால், ததாஶ்ரயமான குணங்களையும் குணி வ்யாபிக்கவேணும்; அந்தவ்யாபகனுடைய குணங்களையும், குணி வ்யாபிக்கவேணும். ஆகையாலே, அநவஸ்தாதுஸ்ஸ்தமாம்" என்று இதுதன்னை ஸுஸ்பஷ்டமாக ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தாரிறே.

இவ்வுபயஸமாஸத்தாலும் [5] பலிதாம்ஶத்தை அருளிச்செய்கிறார்

மூ. (கoo) இவையிரண்டாலும் பலித்தது - பரத்வ ஸௌலப்யங்கள்.

---

1. நாராயணன் என்பதற்கு - நாரங்களுக்கு ஆஶ்ரயம் என்ற தத்புருஷ ஸமாஸத்தில், நாரஶப்தார்த்தமாக ஜ்ஞாநஸௌஶீல்யம் முதலிய எம்பெருமானுடைய குணங்கள் வந்ததுபோல, நாரங்களை ஆஶ்ரயமாகவுடையவன் [அதாவது - நாரங்களுள் வ்யாபித்திருப்பவன்] என்ற பஹுவ்ரீஹிஸமாஸத்தில், நாரஶப்தார்த்தமாக எம்பெருமானுடைய குணங்களைத் தவிர்த்து மற்றவற்றையே கொள்ளவேணும்; அப்படிக்கொள்ளாவிட்டால் ஆத்மாஶ்ரயதோஷமும் அநவஸ்தாதோஷமும் வரு மென்றபடி. 2. வ்யாப்யத்வம் - ஆஶ்ரயமாக இருக்கை. 3. ஆத்மாஶ்ரயம்-தன்னுள் தானிருக்கை. குணவிஶிஷ்டனை எம்பெருமான் குணத்துக்குள் வ்யாபித்தா னென்றால், குணத்துக்குள் குணம் வ்யாபித்ததாக ஏற்படுதலால், ஆத்மாஶ்ரயம். 4. அநவஸ்தை-எல்லையின்மை; குணத்துக்குள் குணம் வ்யாபிப்பதை ஒத்துக்கொண்டால், வ்யாபித்த குணத்துக்குள்ளும் வேறொருகுணமும் அதற்குள் மற்றொன்றும் என்று இவ்வாறு வரும் ஆதலால், ஒருமுடிவு ஏற்படா தென்றபடி. 5. பலிதாம்சம் - விஷ்க்ருஷ்டமாக ஏற்பட்ட விஷயம்.

(வ்யா.) 'இவையிரண்டாலும்' என்று தொடங்கி. அதாவது – [1] 'நாரங்களுக்கு அயநம்', [2] 'நாரங்களை அயநமாக வுடையவன்' என்கிற இவை இரண்டாலும் பலித்த அர்த்தம் - தன்னை யொழிந்த ஸமஸ்த வஸ்துக்களுக்கும் தான் ஆதாரமாயிருக்கையாகிற பரத்வமும், இப்படிப் [3] பெரியனான தான் ஸகலசேதநாசேதநங்களிலும் தன்னை யமைத்துக்கொண்டு புக்கிருக்கையாகிற ஸௌலப்யமும் என்கை.

இன்னமும் ஒருப்ரகாரத்தாலே இந்த ஸமாஸத்வயபலிதங்களை அருளிச்செய்கிறார்

மூ.-(க0க) அந்தர்யாமித்வமும், உபாயத்வமும் உபேயத்வமு மாகவு மாம்.

(வ்யா.) [4] 'அந்தர்யாமித்வமும், உபாயத்வமும் உபேயத்வமுமாகவுமாம்' என்று. அதாவது - பஹுவ்ரீஹியும் தத்புருஷனுமாகிற உபயஸமாஸத்தாலும் பலித்தது, அந்தர்யாமிப்ராஹ்மணாதிகளிற் சொல்லுகிறபடியே அகிலசேதநாசேதநங்களிலும் [5] அந்தராத்மதயா அவஸ்திதனாய்க் கொண்டு [6] நியந்தாவாயிருக்கையாகிற அந்தர்யாமித்வமும், * "இண் கதௌ" [இண்-கதௌ] என்கிற தாதுவிலேயாதல் † "அய கதௌ" [அய-கதௌ] என்கிற தாதுவிலேயாதல் ஸித்தமான அயநபதத்தில் [7] கரணவ்யுத்பத்தியாலும் கர்மணிவ்யுத்பத்தி

---

1. நாரங்களுக்கு அயநம் என்பது - தத்புருஷஸமாஸ வாக்யார்த்தம்; இதனில், தன்னை யொழிந்த ஸமஸ்தவஸ்துக்களுக்கும் தான் ஆதாரமாயிருத்தல் சொல்லப்படுதலால், பரத்வம் வெளியாம். 2. பெரியனான தான் சேதநாசேதநங்களில் அவற்றிற்கு ஏற்கத் தன்னை யமைத்துக்கொண்டு புக்கிருத்தல் சொல்லப்படுதலால், ஸௌலப்யம் வெளியாம். 3. பெரியனான - விபுவான. 4. பஹுவ்ரீஹிஸமாஸத்தால், அந்தர்யாமித்வமும் - தத்புருஷஸமாஸத்தால் - உபாயத்வ உபயேத்வமும் வெளியாம். (உபாயம்-ப்ராபகம்; உபேயம்-பலம்.) 5. அந்தராத்மதயா அவஸ்திதன் - அந்தராத்மாவாக இருப்பவனென்றபடி. 6. நியந்தா-நியமிப்பவன். 7. 'இண்' என்ற தாதுவில் கரணவ்யுத்பத்தி - ஏதி அநேந இதி அயநம் என்பது; அய என்ற தாதுவில்-அயதே அநேந இதி அயநம் என்பது; இண் என்ற தாதுவில் கர்மணிவ்யுத்பத்தி - ஈயதே இதி அயநம் என்பது: அய என்ற தாதுவில் அயதே இதி அயநம்என்பது. கரணவ்யுத்பத்தியில் அயநஶப்தம் உபாயவாசி; கர்மணிவ்யுத்பத்தியில் உபேயவாசி.

* தாது பா-அதாதி- † தாது பா-ப்வாதி-

யாலும் ப்ரகாஶிதமான உபாயத்வமும் உபேயத்வமுமாகவுமா மென்கை. பஹுவ்ரீஹியோஜநை சொல்லுகிற விடத்தில் [1] யோக்யதாநுகுணமாக நாரஶப்தத்தைக் குணங்களையொழிந்த வஸ்துக்களுக்கு வாசகமாகக் கொண்டாற்போலே, தத்புருஷயோஜநையிலும் அயநஶப்தத்தை உபாய உபேய வாசியாகக் கொள்ளுமளவில் [2] யோக்யதாநுகுணமாக நாரஶப்தத்தை அசேதநங்களையொழிந்த சேதந வஸ்துக்களுக்கு வாசகமாகக்கொள்ளக்கடவது; (கூஅ) "நாரஇதி ஸர்வபும்ஸாம் ஸமூஹ: பரிகீயதே । கதிராலம்பநம் தஸ்ய தேந நாராயண: ஸ்ம்ருத:" [3]. ["நாரஸ்த்விதிஸர்வபும்ஸாம் ஸமூஹ: பரிகத்யதே। கதிராலம்பநம் தஸ்ய தேநநாராயணஸ்ஸ்ம்ருத:"] என்றும், (கூகூ) "நாரஶப்தேந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதே புதை: । தேஷாமயநபூதத்வாந் நாராயண இஹோச்யதே" ["நாரஶப்தேந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதேபுதை:। தேஷாமயநபூதத்வாந் நாராயணஇஹோச்யதே"] என்றும் இத்யாதிகளிலே இவ்வர்த்தஞ் சொல்லப்படாநின்றதிறே.

கர்மணிவ்யுத்பத்தி ஸித்தமான [4] ப்ராப்யத்வத்துக்கு ஸங்கோசமில்லாமையாலே ஸர்வப்ரகாரவிஶிஷ்டமாயிருக்கையாலும், பந்துலாபமும் ப்ராப்யமாயிருக்கையாலும், ஈஶ்வரனுடைய ஸர்வவித பந்துத்வமும் இப்பதத்திலே சொல்லும்படியை அருளிச்செய்கிறார்

மூ.-(கoஉ) * "எம்பிரா னெந்தை" என்கையாலே, ஈஶ்வரனே எல்லாவுறவுமுறையு மென்று சொல்லும்.

(வ்யா.) 'எம்பிரான்' என்று தொடங்கி. அதாவது — நாராயணஶப்தார்த்தத்தை யநுஸந்திக்கிற திருமங்கையாழ்வார் * "எம்பிரா னெந்தை யென்னுடைச்சுற்ற மெனக்கர செந்னுடைவாணாள்" என்கையாலே, ஈஶ்வரனே இவ்வாத்மாக்களுக்கு ஸர்வவிதபந்துவு மென்று இப்பதத்திலே சொல்லு மென்கை.

---

1. யோக்யதாநுகுணமாக-சரீரமாகக் கொள்வதற்குஏற்ப. 2. யோக்யதாநுகுணமாக-உபாய உபேயங்களாக அபேக்ஷிப்பதற்கு ஏற்ப. 3. அயநஶப்தத்தை உபாயவாசியாக வாயினும் உபேயவாசியாகவாயினும் கொண்டால், அப்போது சேதநாசேதநங்களை யெல்லாம் காட்டவல்ல நாரஶப்தத்தைச் சேதநமாத்ரவாசியாகக் கொள்ளவேணு மென்பதற்கு ப்ரமாணம் – 'நாரஸ்த்விதி' 'நாரஶப்தேந' என்கிற வசநங்கள். 4. ப்ராப்யம் – உபேயம்.

* பெ- தி. மொ-க-க-கூ.

'இப்படி பந்துபூதனைக் கொண்டு, இத்தலைக்கு அவன் செய்யுமது எது?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.-(௧௦௩) நாம் பிறர்க்கான அன்றும் அவன் நமக்காயிருக்கும்.

(வ்யா.) 'நாம் பிறர்க்கானவன்றும், அவன் நமக்கா யிருக்கும்' என்று. அதாவது - நாம் தன்னோடு ஒட்டற்றுப் பிறர்க்கு நல்லராயிருந்த காலத்திலும், அவன் நமக்கு நல்லனாயிருக்கு மென்கை.

'இப்படி நாம் அந்யபரரான அன்றும் நமக்கேயாயிருந்து அவன் செய்து போருமது தான் எது?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.-(௧௦௪) இராமடம் ஊட்டுவாரைப் போலே உள்ளே பதி கிடந்து ஸத்தையே பிடித்து நோக்கிக் கொண்டு போரும்.

(வ்யா.) 'இராமடம்' என்று தொடங்கி. அதாவது - [1] நேர்கொடு நேர் தங்கள்பக்கல் வந்து அபேக்ஷிதங்களை வாங்கி ஜீவியாதே துர்மாநத்தாலே பட்டினியே திரியுமவர்களையும் விடமாட்டாமையாலே அசலறியாதபடி [2] ராத்ரி மடத்திலே புஜிப்பிப்பாரைப்போலே 'தன் பக்கல் தலை சாயோம்'என்று இச்சேதநர் [3] ஸ்வாதந்த்ர்யம் அடித்துத் திரியாநிற்க, இவர்கள் கண்காணாதபடி அந்தராத்மாவாய்க்கொண்டு உள்ளே மறைந்திருந்து இவர்கள் ஸத்தையே தொடங்கி ரக்ஷித்துக்கொண்டு போரு மென்கை.

ஆக, இந்நாராயணபதத்தாலே [4] கைங்கர்யப்ரதிஸம்பந்தியான ஈஸ்வரன் படியை அருளிச்செய்தாராயிற்று.

இனி, இதில் [5] விபக்த்யம்ஸத்தாலே கைங்கர்யத்தைப் ப்ரார்த்திக்கிறபடியை அருளிச்செய்கிறார்

மூ.-(௧௦௫) 'ஆய' என்கிற இத்தால், "சென்றாற் குடையாம்" என்கிறபடியே எல்லா அடிமைகளும் செய்யவேணு மென்று அபேக்ஷிக்கிறது.

---

1. நேர்கொடுநேர்-எதிராக. 2. ராத்ரி மடத்திலே-இரவிலே சோறிடுகிற ஸத்ரத்திலே. 3. ஸ்வாதந்த்ர்யம் அடித்தல் - ஸ்வாதந்த்ர்யம் கொண்டாடுதல். 4. கைங்கர்யப்ரதிஸம்பந்தி - கைங்கர்யத்தை யேற்றுக்கொள்பவன். 5. விபக்த்யம்ஸத்தாலே-சதுர்த்தியாலே.

(வ்யா.) 'ஆய என்கிற இத்தால்' என்று தொடங்கி. அதாவது- 'ஆய' என்கிற இந்தச் சதுர்த்தியாலே * "சென்றால் குடையாம்" என்கிற பாட்டிற் சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வானைப் போலே ஸர்வவிதகைங்கர்யங்களும் செய்யவேணு மென்று அபேக்ஷிக்கிறது என்கை.

'நமஸ்ஸாலே தனக்கென்ன ஒன்றை விரும்புகைக்கு ப்ராப்தியில்லாத அத்யந்தபாரதந்த்ர்யம் சொல்லியிருக்க' இக்கைங்கர்யத்தைத் தான் விரும்பி அபேக்ஷிக்கை ஸம்பவியாதுஎன்று இருக்குமவர்கள் பண்ணும் ப்ரஸ்நத்தை அநுவதிக்கிறார்

மூ.-(௧௦௬) 'நமஸ்ஸாலே தன்னோடு உறவில்லையென்று வைத்துக் கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கக் கூடுமோ?' என்னில்,-

(வ்யா.) 'நமஸ்ஸாலே தன்னோடு உறவில்லையென்று வைத்துக் கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கக் கூடுமோவென்னில்' 1 என்று.

அதிக்கு உத்தரம் அருளிச்செய்கிறார்

மூ.-(௧௦௭) † "படியாய்க் கிடந்து உன்பவளவாய் காண்பேனே" என்கிறபடியே கைங்கர்யப்ரார்த்தனை வந்தேறி அன்று; ஸ்வரூபப்ரயுக்தம்.

(வ்யா.) † 'படியாய்க்கிடந்து' என்று தொடங்கி. 2. அதாவது - † "படியாய்க்கிடந்து உன்பவளவாய்காண்பேனே" என்று, அத்யந்த பாரதந்த்ர்யத்தோடே கைங்கர்யப்ரார்த்தனையையும் சொல்லுகிறபடி

---

1. நமஸ் ஸப்தம்-நாராயணாய என்பதோடு சேர்ந்து, மகாரத்திற்சொன்ன ஜ்ஞாத்ருத்வத்தால் கைங்கர்யத்திலும் வரும் மமகாரத்தை விலக்கு மென்று நமஸ் ஸப்தார்த்தப்ரகரணத்திற் சொல்லிவிட்டு, இங்கே, கைங்கர்யப்ரார்த்தனையைச் சதுர்த்தி காட்டு மென்பது பொருந்துமோ? என்று ஸங்கைக்குக் கருத்து. 2. கீழ்த்தோன்றிய ஸந்தேஹத்துக்கு உத்தரம்:— இங்கே சொல்லுகிற கைங்கர்ய ப்ரார்த்தனை-ஸ்வப்ரயோஜநத்தைச் சிறிதும் உத்தேசித்து வாராமல் ஸ்வஸேஷியின் முகவிகாஸத்தையே உத்தேசித்ததாய், அசித்வ்யாவ்ருத்தரூபமான ஸ்வ சைதந்யத்துக்கு எற்றதாய் ஸ்வதஃ இருப்பதொன்றாகையாலே தக்கதா மென்றபடி.

* முதல் திருவ- ௫௩ † பெருமாள் திரு ௪-௯.

யே, கைங்கர்ய ப்ரார்த்தனை - ஸ்வபோக்த்ருத்வரூப அஹங்காரப்ர யுக்தமாய்க்கொண்டு வந்தேறியானது அன்று, சேஷிக்கு அதிசய த்தை விளைத்தல்லது தான் தரியாதபடியான தன் ஸ்வரூபத்தைப் பற்றி வந்ததென்கை.

உக்தத்தை ஹேதுவாகக்கொண்டு சதுர்த்தியின் கைங்கர்ய ப்ரார்த்தநாப்ரகாசகத்வத்தை அருளிச்செய்கிறார்

மூ.-(௧௦௮) ஆகையால், * "வழுவிலா வடிமை செய்ய வேண்டும் நாம்" என்கிற ப்ரார்த்தனையைக் காட்டுகிறது.

(வ்யா.) 'ஆகையால்' என்று தொடங்கி. அதாவது - கைங்கர்ய ப்ரார்த்தனை வந்தேறி யன்றிக்கே, ஸ்வரூபப்ரயுக்த மாகையாலே, * "வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்" என்று, 'அடிமையில் ஒன்றும் நழுவாதபடி ஸகலகைங்கர்யங்களும் செய்யவேண்டும் நாம்' என்கிற ப்ரார்த்தனையை, இச்சதுர்த்தி ப்ரகாசிப்பிக்கிற தென்கை.

இனி, இந்தக்கைங்கர்யப்ரார்த்தனை இடைவிடாமல்நடக்கைக்கு உறுப்பான ப்ராப்யருசியுடையார்படியை அருளிச்செய்கிறார்

மூ.-(௧௦௯) "† கண்ணாரக்கண்டு கழிவதோர்காதலுற்றார்க்குமுண்டோ கண்கள் துஞ்சுதல்" என்கிறபடியே காண்பதற்கு முன்பு உறக்கமில்லை; கண்டால் "ஸதா பச்யந்தி" ஆகையாலே உறக்கமில்லை.

(வ்யா.) 'கண்ணாரக்கண்டு' என்று தொடங்கி. அதாவது - "† இமையோர்கள் குழாம், தொழுவதுஞ்சூழ்வதுஞ்செய் தொல்லை மாலைக் கண்ணாரக்கண்டு, கழிவதோர் காதலுற்றார்க்குமுண்டோ கண்கள் துஞ்சுதல்" என்று 'நித்யஸூரிகளுடைய திரளானது நிரந்தரம் அநுபவம் பண்ணுகிற ஸர்வேச்வரனைக் கண்கள் நிறையும்படி 1. கண்டொழியக் கழியாதபடியான காதலிலே நிலைநின்றவர்களுக்கும் கண்கள் உறங்குதலுண்டோ?' என்னுமாபோலே, விஷயத்தைக் காண்பதற்குமுன்பு ஜ்ஞாநஸங்கோசரூபமான உறக்கமில்லை; கண்ட

---

1. கண்டொழியக் கழியாத-கண்டாலல்லது நீங்காத.

* திருவாய் மொ. ௩-௩-௧. † திருவிரு-௯௭.

காலத்தில் (௪00) "ஸதாவஶ்யந்தி" [ஸதாபஸ்யந்தி] என்கிறபடியே ஸதா அநுபவம் பண்ணுகையாலே உறக்கமில்லை யென்கை.

இன்னமும் ஒருஹேதுவினாலே இவனுக்கு உறக்கமில்லாமையை அருளிச்செய்கிறார்

மூ -(௧௧௦) * "பழுதே பல பகலும்போயின" என்று இழந்தநாளுக்குக் கூப்பிடுகிறவனுக்கு உறங்கவிரகில்லை.

(வ்யா.) 'பழுதே' என்று தொடங்கி. அதாவது - * "செங்கணடலோதவண்ணரடி அரவணைமேற் கண்டு தொழுதேன், பலபகலும் பழுதே போயினவென்று அஞ்சி அழுதேன்" என்று, 'விஷயத்தைக் கண்டு அநுபவித்தவாறே இப்படி அநுபவிக்கைக்கு உடலான அநேககாலமெல்லாம் வ்யர்த்தமே போய்விட்டதே!' என்று இழந்த நாளை நினைத்து க்லேஶித்துக் கூப்பிடுகிறவனுக்கு மேலுள்ள நாளில் உறக்கம் வர வழியில்லை யென்கை.

'இன்னமும் இவ்விஷயத்தில் அறிவுபிறந்தார்க்கு மறக்கப்போகாது' என்னுமத்தை 1. இசைவிக்கிறார்

மூ.-(௧௧௧) "† அன்று நான் பிறந்திலேன் பிறந்த பின் மறந்திலேன்" என்னநின்றார்களிறே.

(வ்யா.) 'அன்று நான்' என்று தொடங்கி. அதாவது - அவன் என்னைப் பெறுகைக்காகத் திருப்பதிகளிலே நிற்பது இருப்பது கிடப்பதாகாநிற்க, அக்காலத்தில் நான் ஜ்ஞாநலாபரூபமான ஜந்மத்தையுடையனாகப் பெற்றிலேன்; அந்தஜந்மமுண்டான பின்பு, அவனை ஒருகாலும் மறந்திலேன்' என்று சொல்லா நின்றார்களிறே யென்கை. ஆக, ப்ராப்யவைலக்ஷண்யஜ்ஞாநம் பிறந்தார் 2. படி இதுவாகையாலே, இந்தக்கைங்கர்யப்ரார்த்தனை இடைவிடாமல் நடக்கும் என்று கருத்து.

இனி, இந்தக்கைங்கர்யத்துக்கு தேஶகாலநியமமில்லாமையை அருளிச்செய்கிறார்

---

1. இசைவிக்கிறார் - ப்ரமாணத்தாலே சம்மதிப்படுத்துகிறார். 2. படி - தன்மை.

* முதல் திருவந்-௬௫. † திருச்சந்த-௬௪.

ஸூ-(ககஉ) இவ்வடிமைதான் "*ஒழிவில்காலமெல்லா முடனாய்மன்னி" என்கிறபடியே ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் அநுவர்த்திக்கும்.

(வ்யா.) 'இவ்வடிமைதான்' என்று தொடங்கி. அதாவது-இவ்வாத்மாவினுடைய ஸ்வரூபாநுரூபபுருஷார்த்தமான இந்தக் கைங்கர்யந்தான் * "ஒழிவில்காலமெல்லா முடனாய்மன்னி" என்று—'ஒழிவில்லாத காலமெல்லாம் ஸர்வதேஶத்திலும் உடனாய் ஸர்வாவஸ்தையிலும் பிரியாதுநின்று' என்கிறபடியே ஸர்வதேஶத்திலும் ஸர்வகாலத்திலும் ஸர்வாவஸ்தையிலும் நடந்துசெல்லும் என்கை.

பார்யைக்கு மங்களஸூத்ரதாரணம் பர்த்தாவுக்கு அநந்யார்ஹை யென்று காட்டுமாபோலே, திருமந்த்ரதாரணம் சேதநர்க்கு பகவதநந்யார்ஹத்வப்ரகாஶகம் என்னுமிடந் தோற்ற, இத்தை ஒரு மங்களஸூத்ரமாக நிரூபித்து அருளிச்செய்கிறார்

ஸூ.-(ககங) எட்டிழையாய் மூன்றுசரடா யிருப்பதொரு மங்களஸூத்ரம்போலே திருமந்த்ரம்.

(வ்யா.) 'எட்டிழையாய்' என்று தொடங்கி. அதாவது—பதினாறிழையாய் இரண்டுசரடா யிருக்கும் லௌகிகமான மங்களஸூத்ரம் போலன்றிக்கே, எட்டிழையாய் மூன்றுசரடாயிருப்பதொரு மங்களஸூத்ரம்போலே, எட்டுத்திருவக்ஷரமாய் மூன்றுபதமா யிருக்கிற இத்திருமந்த்ரமென்கை.

'இப்படி நிரூபித்துச்சொன்ன இத்தால் எவ்வர்த்தம் சொல்லுகிறது?' என்ன, அருளிச்செய்கிறார்

ஸூ.-(ககச) இத்தால், ஈஶ்வரன் ஆத்மாக்களுக்குப் பதியாய்நின்று ரக்ஷிக்கும் என்கிறது.

(வ்யா.) 'இத்தால்' என்று தொடங்கி. அதாவது- இத்தை மங்களஸூத்ரமாகச் சொன்ன இத்தால், ஈஶ்வரன் [1] இத்தோடு அந்வயமுடைய ஆத்மாக்களுக்குப் பதியாய் நின்றுகொண்டு ரக்ஷிக்குமென்று சொல்லுகிற தென்கை.

---

1. இத்தோடு - அந்வயமுடைய இந்தத்திருமந்த்ரத்தோடு ஆசார்யோபதேசமுகத்தாலே ஸம்பந்த முடைய.

* திருவாய்மொ - ௩-௩-௧.

இனி, இம்மந்த்ரத்தால் ப்ரதிபாதித்த அர்த்தத்தை ஸங்க்ரஹித்துச்சொல்லி இத்தை நிகமித்தருளுகிறார்

மூ.-(கக௫) ஆக, 'திருமந்த்ரத்தால் எம்பெருமானுக்கே உரியேனான நான் எனக்கு உரியனன்றிக்கேயொழியவேணும்; ஸர்வஶேஷியான நாராயணனுக்கே எல்லா வடிமைகளும் செய்யப்பெறுவேனாக வேணும்' என்றதாயிற்று.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்.

திருமந்த்ரப்ரகரணம் முற்றிற்று.

(வ்யா.) 'ஆக, திருமந்த்ரத்தால்' என்று தொடங்கி. 'ஆக' என்றது-கீழ் பரக்க அருளிச்செய்த எல்லாவற்றையும் தொகுத்து அருளிச்செய்கிறாரென்னுமிடந் தோற்ற. 'எம்பெருமானுக்கேயுரியேனான நான்':-இதில், 'எம்பெருமானுக்கு' என்று சதுர்த்யந்தமான ப்ரதமாக்ஷரத்தில் அர்த்தத்தையும், அவதாரணத்தாலே மத்யமாக்ஷரத்தின் அர்த்தத்தையும், 'உரியேனான நான்' என்று த்ருதீயாக்ஷரத்தில் அர்த்தத்தையும் சொல்லுகையாலே, ப்ரதமபதார்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி. 'எனக்கு உரியனன்றிக்கே யொழியவேணும்':-இதில், 'எனக்குரியன்' என்று ஷஷ்ட்யந்தமான மகாரார்த்தத்தையும், 'அன்றிக்கேயொழிய' என்கையாலே நகாரார்த்தத்தையும், 'வேணும்' என்கையாலே இவ்வர்த்தம் சேதநனுக்கு ப்ரார்த்தநீயமென்னுமத்தையும் ப்ரதிபாதிக்கையாலே, மத்யமபதார்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி. 'ஸர்வஶேஷியான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப்பெறுவேனாகவேணும்':-இதில், 'ஸர்வஶேஷியான நாராயணனுக்கே' என்று கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியையும் கைங்கர்யப்ரார்த்தநாப்ரகாஶிகையான சதுர்த்தியையும், 'எல்லா அடிமைகளும் செய்யப்பெறுவேனாக வேணும்' என்று கைங்கர்யப்ரார்த்தநாப்ரகாரத்தையும் சொல்லுகையாலே, த்ருதீயபதார்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி. 'என்றதாயிற்று' என்றது-என்று சொல்லிற்றாயிற்றென்கை.

விஸ்தரேண அருளிச்செய்தத்தை மீளவும் இப்படி ஸங்க்ரஹித்து அருளிச்செய்தது - இத்திருமந்த்ரார்த்தத்தை எல்லாரும் அறிந்து அநுஸந்திக்கைக்காக. ஆகையாலே, எல்லார்க்கும் இவ்வர்த்தம் எப்போதும் அநுஸந்தேயம்.

திருமந்த்ரப்ரகரணவ்யாக்யாநம் முற்றியது.

சீயர் திருவடிகளே சரணம்.

முமுக்ஷுப்படி

த்வயப்ரகரணம்

வ்யாக்யாந அவதாரிகை.

ப்ரதமரஹஸ்யமான திருமந்த்ரத்தினுடைய அர்த்தத்தை அருளிச்செய்த அநந்தரம், அதில் மத்யமபதத்தாலும் த்ருதீய பதத்தாலும் ப்ரதிபாதிக்கப்பட்ட உபாயோபேயங்களை 1. விஶதமாக ப்ரதிபாதியாநின்றுள்ள த்வயத்தினுடைய அர்த்தத்தை அருளிச்செய்கிறார்.

'முன்பு அருளிச்செய்த 2. மூன்றுப்ரபந்தங்களிலும் 3. திருமந்த்ராநந்தரம் சரமஶ்லோகத்தை அருளிச்செய்து பின்பு த்வயத்தை அருளிச்செய்தவர், இப்போது த்வயத்தை முந்துற அருளிச்செய்வான் என்?' என்னில்,—இரண்டு ப்ரகாரமும் அருளிச்செய்யலா யிருக்கையாலே. ஆச்சான்பிள்ளை 4. சீயர் முதலானோரும், இந்தப்ரகாரமிறே அருளிச்செய்தது.

'இவ்விரண்டு ப்ரகாரந்தனக்கும் கருத்து என்?'—என்னில், சரமஶ்லோகம்முன்னாக த்வயத்தைச்சொல்லுகிறது 5 வித்யநுஷ்டாந ரூபங்களாயிருக்கையாலே விதிமுன்னாக அநுஷ்டாநத்தைச் சொல்லுகை ப்ராப்தமாயிருக்கையாலும், 6. திருமந்த்ரம் ப்ராப்யபரமாய் சரமஶ்லோகம் ப்ராபகபரமாய் த்வயம் உபயத்தினுடையவும் அநுஷ்டாந

---

1. திருமந்திரத்தில் மத்தயம பதமான நமஃ என்பது, அர்த்தபலத்தாலே உபாயத்தைத் தெரிவிக்கும். திருமந்த்ரத்தின் விவரணமான இந்தத்வயத்தில் பூர்வவாக்யத்தில் 'ஸ்ரீமந்நாராயண' என்கையாலே, அந்த உபாயம் ஸ்ரீவிஶிஷ்டமென்று ஶாப்தமாகத் தெரிவிக்கு மென்க. இங்ஙனமே உபேயம் ஸ்ரீவிஶிஷ்டமென்பதும் உத்தர வாக்யத்தில் 'ஸ்ரீமதே நாராயணாய' என்று இருத்தலால், விசதமாம். 2. மூன்று ப்ரபந்தங்கள்—ஸ்ரியஃபதிப்படி, யாத்ருச்சிகப்படி, பரந்தபடி என்பன. 3. திருமந்த்ராநந்தரம்-திருமந்த்ர அர்த்தத்தை யருளிச்செய்த வநந்தரம்: 'சரமஶ்லோகத்தை' 'த்வயத்தை' என்பவற்றிற்கும் இப்படியே பொருள் காண்க. 4. சீயர்-வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயர். 5. சரமஶ்லோகத்தில் 'ஶரணம் வ்ரஜ' என்று விதிக்கையாலும், த்வயத்தில் 'ஶரணம் ப்ரபத்யே' என்று அநுஷ்டாநத்தைச் சொல்லுகையாலும் 'சரமஶ்லோகம் விதி த்வயம் அநுஷ்டாந ரூபமான தென்பதும் ஏற்படும். 6. ஸ்வரூபத்தின் யாதாத்ம்யஜ்ஞாநம் பிறந்தவனுக்கு எம்பெருமானுடைய ஶேஷித்வ ஶரண்யத்வ ப்ராப்யத்வங்கள் நித்ய ப்ரார்த்தநீயங்களாகையாலே, அவற்றைத் தெரிவிக்குந் திருமந்தரம் ப்ராப்யபரமாம்.

ப்ரதிபாதகமாயிருக்கையாலும். 1. த்வயம் முன்னாக சரமஶ்லோக த்தைச்சொல்லுகிறது - திருமந்த்ரத்தில் மத்யமத்ருதீயபதங்களுக்கு வாக்யத்வயம் விவரணமாய், அது தனக்குச் சரமஶ்லோகத்தில் அர்த்த த்வயம் விவரணமாயிருக்கும் ஆகாரத்தாலே. 2. ஆனபின்பு, இரண்டு ப்ரகாரமும் அநுஸந்திக்கத் தட்டில்லை. அதில் ஒருப்ரகாரத்தை மூன்று ப்ரபந்தத்திலும் அருளிச்செய்தவராகையாலே, மற்றைப்ரகா ரத்தையும் அருளிச்செய்யவேணுமென்று திருவுள்ளம்பற்றி, திரு மந்த்ரார்த்தம் அருளிச்செய்த அநந்தரம் த்வயார்த்தத்தை அருளிச் செய்கிறார்.

அவதாரிகை முற்றிற்று.

அதில் ப்ரதமத்திலே வைஷ்ணவனாயிருப்பானொருவனுக்கு ஸ்வாதிகாரார்த்தமாக அவஶ்யாபேக்ஷிதமாயுள்ளவற்றை, *ஸங்க்ரஹ மாக அருளிச்செய்கிறார்

மூ - (ககசு) புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்ச மென்று பற்றுகையும்,

(வ்யா.) 'புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விடுகை' என்று தொடங்கி ஒரு சூர்ணையாலே. புறம்புண்டான பற்

1. த்வயத்துக்கு முன்னாகச் சரமஶ்லோகத்தைச் சொல்லுவதற்கு இரண்டு காரணங்கள் - விதிரூபமான சரமஶ்லோகத்தைச் சொல்லி, அதன் பின்பு அநுஷ்டாநரூபமான த்வயத்தைச் சொல்லுவதென்பது ஒன்று; ப்ராப்ய பர மான திருமந்த்ரத்தைச்சொல்லி, ப்ராபகபரமான சரமஶ்லோகத்தை அதன் பின்பு சொல்லி, அவ்விரண்டையும் சொல்வதான த்வயத்தை அதன் பின்பு வைத்த லென்பது - மற்றொன்று. 2. விவரணவிவரணிபாவத்தைப் பற்றித் திருமந்த்ரத்தின் பின் த்வயமும் அதன்பின் சரமஶ்லோகமும் அருளிச் செய்வது.

றுக்களையுடைய வாஸனையோடே விடுகை ஆவது - (௧௦௧) "𑌪𑌿𑌤𑌰𑌂 𑌮𑌾𑌤𑌰𑌂 𑌦𑌾𑌰𑌾𑌨𑍍" [பிதரம் மாதரம் தாராந்] இத்யாதிப்படியே, 1. பாஹ்யவிஷய ஸங்கங்களையடைய மீறுவவிடாதபடி ஸவாஸநமாக விடுகை. 'எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகை' ஆவது-வேறொன்று 2. தஞ்சமென்கிற நினைவு கலசாதபடி, நிருபாதிகரக்ஷகனான ஸர்வேஶ்வரனையே தஞ்சமாக ஸ்வீகரிக்கை. இவ்விரண்டு வாக்யத்தாலும், சரமஶ்லோகத்தில் பூர்வார்த்தத்தில் அர்த்தத்தைச் சொல்லுகிறதாகவுமாம். எங்ஙனேயென்னில்? 'புறம்புண்டான பற்றுக்களையடைய' என்று-'ஸர்வதர்மாந்' என்கிற பதத்தில் அர்த்தத்தையும், 'வாஸனையோடே விடுகையும்' என்று - 'பரித்யஜ்ய' என்கிற பதத்தில் அர்த்தத்தையும், 'எம்பெருமானை' என்று – 'மாம்' என்கிற பதத்தில் அர்த்தத்தையும் 'ஏ' என்று ஏவகாரத்தாலே ஏக பதத்தில் அர்த்தத்தையும், 'தஞ்சம்' என்கையாலே 'ஶரண'பதத்தில் அர்த்தத்தையும், 'பற்றுகையும்' என்று 'வ்ரஜ' பதத்தில் அர்த்தத்தையும் அடைவே சொல்லுகையாலே.

௫.-பேறு தப்பாதென்று துணிந்திருக்கையும், பேற்றுக்கு த்வரிக்கையும்.

(வ்யா.) பேறு தப்பாதென்று துணிந்திருக்கையாவது - 3. உபாய பல்குத்வமும் உத்தேஶ்ய துர்ல்லபத்வமும் 4. ஸ்வக்ருததோஷபூயஸ்த்வமும் அடியாக வரும் 5. ஶங்காத்ரயமுமின்றிக்கே, பலம் தப்பாமல் ஸித்திக்குமென்று விஶ்வஸித்திருக்கை. பேற்றுக்குத்வரிக்கை யாவது- இப்படி விஶ்வஸித்து 'பேறு ஸித்தித்தபோது காண்கிறோம்' என்று இருக்கையன்றிக்கே, * "மாகவைகுந்தங் காண்பதற்கென் மனமேக

1. பாஹ்ய விஷயஸங்கங்கள்—எம்பெருமானைத்தவிர்த்து வேறான விஷயங்களிற்பற்றுகள். அடைய-எல்லாவற்றையும். மறுவலிடாதபடி - விட்டவற்றில் மறுபடியும் ஸம்பந்தமுண்டாகாதபடி 2. தஞ்சம் - உபாயம். 3. உபாய பல்குத்வம் - உபாயம் இலேசானதாக இருக்கை. 4. ஸ்வக்ருததோஷபூயஸ்த்வம் - தான் செய்த குற்றம் மிகுதியாக இருக்கை. 5. சரம ஶ்லோகத்தில் 'வ்ரஜ' என்று விதிக்கையாலே, அவனை ஶரணமாக வரிக்கையாகிற இந்த எண்ணமே உபாயமாமோ என்று ஒரு சந்தேகம் ஜநிப்பதை, இங்குள்ள ஏக பதம் 'இவ்வெண்ணம் உபாயமாகாது, ஸர்வ ஶக்தனான அவ்வெம்பெருமானே உபாயமென்று தெரிவித்தலால், உபாய பல்குத்வம் முதலிய ஶங்கைகள் ஒழியுமென்க.

* திருவாய்-௯-௩-௭ ·

மெண்ணும்'' * ''தாவி வையங்கொண்ட தடந்தாமரைகட்கே, கூவிக் கொள்ளுங்கால மின்னங்குறுகாதோ''என்கிறபடியே, 1. க்ரமப்ராப்தி பற்றுமற் பதறுகை. ஆக, 2. இவை இரண்டாலும்—3. உபாய உபேய அதிகார அபேக்ஷிதங்களான மஹாவிஸ்வாஸத்தையும், ப்ராப்ய த்வரையையும் சொல்லுகிறது.

மூ - இருக்கும் நாள் உகந்தருளின நிலங்களிலே ப்ரவணனுக்குணானுபவ கைங்கர்யங்களே பொழுது போக்காகையும், இப்படி யிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஏற்றமறிந்து உகந்திருக்கையும்,

(வ்யா.) இருக்கும்நாள் உகந்தருளின நிலங்களிலே ப்ரவணனுக்குணானுபவகைங்கர்யங்களே பொழுதுபோக்காகை யாவது-பரமபதத்திலேபோய் ஸ்ரீமவதநுபவகைங்கர்யங்களைப் பண்ணுகையாகிற பேற்றில் த்வரை நடவாநிற்கச்செய்தேயும், இஸ்ஸரீரத்தோடே இருக்கும் நாள் † ''தானுகந்தவூர்'' என்கிறபடியே ஸர்வேஸ்வரன் உகந்து வர்த்திக்கிற திவ்யதேசங்களிலே ‡''கண்டியூரரங்கம் மெய்யங்கச்சி பேர்மல்லை'' என்று 4. மண்டுகையாகிற ப்ராவண்யத்தையுடையனாய், அவ்வோதிவ்யதேஸங்களிலே நிற்கிறவனுடைய கல்யாணகுணானுபவமும், அது அடியாகக் கரணத்ரயத்தாலும் அவன் விஷயத்திற் பண்ணுங் கைங்கர்யமுமே 5. காலக்ஷேபவிஷயமாம்படி யிருக்கை. 'இப்படியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களேற்றம் அறிந்து உகந்திருக்கை யாவது' - 6. கீழ்ச்சொன்ன இவ்வாசாரங்களெல்லா முடையராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால், 7. 'இந்தளத்திலே தாமரை பூத்தாற்போலே இந்தவிபூதியிலே இங்ஙனேயும் சிலருண்டாவதே!' என்று அவர்கள் வைபவத்தை யறிந்து அவர்களளவில் ப்ரீதியுக்தனு

---

1. க்ரமப்ராப்தி பற்றுதல் - க்ரமத்திலே மெல்லப் புருஷார்த்தத்தைப் பெறுவோமென்ற கருத்துப் பொருந்தியிருத்தல். 2. இவை இரண்டாலும் - பேறு தப்பாதென்று துணிந்திருக்கையும் பேற்றுக்குத்வரிக்கையும் என்கிற இரண்டு வாக்யத்தாலும். 3. உபாய அதிகார அபேக்ஷிதம் - மஹாவிஸ்வாஸம்: உபேய அதிகார அபேக்ஷிதம் - ப்ராப்யத்வரை. 4. மண்டுகை - பற்றுக்கொள்ளுகை. 5. காலக்ஷேபம் - போதுபோக்கு. 6. கீழ்ச்சொன்ன - 'புறம்புண்டான' என்று தொடங்கி இதுவரையிற் சொல்லிய. 7. இந்தளம்-கும்மட்டி.

* திருவாய்-சு-கூ-கூ. † திருநெ-சு. ‡ திருக்குறுந்-கக.

யிருக்கை. கீழ்ச்சொன்னவை யெல்லாம் உண்டானாலும் உண்டாக அரிதாயிருப்ப தொன்றிறே இது.

மூ.-திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் நியதனாகையும், ஆசார்யப்ரேமம் கனத்திருக்கையும், ஆசார்யன்பக்கலிலும் எம்பெருமான்பக்கலிலும் க்ருதஜ்ஞனாய்ப் போருகையும்,

(வ்யா.) திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் நியதனாகை யாவது - மந்த்ராந்தரங்களினுடைய அருகே மறந்தும் போகாதே த்யாஜ்ய உபாதேயங்களைத் தெளிய அறிவிக்குந் திருமந்த்ரத்திலும் அதின் அர்த்தத்துக்கு விவரணமான த்வயத்திலும் நிஷ்டனாயிருக்கை.

ஆசார்யப்ரேமம் கனத்திருக்கை யாவது - கீழ்ச்சொன்ன ஆகாரத்தையெல்லாம் உபதேஶத்தாலே தனக்கு உண்டாக்கின ஆசார்ய விஷயத்தில் (௧௦௨) "𑌯𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑍇 𑌪𑌰𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 𑌯𑌥𑌾 𑌦𑍇𑌵𑍇 𑌤𑌥𑌾 𑌗𑍁𑌰𑍌" [யஸ்ய தேவே பராபக்திர் யதா தேவே ததா குரௌ] என்கிறபடியே ப்ரேமம் அதிஶயித்திருக்கை.

ஆசார்யன்பக்கலிலும் எம்பெருமான்பக்கலிலும் க்ருதஜ்ஞனாய்ப் போருகையாவது - நித்யஸம்ஸாரியான தன்னை நித்யஸூரிகள் பேற்றுக்கு அர்ஹனாம்படி இரும்பைப் பொன்னாக்குவாரைப்போலே திருத்தின ஆசார்யன்பக்கலிலும், 1. அத்வேஷாதிகளை விளைத்துக் கொண்டுவந்து ஆசார்யவிஷயத்தோடே சேர்த்த எம்பெருமான் பக்கலிலும் உபகாரஸ்ம்ருதியுடையனாய்ப் போருகை.

மூ.-ஜ்ஞாநமும் விரக்தியும் ஶாந்தியும் உடையனாயிருக்கும் பரமஸாத்விகரோடே ஸஹவாஸம் பண்ணுகையும், வைஷ்ணவாதிகாரிக்கு அவஶ்யாபேக்ஷிதம்.

(வ்யா.) ஜ்ஞாநமும் விரக்தியும் ஶாந்தியு முடையனாயிருக்கும் பரம ஸாத்விகரோடே ஸஹவாஸம்பண்ணுகையாவது-தான் கலங்கினாலும் கலங்காமல் நோக்குகைக்கு உறுப்பாகவும், கீழ்ச்சொன்ன ஆகா

1. எம்பெருமான் அத்வேஷாதிகளை விளைக்கும் ப்ரகாரத்தை ஸ்ரீவசநபூஷணத்திலே த்ரிபாத்ஷ பூதியிலே என்று தொடங்கிவிஸ்தரேண அருளிச்செய்திருத்தல் காண்க.

ரங்கள் தனக்கு 1. வர்த்திக்கைக்கு உறுப்பாகவும் 2. தத்வ யாதாத்ம்ய ஜ்ஞாநமும் அப்ராப்தவிஷயவிரக்தியும் இவைதானிரண்டும் நமக்குண்டென்று இறுமாப்பற்றிருக்கையாகிற ஶாந்தியும் உடையனாயிருக்கும் பரமஸத்த்வநிஷ்டனாயிருப்பான் ஒருபாகவதனோடே கூட வஸித்துப்போருகை.

'வைஷ்ணவாதிகாரிக்கு அவஶ்யாபேக்ஷிதம்' என்றது - இவையித்தனையும் வைஷ்ணவனென்றிருப்பான் ஒரு அதிகாரிக்கு அவஶ்யம் உண்டாகவேணு மென்கை.

இப்படியிருக்கும் இவனுக்கு அநுஸந்தாந விஷயம் வகுத்து அருளிச்செய்கிறார் மேல்

மூ.-(கக௭) இந்த அதிகாரிக்கு ரஹஸ்யத்ரயமும் அநுஸந்தேயம்.

(வ்யா.) 'இந்த' என்று தொடங்கி. அதாவது—கீழ்ச்சொன்ன ஆகாரங்களையுடையனாயிருக்கும் இவ்வதிகாரிக்கு, அந்த ஜ்ஞாநாநுஷ்டாநங்களுக்கு வர்த்தகமான ரஹஸ்யத்ரயமும் அநுஸந்தாந விஷயமாகவேணு மென்கை.

இனி, த்வயத்திற் சொல்லுகிற அர்த்தத்தின் 3. வீறுடைமையை யறிவிக்கைக்காக, ஶாஸ்த்ரம் திருமந்த்ரம் சரமஶ்லோகம் இவற்றிற் சொல்லுகிற ப்ரகாரங்களை அருளிச் செய்துகொண்டுசென்று, பின்னை அதுதன்னை அருளிச்செய்கிறார்

மூ.-(கக௮) எல்லாப்ரமாணங்களிலும் தேகத்தாலே பேறென்கிறது; திருமந்த்ரத்தில் ஆத்மாவாலே பேறென்கிறது; சரமஶ்லோகத்தில் ஈஶ்வரனாலே பேறென்கிறது; த்வயத்தில் பெரியபிராட்டியாலே பேறென்கிறது.

---

1. வர்த்திக்கை - வ்ருத்தியாகை. 2. தத்வ யாதாத்ம்யஜ்ஞாநம் - தத்வ விஷயத்தில் உண்மையான அறிவு. 3. வீறுடைமை - வேறொன்றுக்கு இல்லாத மேன்மையையுடையதாதல்.

(வ்யா.) 'எல்லா ப்ரமாணங்களிலும்' என்று தொடங்கி. அதாவது - சேதநனுடைய 1. விஶிஷ்டவேஷத்திலே நோக்கான ஸகல ஶாஸ்த்ரங்களிலும், ஸாதநாநுஷ்டாநயோக்யமான தேஹத்தாலே இவனுக்குப் புருஷார்த்தலாபம் என்கிறது. 2. நிஷ்க்ருஷ்டவேஷத்திலே நோக்கான திருமந்த்ரத்தில், இவன் ஸ்வரக்ஷணத்தில் நின்றும் கைவாங்கினுலொழிய ஈஶ்வரனுடைய ரக்ஷகத்வம் ஜீவியாமையாலே, தத்ப்ரவ்ருத்திவிரோதி யான ஸ்வப்ரவ்ருத்தியை விட்டிருக்கும் ஆத்மாவாலே புருஷார்த்தலாபம் என்கிறது. ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்திலே நோக்கான சரமஶ்லோகத்தில், இவனுடைய ஸ்வீகாரமும் மிகையாம்படி, தானே கைக்கொண்டு, ப்ராப்திப்ரதிபந்தக ஸகல பாபங்களையும் தள்ளிப்போகட்டு, தன்திருவடிகளிலே சேர்த்துக் கொள்ளும் ஈஶ்வரனாலே புருஷார்த்தலாபம் என்கிறது. ஈஶ்வரனுடைய லக்ஷ்மீவிஶிஷ்ட வேஷத்திலே நோக்கான த்வயத்தில், விஶேஷணபூதையான பெரியபிராட்டியாராலே புருஷார்த்தலாபமென்கிறதென்கை.

'உபாயம் ஈஶ்வரனுயிருக்க, இவளாலே பேற்கையாவதென்?' என்கிற ஶங்கையில் அருளிச்செய்கிறார்

ஸூ.-(௧௧௯) **பெரியபிராட்டியாராலே பேறுகையாவது- இவள் புருஷகாரமாணு லல்லது ஈஶ்வரன் கார்யஞ் செய்யானென்கை.**

(வ்யா.) 'பெரிய பிராட்டியாராலே' என்று தொடங்கி. அதாவது - 3. இஷ்டாநிஷ்ட ப்ராப்திபரிஹாரங்கள் இரண்டும் பண்ணுவான் ஈஶ்வரனேயா யிருக்கப் பெரியபிராட்டியாராலே இவனுக்குப் பேறுகை ஆகிறது, இவனுடைய அபராதத்தைப் பாராதே ரக்ஷிக்கும்படி இவள் புருஷகார மானுல் ஒழிய, ஈஶ்வரன் இவன்கார்யஞ்செய்யான் என்றபடி என்கை.

கீழ், ஸாமாந்யத்திலே வைஷ்ணவாதிகாரிக்கு அபேக்ஷிதங்களிறே சொல்லிற்று ; விஶேஷித்து த்வயத்துக்கு அதிகாரியாமவனுக்கு அபேக்ஷிதத்தை அருளிச்செய்கிறார்

---

1. விஶிஷ்டவேஷம் - ஶரீரத்தோடு கூடியுள்ளநிலை. 2. சேதநனுடைய நிஷ்க்ருஷ்ட வேஷம்-ஶேஷத்வ பாரதந்த்ர்யங்கள். 3. இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரங்கள் - இஷ்டப்ராப்தி அநிஷ்ட பரிஹாரம்.

மூ.-(௧௨௦) த்வயத்துக்கு அதிகாரி-ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமும் உடையவன்.

(வ்யா.) 'த்வயத்துக்கு' என்று தொடங்கி. அதாவது—ஸித்தோபாயவரண ப்ரதிபாதகமான த்வயத்துக்கு அதிகாரி (௧௦௫) "ஆகிஞ்சநோऽகதி:, த்வமேவோபாயபூதோ மே பவ" [அகிஞ்சநோகதி: த்வமேவோபாய பூதோமேபவ] (௧௦௪) "ஆகிஞ்சநோऽநந்யகதிஶ்ஶரண்ய" [அகிஞ்சநோநந்யகதிஶ்ஶரண்ய] என்றும், * "புகலொன்றில்லா அடியேன்" என்றும் சொல்லுகிறபடியே 1. ஆகிஞ்சந்யமும் 2. அநந்யகதித்வமும் ஆகிற இரண்டும் உடையவன் என்கை.

'இவையிரண்டின் வேஷமுந்தான் எங்ஙனே'? என்ன, அருளிச் செய்கிறார்

மூ.—(௧௨௧) இவை இரண்டும் ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னோம்.

(வ்யா.)'இவையிரண்டும்' என்று தொடங்கி. அதாவது—உபாயாந்தர ராஹித்யமாகிற ஆகிஞ்சந்யத்தின் வேஷமும், ரக்ஷகாந்தரராஹித்ய மாகிற அநந்யகதித்வத்தின் வேஷமும் ப்ரபந்நபரித்ராணமாகிற ப்ரபந்தத்திலே ஸுஸ்பஷ்டமாகச் சொன்னோம், அதிலே கண்டு கொள்வது என்கை.

இனி த்வயத்துக்கு வாக்யார்த்தம் அருளிச்செய்கிறார்

மூ.—(௧௨௨) இதில் முற்கூற்றால், பெரிய பிராட்டியாரை முன்னிட்டு ஈஶ்வரன் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது; பிற்கூற்றால், அச்சேர்த்தியிலே அடிமையிரக்கிறது.

(வ்யா.) 'இதில் முற்கூற்றால்' என்று தொடங்கி. அதாவது - இந்தத்வயத்தில் பூர்வகண்டத்தாலே 'ஸ்ரீமத்' என்று பெரியபிராட்டி

---

1. ஆகிஞ்சந்யம் - உபாயாந்தரம் இல்லாமலிருக்கை. 2. அநந்ய கதித்வம் - ரக்ஷகாந்தர மில்லாதிருக்கை.

* திருவாய் ௬-௰-௰.

யாரை முன்னிட்டு, ‘நாராயணசரணௌ’ என்று ஈஸ்வரன் திருவடிகளை ‘ஶரணம் ப்ரபத்யே’ என்று உபாயமாகப் பற்றுகிறது. உத்தரகண்டத்தாலே ‘ஸ்ரீமதே’ என்று பெரியபிராட்டியாரும் அவனுமான சேர்த்தியிலே, ‘நாராயணாய’ என்கிற சதுர்த்தியாலே கைங்கர்யத்தை அர்த்திக்கிறது என்கை. ‘நமஸ்ஸு’ கைங்கர்ய விரோதி நிவ்ருத்தி ப்ரதிபாதகமாகையாலே, அடிமையை இரக்கிறது என்ற இதிலே அந்தர்ப்பூதம்.

இனி ப்ரதிபதம் அர்த்தம் அருளிச்செய்வதாகத் திருவுள்ளம் பற்றி, ஸ்ரீமத்பதார்த்தம் அருளிச்செய்ய உபக்ரமிக்கிறார்

மூ.—(க௨௩) ஸ்ரீ என்று பெரிய பிராட்டியார்க்குத் திருநாமம்.

(வ்யா.)—‘ஸ்ரீ என்று பெரியபிராட்டியாருக்குத் திருநாமம்’ என்று. ஸ்ரீஶப்தம் ஸம்பதாதிகளுக்கும் வாசகமாக லோகத்திலே 1. நடந்துபோரக் காண்கையாலே, அத்தை வ்யாவர்த்திக்கைக்காக ‘ஸ்ரீ என்கிற இது பெரியபிராட்டியார்க்குத் திருநாமம்’ என்கிறார். ஆகையிறே, *“லக்ஷ்மீ: பத்மாலயா பத்மா கமலா ஸ்ரீர்ஹரிப்ரியா” என்று, திருநாமங்களோடே ஸஹபடிதமாயிற்று. இதுதான் எல்லாத் திருநாமங்கள்போலன்றிக்கே, (க௦ரு) “𑌶𑍍𑌰𑍀𑌰𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌨𑌾𑌮 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌃” [ஸ்ரீரிதிப்ரதமம்நாம லக்ஷ்ம்யா:] என்கிறபடியே, இவளுக்கு 2. ப்ரதமாபிதாநமாயிருக்கும். (க௦சு) “𑌅 𑌇𑌤𑌿 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌥𑌮𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌮𑍍” [அ இதி பகவதோ நாராயணஸ்ய ப்ரதமாபிதாநம்] என்று அகாரம் ஈஸ்வரனுக்கு ப்ரதமாபிதாநமானாற்போலே யாயிற்று, இவளுக்கும் ப்ரதமாபிதாநமாயிருக்கும்படி. அது, அவனுடைய ரக்ஷகத்வத்துக்கு 3. ஏகாந்தமான ஸ்வபாவங்களைச் சொல்லக்கடவதாயிருக்கும்; இது, இவளுடைய புருஷகாரத்வத்துக்கு ஏகாந்தமான ஸ்வபாவங்களைச் சொல்லக்கடவதாயிருக்கும்.

---

1. நடந்து போருதல் - வழங்குதல். 2. ப்ரதமாபிதாநம் - முதன்மையான பெயர். 3. ஏகாந்தமான - அவஶ்யம் வேண்டிய.

*அமர-நிக-கா - க, க - வ, ஶ்லோ-உஎ.

இனி, இந்த ஸ்ரீஶப்தத்துக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக ப்ரதமம் இதன்மேல் வந்த வ்யுத்பத்தித்வயத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(கஉச) ஶ்ரீயதே, ஶ்ரயதே.

(வ்யா.)—'ஶ்ரீயதே, ஶ்ரயதே' என்று. அதாவது - *"ஶ்ரிஞ் ஸேவாயாம்" என்கிற தாதுவிலே 'ஶ்ரீயத இதி ஸ்ரீ:, ஶ்ரயத இதி ஸ்ரீ:' என்று ஸித்தமான கர்மணிவ்யுத்பத்தியையும் கர்த்தரிவ்யுத்பத்தியையும் சொன்னபடி.

இவ்வ்யுத்பத்தித்வயத்துக்கும் அர்த்தம் அருளிச்செய்கிறார்

மூ.—(கஉரு) இதுக்கு அர்த்தம்-எல்லார்க்கும் இவளைப்பற்றி ஸ்வரூபலாபமாய், இவள்தனக்கும் அவனைப்பற்றி ஸ்வரூபலாபமா யிருக்கும் என்று.

(வ்யா.)—'இதுக்கு அர்த்தம்' என்று தொடங்கி. அதாவது - இவ்1. வுபயவ்யுத்பத்திக்கும் அர்த்தம் 'ஶ்ரீயதே' என்று எல்லாராலும் ஸேவிக்கப்படாநின்றாள் என்கையாலே ஸகல சேதநர்க்கும் இவளைப் பற்றித் தங்களுடைய ஶேஷத்வரூப ஸ்வரூப லாபமாய், 'ஶ்ரயதே' என்று ஈஶ்வரனை ஸேவியாநின்றாள் என்கையாலே, இவள்தனக்கும் ஈஶ்வரனைப்பற்றித் தன்னுடைய ஸ்வரூபலாபமாயிருக்குமென்று என்கை. இவள்தனக்கு, சேதநவிஷயத்தில் ஶேஷித்வமும் ஈஶ்வரவிஷயத்தில் ஶேஷத்வமும் என்றும் உண்டாயிறே யிருப்பது. ஆகையால், இந்த ஸேவ்யத்வஸேவகத்வங்கள் இரண்டும் இவளுக்கு நித்யமாய்ச் செல்லாநிற்கும்.

'ஈஶ்வரனுக்கு உபாயத்வமும் உபேயத்வமுமாகிற ஆகாரத்வயம் உண்டானாற்போலே, இவளுக்கும் 2. புருஷகாரத்வமும் ப்ராப்யத்வமுமாகிற ஆகாரத்வயமும் உண்டாகையாலே, இதில் எவ்வாகாரத்தை நினைத்து இவளை 3. இப்போது சொல்லுகிறது?' என்ன, அருளிச்செய்கிறார்

---

1. உபயவ்யுத்பத்தி - கர்மணிவ்யுத்பத்தி கர்த்தரிவ்யுத்பத்தி யென்ற இரண்டு வகையான வ்யுத்பத்தி. 2. புருஷகாரத்வம் - கர்த்தரிவ்யுத்பத்தியில் தோன்றும். 3. இப்போது - ஈஶ்வரனை உபாயமாகப்பற்றுகிற இச்சமயத்தில்.

*தா - ப்வாதி.

மூ.—(கஉசு) இப்போது இவளைச் சொல்லுகிறது புருஷகாரமாக.

(வ்யா.)—'இப்போது இவளைச் சொல்லுகிறது புருஷகாரமாக' என்று. 'புருஷகாரமாக' என்கையாலே, உபாயவஸ்து விசேஷணமாயிருக்கிற ஆகாரத்தையிட்டு, இவளுக்கும் உபாயத்வத்தில் அந்வயம் சொல்லும் பக்ஷம் நிரஸ்தம்.

'ஈஸ்வரனுடைய நாராயணத்வ ப்ரயுக்தமான ஸ்வாபாவிக ஸம்பந்தாதி ஜ்ஞாநத்தையுடையனாய்க் கொண்டு, அவனை ஆஸ்ரயிக்கிற இச்சேதநனுக்கு இவளைப் புருஷகாரமாக முன்னிடவேண்டுகிறது தான் என்?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(கஉஎ) நீரிலே நெருப்புக் கிளருமாபோலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தால் சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்காக.

(வ்யா.) 'நீரிலே' என்று தொடங்கி. அதாவது - ஸீதலமான ஜலத்திலே சென்று அணுகவொண்ணாதபடியான நெருப்புக் கிளருமாபோலே, (க௦எ) "ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்" [ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்] (க௦அ) "ஸமோஹம் ஸர்வபூதேஷு" [ஸமோஹம் ஸர்வபூதேஷு] என்கிறபடியே, 1 ஸர்வபூத ஸுஹ்ருத்த்வம் 2 ஸமாஸ்ரயணீயத்வே ஸமத்வமாகிற ஸ்வபாவவிசேஷங்களாலே ப்ரஸந்நமாய்க் குளிர்ந்திருக்கிற திருவுள்ளத்திலே (க௦கூ) "பரிபூர்ணகலி ஜநே ஹிதஸ்மேரோ தாவ்ருத்யா பவதி ச கதாசித்கலுஷதீ:" [பரிபூர்ணகலி ஜநே ஹிதஸ்மேராேதாவ்ருத்யா பவதிச கதாசித்கலுஷதீ:] என்கிறபடியே, சேதநன் 3 தீரக்கழியப்பண்ணின அபராதம் 4 அடியாக (கக௦) "க்ஷிபாமி" [க்ஷிபாமி] "நக்ஷமாமி" [நக்ஷமாமி] என்னும்படியான சீற்றம் பிறந்தால் அவ்வபராதத்தைப் பொறுப்பது (ககக) "கிமேதந் நிர்தோஷ: க இஹ ஜகதி" [கிமேதந் நிர்த

1. ஸர்வபூத ஸுஹ்ருத்த்வம் - எல்லாப்பிராணிகளிடத்திலும் ஸ்நேஹங் கொண்டிருக்கை. 2. ஸமாஸ்ரயணீயத்வே ஸமத்வம் - எல்லாராலும் ஒப்ப ஆஸ்ரயிக்கத் தக்கவனாயிருக்கை. 3. தீரக்கழிய - பூர்ணமாக என்றபடி. 4. அடியாக - காரணமாக.

தோஷ꞉க இஹஜகதி] இத்யாதிப்படியே தன்னுடைய உபதேஶாதிகளாலே அச்சீற்றத்தையாற்றித் தயையைஜநிப்பிக்கும் இவளுக்காக என்கை. ஆகையாலே, ஸம்பந்தஜ்ஞாநம் பிறந்தவனுக்கும் அபராதபயத்தாலே 1 புருஷகாரபுரஸ்கரணம் அபேக்ஷிதமென்று கருத்து.

2 ‘இத்தலையிற் கார்யம் ஏறிட்டுக்கொண்டும் அத்தலையை வஶீகரித்தும் இரண்டு தலையையும் பொருத்துகைக்கு இவள்தான் 3 கண்ணழிவற்ற 4 புருஷகாரமோ?’ என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(கஉஅ) இவள் தாயாய், இவர்கள் க்லேஶம் பொறுக்கமாட்டாதே அவனுக்குப் பத்நியாய், இனிய விஷயமாயிருக்கையாலே கண்ணழிவற்ற புருஷகாரம்.

(வ்யா.) ‘இவள் தாயாய்’ என்று தொடங்கி. அதாவது - (ககஉ) ‘‘த்வம் மாதா ஸர்வலோகாநாம்’’ [த்வம் மாதாஸர்வலோகாநாம்] என்றும், (ககங) ‘‘அகிலஜகந்மாதரம்’’ [அகிலஜகந்மாதரம்] என்றும் சொல்லுகிறபடியே இச்சேதநர்க்கு இவள் மாதாவாய், *‘‘தந்தம் மக்களழுதுசென்றால் தாய்மாராவார் தரிக்ககில்லார்’’ என்கிறபடியே அந்த ஸம்பந்தமடியாக இவர்களுடைய க்லேஶங் கண்டால் ஸஹிக்கமாட்டாதே, (ககச) ‘‘விஷ்ணுபத்நீ’’ [விஷ்ணுபத்நீ] என்கிறபடியே அவனுக்குப் பத்நியாய், †‘‘பித்தர் பனிமலர்மேற்பாவைக்கு’’ என்கிறபடியே அவன் 5 தன் வைலக்ஷண்யத்தைக் கண்டு பிச்சேறித் தன்சொல்வழி நடக்கும்படி 6 அபிமதவிஷயமாயிருக்கையாலே, கண்ணழிவற்ற புருஷகாரமென்கை.

---

1. புருஷகார புரஸ்கரணம் - புருஷகாரத்தை முன்னிடுகை. 2. இத்தலையிற் கார்யம் ஏறிட்டுக்கொண்டும் - சேதநனுடைய காரியத்தைத் தன்மேற் போட்டுக்கொண்டும். அத்தலையை - ஈச்வரனை. 3. கண்ணழிவற்ற - நிர்த்தோஷமான. 4. புரு ஸநோதி - மிகுதியாகத் தருகிறான் என்று புருஷ꞉ என்பதன் பொருள்: இங்கே, புருஷகாரம்—(ஈச்வரனைச் சேதனன் விஷயத்தில்) மிகுதியாகக் கொடுக்கும்படி செய்பவள். 5. தன் வைலக்ஷண்யத்தை - பிராட்டியான தன்னுடைய விலக்ஷணமான [வேறொருவர்க்கில்லாத] வடிவழகை. 6. அபிமதவிஷயம் - இஷ்டமான பொருள்.

*பெரியாழ் - உ, உ, ங. †திருநெடுந் கஅ.

'எல்லாம் செய்தாலும் 1 நிரங்குஶஸ்வதந்த்ரனான ஈஶ்வரன், சேதநருடைய அபராதங்களை 2 நிறுத்து அறுத்துத் தீர்த்துவன் என்று நிற்குமளவில், இவளாலே பொறுப்பிக்கப்போமோ?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(கஉகூ) திருவடியைப் பொறுப்பிக்குமவள், தன்சொல்வழி வருமவனைப்பொறுப்பிக்கச் சொல்ல வேண்டாவிறே.

(வ்யா.)—'திருவடியை' என்று தொடங்கி. அதாவது - தன்னைப் பத்துமாஸம் 3 தர்ஜநபர்த்ஸநம் பண்ணின அந்த ராக்ஷஸிகளுடைய அபராதங்களைக் கணக்கிட்டு, சித்ரவதம் பண்ண 4 உத்யோகித்து நின்ற 5 சொல்மிறுங்கனான திருவடியையு முட்பட (ககடு) "கஃகுப்யேத்" [கஃகுப்யேத்] என்றும், (கககூ) "நகஶ்சிந்நாபராத்யதி" [நகஶ்சிந்நாபராத்யதி] என்றும் இத்யாதி உபதேசத்தாலே பொறுப்பிக்குமவள், * "மலராள் தனத்துள்ளான்" என்றும், † "மாமலர்மங்கை மணநோக்கமுண்டான்" என்றும், ‡ "அல்லிமலர்மகள் போகமயக்குக்களாகியும் நிற்கும்" என்றும் சொல்லுகிறபடியே தன்போக்யதையிலே குமிழிநீருண்டு, $ "நின்னன்பின் வழி நின்று சிலைபிடித்து எம்பிரானேக" என்கிறபடியே மாயாம்ருகத்தின் பின்னே போ என்னிலும் 6 விளைவது அறியாதே அதன்பின்னே போம்படி தன்சொல்வழி வருமவனைப் பொறுப்பிக்க வல்லளென்னுமிடம் கிம்புநர்ந்யாயஸித்தமிறே யென்கை. ¶ "செய்தகவினுக் கில்லை கைம்மாறு" என்னும்படி, இரண்டு தலைக்கும் 7 தலைதடுமாறாக உபகரித்துத் தன்

1. நிரங்குஶஸ்வதந்த்ரன் - தடைப்படாத ஸ்வாதந்த்ரியமுள்ளவன். 2. நிறுத்து அறுத்து தீர்த்துவன் - கணக்கிட்டு அநுபவிக்கச்செய்தே தீர்ப்பேன். 3. தர்ஜநம் - மருட்டுகை, பர்த்ஸநம் - பழிக்கை. 4. உத்யோகித்து - ப்ரயத்னங் கொண்டு. 5. சொல்மிறுங்கன் - சொல்லை மீறுந் தன்மையான்: அடங்காத் தன்மையுள்ளவனென்றபடி. 6. விளைவது - மேல் நடக்கப்போவது: வீதாபஹாரம். 7. தலைதடுமாறாக - (ஸ்வரூபஹாநிவாராமல்) மாறிமாறி என்றபடி.

* மூன்றாந் திரு, வங் - ந.
† பெரிய திரு - அ, கO, க.
‡ திருவாய் - ந, கO, அ.
$ பெரியாழ். தி - ந, கO, எ.
¶ பெரிய திரு - ரு - அ, உ.

சொல்வழி போகவேண்டும்படியான திருவடியோடே 1 மறுதலிக்குமவள், * "தான் 2 முயங்கும்" என்னும்படியான போக்யதைக்குத் தோற்று 'எத்தைச் செய்வோம்!' என்று 3. தலைதடுமாறி, † "நின்னன்பின்வழிநின்று' ‡ "அதனின்பின்னே படர்ந்தான்" என்னும்படி விளைவதறியாதே முறுவலுக்குத் தோற்றுச் சொல்வழிபோமவனைப் பொறுப்பிக்குமென்னுமிடஞ் சொல்லவேண்டாவிறே" § என்று இதுதன்னை இவர் திருத்தம்பியாரும் அருளிச்செய்தாரிறே.

ஆக, ஶ்ரீமத்பதத்தில் 4. ப்ரக்ருத்யம்ஶத்தை அருளிச்செய்தார் கீழ்; 5. ப்ரத்யயாம்ஶத்தை அருளிச்செய்கிறார் மேல்

மூ.—(கரு௰) மதுப்பாலே இருவர்சேர்த்தியும் நித்யமென்கிறது.

(வ்யா.) 'மதுப்பாலே' என்று தொடங்கி. அதாவது—இம்மதுப்புத்தான் 6. நித்யயோகேமதுப் பாகையாலே, இத்தால் புருஷகாரபூதையான பிராட்டியும் ஈஸ்வரனுமான இருவருடைய சேர்த்தியும் எப்போதுமுண்டு என்னுமிடம் சொல்லுகிறதென்கை.

இந்நித்யயோகத்தை உபபாதிக்கிறார்

மூ.—(கருக) இவளோடே கூடியே வஸ்துவினுடைய உண்மை.

(வ்யா.) 'இவளோடேகூடியே வஸ்துவினுடைய உண்மை' என்று. அதாவது—(ககஎ) "ஸ்ரீய:பதி நிகிலஹேயப்ரத்யநீக கல்யா

1. மறுதலிக்குமவள் - எதிரிடுபவள். 2. முயங்கும் - அணைக்கப்பெற்ற. 3. தலைதடுமாறி - கலங்கி. 4. ப்ருக்ருதி - பகுதி; 'ஶ்ரீ' என்பது. 5. ப்ரத்யயம் - விகுதி; 'மத்' என்பது. 6. "பூமநிந்தாப்ரசம்ஸாஸு நித்யயோகே(அ)திஶாயநே ஸம்பந்தே(அ)ஸ்திவிவக்ஷாயாம் பவந்தி மதுபாதய:" என்ற காரிகையால் மதுப்புக்கு எழர்த்தமுண்டு என்றும், அதில் நித்யயோகம் என்பது ஒன்று என்றும் ஏற்படும்; நித்யயோகம் - எப்போதுமான சேர்க்கை.

* மூன்றாந்திரு-அந்-க௦௦. ‡ பெரியதிருமொழி-உ, ரு, சு.

† பெரியாழ். திரு-ரு, க௦, எ. § அருளிச்செயல் ரஹஸ்யம்.

𑌣𑍈𑌕𑌤𑌾𑌨𑌃 𑌸𑍍𑌵𑍇𑌤𑌰𑌸𑌮𑌸𑍍𑌤𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑌨𑍍𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑍈𑌕𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌃” [ஸ்ரீய:பதிர் நிகிலஹேயப்ரத்யநீககல்யாணைகதாநஸ் ஸ்வேதரஸமஸ்த வஸ்துவிலக்ஷணாநந்த ஜ்ஞாநாநந்தைகஸ்வரூப:] என்று ஸ்வரூபநிரூபகமான ஜ்ஞாநாநந்தாதிகளுக்கு முன்னே ஸ்ரீய:பதித்வத்தைச் சொல்லும்படி அவன் ஸ்வரூபத்துக்கு ப்ரதாநநிரூபகையாயிருக்கையாலே, இவளோடேகூடியே வஸ்துவினுடைய ஸத்பாவம் இருப்பது என்கை.

ஆக, 1 ஸ்வரூபாநுபந்தித்வ ப்ரயுக்தமான நித்யயோகத்தை அருளிச்செய்தாராயிற்று.

இனி, இவளுடைய குணப்ரயுக்தமான நித்யயோகத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(௧௫௨) ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்தையும் சேதநனுடைய அபராதத்தையுங் கண்டு அகலமாட்டாள்.

(வ்யா.) 'ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்தையும்' என்று தொடங்கி. அதாவது - அபராதங்களைப் பத்தும் பத்தாகக் கணக்கிட்டு, *அறுத்து அறுத்துத் தீர்க்கும் ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்தையும், (௧௧௮) “𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌲𑍍𑌪𑌨𑌿𑌯𑍁𑌤𑌾𑌨𑍁𑌭𑌵𑍇𑌽𑌪𑍍𑌯𑌨𑌾𑌶𑍍𑌯𑌮𑍍” [யத்ப்ரஹ்மகல்பநியுதாநுபவேப்யநாஸ்யம்] இத்யாதிப்படியே காலதத்வமுள்ளதனையும் அநுபவியாநின்றாலும் 2 சிறிதுவரையிட்டுக் காட்டக் கடவதல்லாதபடி பண்ணிவைத்த இச்சேதநனுடைய 3 அக்ருத்யகரணாத்யபராதத்தையுங் கண்டு, “என்னாகப்புகுகிறதோ?” என்னும் பயத்தாலே, ஈஶ்வரனைவிட்டு ஒரு க்ஷணகாலமும் அகலமாட்டாளென்கை.

இத்தால், சேதநனுக்குப் பலிக்குமத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(௧௫௩) சேதநனுக்கு இவ்வயிரண்டையும் நினைத்து அஞ்சவேண்டா.

---

1. ஸ்வரூப அநுபந்தித்வம் - (ஸ்வரூபநிரூபகையாம்படி) ஸ்வரூபத்தோடே சேர்ந்திருக்கை. 2. சிறிதுவரையிட்டு - சிறிது குறைந்தவளவு கொண்டு. 3. அக்ருத்யகரணம் - செய்யத்தகாத தொழிலை [பாபத்தை]ச் செய்கை.

* நிறுத்தறுத்துத் தீர்க்கும் என்றும் பாடம்.

(வ்யா.) 'சேதநனுக்கு' என்று தொடங்கி. அதாவது-இப்படி இவள் இருந்து நோக்குகையாலே, சேதநனுக்கு, ஈஸ்வரஸ்வாதந்த்ர்யமும் ஸ்வாபராதமு மாகிற இவை இரண்டையும் நினைத்து 'என்னை விளையப்புகுகிறதோ' என்று அஞ்சவேண்டா என்கை.

இனி, இம்மதுப்பின் தாத்பர்யாம்ஸத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(கஙச) இத்தால் - ஆஸ்ரயிக்கைக்கு ருசியே வேண்டுவது, காலம் பார்க்கவேண்டா என்கிறது.

(வ்யா.) 'இத்தால்' என்று தொடங்கி. அதாவது - இப்படி 1. புருஷகார உபாய வஸ்துக்களினுடைய நித்யயோகத்தைப்ரதிபாதிக்கிற இம்மதுப்பால், இவ்விஷயத்தை யாஸ்ரயிப்பார்க்கு, ஆஸ்ரயிக்கையில் ருசியே வேண்டுவது, 'இரண்டுதலையுங் கூடியிருக்குந் தலையிலே ஆஸ்ரயிக்கவேணுமே' என்று, ஆஸ்ரயணத்துச்குக் காலம் பார்த்திருக்கவேண்டா வென்கிற தென்கை.

இனி, இவ்ள் புருஷகாரத்வத்தின் அவஸ்யாபேக்ஷிதத்வத்தை அறிவிக்கைக்காக, இவள்ஸந்நிதிக்கும் அஸந்நிதிக்கும் உண்டான வாசியை அருளிச்செய்கிறார்

மூ.—(கஙரு) இவள் ஸந்நிதியாலே காகம் தலைபெற்றது; அது இல்லாமையாலே ராவணன் முடிந்தான்.

(வ்யா.) 'இவள் ஸந்நிதியாலே' என்று தொடங்கி. (கககூ) ''தேவ்யா காருண்யரூபயா'' [தேவ்யாகாருண்யரூபயா] என்கிறபடியே, 2. க்ருபைதான் ஒருவடிவு கொண்டாற்போலே இருப்பாளாய், ஸ்வதந்த்ரனான ஈஸ்வரனுக்கும் ஸ்வாதந்த்ர்யத்தை யமுக்கி க்ருபையைக் கிளப்புமவளான இவள் ஸந்நிதியாலே,

---

1. புருஷகாரவஸ்து - பிராட்டி; உபாயவஸ்து - ஈஸ்வரன். 2. காருண்யம்-எவ-ரூபம்-யஸ்யாஃஸா-காருண்யரூபா என்றும்: காருண்யம் ரூபயதி இதி - 'காருண்யரூபா' என்றும், 'காருண்ய-ரூபா' என்பதற்கு இரண்டு ஸமாஸம் உண்டு: அதன்மேல் த்ருதீயாவிபக்திசேர்ந்து காருண்யரூபயா என்று ஆயிற்று. முதல் ஸமாஸத்துக்குப் பொருள் - காருண்யமே ஆகாரமானவளென்பது: அதை க்ருபைதான் ஒரு வடிவுகொண்டாற்போலே இருப்பாளாய் என்று விவரிக்கிறார். இரண்டாவது ஸமாஸத்தின் பொருள் - காருண்யத்தைக் கிளப்புபவ ளென்பது.

அபராதத்தைத் தீரக்கழியச் செய்த ப்ராஹ்மா ஸ்த்ரத்துக்கு இலக்காய்த் தலையறுப்புண்ணத் தேடின காகம் (கஉ൦) "க்ருபயாபர்யபாலயத்" [க்ருபயாபர்யபாலயத்] என்கிறபடியே, க்ருபாவிஷயமாய்த் தலைபெற்றுப் போயிற்று; அப்படியிருக்கிற இவள்ஸந்நிதி இல்லாமையாலே போக்கற்றுச் செயல் மாண்டு நின்ற நிலை ஒத்திருக்கச் செய்தேயும், காகத்தோபாதி அபராதமு மின்றிக்கே யிருக்க, ராமஶரத்துக்கு இலக்காய் ராவணன் முடிந்துபோனான் என்கை. ஆகையால், ஆஶ்ரயிப்பார்க்கு இவள் ஸந்நிதியே வேணு மென்று கருத்து.

ஆக, ஸ்ரீமத்பதார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

அநந்தரம், நாராயணபதார்த்தத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(கஙகூ) புருஷகாரபலத்தாலே ஸ்வாதந்த்ர்யம் தலைசாய்ந்தால் தலையெடுக்குங் குணங்களைச் சொல்லுகிறது நாராயணபதம்.

(வ்யா.) 'புருஷகாரபலத்தாலே' என்று தொடங்கி. அதாவது – 1. உபதேஶத்தாலும் அழகாலும் கண்ணழிவற வசீகரித்துக் காரியங் கொள்ளவல்ல 2 புருஷகார பலத்தாலே 3 ஆஶ்ரயணோந்முகனான சேதநன் அநாதிகாலம் பண்ணின அபராதங்களைப் பார்த்துச் சீறி "அங்கீகரியேன்" என்று இருக்கும் ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யம் தலை மடிந்தால் 4 அதன்கீழ் தலையெடுக்கப் பெறாத 5 செறிப்புத் தீர்ந்து தலையெடுக்குங் குணங்களைச் சொல்லுகிறது நாராயணபதம் என்கை.

'அவைதாம் எவை?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(கஙஎ) அவையாவன-வாத்ஸல்யமும், ஸ்வாமித்வமும், ஸௌஶீல்யமும், ஸௌலப்யமும், ஜ்ஞாநமும், ஶக்தியும்.

---

1. உபதேஶத்தாலே வசீகரிக்கும் வகையை 127-ஆவது சூர்ணையின் வ்யாக்யாநத்திற் காணலாம். 2. புருஷகார பலத்தாலே (லக்ஷ்மியின் புருஷகாரம்) தனக்கு ஏற்பட்ட உறுதியினு லென்றபடி. 3. ஆஶ்ரயணோந்முகனான-ஈசுவரனை ஶரணமாக அடைவதில் ஸம்மதித்துப்போன. 4. அதின்கீழ் ஈஶ்வரன் ஸ்வாதந்த்ர்யத்தைக் கைக்கொண்டபோது என்றபடி- 5 செறிப்பு - ஸங்கோசம்.

(வ்யா.) 'அவையாவன' என்று தொடங்கி. இவற்றில், 'வாத்ஸல்யம்' ஆவது - வத்ஸத்தின்பக்கல் தேநு இருக்கும் இருப்பு; அதாவது-அதனுடைய தோஷத்தைப் போக்யமாகக் கொள்ளுகையும், க்ஷீரத்தைக்கொடுத்து வளர்க்கையும், எதிரிட்டவரைக் கொம்பிலும் குளம்பிலுங் கொண்டு நோக்குகையுமிறே; அப்படியே, ஈச்வரனும் தோஷத்தைப் போக்யமாகக்கொண்டு, * "பாலேபோற் சீர்" என்கிற குணங்களாலே தரிப்பித்து, (கஉக) "[illegible] ஜெய" [கதஞ்சந - நத்யஜேயம்] என்றும், (கஉஉ) "[illegible]" [அபயம் ஸர்வபூதேப்ய:] என்றும் சொல்லுகிறபடியே அநுகூலர் நிமித்தமாகவும் ப்ரதிகூலர் நிமித்தமாகவும் நோக்கும். 'ஸ்வாமித்வம்' ஆவது - இவன் 1 விமுகனான தசையிலும் விடாதே நின்று, ஸத்தையை நோக்கிக்கொண்டு போருகைக்கு ஹேதுவான ஒருபந்தவிசேஷம்; அதாகிறது - உடையவனுயிருக்குமிருப்பு; 2. அத்வேஷம்தொடங்கிக் கைங்கர்ய பர்யந்தமாக உண்டான ஸ்வபாவ விசேஷங்களையெல்லாம் உண்டாக்குகிறது இந்த பந்தவிசேஷமடியாக. 'ஸௌசீல்யம்' ஆவது - 3 உபயவிபூதியோகத்தாலும், பெரிய பிராட்டியாரோட்டைச் சேர்த்தியாலும், நிரங்குசமா யிருக்கிற ஈச்வரனுடைய மேன்மையையும் தங்கள் சிறுமையையும் பார்த்து †"அவனெவ்விடத்தான் யானார்" என்று 4 பிற்காலியாதபடி எல்லாரோடும் ஒக்க மேல்விழுந்து 5 புரையறக் கலக்கையும், அது தன்பேறாக இருக்கையும், எதிர்த்தலையில் அபேக்ஷையன்றியிலே இருக்கக் கலக்கையும். 'ஸௌலப்யம்' ஆவது - கண்ணுக்கு விஷய மின்றிக்கே யிருக்கிற தான் கண்ணாலே கண்டு ஆச்ரயிக்கலாம்படி எளியனாயிருக்கை. 'ஜ்ஞாநம்' ஆவது - இச்சேதநனுக்குக் கழிக்கவேண்டும் அநிஷ்டங்களையும் கொடுக்கவேண்டும் இஷ்டங்களையும் நேராக அறிகைக்கு 6. ஈடான 7. ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தபதார்த்தங்களையும் ஒரு

---

1. விமுகன் - பராமுகன். 2. அத்வேஷம் முதலியவை - அத்வேஷம் ஆபிமுக்யம் மோக்ஷேச்சை வைராக்ய ப்ராப்தி ஸதாசார்யஸமாச்ரயணம் ஸம்யக் ஜ்ஞாநம் ஸாரக்ராஹிதை உசிதஉபாயபரிக்ரஹம் ஸம்ஸாரத் உத்தாரணம் பரமபதபிராப்தி நிரந்தரபகவத்கைங்கர்யம் என்பன. 3. உபயவிபூதி யோகம் - நித்யவிபூதி லீலாவிபூதி என்பவற்றில் தனக்குஉள்ள ஸ்வாமித்வமாகிற ஸம்பந்தம். 4. பிற்காலித்தல் - பின்வாங்குதல். 5. புரையற - வேறுபாடு தோற்றாமல்; ஸ்வோத்கர்ஷமும் பரநிகர்ஷமும் தோற்றாதபடி என்றபடி. 6. ஈடு ஆன - ஏற்றதான. 7. ஸ்வவ்யதிரிக்தம் - தன்னிலும் வேறாகிய.

* பெரிய திருவந் - ருஅ. † திருவாய் - ரு, க, எ.

68167

காலே 1. அபரோக்ஷிக்கவல்ல அறிவு. 'ஶக்தி' ஆவது - 2. ஹேயரான நித்யஸம்ஸாரிகளை 3 உபாதேயதமரான நித்யஸூரிகளோடு 4 ஒருகோவையாக்கவல்ல 5 அகடிதகடநாஸாமர்த்யம். இவற்றில் வாத்ஸல்யாதிகள் நாலும் 6. ஆஶ்ரயண ஸௌகர்யாபாதகம்; ஜ்ஞாநாதிகள் இரண்டும் 7 ஆஶ்ரிதகார்யாபாதகம்; * "நிகரில்புகழாய்" என்று தொடங்கி 8 வாத்ஸல்யாதிகள் நாலையுமிறே, ஆஶ்ரயணத்துக்கு உடலாக ஆழ்வார் அருளிச்செய்தது. ஜ்ஞாநஶக்திகள் இரண்டுஞ் சொன்ன இது, 9 ப்ராப்தி 10 பூர்த்திகளுக்கும் உபலக்ஷணம்; கார்யகரத்வத்துக்கு அவையும் அபேக்ஷிதங்களாகையாலே.

'இக்குணங்களுக்கு இவ்விடத்தில் 11 விநியோகங்கள் எவை?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(௧௩௮) குற்றங்கண்டு வெருவாமைக்கு வாத்ஸல்யம்; கார்யஞ்செய்யுமென்று துணிகைக்கு ஸ்வாமித்வம்; ஸ்வாமித்வங்கண்டு அகலாமைக்கு ஸௌஶீல்யம்; கண்டு பற்றுகைக்கு ஸௌலப்யம்; விரோதியைப் போக்கித் தன்னைக் கொடுக்கைக்கு ஜ்ஞாநஶக்திகள்.

(வ்யா.) 'குற்றங்கண்டு' என்று தொடங்கி. அதாவது - 12 ஆஶ்ரயணோந்முகனான இச்சேதநன், தன்தோஷத்தைப் பார்த்து அஞ்சாமைக்கு உறுப்பு, தோஷத்தைப் போக்யமாகக் கொள்ளும் வாத்ஸல்

---

1. அபரோக்ஷிக்கவல்ல - ப்ரத்யக்ஷமாகக் காணத்தக்க. 2. ஹேயர் - சேர்த்துக்கொள்ளத் தகாதவர். 3. உபாதேயதமர் - ஏற்றுக்கொள்ளுதற்கு மிகவும் ஏற்றவர்: மிகவும் உயர்ந்தவரென்றபடி. 4. ஒரு கோவை - ஒரு வரிசை. 5. அகடிதக்கடநா ஸாமர்த்யம் - ஒன்றுசேராதவற்றைச் சேர்க்குந் தன்மை. 6. ஆஶ்ரயணஸௌகர்ய ஆபாதகம் - ஆஶ்ரயிப்பதற்கு ஸௌகர்யத்தைச் செய்யக்கூடியவை. 7. ஆஶ்ரித கார்ய ஆபாதகம் - அடைந்தவர் காரியத்தைச் செய்யக்கூடியவை. 8. 'நிகரில் புகழாய்' என்பதனால் வாத்ஸல்யமும், 'உலகம் மூன்றுடையாய்' என்பதனால் ஸ்வாமித்வமும், 'என்னை யாள்வானே' என்பதனால் ஸௌஶீல்யமும், 'நிகரிலமரர்.......திருவேங்கடத்தானே' என்பதனால் ஸௌலப்யமும் கூறப்பட்டுள்ளன. 9. ப்ராப்தி - ஸம்பந்தம். 10. பூர்த்தி - எல்லாவற்றாலும் பூர்ணனாயிருக்குந் தன்மை. 11. விநியோகம் - உபயோகம். 12. ஆஶ்ரயண உந்முகன் - (எம்பெருமானை) ஆஶ்ரயிப்பதில் அநுகூலமுகமானவன்.

* திருவாய், ௬-௧௦-௧௦.

யம், 'நங்கார்யம் செய்யுமோ, செய்யானோ?' என்று ஶங்கியாதே கார்யஞ்செய்யு மென்று விஶ்வஸிக்கைக்கு உறுப்பு, 1 இழவு பேறு தன்னதாம்படியான ஸ்வாமித்வம். உபயவிபூதிக்கும் 2 கடவனாயிருக்கும் பெருமைக்கு ப்ரகாஶகமான ஸ்வாமித்வததைக் கண்டு 3 ஸ்வநிகர்ஷாநுஸந்தாநத்தாலே அகலாமைக்கு உறுப்பு, தாழ்ந்தவர்களோடே புரையறக் கலக்கும் ஸ்வபாவமான ஸௌஶீல்யம். 4 அதீந்த்ரியனென்று பிற்காலியாமல் கண்ணாலே கண்டு ஆஶ்ரயிக்கைக்கு உறுப்பு, தன்வடிவைச் சக்ஷுர்விஷயமாக்குகை யாகிற ஸௌலப்யம்; (கஉங) "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" [ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி] என்கிறபடியே 5 ப்ராப்திவிரோதியைப்போக்கி ப்ராப்யனான தன்னை உபகரிக்கைக்கு உறுப்பு, 6 ப்ராப்தாவான இவன் கீழ்நின்ற நிலையும் மேல் 7 போக்கடியும் அறிகைக்கும் அறிந்தபடியே செய்து தலைக்கட்டுகைக்கும் 8 ஏகாந்தங்களான ஜ்ஞாநஶக்திகளென்கை.

9 ஸௌகர்யாபாதகங்களான குண சதுஷ்கத்திலும் ஸௌலப்யம் ப்ரதாநமாகையாலே, அந்த ஸௌலப்ய 10 காஷ்டையை அருளிச்செய்கிறார்

மூ.—(கஙக) இங்குச்சொன்ன ஸௌலப்யத்துக்கு எல்லைநிலம் அர்ச்சாவதாரம்.

(வ்யா.) 'இங்குச் சொன்ன' என்று தொடங்கி. அதாவது-11 இப்பதத்தில் ஆஶ்ரயணஉபயோகியாகச் சொன்ன ஸௌலப்யத்துக்கு 12 ஸீமாபூமி *"தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவந்தானே" என்கிற

1. இழவு பேறு - நஷ்டமும் லாபமும். 2. கடவன் - உரியவன். 3. ஸ்வநிகர்ஷ அநுஸந்தாநம் - தனது தாழ்ச்சியை யெண்ணுதல். 4. அதீந்த்ரியன் - இந்திரிய ஞானத்துக்கு விஷயமாகாதவன். 5. ப்ராப்திவிரோதி - (எம்பெருமானை) அடைவதற்குத் தடையாவது. 6. ப்ராப்தாவான இவன்- (ஈச்வரனான தன்னை) அடைபவனான இந்தச்சேதநன். 7. போக்கடி - அடையுந்தேசம். 8. ஏகாந்தங்களான - அவஶ்யாபேக்ஷிதங்களான. 9. ஸௌகர்யாபாதகம் - ஆஶ்ரயண ஸௌகர்யாபாதகம். 10. காஷ்டை - எல்லை. 11. இப்பதத்தில் - பூர்வகண்டத்திலுள்ள நாராயண பதத்தில். 12. ஸீமாபூமி- எல்லையான இடம்.

* முதல் திருவந்தாதி-சச.

படியே ஆஶ்ரிதர் உகந்தது ஒன்றைத் திருமேனியாகக்கொண்டு ஸதா [1] ஸந்நிதி பண்ணியிருக்கும் அர்ச்சாவதார மென்கை.

இதுதன்னை உபபாதிக்கிறார்

மூ.—(௧௪௦) இதுதான் பர வ்யூஹ விபவங்கள் போலன்றிக்கே கண்ணாலே காணலாம்படி இருக்கும்.

(வ்யா.) 'இதுதான்' என்று தொடங்கி. அதாவது—இவ்வர்ச்சாவதாரந்தான் [2] தேஶவிப்ரக்ருஷ்டதையாலே கண்ணுக்கு விஷயமாகாத பரவ்யூஹங்களும், [3] காலவிப்ரக்ருஷ்டதையாலே கண்ணுக்கு விஷயமாகாதபடி போன [4] விபவமும் போலன்றிக்கே, [5] ஆஸந்நமாய் [6] அநவரதஸந்நிதி பண்ணிக்கொண்டிருக்கையாலே, அநவரதம் கண்ணாலே காணலாம்படி இருக்கு மென்கை.

'இக்குணங்களெல்லாம் அர்ச்சாவதாரத்திலே காணலாமோ?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(௧௪௧) இவையெல்லாம் நமக்கு நம்பெருமாள்பக்கலிலே காணலாம்.

(வ்யா.) 'இவையெல்லாம் நமக்கு நம் பெருமாள் பக்கலிலே காணலாம்' என்று. அதாவது-ஸௌகர்யாபாதகமாகவும் கார்யாபாதகமாகவும் சொன்ன இக்குணங்கள் எல்லாம், இவை காண்கையிலே அபேக்ஷையுடைய நமக்கு [7] நம்முடைய பெருமாள் பக்கலிலே காணலா மென்கை.

---

1. ஸந்நிதிபண்ணுதல் - சாந்நித்தியமடைதல். 2. தேஶவிப்ரக்ருஷ்டதை - தேஶம் தூரத்திலிருக்கை. பரத்வத்தோடு எழுந்தருளியிருக்கும் பரமபதமும், ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தாதி ரூபமாகிற திருக்கோலங்கொண்ட வ்யூஹ மூர்த்தத்தோடு எழுந்தருளியிருக்கும் திருப்பாற்கடலும் நாம் இந்தஶரீரத்தோடு போகமுடியாதபடி வெகுதூரத்திலுள்ளனவாதல் காண்க. 3. கால விப்ரக்ருஷ்டதை - வெகுகாலத்துக்கு முன்னே நிகழ்ந்ததாதல். 4 விபவம் - ராமக்ருஷ்ணாதியவதாரங்கள். 5. ஆஸந்நம் - ஸமீபமான இடத்திலிருப்பது. 6. அநவரதஸந்நிதி - எப்போதும் நீங்காத ஸாந்நித்யம். 7 நம்பெருமாள் என்றதுக்குத் திருவரங்கம் பெரியகோயிலிலெழுந்தருளியுள்ள நம்பெருமாளைக் காட்டுவதாக வ்யாக்யானஞ் செய்யாமல், நம்முடைய பெருமாள் என்று காரணக்குறியாக வ்யாக்யானஞ்செய்தது - வெவ்வேறு தேஶங்களிலும் க்ருஹங்களிலும் எழுந்தருளிய அர்ச்சையிலே ஈடுபட்டிருப்பார்க்கும் அங்கங்குக் காணலாமென்று தெரிவிக்கைக்காக.

பெருமாள் பக்கலிலே இக்குணங்களுக்கு ப்ரகாஶகங்களாயுள்ளவற்றைச் சொல்லி, 'இவற்றுடனே நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம்' என்கிறார்

மூ—(கசஉ) திருக்கையிலேபிடித்த திவ்யாயுதங்களும் வைத்து அஞ்சல் என்ற கையும், கவித்த முடியும், முகமும் முறுவலும், ஆஸநபத்மத்திலே யழுத்தின திருவடிகளுமாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம்.

(வ்யா.) 'திருக்கையிலே' என்று தொடங்கி. அதாவது—1 கார்யகரத்வ உபயோகியான 2 ஜ்ஞாநஶக்திகளுக்கு ப்ரகாஶகமாம்படி திருக்கைகளிலே தரித்துக்கொண்டிருக்கிற ஶங்க சக்ராதி திவ்யாயுதங்களும், 3 வாத்ஸல்ய ப்ரகாஶகமாம்படி 4 வைத்து அஞ்சலென்ற கையும், ஸ்வாமித்வப்ரகாஶகமாகக் கவித்த முடியும், 5 ஸௌஶீல்யப்ரகாஶகமான முகமும் முறுவலும், அனைவர்க்குங் கண்டு பற்றலாம்படியான ஸௌலப்ய ப்ரகாஶகமான ஆஸநபத்மத்திலே அழுத்தின திருவடிகளுமாய்க் கொண்டு எழுந்தருளி நிற்கிற நிலையே 6 அநந்யகதிகளான நமக்கு ரக்ஷக மென்கை.

7 உபாய உபேய நிஷ்டர்க்கு அபேக்ஷிதமான ஆகாரங்கள் இரண்டும் கீழ்ச்சொன்னபடியே நிற்கிற திருமேனியிலே தோற்றும் என்கிறார்

---

1. கார்யகரத்வ உபயோகியான - பக்தர்களின் கார்யத்தைச் செய்வதாயிருக்கையில் உபயோகமுள்ளனவான. 2. ஆயுதத்தை யேந்துகை ஶக்திமானுடைய கார்யமாகையாலும், ஆஶ்ரிதருடைய விரோதிகளையறிந்து அவ்விரோதிகளை ஏந்தியஆயுதங்களைக் கொண்டு நிரஸிப்பது ஜ்ஞாநவானுடைய கார்யமாகையாலும், எம்பெருமான் தனது திருக்கையிலேந்திய திவ்யாயுதங்கள் அவனது ஜ்ஞாநஶக்திகளுக்கு ப்ரகாஶகமாகும். 3 எம்பெருமானது 'அஞ்சலென்று காட்டுகின்ற அபயமுத்திரை சேதநர் தமது தோஷங்களை நினைந்து அகலாமலிருக்கைக்குக் காரணமாகையால், வாத்ஸல்ய ஸூசகமாகும். 4 வைத்து - ஒருசொல்விழுக்காடு; தனியே பொருளில்லை. 5 ஸௌஶீல்யமாவது - மஹானாயிருப்பவன் மிகவுந் தாழ்ந்தநிலையிலிருப்பாரோடு பேதமின்றிச் சேர்ந்திருக்கை. புன்முறுவலும் மலர்ந்தமுகமும் உண்டாவது இஷ்டர்களைக் காணும்போதே யாதலால், சேதநனை அவ்வெம்பெருமான் காணும்போது அப்பரமனிடத்துத் தோன்றுகின்ற முகவிகாஸமும் மந்தஹாஸமும் அவ்வெம்பெருமானுடைய ஸௌஶீல்யத்தைக் காட்டும். 6 அநந்யகதிகள் - எம்பெருமானைத்தவிர வேறொரு புகலிடமில்லாதவர்கள். 7. உபாய நிஷ்டர்க்கு அபேக்ஷிதமான ஆகாரம் - ரக்ஷகத்வம், உபேயநிஷ்டர்க்கு அபேக்ஷிதமான ஆகாரம் - போக்யத்வம்.

மூ.—(௧௪௩) ரக்ஷகத்வ போக்யத்வங்கள் இரண்டும் திருமேனியிலே தோற்றும்.

(வ்யா.) 'ரக்ஷகத்வ போக்யத்வங்கள் இரண்டுந் திருமேனியிலே தோற்றும்' என்று. அதாவது - ரக்ஷணபரிகரமான திவ்யாயுதங்களோடும் ரக்ஷணத்துக்குக் கவித்த முடியோடுங் கூடியிருக்கையாலே ரக்ஷகத்வம் தோற்றுகையாலும், *"அணியாராழியுஞ் சங்குமு மேந்தும்," †"முடிச்சோதியா யுனது முகச்சோதி மலர்ந்ததுவோ" என்கிறபடியே அவைதானே அழகுக்கு உடலாய் வைத்தஞ்சல் என்ற கையும் முகமும் முறுவலும் ஆஸநபத்மத்திலே அழுத்தின திருவடிகளும் ஒன்றோடொன்று அழகுக்கு எல்லைநிலமாயிருக்கையாலே போக்யத்வம் தோற்றுகையாலும், இரண்டும் திருமேனியிலே ப்ரகாசிக்கும் என்கை.

ஆக, நாராயணபதார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

இனி, 'சரணௌ' என்கிற பதத்துக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார்

மூ.—(௧௪௪) சரணௌ = திருவடிகளை.

(வ்யா.) 'சரணௌ = திருவடிகளை' என்று.

இந்த த்விவசனத்தாற் சொல்லுகிற அர்த்தத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(௧௪௫) இத்தால் - சேர்த்தியழகையும், உபாய பூர்த்தியையும் சொல்லுகிறது.

(வ்யா.) 'இத்தால்' என்று தொடங்கி. அதாவது-'சரணௌ' என்று இரண்டு திருவடிகளையும் சொல்லுகிற இத்தால், ‡"இணைத்தாமரையடி" என்கிறபடியே இரண்டுதாமரைப்பூவை 1 நிரைத்துவைத்தாற்போலேயிருக்கிற சேர்த்தி யழகையும் த்விவசநம் இரண்டுக்குமேல்

1. நிரைத்து வைத்தாற்போலே - சேரவைத்தாற்போலே.

* திருவாய். ௮, ௩, ௯. ‡ திருமொ. - ௧, ௮, ௩.

† திருவாய் ௩, ௧, ௧.

மற்றொன்று புகுர ஸஹியாமையாலே ஸஹாயாந்தர நிரபேக்ஷமான உபாயபூர்த்தியையுஞ் சொல்லுகிறது என்கை.

இனி, [1] உபாயத்வ ஏகாந்தமான இதன் குணாதிக்யத்தை அருளிச் செய்கிறார்

மூ.—(கசகூ) பிராட்டியும் அவனும் விடிலும் திருவடிகள் விடாது, திண்கழலாயிருக்கும்.

(வ்யா.) 'பிராட்டியும்' என்று தொடங்கி. அதாவது—ஸ்ரீமத் பதத்திலே புருஷகாரபூதையாகச்சொன்ன பிராட்டியும் அவள்தானே * [2] "சிதகுரைக்கிலும் என்னடியார் அதுசெய்யார்" என்னும்படி [3] நாராயணபதத்திற் சொன்ன குணவிசிஷ்டனான அவனும் கைவிடிலும், திருவடிகள் தன் [4] வைலக்ஷண்யத்தாலே [5] துவக்கிக்கொள்ளுகையாலே கைவிடாது, † "வண்புகழ்நாரணன்திண்கழல்" என்கிறபடியே பற்றினாரை நழுவவிடாத திண்மையையுடைத்தாயிருக்கும் என்கை.

இந்தக் குணாதிக்யத்தைப்பற்றவும் அன்றிக்கே, இவன் தன் ஸ்வரூபாநுகுணமும் திருவடிகளிலே இழிகை யென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார்

மூ.—(கசஎ) சேஷிபக்கல் சேஷபூதன் இழியும் துறை, ப்ரஜை முலையிலே வாய்வைக்குமாபோலே.

(வ்யா.) 'சேஷிபக்கல்' என்று தொடங்கி. அதாவது - சேஷிபக்கல் ஆச்ரயிக்க இழியும் சேஷபூதன் தன் ஸ்வரூபாநுகுணமாக இழியுந் துறை திருவடிகள்; [6] ஸ்தநந்தயப்ரஜை தாயினுடைய அவயவமெல்லாங் கிடக்கத் தனக்கு வகுத்ததாயுள்ள முலையிலே வாய்வைக்குமா போலே யென்கை.

---

1. உபாயத்வ ஏகாந்தமான-உபாயமாயிருப்பதற்கு அவச்யம் வேண்டிய. 2. சிதகு - தோஷம். 3. நாராயணபதத்திற் சொன்ன குணம் - வாத்ஸல்யாதிகள். 4. வைலக்ஷண்யத்தாலே - அழகாலே. 5. துவக்கிக்கொள்ளுகையாலே- அப்பாற் போகவொட்டாதபடி கட்டுப்படுத்துகையாலே. 6. ஸ்தநந்தயப்ரஜை:- முலைப்பாலுண்ணுங்குழந்தை.

*பெரியாழ்.- திருமொ-ச, கூ, உ. †திருவாய் - க, உ, கo.

'திருவடிகளைச் சொன்ன இது - திருமேனிக்கு உபலக்ஷணம்' என்கிறார், மேல்

மூ.—(கச௮) இத்தால், பிராட்டிக்கு இருப்பிடமாய்க் குணப்ரகாஶகமுமாய் ஶிஶுபாலனையும் அகப்படத் திருத்திச் சேர்த்துக்கொள்ளுந் திருமேனியை நினைக்கிறது.

(வ்யா.) 'இத்தால்' என்று தொடங்கி. அதாவது - 'சரணௌ' என்று 1 விக்ரஹ ஏகதேஶமான திருவடிகளைச் சொன்ன இத்தால் *"திருவிருந்த மார்வன்" என்னும்படி ஸ்ரீமத்பதத்திற் சொன்ன புருஷகார பூதையான பிராட்டிக்கு இருப்பிடமாய், நாராயணபதத்திற் சொன்ன குணங்களுக்கு ப்ரகாஶகமாய், † "பல பல 2 நாழஞ்சொல்லிப் பழித்த சிசுபாலன்" என்கிறபடியே 3 ப்ரத்வேஷ பரனாய் 4 நிந்தோக்திகளைப் பண்ணித் திரிந்த ஶிஶுபாலனையும் உட்பட † 5 "அலவலைமை தவிர்த்த அழகன்" என்கிறபடியே தன்னழகாலே 6 த்வேஷாதிகள் போம்படி 7 திருத்தி ‡ 8 "திருவடி தாட்பாலடைந்த" என்கிறபடியே சேர்த்துக்கொள்ளும் ஸ்வபாவத்தை யுடைத்தான 9 திவ்யமங்கள விக்ரஹத்தை நினைக்கிறது என்கை.

அநந்தரம், ஶரணபதார்த்தத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(கசகூ) ஶரணம் = இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்ட நிவாரணத்துக்கும் தப்பாத உபாயமாக.

---

1. விக்ரஹஏகதேசமான - திருமேனிக்குள் ஒரு பகுதியான. 2. நாழம் - நிந்தை. 3. ப்ரத்வேஷபரனாய் - மிக்கத்வேஷத்தைப் பாராட்டுபவனாய். 4. நிந்தோக்திகள் - பழிச்சொற்கள். பண்ணி - சொல்லி. 5. அலவலைமை - வாய் வந்தபடி பிதற்றுகை. 6. த்வேஷாதிகள் என்ற விடத்தில் ஆதிசப்தார்த்தமாகப் பழிச்சொற்களைக் கொள்க. 7. திருத்தி - திருந்தச்செய்து. 8. திருவடிதாட்பால் - திருவடியென்று சொல்லப்படுகின்ற இடத்தில். 9. திவ்யமங்கள விக்ரஹம் - பரமபதத்திலுள்ள பஞ்சோபநிஷந்மயமாய் ஹேயப்ரத்யநீகமான திருமேனி.

* மூன்றாந்திருவந் - ருஎ. † பெரியாழ். ச-ந-ரு.
‡ திருவாய் - எ, ரு, ந.

(வ்யா.) 'ஶரணம்' என்று தொடங்கி. அதாவது - (கஉச) "உபாயே க்ருஹரக்ஷித்ரோ: ஶப்த: ஶரணமித்யயம் வர்த்ததே ஸாம்ப்ரதஞ்சைஷ: உபாயார்த்தைகவாசக:" [உபாயே க்ருஹரக்ஷித்ரோஸ் ஶப்தஸ்ஶரண மித்யயம்—வர்த்ததே ஸாம்ப்ரதஞ்சைஷ: உபாயார்த்தைகவாசக:] என்கிறபடியே ஶரணஶப்தம் ரக்ஷிதாவுக்கும் க்ருஹத்துக்கும் உபாயத்துக்கும் வாசகமே யாகிலும், இவ்விடத்தில் உபாயத்துக்கே வாசகமாகையாலும், 1 உபாய க்ருத்யம் இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹார காரணமாகையாலும், இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்ட நிவாரணத்துக்கும் தப்பாத உபாயமாக என்று இப்பதத்துக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார். இஷ்டா நிஷ்டங்கள்தாம் இன்னவையென்னுமத்தைப் பரந்தபடியிலே விஸ்தரேண அருளிச்செய்தார். ஸ்ரிய:பதிப்படியிலும் "அநிஷ்டமாகிறது - அவித்யையும், அவித்யா கார்யமான ராகத்வேஷங்களும், புண்ய பாப ரூபமான கர்மங்களும், 2 தேவாதி சதுர்வித ஶரீரங்களும், 3 ஆத்யாத்மிகாதி து:க பரம்பரைகளும்; இஷ்டமாகிறது - 4 அர்ச்சிராதி மார்க்க கமநமும்,

---

1. உபாய க்ருத்யம் - உபாயமாயிருப்பதன் தொழில். இஷ்ட அநிஷ்ட ப்ராப்தி பரிஹார காரணம் - இஷ்டத்தை யடைவித்தற்குச் சாதனமாவதும், அநிஷ்டத்தைத் தடுப்பதற்குச் சாதனமாவதும். 2. தேவாதி சதுர்வித ஶரீரங்கள் - தேவ திர்யக் மநுஷ்ய ஸ்தாவர ஶரீரங்கள். 3. ஆத்யாத்மிகாதி து:க பரம்பரைகள் - ஆத்யாத்மிக ஆதிதைவிக ஆதிபௌதிகங்கள். 4. எம்பெருமானது பரமக்ருபையாலே மோக்ஷத்தைப்பெறும் ஆத்மாக்கள் இந்த ஸ்தூலதேஹத்திலிருந்து எழுந்து ஸூக்ஷ்மஶரீரத்தைப் பரிக்ரஹித்து, ஸூர்யகிரணத்தைப் பற்றிக்கொண்டு முதலில் அர்ச்சிஸ்ஸையும், பின்பு அஹஸ்ஸையும் ஶுக்லபக்ஷாபிமாநியையும் உத்தராயணாபிமாநியையும் ஸம்வத்ஸராபிமாநியையும் வாயுவையும் முறையே கிட்டி அவர்கள் வழிநடத்த, பிறகு ஸூர்யமண்டலத்தைப் பேதித்துக்கொண்டுபோய்ச் சந்திரனைக்கிட்டி அவன்கௌரவிக்க, அமாநவனைக் கிட்டி அவன் வழிநடத்த, பின்பு வருணனையும் இந்திரனையும் ப்ரஜாபதியையும் முறையேகிட்டி அவர்கள் லோகங்களையும் கடந்து, இவ்வண்டத்தையும் இவ்வண்டத்தைச் சுற்றியுள்ள ஏழாவரணங்களையும் மூலப்ரக்ருதியையும் கடந்து விரஜையையடைந்து மூழ்கித் தாம் கொண்டிருந்த ஸூக்ஷ்ம ஶரீரமும் கழிந்து, அந்நதியின் கரையிலுள்ள அமாநவனுடைய கரஸ்பர்ஶத்தாலே பஞ்சோபநிஷந்மயமான திவ்யஶரீரத்தை யடைந்தபின்பே புநராவ்ருத்தியில்லாத பரமபதத்தைப்பெறுவார்களென்று சாந்தோக்யம் முதலியவற்றிற் சொல்லுதலால், முக்தனாய்ப் போகுமவன் ப்ராணோத்க்ரமணத்துக்குப் பின்பு போகும் மார்க்கம் அர்ச்சிராதிமார்க்கம் எனப்படும். இந்த மார்க்கத்திற்கு அர்ச்சிஸ்என்ற தேவதை முதலாகுதல் காண்க.

பரமபதப்ராப்தியும், பரமாத்மதர்ஶநமும், குணாநுபவகைங்கர்யங்களும்’’ என்று ஸங்க்ரஹேண அருளிச்செய்தார்; ஆகையால், இவ்விடத்திலும் அவை 1 வக்தவ்யங்கள்.

2. கீழ் நிர்த்தேஶித்த வஸ்துவை உபாயமாகச் சொன்னதன் தாத்பர்யத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(கரு0) இத்தால், ப்ராப்யந்தானே ப்ராபகம் என்கிறது.

(வ்யா.) ‘இத்தால், ப்ராப்யந்தானே ப்ராபகம் என்கிறது’ என்று. அதாவது - கீழ்ச்சொன்ன விஷயத்தை உபாயமாகச் சொல்லுகிற இத்தால் ப்ராப்ய வஸ்து தானே ப்ராபகம் என்னுமிடஞ் சொல்லுகிறது என்கை.

கீழ், ‘ப்ராப்யப்ரஸங்கம் உண்டோ?’ என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(கருக) கீழ்ச்சொன்ன மூன்றும் ப்ராப்யமிறே.

(வ்யா.) ‘கீழ்ச்சொன்ன மூன்றும் ப்ராப்யமிறே’ என்று. அதாவது- 3 ஸமஸ்தபதமான பூர்வபதத்திற்சொன்ன லக்ஷ்மீவிஶிஷ்டத்வமும், கல்யாணகுண 4 யோகமும், 5 திவ்யமங்கள விக்ரஹோபேதத்வமும் ஆகிற மூன்றும், (கஉரு) 6. “ஶ்ரியாஸார்த்தம் - ஆஸ்தே”

1. வக்தவ்யங்கள் - சொல்லிக்கொள்ளத் தக்கவை. 2. கீழ் நிர்த்தேசித்த வஸ்து - ஶ்ரிய:பதியாய் ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய்த் திவ்யமங்கள விக்ரஹத்தோடு கூடினவனாக ‘ஶ்ரீமந் நாராயண சரணௌ’ என்று கீழே கூறிய தொடரிலே ஏற்பட்ட ஶ்ரீமந்நாராயணன். 3. ஸமஸ்தபதமான - ஒரே தொடரான. பூர்வபதம் - ஶ்ரீமந்நாராயண சரணௌ என்பது. ஶ்ரீமத் பதத்தால் லக்ஷ்மீவிஶிஷ்டத்வமும், நாராயணபதத்தால் கல்யாணகுணயோகமும், சரணபதத்தால் திவ்யமங்கள விக்ரஹ உபேதத்வமும், கூறப்பட்டன. 4. யோகம் - சேர்க்கை. 5. திவ்யம் - ப்ரக்ருதிசம்பந்தமற்றது. பஞ்சோபநிஷந்மயமானதென்றபடி. மங்களம் - ஶுபாஸ்பதமானது. விக்ரஹம் - திருமேனி. உபேதத்வம் - கூடியிருக்கை. 6. லக்ஷ்மீவிஶிஷ்டன் ப்ராப்யனென்பதற்கு ப்ரமாணம் “ஶ்ரியா ஸார்த்தம் - ஆஸ்தே” என்பது. கல்யாணகுணம் ப்ராப்யமென்பதற்கு ப்ரமாணம் - “ஸர்வாந் காமாந் அஶ்நுதே” என்பது. திவ்யமங்களவிக்ரஹம் ப்ராப்யமென்பதற்கு ப்ரமாணம் - “ஸதா பஶ்யந்தி” என்பது.

[ஶ்ரியாஸார்த்தம் - ஆஸ்தே] (கஉசு) "[illegible]" [ஸர்வாந்காமாந் - அஶ்நுதே] (கஉஎ) "ஸதா பஶ்யந்தி" [ஸதாப ஶ்யந்தி] என்று இவனுக்கு அநுபவவிஷயமாகச் சொல்லப்படுகிறவை யாகையாலே ப்ராப்யமிறே யென்கை.

'ஆனால், 1 இத்தை உபாயமாக்குகிறதுதான் என்?' என்ன, அருளிச்செய்கிறார்.

மூ.—(கரு௨) இவன் செயலறுதியாலே உபாயமாக் குகிறானித்தனை.

(வ்யா.) 'இவன் 2 செயல் அறுதியாலே உபாயமாக்குகிறானித் தனை' என்று. அதாவது - 3 அகிஞ்சநனாய் அநந்யகதியாயிருக்கிற இவன் 4 தன்செயல்மாட்சியாலே போக்யமான பாலை மருந்தாக்கு வாரைப்போலே, ப்ராப்யமானதுதன்னையே ப்ராபகமாக்குகிறானித் தனை யென்கை.

இதுதன்னாலே இவ்வுபாயத்துக்கு ஓரதிஶயம் சொல்லுகிறது என் கிறார்

மூ.—(கருங) "சரணௌ ஶரணம்" என்கையாலே, உபாயாந்தர வ்யாவ்ருத்தமான உபாயம் என்கிறது.

(வ்யா.) 'சரணௌ ஶரணம் என்கையாலே' என்று தொடங்கி. அதாவது - 'சரணௌஶரணம்' என்று ப்ராப்யவஸ்துதன்னையே ப்ரா பகமாகச் சொல்லுகையாலே, ப்ராப்யம் வேறும் தான் வேறுமாயிருக்

---

1. உபேயமான வஸ்துவை உபாயமாகப் பற்றுகிறபோதே அவ்வுபேயம் ஸ்வாதீநமாய்விட்டபடியாலே உபாயமாக அதைப் பற்றினதற்கு வேறு சாதிக்கக்கூடிய பயன் என்ன? என்பது சங்கை. 2. செயல் அறுதி - செய்யக் கூடியது ஒன்றுமில்லாமை. 3. அகிஞ்சநன் - தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் படி ஸாதநமாக ஒன்றும் தன்னிடத்தி லிருக்கப்பெறாதவன். அநந்யகதி - எம் பெருமானைத் தவிர்த்து வேறு எவரையும் புகலிடமாகக் கொள்ளாதவன். ஆகிஞ்சந்யமாவது - ததேகோபாயத்வ ரூபஸ்வரூப விரோதியான உபாயாந் தர ஶூந்யத்வம். அநந்யகதித்வமாவது - ததேகரக்ஷ்யத்வரூப ஸ்வரூப விரோதி யான ரக்ஷகாந்தர ஶூந்யத்வம். இவைஇரண்டும், ததேகஉபாயத்வ ததேகரக்ஷ்யத்வங்கட்கு மிகவும் ப்ரகாஶகமாகையாலே, எம்பெருமானையே உபாயமாக்கு கிற இது அவற்றிற்கு விரோதியாகாது. 4. செயல்மாட்சி = செயலறுதி; மாட்சி - மாண்டுபோதல், இல்லாமற்போதல்.

கும் 1 உபாயாந்தரங்களிற்காட்டில் 2 வ்யாவ்ருத்தமான உபாயம் இது என்னுமிடம் சொல்லுகிறது என்கை.

அநந்தரம், க்ரியாபதத்துக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார்

மூ.—(௧௨௪) ப்ரபத்யே = பற்றுகிறேன்.

(வ்யா.) ‘ப்ரபத்யே பற்றுகிறேன்’ என்று. இப்பதம் † ‘பத - கதௌ’ என்கிற தாதுஸித்தமாகையாலே மதிவாசி ஆகையாலும், 3 உத்தமன் ஆகையாலும், ‘பற்றுகிறேன்’ என்று இதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார்.

‘இதுதான் மாநஸ வாசிக காயிக ரூபையான த்ரிவிதகதியையும் காட்டவற்றாகையாலே, அதில் எந்தக் 4 கரணத்தால் உண்டான பற்றுதலைச் சொல்லுகிறது?’ என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(௧௨௫) வாசிகமாகவும் காயிகமாகவும் பற்றினாலும் பேற்றுக்கு * அழிவில்லை; ‘ஜ்ஞாநாந் மோக்ஷம்’ ஆகையாலே, மாநஸமாகக்கடவது.

(வ்யா.) ‘வாசிகமாகவும்’ என்று தொடங்கி. அதாவது - (௧௨௮) ‘‘பவ ஶரணம்’’ [பவ ஶரணம்] இத்யாதிப்படியே ரக்ஷிக்கவேணும் என்று ப்ரார்த்திக்கையாகிற கேவலவாசிகமாகவும் (௧௨௯) ‘‘அஞ்ஜலி: பரமா முத்ரா க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ’’ [அஞ்சலி: பரமாமுத்ரா க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ] என்கிறபடியே பகவத்ப்ரஸாத ஹேதுபூதமான அஞ்ஜலியை ப்ரயோகித்தல், 5 நிஷாத காகாதிகளைப்போலே ரக்ஷகவஸ்து இருந்த இடத்தே வருதல் செய்கையாகிற கேவலகாயிகமாகவும் பற்றினாலும் பலஸித்திக்கு ‡ அழிவில்லை. (௧௩௦) ‘‘ஜ்ஞாநாத்

1. உபாயாந்தரங்கள் - கர்மம் ஜ்ஞாநம் பக்தி முதலிய உபாயங்கள். இவ்வுபாயாந்தரங்களில் நாராயணன் உபேயமும், கர்மாதிகள் உபாயமுமாதல் காண்க. 2. வ்யாவ்ருத்தம் - வேறுபட்டது. 3. உத்தமன் - தன்மையிடம். 4. கரணம் - இந்த்ரியம். 5. நிஷாதன் - வேடன்; இங்கே குஹப்பெருமாள்.

† தாதுபாடம் - திவாதி.

* ‘இழவில்லை’ என்று சில ஸ்ரீகோசங்கள்.

‡ ‘இழவில்லை’ யென்று பாடாந்தரம்.

மோக்ஷ:” [ஜ்ஞாநாந்மோக்ஷ:] என்கிறபடியே ஜ்ஞாநத்தாலே மோக்ஷம் என்கையாலே மாநஸமான பற்றுதலாகக்கடவதென்கை. [1] அதாவது - ஒரு புத்திவிஶேஷம். இந்தப் புத்தி விஶேஷந்தன்னைப் பரந்தபடியிலே விஸ்தரேண அருளிச்செய்தார். ஸ்ரீய:பதிப்படியிலும், “இந்தப் புத்திவிஶேஷமாகிறது - அநந்யார்ஹஶேஷத்வஜ்ஞாநகார்யமாய், இதரோபாயவ்யாவ்ருத்தமாய், பகவத்ரக்ஷகத்வாநுமதிரூபமாய், 2 ஸக்ருத் அநுஷ்டேயமாய், 3 வ்யபிசார விலம்ப விதுரமாய், ஸர்வாதிகாரமாய், 4 நியமஶூந்யமாய், அந்திமஸ்ம்ருதிநிரபேக்ஷமாய், 5 ஸுஶகமாய், யாச்ஞாகர்ப்பமாய், த்ருடாத்யவஸாயரூபமாய் இருப்பதொரு ஜ்ஞாநவிஶேஷம்” என்று அருளிச்செய்தார். ஆகையால், இவ்விடத்தே அதுவும் அநுஸந்தேயம்.

‘இப்படி மாநஸமாத்ரமே அமையுமோ? * “சிந்தையாலும்” இத்யாதிப்படியே 6 த்ரிவித கரணத்தாலும் ஸ்வீகரிக்க வேண்டாவோ?’ என்ன, அருளிச்செய்கிறார்.

மூ.—(கருசு) உபாயம் அவனுகையாலும், இவை நேரே உபாயம் அல்லாமையாலும், இம்மூன்றும் வேணும் என்கிற நிர்ப்பந்தம் இல்லை.

(வ்யா.) ‘உபாயம் அவனுகையாலும்’ என்று தொடங்கி. அதாவது - பலஸித்திக்கு உபாயம் - பற்றப்படுகிற ஈஶ்வரனாகையாலும், கரணத்ரயத்தாலும் உண்டான பற்றுதல்களான இவை 7 ஆபாத

---

1. அதாவது - மாநஸமான பற்றுதலென்பது. 2. ஸக்ருத் - ஒரு முறைதான். அநுஷ்டேயம் - அனுஷ்டிக்கத்தக்கது. 3. வ்யபிசாரம் - பலனை விளைப்பதில் தவறுவது, விலம்பம் - காலதாமஸமாவது, விதுரம் - இல்லாதது. 4. நியமஶூந்யம் - இப்படிப்பட்டவர்தாம் இன்னகாலத்தில் அநுஷ்டிக்கத்தக்கதென்ற நியமம் இல்லாதது. 5. ஸுஶகம் - சுலபமாக அநுஷ்டிக்கத்தக்கது. யாச்ஞாகர்ப்பம் - தன்னுடைய குறையைத் தெரிவித்து இரப்பதைத் தன்னுட்பொருளாகக் கொண்டது: த்ருடாத்யவஸாயம் - த்ருடமான எண்ணம். 6. த்ரிவிதகரணம் - மனோவாக்குக்காயமென்ற மூன்று கரணங்கள். ஸ்வீகரித்தல் - பற்றுதல். 7. ஆபாதப்ரதீதி - ஆழ்ந்து நோக்காமலிருக்கையில் மேலெழுந்தவாறான தோற்றம்.

* திருவாய். சு, ரு, கக.

ப்ரதீதியில் உபாயம்போல் தோற்றிக் கழியுண்டுபோம தொழிய, ஸாக்ஷாத் உபாயம் அல்லாமையாலும், பலஸித்திக்கு அத்யவஸாயாத்மகமாநஸ ஸ்வீகாரம்ஒன்றுமே யமையும்: இம்மூன்றும் வேணு மென்கிற நிர்ப்பந்தம் இல்லை யென்கை. 1 அதவா, 'இப்படி ஒரொன்றிலே ஒதுக்கிச் சொல்லுகிறது என்? த்ரிவிதகரணத்தாலும் பற்றுதலைச் சொன்னாலோ?' என்ன, 'உபாயம்' இத்யாதியாலே அருளிச்செய்கிறாராகவுமாம். அப்போதைக்கும் ஒரொன்றே அமையும்: இம்மூன்றும் வேணுமென்கிற நிர்ப்பந்தம் இல்லை யென்கை. நிர்ப்பந்தம் இல்லை யென்கையாலே, இந்த ஸ்வீகாரம் த்ரிவிதகரணத்தாலும் உண்டானாலும் குறையில்லை யென்னுமிடம் தோற்றுகிறது. "இப்ப்ரபதநம் கரணத்ரயத்தாலும் உண்டாகவுமாம்; ஏககரணத்தாலே உண்டாகவுமாம்; பலஸித்திக்குக் குறையில்லை. அதிகாரபூர்த்திக்குக் கரணத்ரயமும் வேணும். பலஸித்திக்கு ஏககரணமே அமையும்; உபாயபூர்த்திக்கு— ஶ்ரிய:பதித்வமும் வாத்ஸல்யாதிகுணயோகமும் திவ்யமங்கள விக்ரஹமும் அபேக்ஷிதமாயிருக்கிறாப்போலே, அதிகாரபூர்த்திக்குக் கரணத்ரயமும் அபேக்ஷிதமாயிருக்கும்" என்றிறே, பரந்தபடியில் இவர்தாம் அருளிச்செய்தது.

(௧௩௧) "ஸக்ருதேவஹி ஶாஸ்த்ரார்த்த: க்ருதோயம் தாரயேந்நரம்" [ஸக்ருதேவஹி ஶாஸ்த்ரார்த்த: க்ருதோயம் தார்யேந்நரம்] (௧௩௨) "ஸக்ருதேவ ப்ரபந்நாய" [ஸக்ருதேவப்ரபந்நாய] இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே ப்ரபத்தி ஸக்ருத்கரணீயையாயிருக்க, வர்த்தமாநமாகச் சொல்லுகிறது ஏதுக்காக?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(௧௩௭) வர்த்தமாந நிர்த்தேஶம் - ஸத்வம் தலையெடுத்து அஞ்சினபோது அநுஸந்திக்கைக்காக.

---

1. முதல் யோஜநை - மாநஸமாத்ரமேயமையும்: வாசிககாயிகமான பற்றுதல்கள் வேண்டுவனவல்ல வென்பது; 'அதவா' என்பது, யோஜநாந்தரத்தை ஆரம்பிக்கிறாரென்றதைக் காட்டும். இரண்டாவது யோஜநையின் கருத்து - மூன்றும் வேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை; மாநஸமாகப் பற்றுதலின்றி வாசிகமாகப் பற்றினாலுமாம், காயிகமாகப் பற்றினாலுமா மென்பது.

(வ்யா.) 'வர்த்தமாந நிர்த்தேஶம்' என்று தொடங்கி. அதாவது - (௧௩௩) "𑌲𑍋𑌕𑌵𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤 𑌚𑌰𑌣𑍌 𑌶𑌰𑌣𑌂 𑌤𑍇𑌵𑍍𑌰𑌜𑌂 𑌵𑌿𑌭𑍋" [லோகவிக்ராந்த சரணௌ ஶரணந் தேவ்ரஜம்விபோ]* "நின்னடியிணை அடைந்தேன்" † "அடிக்கீழமர்ந்து புகுந்தேன்" 1 என்கிறபடியே சொல்லாதே 'ப்ரபத்யே' என்று 2 வர்த்தமாநமாகச் சொல்லுகிறது - 3 ப்ரக்ருதியோடே யிருக்கிற இவன் ரஜஸ்தமஸ்ஸுக்களாலே கலங்கி 4 உபாயாபாயங்களில் ஏதேனும் ஒன்றிலே அந்வயித்து, பின்னை ஸத்வம் தலையெடுத்து அநுதாபம் பிறந்து பயப்பட்ட காலத்திலே (௧௩௪) "𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌿𑌰𑌿𑌯𑌂 𑌸𑌾𑌤𑍍𑌰 𑌯𑌤𑍍𑌪𑌨𑌃𑌶𑍍𑌶𑌰𑌣𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍" [ப்ராயஶ்சித்திரியம் ஸாத்ர யத்புநஶ்ஶரணம் வ்ரஜேத்] என்கிறபடியே ப்ரபத்தியொழிய அதுக்குப் பரிஹாரம் இல்லாமையாலும், அதுதான் ஸக்ருத் க்ருதமானபின்பு புநஃகரணம் ஆகாமையாலும், பூர்வப்ரபதநத்தை அநுஸந்திக்கைக்காகக் 5 கொழுந்துபடக் கிடக்கிறதென்கை.

இன்னமும் இவ்வர்த்தமாநத்துக்குச் சில ப்ரயோஜநங்களை அருளிச்செய்கிறார்

மூ.—(௧௩௫) 6 உபாயாந்தரங்களில் நெஞ்சுசெல்லாமைக்கும், காலக்ஷேபத்துக்கும் இனிமையாலே விடவொண்ணாமையாலும் நடக்கும்.

(வ்யா.) 'உபாயாந்தரங்களில்' என்று தொடங்கி. அதாவது - 7 பூர்வவாஸனையாலே 8. அவஶமாக உபாயாந்தரங்களிலே மநஸ்ஸு

1. என்கிறபடியே சொல்லாதே-என்கிறபடியே இறந்தகாலமாகச் சொல்லாதே. 2. வர்த்தமாநமாக - நிகழ்காலமாக. 3. ப்ரக்ருதியோடே - சரீரத்தோடே. 4. உபாய அபாயங்களில் - (எம்பெருமானைத்தவிர்த்துக் கர்மம் ஜ்ஞாநம் பக்தி முதலிய) உபாயங்களாகிய (ஆத்மஸ்வரூப யாதாத்ம்யஜ்ஞாநத்துக்குக்) கொத்தையை யுண்டாக்குவனவற்றில். ஏதேனும் ஒன்றிலே அந்வயித்து - ஏதேனுமொன்றைத்தான் உஜ்ஜீவிக்க ஸாதநமென்று மேற்கொண்டு. 5. கொழுந்துபட - மேன்மேலும் இந்தப்ரபத்தி உண்டாகும்படி. 6. வர்த்தமாந நிர்த்தேஶத்துக்குக் கீழ் ஒருகாரணம் அருளிச்செய்து, இங்கு வேறு மூன்றுகாரணங்கள் அருளிச்செய்கின்றார். 7. பூர்வவாஸனை - முன் அநுஷ்டித்த அப்பியாஸம். 8. அவஶமாக - ப்ராமாதிகமாக.

* திருமொ. ௫, ௮, ௧. † திருவாய். ௬, ௧௦, ௧௦.

செல்லாமைக்காகவும், இவ்வநுஸந்தாநத்தாலொழியப் போதுபோக்க அரிதாகையாலே காலக்ஷேபத்துக்காகவும், 1 இதனுடைய ரஸ்யதை யாலே விடமாட்டாமையாலும், இவ்வநுஸந்தாநம் இடைவிடாமல் நடக்கக்கடவதாயிருக்குமென்னகை.

'இங்ஙனன்றிக்கே, பலஸித்திக்குப் பலகாலும் அநுஸந்திக்க வேணுமென்றாலோ?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(கருகூ) பேற்றுக்குப் பலகாலும் வேணு மென்று நினைக்கில் உபாயம் நழுவும்.

(வ்யா.) 'பேற்றுக்கு' என்று தொடங்கி. அதாவது-கீழ்ச்சொன்ன ப்ரயோஜநங்களுக்காக அன்றிக்கே பேற்றுக்கு உறுப்பாகப் பலகாலும் அநுஸந்திக்கவேணு மென்று ப்ரதிபத்திபண்ணில், 2 ஸஹாயாந்தர ஸம்ஸர்க்காஸஹமான ஸித்தோபாயம் சணற்கயிறுகண்ட ப்ரஹ்மாஸ்த்ரம்போலே, 3 தன்னைக்கொண்டு நழுவும் என்கை.

ஆக, பூர்வ வாக்யத்துக்கு அர்த்தம் அருளிச்செய்தாராயிற்று.

இனி, உத்தரவாக்யத்துக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக உபக்ரமிக்கிறார்

மூ.—(கசுO) உத்தரவாக்யத்தாலே 4 ப்ராப்யம் சொல்லுகிறது.

(வ்யா.) 'உத்தர வாக்யத்தாலே ப்ராப்யஞ் சொல்லுகிறது' என்று. ப்ராப்யமாவது - ஸ்ரீய:பதியாய் ஸர்வஸ்வாமியா யிருக்கிற ஸர்வேஶ்வரன் திருவடிகளிற் பண்ணும் கைங்கர்யம்.

5 ப்ராபகவரணாநந்தரம் ப்ராப்யம் சொல்லுகிற இதுக்கு அபிப்ராயம் அருளிச்செய்கிறார்

---

1. இதனுடைய ரஸ்யதை - இந்த த்வயத்தினுடைய போக்யதை. 2. ஸஹாயாந்தர ஸம்ஸர்க்க அஸஹமான - வேறொருதவியின் சேர்க்கையைப் பொறாத. 3. தன்னைக்கொண்டு நழுவும் - (இந்தச்சேதநன் பலஸாதநமாகச் செய்யும் ப்ரபத்திக்குத் தான் விஷயமாக இருந்தாலும்) ஸித்தோபாயமான ஸர்வேஶ்வரன் தான் உபாயமாகுந்தன்மை தோற்றாதேயிருப்பா னென்றபடி; நழுவுதல் - போவதுதெரியாமற் போகை. 4. ப்ராப்யம் - அடையத்தக்கது. 5. ப்ராபக வரணம் - உபாயவரணம்.

மூ.—(கசுக) ப்ராப்யாந்தரத்துக்கு அன்றென்கை.

(வ்யா.) 'ப்ராப்யாந்தரத்துக்கு அன்றென்கை' என்று. அதாவது - பூர்வவாக்யத்தில் ப்ரதிபாதிதமான ஸாதநம் 1 பல சதுஷ்டய ஸாதாரணம் ஆகையாலே, கீழ்ப்பண்ணின ப்ராபகவரணம் 2 ப்ராப்யாந்தரத்துக்கு அன்று என்னுமிடஞ் சொல்லுகை - இப்போது ப்ராப்யம் சொல்லுகிற இதுக்கு ப்ரயோஜநம் என்றபடி.

'ப்ராப்யாந்தரங்களை விட்டு இந்த ப்ராப்யத்தை அபேக்ஷிக்க வேண்டுவான் என்?' என்கிற ஶங்கையிலே அருளிச்செய்கிறார்

மூ.—(கசுஉ) உபாயாந்தரங்களைவிட்டுச் சரமோபாயத்தைப் பற்றினாற்போலே, உபேயாந்தரமான ஐஶ்வர்ய கைவல்யங்களை விட்டு எல்லையான ப்ராப்யத்தை அர்த்திக்கிறது.

(வ்யா.) 'உபாயாந்தரங்களை விட்டு' என்று தொடங்கி. அதாவது - உபாயவரணம் பண்ணுகிற வளவில் 3 அநந்யஶரணத்வரூபமான ஸ்வரூபத்துக்கு அநுகுணமாகக் கர்ம ஜ்ஞாந பக்திகளாகிற உபாயாந்தரங்களை விட்டுச் 4 சரமமான ஸித்தோபாயத்தைப் பற்றினாற்போலே உபேயப்ரார்த்தனை பண்ணுகிற வளவிலும் அநந்யபோக்யத்வரூபமான ஸ்வரூபத்துக்கு அநுகுணமாக உபேயாந்தரமான ஐஶ்வர்ய கைவல்யங்களை விட்டுச் சரமமான ப்ராப்யத்தை 5 அர்த்திக்கிறது என்கை.

நினைவறியும் ஈஶ்வரன்பக்கல் ப்ரார்த்தனை 6 மிகையென்றிருப்பார் பண்ணும் ப்ரஶ்நத்தை அநுவதிக்கிறார்

மூ.—(கசுந) 'இவன் அர்த்திக்கவேணுமோ? ஸர்வஜ்ஞன் இவன் நினைவு அறியானோ?' என்னில்,—

---

1. பலசதுஷ்டயம் - நால்வகைப்பயன். நால்வகையான பயன்களுள் எந்தப்பயனை வேண்டுபவர்களும் இந்தஸித்தோபாயத்தை உபாயமாக வரிக்கலாமாகையால் 'பலசதுஷ்டய ஸாதாரணம்' என்றது. பலசதுஷ்டயமாவன-அபூர்வ ஐச்வர்யமும், இழந்த ஐச்வர்யமும், கைவல்யமும், எம்பெருமான்திருவடிகளுமென்பன. 2. ப்ராப்யாந்தரம் - பலசதுஷ்டயங்களில் எம்பெருமான் திருவடிகளைத்தவிர்த்து மற்றை மூன்றும். 3. அநந்யஶரணத்வம்-எம்பெருமானைத் தவிர்த்து வேறொன்றை உபாயமாகக் கொள்ளாதிருக்கை. 4. சரமமான - கடைசியான, முடிவான. 5. அர்த்திக்கிறது - ப்ரார்த்திக்கிறது. 6. மிகை - அதிகமானது; அநாவசியமானது.

(வ்யா.) 'இவன் அர்த்திக்கவேணுமோ? ஸர்வஜ்ஞன் இவன் நினைவறியானோ? என்னில்', என்று.

அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார்

மூ.—(கஉச) இவன்பாசுரங் கேட்டவாறே திருவுள்ளம் உகக்கும்.

(வ்யா.) 'இவன் பாசுரங்கேட்டவாறே திருவுள்ளமுகக்கும்' என்று. அதாவது – 1 ருக்ணதையாலே சோற்றில் ஆசையற்றுக்கிடந்த ப்ரஜை ரோகந்தீர்ந்து பசிவிளைந்து 'சோறு' என்று அபேக்ஷிக்கும் பாசுரங்கேட்டால் பெற்றதாய் உகக்குமாபோலே, அநாதிகாலம் 2 ப்ராப்யாந்தரப்ராவண்ய மாகிற நோய்கொண்டு 3 இந்த ப்ராப்யத்தில் நசையற்றுக்கிடந்தவன் இதிலே ருசி பிறந்து தன் பக்கலிலே வந்து இத்தை அபேக்ஷிக்கிற பாசுரங்கேட்டவாறே, ஶேஷியான அவன் 4 திருவுள்ளம் உகக்கும்: அதுக்காக அர்த்திக்கிறானித்தனை யென்கை.

இனி, இவ்வாக்யத்துக்கு 5 ப்ரதிபதம் அர்த்தம் அருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமபதத்தை உபாதாநம் பண்ணுகிறார்

மூ.—(கஉரு) ஸ்ரீமதே = பெரியபிராட்டியாரோடே கூடியிருந்துள்ளவனுக்கு.

(வ்யா.) 'ஸ்ரீமதே' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார், 'பெரியபிராட்டியாரோடே கூடியிருந்துள்ளவனுக்கு' என்று. இங்கும் ஸ்ரீஶப்தத்துக்குப் பூர்வவாக்யத்திற் சொன்ன 6 வ்யுத்பத்தித்வயமும் அதில் அர்த்தமும் மதுபர்த்தமான நித்யயோகமும் அநுஸந்தேயம்.

இரண்டிடத்திலும் நித்யயோகம் ஒத்திருக்கச்செய்தே 7 அவ்வவதஶாநுகுணமாக இவளிருக்கும் இருப்பை அருளிச்செய்கிறார்

---

1. ருக்ணதை-நோய்கொண்டவனாயிருக்கை. 2. ப்ராப்யாந்தர ப்ராவண்யம் - எம்பெருமானைத் தவிர வேறுவிஷயங்களில் மனம் ஊன்றியவனாகை. 3. இந்தப்ராப்யத்தில் - எம்பெருமானுடைய கைங்கர்யமாகிற உபேயத்தில், நசையற்று - விருப்பமில்லாமல். 4. திருவுள்ளமுகக்கும் - மனம் மகிழ்வான். 5. ப்ரதிபதம்-பதந்தோறும்; ஒவ்வொரு பதத்துக்கும். 6. வ்யுத்பத்தித்வயமும்-கர்மணிவ்யுத்பத்தி கர்த்தரிவ்யுத்பத்தி என்ற இருவகை வ்யுத்பத்தியும். 7. அவ்வவதஶாநுகுணமாக - அந்தந்தநிலைமைக்கு ஏற்ப.

மூ.—(கசுசு) அவன் உபாயமாமிடத்தில் தான் புருஷகாரமாயிருக்கும்; அவன் ப்ராப்யனுமிடத்தில் தான் ப்ராப்யையுமாய்க் கைங்கர்யவர்த்தகையுமா யிருக்கும்.

(வ்யா.) 'அவன் உபாயமாமிடத்தில்' என்று தொடங்கி. அதாவது-அவன் சேதநர்க்கு அநிஷ்டநிவ்ருத்தி இஷ்ட ப்ராப்திகளுக்கு உபாயமாமிடத்தில் ஸஹாயாந்தரஸம்ஸர்க்கத்தை ஸஹியாமையாலே தான் 1 உபாயபாவத்தில் அந்வயமின்றிக்கே, 2 ஸாபராத சேதநருடைய அபராதங்களைப் பார்த்து அவன் சீறுமளவில் அத்தைஸஹித்து அங்கிகரிக்கும்படியாகப் பண்ணும் புருஷகாரமாயிருக்கும்; அவன் சேதநர்க்குக் 3 கைங்கர்யப்ரதிஸம்பந்திதயா ப்ராப்யனுமிடத்தில் 4 அவனோபாதி கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாய்க்கொண்டு தான் ப்ராப்யையுமாய் இவர்கள் செய்யும் கைங்கர்யத்தை அவன்திருவுள்ளத்திலே ஒன்று பத்தாகப்படுத்தி உகப்பிக்கையாலே, கைங்கர்ய வர்த்தகையுமாயிருக்கு மென்கை. இதுதன்னைப் பரந்தபடியிலே "பூர்வவாக்யத்தில் ஸ்ரீமச்சப்தம்-சேதநருடைய அபராதத்தையும் ஈஸ்வரனுடைய ஸ்வாதந்தர்யத்தையுங் கண்டு, 'இவர்கள் அவனுடைய க்ரோதத்துக்கு விஷயபூதராய் நசித்துப்போகாதே அவனைக்கிட்டி உஜ்ஜீவித்துப்போகவேணும்' என்று ஸாபராதரான சேதநரை ஈஸ்வரனோடே சேர்க்கைக்காக 5 என்றுமொக்க விடாதேயிருக்கும் இருப்பைச் சொல்லுகிறது; இங்குத்தை ஸ்ரீமச்சப்தம் - கைங்கர்யப்ரதிஸம்பந்தித்வத்தைப் பற்றவும், இவர்கள் பண்ணுங் கைங்கர்யத்தை ஈஸ்வரன் திருவுள்ளத்திலே ஒன்று பத்தாகப் படுத்துகைக்காகவும், 6 அநுபவவிச்சேதத்தில் தனக்கு ஸத்தாஹாநி பிறக்கும்படி இருக்கையாலே 7 நிரந்தர ஸம்ச்லேஷத்துக்காகவும், அவனை க்ஷணகாலமும் பிரியாதே ஸர்வகாலமும் 8 ஸம்ச்லிஷ்டையாயிருக்கும் இருப்பைச் சொல்லுகிறது" என்று விஸ்தரேண அருளிச்செய்தார்.

---

1. உபாயபாவம் - உபாயமாயிருக்கை. 2. ஸாபராத சேதநர் - குற்றமுள்ள சேதநர். 3. கைங்கர்யப்ரதிஸம்பந்திதயா - கைங்கர்யத்தை யேற்றுக்கொள்பவனாக என்றபடி. 4. அவனோபாதி - அவனைப்போலே. 5. என்றும் ஒக்க - எப்போதுமாக. 6. அநுபவவிச்சேதம் - அநுபவத்தின் இடையீடு. 7. நிரந்தர ஸம்ச்லேஷம் - இடைவிடாமற் சேர்ந்திருக்கை. 8. ஸம்ச்லிஷ்டை - சேர்ந்திருப்பவள்.

திருமந்த்ரத்தில் உத்தரபதத்துக்கு இவ்வுத்தரவாக்யம் விவரணமா யிருக்கிறபடியை அருளிச்செய்கிறார்

மூ.—(ககூஎ) இதிலே திருமந்த்ரத்தில் சொன்ன ப்ராப்யத்தை விஶதமாக அநுஸந்திக்கிறது.

(வ்யா.) 'இதிலே' என்று தொடங்கி. அதாவது-கைங்கர்யப்ரதிஸம்பந்தி [1] ஒரு மிதுநமென்னுமிடத்தை [2] ஶாப்தமாக ப்ரதிபாதிக்கிற இந்த வாக்யத்திலே, திருமந்த்ரத்தில் 'நாராயணாய' என்று கைங்கர்யப்ரதிஸம்பந்தி ஒருமிதுந மென்னுமிடம் ஆர்த்தம் ஆகையாலே அவிஶதமாகச்சொன்ன ப்ராப்யத்தை விஶதமாக அநுஸந்திக்கிறதென்கை. அங்கு, 'நாராயணனுக்கே அடிமைசெய்யப்பெறுவேனாக வேணும்' என்கிற இவ்வளவொழிய, 'அடிமைகொள்ளுமவன் ஶ்ரீமானாகவேணும்' என்றும், 'அடிமைசெய்யுமவன் நிர்மமனாக வேணும்' என்றும் சொல்லாமையாலும், அவை இரண்டும் இங்குச் சொல்லுகையாலு மிறே, அந்தப்பதத்துக்கு இவ்வாக்யம் விவரணமாயிற்று.

'இம்மிதுநத்துக்கே அடிமைசெய்யவேணும் என்கிற நிர்ப்பந்தந்தான் என்?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(ககூஅ) இளையபெருமாளைப்போலே இருவருமான சேர்த்தியிலே அடிமைசெய்கை முறை

(வ்யா.) 'இளையபெருமாளைப்போலே' என்று தொடங்கி. அதாவது-(கஙரு) "𑌭𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌸𑌹 𑌵𑍈𑌦𑍇𑌹𑍍𑌯𑌾 𑌗𑌿𑌰𑌿𑌸𑌾𑌨𑍁𑌷𑍁 𑌰𑌂𑌸𑍍𑌯𑌤𑍇 - 𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑌃 𑌸𑍍𑌵𑌪𑌤𑌶𑍍𑌚 𑌤𑍇" [பவாம்ஸ்து ஸஹவைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே - அஹம்ஸர்வம்கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதஸ்சதே] என்று பெருமாளும் பிராட்டியுமான சேர்த்தியிலே அடிமைசெய்த இளையபெருமாளைப்போலே இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்கை - இவ்வாத்மாவுக்கு ஸ்வரூப

---

1. ஒருமிதுனம் - ஒரு தம்பதி; அவர்களாவார் - நாராயணனும், ஸ்ரீ மஹாலக்ஷ்மியும். 2. ஶாப்தம் - ஶப்தஶக்தியினாலே தோன்றும் பொருள்.

ப்ராப்தமென்கை. மிதுநஶேஷத்வம் ஸ்வரூப மானால் மிதுநகைங்கர்ய மிறே ஸ்வரூபப்ராப்தம்.

இன்னமும் அச்சேர்த்தியிலே அடிமைசெய்யுமளவி லுள்ள வாசியை அருளிச்செய்கிறார்

மூ.—(கசுகூ) அடிமைதான் ஸித்திப்பதும் ரஸிப்பதும் அச்சேர்த்தியிலே.

(வ்யா.) 'அடிமைதான்' என்று தொடங்கி. அதாவது-ஸ்வதந்த்ரனான ஈஶ்வரன் உபேக்ஷியாமல் கைங்கர்யம் கொண்டருளும்படி பண்ணுமவள் இவளாகையாலே (கஙசு) "ஸீதாமுவாச" [ஸீதாமுவாச] (கஙஎ) "ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்த மிதம்வசந மப்ரவீத்" [ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்த மிதம்வசந மப்ரவீத்] என்று இவள் முன்னிலையாகத் தம்முடைய ஸ்வரூபாநுரூபமான அடிமையை அபேக்ஷித்துப் பெற்ற இளையபெருமாளைப்போலே இவன் ப்ரார்த்திக்கிற அடிமைதான் ஸித்திப்பதும், மாதாபிதாக்கள் இருவருமான சேர்த்தியிலே ஶுஶ்ரூஷைபண்ணும் புத்ரனுக்குப்போலே செய்கிற அடிமைதான் ரஸிப்பதும், பிராட்டியும் அவனுமான சேர்த்தியிலே யென்கை.

இனி, இரண்டாம் பதத்தை உபாதாநம் பண்ணுகிறார்

மூ.—(கஎ0) நாராயணாய = ஸர்வஶேஷியாயுள்ளவனுக்கு.

(வ்யா.) 'நாராயணாய' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார், 'ஸர்வஶேஷியாயுள்ளவனுக்கு' என்று. நாராயணத்வம் உபயவிபூதிநாதத்வ மாகையாலே 'ஸர்வஶேஷியாயுள்ளவனுக்கு' என்கிறார். கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாவான் ஶேஷியிறே.

கைங்கர்யந்தான் 1 அநுபவஜநித ப்ரீதிகாரிதமாகையாலும், அந்த ப்ரீதிதான் 2 அநுபாவ்ய விஷயாதீநையாகையாலும், அநுபாவ்யவிஷயம் சொல்லவேண்டுகையாலே அருளிச்செய்கிறார்

1. அநுபவஜநித ப்ரீதிகாரிதம் - பகவானுடைய குணம் திருமேனி என்ற இவைகளை அநுபவிப்பதனால் தோன்றுகின்ற ப்ரீதியினாலே செய்யப்பட்டது
2. அநுபாவ்யம் - அநுபவித்தற்கு உரியது.

மூ—(௧௭௧) இதிலே திருமேனியையும் குணங்களை யும் சொல்லும்.

(வ்யா.) 'இதிலே திருமேனியையும் குணங்களையும் சொல்லும்' என்று. அதாவது - கைங்கர்யப்ரதிஸம்பந்தியைச் சொல்லுகிற இப்பதத்திலே, கைங்கர்யத்துக்குப் [1] பூர்வபாவியாயிருக்கும் அநுபவத்துக்கு விஷயமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், கல்யாண குணங்களையும் சொல்லும் என்கை.

(௧௫௮) "𑌸𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿" [ஸதாபஶ்யந்தி] என்றும், (௧௫௯) "𑌸𑍋𑌽𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌕𑌾𑌮𑌾𑌨𑍍" [ஸோஶ்நுதே ஸர்வாந்காமாந்] என்றும் இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே திவ்யமங்கள விக்ரஹமும் கல்யாணகுணங்களும், (௧௬௦) "𑌰𑌸𑌂 𑌹𑍍𑌯𑍇𑌵𑌾𑌯𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑍀 𑌭𑌵𑌤𑌿" [ரஸம்ஹ்யேவாயம்லப்த்வாநந்தீபவதி] என்கிற ஸ்வரூபத்தோபாதி கைங்கர்யவர்த்தகங்களுமாய்ப் போக்யங்களுமாயிறே யிருப்பது; 'குணங்கள்' என்று ஸாமாந்யேந சொல்லுகையாலே ஜ்ஞாநஶக்த்யாதி குணங்களோடு வாத்ஸல்யாதி குணங்களோடு ஸௌர்யாதி குணங்களோடு வாசியற எல்லாக் குணங்களும் அநுபாவ்யங்களா யிருக்கையாலே, பூர்வவாக்யத்தில் நாராயணபதத்தில் உபாயவரணத்துக்கு [2] உபயுக்ததயா அநுஸந்தேயங்களான குணவிஶேஷங்களும் இப்பதத்தில் ப்ராப்யதயா அநுஸந்தேயங்கள்; ஆஶ்ரயமான ஸ்வரூபத்துக்கு [3] ஆகாரத்வயமுண்டாயிருக்கிறாப்போலே, ஆஶ்ரயிகளான குணவிஶேஷங்களுக்கும் ஆகாரத்வயமும் உண்டாயிறே யிருப்பது. இவையெல்லாம் பரந்தபடியிலே அருளிச்செய்தார்.

இனி, இப்பதத்துக்குத் தாத்பர்யம் இன்னதிலே என்கிறார்

மூ—(௧௭௨) ஶேஷித்வத்திலே நோக்கு.

(வ்யா.) 'ஶேஷித்வத்திலே நோக்கு' என்று. அதாவது - [4] அநுபாவ்யத்வம் அவிஶிஷ்டம் ஆகையாலே ஸகலகுணங்களும் ப்ரதிபாதி

---

1. பூர்வபாவி - முன்னம் உண்டாயிருப்பது. 2. உபயுக்ததயா - உபயோகமுள்ளதா யிருத்தலினாலே. 3. ஆகாரத்வயம் - உபாயமாக இருத்தலோடு உபேயமாயு மிருக்கை. 4. அநுபாவ்யத்வம் அவிஶிஷ்டம் - அநுபவித்தற்கு ஏற்றவையாதலென்பது (எல்லாக் குணங்கட்கும்) ஒத்தவை; அவிஶிஷ்டம் - ஒன்றற்கு விஶேஷமாகாதது: எல்லாவற்றிற்கு முள்ளதென்றபடி.

தமாயிருந்ததேயாகிலும், 1 சதுர்த்த்யம்ஶத்திற்சொல்லுகிற 2 வ்ருத்தி விஶேஷத்துக்கு மிகவும் அந்தரங்கமாயிருப்பது ஶேஷித்வமாகை யாலே, அதிலே இப்பதத்துக்கு நோக்கு என்கை.

இந்த ஶேஷித்வ 3 கதநத்துக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார்

மூ.—(௧௭௩) ப்ராப்தவிஷயத்தில் கைங்கர்யமிறே ரஸிப்பது.

(வ்யா.) 'ப்ராப்தவிஷயத்தில் கைங்கர்யமிறே ரஸிப்பது' என்று. அதாவது - (௧௪௧) "𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑌰𑌵𑌶𑌂 𑌦𑍁𑌃𑌖𑌂" [ஸர்வம்பரவஶம் து:கம்] என்றும், (௧௪௨) "𑌸𑍇𑌵𑌾 𑌶𑍍𑌵𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃" [ஸேவாஶ்வவ்ருத்தி:] என்றும் சொல்லுகிறபடியே நிஷித்தமான அப்ராப்த விஷயத்தில் கைங்கர்யம்போலன்றிக்கே, (௧௪௩) "𑌛𑌾𑌯𑌾𑌵𑌾 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌨𑍁𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍" [சாயாவாஸத்வ மநுகச்சேத்] என்றும், (௧௪௪) "𑌸𑌾𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌨 𑌸𑍇𑌵𑍍𑌯𑌤𑍇" [ஸாகிமர்த்தம்நஸேவ்யதே] என்றும் சொல்லுகிறபடியே, 4 விஹிதமான ப்ராப்தவிஷயத்திற் பண்ணுங் கைங்கர்யமிறே, இவனுக்கு ரஸிப்பதென்கை.

இனி, இப்பதத்தில் விபக்த்யம்ஶத்துக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார்

மூ.—(௧௭௪) இந்தச் சதுர்த்தி கைங்கர்யத்தை ப்ரகாஶிப்பிக்கிறது.

(வ்யா.) 'இந்தச்சதுர்த்தி' என்று தொடங்கி. அதாவது-ஶேஷத்வ ஜ்ஞாநகார்யமான உபாயபரிக்ரஹத்துக்கு அநந்தரம் ப்ராப்தமாயுள்ளது ஆகையாலே, தாதர்த்த்ய ப்ரதிபாதகம் அன்றிக்கே இந்தச் சதுர்த்தி பரிக்ரஹித்த உபாயத்தினுடைய பலமான கைங்கர்யத்தை ப்ரகாஶிப்பிக்கிறதென்கை. கைங்கர்யத்தை ப்ரகாஶிப்பிக்கையாவது-கைங்கர்ய ப்ரார்த்தனையை ப்ரதிபாதிக்கை. கைங்கர்யமாவது - பகவந் முகவிகாஸ ஹேதுவான வ்ருத்திவிஶேஷம். இக் கைங்கர்யந்தான் (௧௪௫) "𑌏𑌤𑌤𑍍𑌸𑌾𑌮 𑌗𑌾𑌯𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑍇" [எதத்ஸாமகாயந்நாஸ்தே] என்றும், (௧௪௬) "𑌨𑌮 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌵𑌾𑌦𑌿𑌨𑌃" [நமஇத்யேவவாதிந:] என்

1. சதுர்த்த்யம்ஶம் - நாராயணாய என்றவிடத்து உள்ள சதுர்த்தியின் பகுதி. 2. வ்ருத்திவிஶேஷம் - கைங்கர்யம். 3. கதநம் - சொல்லுகை. 4. விஹிதம் - விதிக்கப்பட்டது.

றும், (கசஎ) "யெநயெநயாதாகூவதி தெநதெநஸஹகூவதி" [யேநயேநதாதாகச்சதி தேநதேநஸஹகச்சதி] என்றும் இத்யாதிகளில் சொல்லுகிறபடியே வாசிககாயிகரூபமா யிருக்கும்.

'இக்கைங்கர்யம் 1 ப்ரார்த்தநீயமாகில் காதாசித்கமாகாதோ?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(கஎரு) கைங்கர்யந்தான் நித்யம்.

(வ்யா.) 'கைங்கர்யந்தான் நித்யம்' என்று. அதாவது-ஶேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபமாகையாலும், (கசஅ) "அகிஞ்சித்கரஸ்ய ஶேஷத்வாநுபபத்தி:" [அகிஞ்சித்கரஸ்ய ஶேஷத்வாநுபபத்தி:] என்கிறபடியே 2 கிஞ்சித்காராபாவத்தில் அதுதான் அநுபபந்நமாகையாலும், கைங்கர்யம் ஆத்மாவுக்கு நித்யமென்கை. ஆகையாலிறே, (கசகூ) "நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி" [நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி] என்றும், (கரு௦) "நித்யகிங்கரோபவாநி" [நித்யகிங்கரோபவாநி] என்றும் ஆசார்யர்கள் அருளிச்செய்தது.

'நித்யமாயிருக்குமாகில் ப்ரார்த்திக்கவேணுமோ?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(கஎசு) நித்யமாக ப்ரார்த்தித்தே பெறவேணும்.

(வ்யா.) 'நித்யமாக ப்ரார்த்தித்தே பெறவேணும்' என்று. அதாவது - 3 விஷயம் *உத்துங்கமா யிருக்கையாலும், 4 ஆஶ்ரயபூதனான சேதநன் அத்யந்த பரதந்த்ரனா யிருக்கையாலும், ப்ரார்த்தநாவிஶேஷம் இல்லாதபோது கைங்கர்யம் ஸித்தியாமையாலும், நித்யமாக ப்ரார்த்தித்தே பெறவேணும் என்கை.

இது நித்யப்ரார்த்தநீயம் ஆகைக்கு 5 நிதாநத்தை அருளிச்செய்கிறார்

---

1. ப்ரார்த்தநீயம் - ப்ரார்த்தித்தற்குஉரியது. 2. கிஞ்சித்கார அபாவத்தில் - கைங்கர்யஞ் செய்யாதபோது. அதுதான் - ஶேஷத்வம்தான், அநுபபந்நம் - கூடாது. 3. விஷயம் உத்துங்கம் - கைங்கர்யத்துக்கு விஷயமான. ஈச்வரன் ஸர்வஸ்மாத்பரன். 4. ஆஶ்ரயபூதன் - கைங்கர்யத்துக்கு ஆஶ்ரயமானவன்: கர்த்தாவானவனென்றபடி. 5. நிதாநம் - காரணம்.

* 'உத்துங்கதத்த்வம்' என்று சில ஸ்ரீகோசங்கள்.

மூ.—(கஎஎ) ஶேஷிக்கு அதிஶயத்தை விளைக்கை ஶேஷபூதனுக்கு ஸ்வரூபலாபமும், ப்ராப்யமும்.

(வ்யா.) 'ஶேஷிக்கு' என்று தொடங்கி. அதாவது - (கருக) "நாகிஞ்சித்குர்வதஶ்ஶேஷத்வம்" [காகிஞ்சித்குர்வதஸ்ஶேஷத்வம்] என்கிறபடியே ஶேஷிக்கு அதிஶயகரமல்லாத வஸ்துவுக்கு ஶேஷத்வம் இல்லாமையாலே, ஶேஷியான ஈஸ்வரனுக்குத் தன்னுடைய 1 வ்ருத்தி விஶேஷங்களாலே ப்ரீதிரூபமான அதிஶயத்தை விளைக்கை ஶேஷபூதனானவனுக்குத் தன் ஸ்வரூபலாபமுமாய், அவனுடைய முகோல்லாஸாநுபவத்துக்கு உறுப்பாயிருக்கையாலே ப்ராப்யமுமா யிருக்குமென்கை. ஆகையாலே, நித்யப்ரார்த்தநீயமாயிருக்குமென்று கருத்து.

அநந்தரம், சரமபதத்தை உபாதாநம் பண்ணுகிறார்

மூ.—(கஎஅ) நமஃ = கைங்கர்யத்தில் களையறுக்கிறது.

(வ்யா.) 'நமஃ' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார், 'கைங்கர்யத்தில் களையறுக்கிறது' என்று. அதாவது - நமஶ்ஶப்தம் ஸாமாந்யேந அஹங்கார மமகாரங்களைக் கழிக்கையாலே, திருமந்த்ரத்தில் மத்யமபதமான நமஶ்ஶப்தம்போலே ஸ்வரூப உபாய புருஷார்த்த விரோதிகள் மூன்றையுங் கழிக்க வற்றா யிருந்ததேயாகிலும், இங்கு அங்ஙனன்றிக்கே, 2 கைங்கர்யப்ரார்த்தநாநந்தரோக்தம் ஆகையாலே, இந்தக் கைங்கர்யத்தில் விரோதியைக் கழிக்கிறது என்கை.

'கைங்கர்யத்துக்குக் களை எது?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(கஎகூ) களையாவது — தனக்கென்னப் பண்ணுமது.

(வ்யா.) 'களையாவது தனக்கென்னப்பண்ணுமது' என்று. தனக்கென்னப் பண்ணுகையாவது - (கருஉ) "போக்தாஹம் மமபோகோயம்" [போக்தாஹம் மமபோகோயம்] என்கிறபடியே, இத்தைத் தன்னுடைய 3 ரஸத்துக்கு உறுப்பாக நினைத்துப் பண்

1. வ்ருத்திவிஶேஷம் - கைங்கர்யம். 2. கைங்கர்யப்ரார்த்தநா - கைங்கர்ய ப்ரார்த்தனைக்கு, அநந்தரம் - பின்பு, உக்தம் - சொல்லப்பட்டது. 3. ரஸத்துக்கு - ஸந்தோஷத்துக்கு.

ணுகை; பகவந்முகவிகாஸஹேது வாகையாலே இது நமக்கு ஆதரணீயம் என்கிற ப்ரதிபத்தி ஒழிய, இதில் போக்த்ருத்வ ப்ரதிபத்தியும் 1. மதீயத்வப்ரதிபத்தியும் நடக்குமாகில், அபுருஷார்த்தமாயிறே இருப்பது.

இன்னமும் இந்தக் கைங்கர்யப்ராப்திக்கு விரோதிகளானவையும் இதிலே தள்ளுண்ணுமென்கிறார்

மூ.—(௧௮௦) இதிலே அவித்யாதிகளும் கழியுண்ணும்.

(வ்யா.) 'இதிலே அவித்யாதிகளும் கழியுண்ணும்' என்று. அதாவது - அஹங்கார மமகார நிவ்ருத்தியைப் ப்ரார்த்திக்கிற இந்நமஸ்ஸிலே (௧௫௩) "𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑌾 𑌅𑌸𑍍𑌵𑍇 𑌸𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌯𑌾 𑌮𑌤𑌿𑌃 । 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑌰𑍁𑌸𑌂𑌭𑍂𑌤𑌿𑌬𑍀𑌜𑌮𑍇𑌤𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌧𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂" [அநாத்மந்யாத்மபுத்திர்யா அஸ்வேஸ்வமிதியாமதி: — அவித்யாதருஸம்பூதிபீஜமேதத்த்விதாஸ்திதம்] என்கிறபடியே 2. அநாத்மநீ ஆத்மபுத்யாதிகளை வடிவாகவுடைத்தாய்க் கர்மோத்பத்திகாரணமாயிருந்துள்ள 3 அவித்யையும், தத்கார்யமான கர்மங்களும், தத்கார்யமாய்வரும் ப்ரக்ருதி ஸம்பந்தமும் எல்லாம் கழியுண்ணும் என்கை.

ஆகையிறே, த்வயவிவரணமான கத்யத்திலே நமஸ்ஸப்தார்த்தத்தை அநுஸந்தித்து அருளுகிறவளவில் (௧௫௪) "𑌮𑌨𑍋𑌵𑌾𑌕𑍍𑌕𑌾𑌯𑍈𑌃" [மனோவாக்காயை:] இத்யாதி சூர்ணையாலே, அக்ருத்யகரணாதி அகிலகர்மநிவ்ருத்தியையும் (௧௫௫) "𑌅𑌨𑌾𑌦𑌿𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤" [அநாதிகாலப்ரவ்ருத்த] இத்யாதிசூர்ணையாலே அவித்யா நிவ்ருத்தியையும், (௧௫௬) "𑌮𑌦𑍀𑌯𑌾𑌨𑌾𑌦𑌿" [மதீயாநாதி] இத்யாதி சூர்ணையாலே ப்ரக்ருதிஸம்பந்தநிவ்ருத்தியையும் பாஷ்யகாரர் ப்ரார்த்தித்தருளிற்று.

ஆனாலும், இதுக்குப் ப்ரதாநார்த்தம் கைங்கர்யத்தில் ஸ்வப்ரயோஜந நிவ்ருத்தி யாகையாலே, அத்தை உபபாதிக்கிறார் மேல்.

அதில் ப்ரதமத்திலே, 'கைங்கர்யம் பண்ணும்போது தான் எப்படி யாகவேணும்?' என்ன, அருளிச்செய்கிறார்.

மூ.—(௧௮௧) * "உனக்கே நாமாட்செய்வோம்" என்னும்படியே ஆகவேணும்.

1. மதீயத்வ ப்ரதிபத்தி - எனது என்கிற எண்ணம். 2. அநாத்மநி - ஆத்மாவல்லாத உடம்பில். ஆத்மபுத்தி - ஆத்மாவென்கிற எண்ணம். 3. அவித்யை - அஜ்ஞாநம்.

* திருப்பாவை - ௨௯.

(வ்யா.) * ' "உனக்கே நாமாட்செய்வோம்" என்னும்படியேயாக வேணும்' என்று. அதாவது - கைங்கர்யம் பண்ணுமளவில் 'உனக்கே நாமாட்செய்வோம்' என்று 'உனக்கும் எங்களுக்குமா யிருக்கும் இருப்புத்தவிர்ந்து, உனக்கேயுகப்பாக நாங்கள் அடிமைசெய்யவேணும்' என்கிறபடியே, ஶேஷிக்கே உகப்பாகப் 1 பண்ணவேணு மென்கை. † "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே" என்றிறே, ஆழ்வாரும் அருளிச்செய்தது.

இனி, இந்தக் கைங்கர்யத்துக்கு விக்நங்களை அருளிச்செய்கிறார்

மூ.—(கஅஉ) ஸௌந்தர்யமும் அந்தராயம்; கீழ்ச் சொன்ன கைங்கர்யமும் அப்படியே.

(வ்யா.) 'ஸௌந்தர்யமும்' இத்யாதி வாக்யத்வயத்தாலே. அதாவது- அவனுடைய 2 விக்ரஹஸௌந்தர்யமும் 3 சித்தாபஹாரியாய்க் கைசோரப்பண்ணுகையாலே, கைங்கர்யத்துக்கு விக்நம்; இந்நமஸ்ஸுக்குக் கீழே சதுர்த்தியிற்சொன்ன கைங்கர்யமும் 4 அபிமதவிஷயபரிசர்யை போலே 5 ஸ்வரஸத்துக்கு உடலாயிருக்கையாலே, அவனுடைய முகமலர்த்தியே ப்ரயோஜநமாக ‡ இருக்குமதுக்கு 6 அதுவும் விக்நமென்கை.

7 இப்படியாகையால், இவ்விரோதி நிவ்ருத்தி ப்ரார்த்தனை இடைவிடாமல் நடக்கும்படியை அருளிச்செய்கிறார்

மூ.—(கஅங) கைங்கர்ய ப்ரார்த்தனைபோலே இப்பதத்தில் ப்ரார்த்தனையும் என்று முண்டு.

(வ்யா.) 'கைங்கர்ய ப்ரார்த்தனைபோலே' என்று தொடங்கி. அதாவது - சதுர்த்தியிற் சொல்லுகிற கைங்கர்யப்ரார்த்தனை 8. காதாசித்கமன்றிக்கே நித்யமாய்ச் செல்லுமாபோலே, இப்பதத்திற்

1. 'பண்ணவேணும்' என்பதற்கு முன்பு 'அடிமைத்தொழிலை' என்று வருவித்துக்கொள்க. 2. விக்ரஹ ஸௌந்தர்யம் - திருமேனியின் அழகு. 3. சித்தாபஹாரியாய் - மனத்தைக் கவர்வதாய். 4. அபிமதவிஷயம் - தனக்கு இஷ்டையான ஸ்திரீ முதலியன. 5. ஸ்வ ரஸத்துக்கு - தன்னுடைய மகிழ்ச்சிக்கு. 6. அதுவும் - பகவத் கைங்கர்யமும். 7. இப்படியாகையால் - தன்னுகப்புக்காகப் பண்ணுங் கைங்கர்யமும் ஸ்வப்ரீதிக்குக் காரணமான பகவத் ஸௌந்தர்யமும் கேவலம் பகவந்முகோல்லாஸார்த்தமாகச் செய்யுங் கைங்கர்யத்துக்கு விரோதியாகையாலே. 8. காதாசித்கம் - எப்போதாவது ஒருகாலுண்டாவது.

* திருப்பாவை - உகூ. ‡ 'உடையவனுக்கு' என்றும் பாடமுண்டு.

† திருவாய் - உ, கூ, ச.

சொல்லுகிற கைங்கர்யவிரோதி நிவ்ருத்தி ப்ரார்த்தனையும், இங்கிருக்கும் காலத்தோடு 1 ப்ராப்யபூமியிற் போன காலத்தோடு வாசியற எல்லாக்காலமும் நடக்கக்கடவதாயிருக்கு மென்கை.

2. 'கந்தல் கழிந்த அந்நிலத்திலும் 3 ஸ்வபோக்த்ருத்வ உதயம் உண்டாமோ?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(கஅச) "மருந்தே நங்கள்போகமகிழ்ச்சிக்கு" என்று நின்றதிறே.

த்வயப்ரகரணம் முற்றிற்று.

பிள்ளைலோகாசாரியார் திருவடிகளே சரணம்.

(வ்யா.) '"மருந்தே நங்கள்போகமகிழ்ச்சிக்கு" என்று நின்றதிறே' என்று. அதாவது - உன்னுடைய அநுபவத்தாலே எங்களுக்கு வரும் ஆநந்தத்துக்கு ஸ்வபோக்த்ருத்வபுத்தியை விளைத்து, ஸ்வரூபத்தை அழியாதபடி 4 ஸாத்மிப்பிக்கும் 5 பேஷஜமானவனே! என்று நித்யஸூரிகள்பேசும் பாசுரமாகச் சொல்லாநின்றதிறே யென்கை. ஆகையால், அவ்விஷய வைலக்ஷண்ய ப்ரயுக்தமாய் வரும் ஸ்வபோக்த்ருத்வபுத்தி அங்கும் விளைகையாலே, இப்பதத்தில் ப்ரார்த்தனை என்றுமுண்டு என்னுமிடம் வித்த மென்றதாயிற்று. ஆகையிறே முக்தர்க்கு லக்ஷணம் சொல்லுகிறவிடத்திலே (கடுஎ) "நமஇத்யேவ வாதிநः" [நமஇத்யேவவாதிநः] என்றது.

ஆக, புருஷகாரத்தையும், 6 தந்நித்யயோகத்தையும், 7 ததுத்பாவிதமான வாத்ஸல்யாதி குணங்களையும், அந்தக் குணப்ரகாசகமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், குணவிக்ரஹ விசிஷ்ட வஸ்துவினுடைய உபாயத்வத்தையும், அவ்வுபாய ஸ்வீகாரத்தையும், தத்பலமான கைங்கர்யத்துக்கு ப்ரதிஸம்பந்தி ஒருமிதுந மென்னுமத்தையும், அவ்வஸ்துவினுடைய ஸர்வசேஷித்வத்தையும், தத்விஷய கைங்கர்யத்தையும், கைங்கர்யவிரோதி நிவ்ருத்தியையும் சொல்லிற்றாயிற்று.

த்வயப்ரகரண வ்யாக்யாநம் முற்றிற்று.

பெரியசீயர் திருவடிகளே சரணம்.

---

1. ப்ராப்யபூமி - பரமபதம். 2. கந்தல் - ப்ராக்ருதஸம்பந்தம். 3. ஸ்வபோக்த்ருத்வம் - பகவத்ஸௌந்தர்யத்தாலும் கைங்கர்யத்தாலும் உண்டாகும் மகிழ்ச்சியை யநுபவிப்பவனாகை. 4. ஸாத்மிப்பிக்கும் - ஸ்வபோக்த்ருத்வபுத்தி வரவொட்டாமல் செய்யும். 5. பேஷஜம் - மருந்து. 6. தந்நித்யயோகம் - லக்ஷ்மியின் நித்யமான சேர்த்தி. 7. தத் உத்பாவிதம் - அந்தலக்ஷ்மியால் (எம்பெருமான் சீற்றங்கொள்ளும்போது) உண்டாக்கப்படுவது.

முமுக்ஷுப்படி

சரமஶ்லோகப்ரகரணம்.

வ்யாக்யாந அவதாரிகை.

மத்யமரஹஸ்யமான த்வயத்தினுடைய அர்த்தத்தை அருளிச்செய்தஅநந்தரம் அதில் பூர்வவாக்யத்திற் சொல்லுகிற உபாயவரணம் 1 ஸர்வேஶ்வரன் தானே விதிக்கையாலே தத்ப்ரிமதமென்னுமத்தையும் வரணாங்கமான ஸாதநாந்தர பரித்யாகத்தையும் 2 வரணத்தில் ஸாதநத்வபுத்திராஹித்யத்தையும் 3. ஶாப்தமாகப் பூர்வார்த்தத்தாலே ப்ரதிபாதிக்கையாலும், உத்தரவாக்யத்திற் சொல்லுகிற கைங்கர்யத்துக்குப் 4 பூர்வபாவியான ப்ராப்திப்ரதிபந்தகஸகலபாப விமோசநத்தையும் உத்தரார்த்தத்தாலே ஶாப்தமாக ப்ரதிபாதிக்கையாலும், த்வயத்துக்கு விவரணமாய்ப் 5 பஞ்சம வேதஸாரபூத கீதோபநிஷத் தாத்பர்யமாய்ச் சரமரஹஸ்யமாயிருந்துள்ள சரமஶ்லோகத்தினுடைய அர்த்தத்தை ஸம்ஶயவிபர்யயமற அருளிச்செய்கிறார்.

இதில் அர்த்தம் கேட்கைக்காக விறே, எம்பெருமானார் பதினெட்டுப்பர்யாயம் திருக்கோட்டியூர்நம்பிபக்கல் எழுந்தருளிற்று.

நம்பிதாமும் இதில் அர்த்தத்தினுடைய கௌரவத்தையும் இதுக்கு அதிகாரிகள் இல்லாமையையும் பார்த்திறே, இவருடைய ஆஸ்திக்யஆதர பரீக்ஷார்த்தமாகப் பலகால் நடந்து துவளப்பண்ணிச் சூளுறவுகொண்டு 6 மாஸோபவாஸங்கொண்டு அருமைப்படுத்தி அருளிச்செய்தருளிற்று.

---

1. ஸர்வேஶ்வரன் தானே விதிக்கையாலே - வேதபுருஷனைக் கொண்டு சொல்வியாமல், விபவாவதாரமான க்ருஷ்ணனாய் வந்து தானே 'மாமேகம்ஶரணம் வ்ரஜ' என்று விதித்தலாலே. தத்ப்ரிமதம் - அந்தப் பகவானுக்கு இஷ்டமானது. 2. வரணத்தில் ஸாதநத்வபுத்தி ராஹித்யம் - எம்பெருமானை உபாயமாக வரிக்கும்போது, அவ்வெம்பெருமான்தான் உபாயமென்று எண்ணாமல் அவ்வெம்பெருமானைப் பற்றுவது உபாயமென்று நினைக்கிற நினைவு தவிர்கை. 3. ஶாப்தமாக - குறிப்புப்பொருளாகத் தோற்றுவிக்காமல் சப்தஶக்தியாலேயே. 4. பூர்வபாவி - முன்னே வரக்கூடியது. 5. பஞ்சமவேதம் - ஸ்ரீ மஹாபாரதம். 6. மாஸோபவாஸங் கொண்டது - எம்பெருமானார் மூலமாகக் கூரத்தாழ்வானை யென்க.

1 நிஷ்க்ருஷ்ட ஸத்வநிஷ்ட்டனாய், 2 பரமாத்மநிரக்தனாய், அபர மாத்மநி வைராக்யமுடையனாய், ப்ரமாணபரதந்த்ரனாய், 3 பகவத் வைபவம் ஶ்ருதமானால் அது உபபந்ந மென்னும்படியான 4 விஸ்ரம்ப பாஹுள்யமுடையனாய், ஆஸ்திகஅக்ரேஸரனாயிருப்பானொருவனுண் டாகில் அவன் இந்த ஶ்லோகார்த்தஶ்ரவண அநுஷ்டாநத்துக்கு அதி காரி: ஆகையாலே, அதிகாரிதுர்ல்லபத்தாலும் அர்த்தகௌரவத்தா லும் இத்தை வெளியிடாதே மறைத்துக்கொண்டு போந்தார்கள், எம் பெருமானாருக்கு முன்புள்ளார்; ஸம்ஸாரிகள் துர்க்கதிகண்டு பொறுக்க மாட்டாதபடி க்ருபை கரைபுரண்டிருக்கையாலே, அர்த்தத்தின் சீர்மைபாராதே அநர்த்தத்தையே பார்த்து வெளியிட்டருளினார், எம் பெருமானார். 5

அப்படி உபதேஶித்துவிடுகிறமாத்ரமு மின்றிக்கே, இவ்வர்த்த த்தை எல்லாரும் அறிந்து உஜ்ஜீவிக்கவேணு மென்னும் பரமக்ருபை யாலேயிறே, இதுதன்னைப் பலப்ரபந்தங்களிலும் ஸங்க்ரஹ விஸ்தர ரூபேண இவர் அருளிச்செய்தது. மற்றுள்ள ப்ரபந்தங்கள் எல்லா வற்றிலும்போ லன்றிக்கே ஸ்த்ரீபாலர்களுக்கும் அதிகரிக்கலாம்படி தெளிய அருளிச்செய்தது, இப்ப்ரபந்தத்திலேயிறே.

அவதாரிகை முற்றிற்று.

இதில் ப்ரதமத்திலே இந்த ஶ்லோகார்த்தத்தினுடைய கௌர வத்தை எல்லாருடைய நெஞ்சிலும் படுத்துகைக்காக இதுதனக் குச் சரமஶ்லோகமென்று திருநாமமாகைக்கு ஹேதுவை அருளிச் செய்கிறார்

மூ.—(கஅரு) கீழே சிலஉபாயவிஶேஷங்களை உப தேஶிக்க, அவை துஶ்ஶகங்களென்றும் ஸ்வரூபவிரோ திகளென்றும் நினைத்து ஶோகாவிஷ்டனான அர்ஜ்ஜு நனைக் குறித்து அவனுடைய ஶோகநிவ்ருத்யர்த்தமாக இனி இதுக்கு அவ்வருகில்லை யென்னும்படியான சர மோபாயத்தை அருளிச்செய்கையாலே, சரமஶ்லோக மென்று இதுக்குப் பேராயிருக்கிறது.

---

1. நிஷ்க்ருஷ்ட ஸத்வநிஷ்டன் - சுத்தஸத்வகுணநிஷ்டன். 2. பரமாத் மநி ரக்தன் - பரமாத்மாவினிடத்தில் ப்ரீதியுள்ளவன். 3. பகவத்வைபவம் ஶ்ருதமானால் - பகவானுடைய வைபவங் கேட்கப்பட்டால், 4. விஸ்ரம்ப பாஹுள்யம் - மிக்கநம்பிக்கை. 5. இதனால்தான் எம்பெருமானாரை க்ரு பாமாத்ரப்ரஸந்நாசார்ய ரென்பது.

(வ்யா.) 'கீழே சில உபாயவிசேஷங்களை' என்று தொடங்கி. அதாவது - இந்தஸ்லோகத்துக்குக் கீழே அநேகாத்யாயங்களிலே சரம ஜ்ஞாநாதிகளான சில உபாய விசேஷங்களை 1 ஸ்வப்ராப்திலக்ஷண மோக்ஷஸாதநமாக விஸ்தரேண உபதேசித்தருளக்கேட்டு, 2 காயக்லேச ரூபமாகையாலும் இந்த்ரியஜயம் அரிதாகையாலும் 3 ஸாவதாநமாகச் சிரகாலம் ஸாதிக்கவேண்டி யிருக்கையாலும் அவை அநுஷ்டிக்க 4. அசக்யங்களென்றும், 5 ஸ்வசரீரத்வ கதநாதிகளாலே ப்ரதி பாதிக்கப்பட்ட பரதந்த்ரமான ஸ்வரூபத்துக்கு ஸ்வயத்நரூபங்களான 6 இவை விரோதிகளென்றும் புத்திபண்ணி, 7 'இவற்றாலே எம்பெரு மானைப் பெற என்பது ஒன்றில்லை; இனி 8 இழந்தேபோமித்தனை யாகாதே' என்கிற 9. சோகத்தாலே ஆவிஷ்டனான அர்ஜுநனைக் குறித்து அவனுடைய அந்த சோகம் போகைக்காக ஸுலபகத்வத் தாலும் ஸ்வரூபாநுரூபதையாலும் இனி இதுக்குமேலில்லையென் னும்படியான 10 சரமமான உபாயத்தை அருளிச்செய்கையாலே, சரம ஸ்லோகமென்று இதுக்குத் திருநாமமா யிருக்கிறது என்கை.

இனி, இஸ்ஸ்லோகத்துக்கு வாக்யார்த்தம் அருளிச்செய்கிறார்

மூ.—(கஅசு) இதில் பூர்வார்த்தத்தாலே அதிகாரி க்ருத்யத்தை அருளிச்செய்கிறான்; உத்தரார்த்தத் தாலே உபாயக்ருத்யத்தை அருளிச்செய்கிறான்.

---

1. ஸ்வப்ராப்திலக்ஷண மோக்ஷம் - தன்னை [பகவானை] அடைவதை லக்ஷணமாகவுடைய மோக்ஷம். 2. காயக்லேசம் - உடம்பைவருத்துகை. 3. ஸாவதாநமாக - அவதானத்தோடு. சிரகாலம் - வெகுகாலம். 4. அசக்யங் கள் - எளிதிற் செய்யக்கூடியவையல்ல. 5. ஸ்வசரீரத்வகதநம் - ஆத்மா தனக்கு [பகவானுக்கு]ச் சரீரமாக விருத்தலைச் சொல்லுகை. 6. இவை - கர்மம் ஜ்ஞாநம் பக்தி முதலிய உபாயாந்தரங்கள். 7. இவற்றாலே பெற என்பது ஒன்று இல்லை - இந்தக்கர்மாதிகளால் தான் எம்பெருமானைப் பெறு தல் தருமென்ற இந்த ஒன்று நாம் கொள்ளத்தக்கதாகவில்லை. 8. இழந் தேபோம் இத்தனை - இழந்தேதீருமென்கிற இவ்வளவேயுள்ளதென்றபடி: இழந்தேபோமென்கிறதுக்குக் கர்த்தா இவ்வாத்மாவென்பது: தன்மையைப் படர்க்கையாகச் சொன்னது. 9. சோகத்தாலே ஆவிஷ்டன் - சோகத்தாலே வ்யாப்தனானவன். 10. சரமமான உபாயம் - கடைசியான உபாயம்: சரமஸ் லோக மென்பது - கடைசியிற் கூறப்பட்ட சுலோகமென்பது பற்றிவந்த பெய ரன்று; எல்லாவுபாயங்கட்கும் சரமத்திற் கூறப்பட்ட உபாயத்தைத் தெரி விப்பதால் வந்த பெயர்.

(வ்யா.) 'இதில் பூர்வார்த்தத்தாலே' என்று தொடங்கி. அதாவது- 1. அர்த்தத்வயாத்மகமான இந்தஶ்லோகத்தில் பூர்வார்த்தத்தாலே இவ்வுபாயத்துக்கு அதிகாரியானவன் செய்யும் அம்ஶத்தை அருளிச்செய்கிறான்; உத்தரார்த்தத்தாலே உபாயபூதனான தான் இவனுக்குச் செய்யும் அம்ஶத்தை அருளிச்செய்கிறானென்கை.

'அதிகாரிக்ருத்யமாவது எது?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(கஅ௭) அதிகாரிக்ருத்யமாவது - உபாய பரிக்ரஹம்.

(வ்யா.) 'அதிகாரிக்குக் க்ருத்யமாவது-உபாயபரிக்ரஹம்' என்று. அதாவது-அதிகாரியானவனுக்கு இங்குச் செய்யத்தக்கது இவ்வுபாயத்தை ஸ்வீகரிக்கையென்கை.

'ஆனால், அவ்வளவை விதியாதே உபாயாந்தரபரித்யாகஞ் சொல்லுவான் என்?' என்ன, அருளிச்செய்கிறார்.

மூ.—(கஅஅ) அத்தை ஸாங்கமாக விதிக்கிறான்.

(வ்யா.) 'அத்தை ஸாங்கமாக விதிக்கிறான்' என்று. அதாவது-அந்த உபாயஸ்வீகாரத்தை 2. உபாயாந்தர பரித்யாகமாகிற அங்கத்தோடேகூட விதிக்கிறானென்கை.

(கருஅ) "𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌾𑌲𑍍𑌯 𑌪𑌾𑌦𑌾𑌵𑌾𑌚𑌾𑌮𑍇𑌤𑍍 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌧𑌿𑌵𑌦𑌰𑍍𑌚𑌯𑍇𑌤𑍍 । 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾𑌽𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌪𑌾𑌨𑌮𑍇𑌵 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌵𑌂 𑌜𑌪𑍇𑌨𑍍𑌮𑌨𑍁𑌮𑍍 ॥" [ப்ரக்ஷால்ய பாதாவாசாமேத் ஸ்நாத்வா விதிவதர்ச்சயேத் - ஸ்த்தித்வார்க்க்யம்பாநமேவதத்யாத் த்யாத்வாதேவம்ஜபேந்மநும்] என்று ஆசமநாதிகளுக்கு அங்கமாகச்சொன்ன பாதப்ரக்ஷாளநாதிகளையொழிய அவை அநுஷ்டிக்க வொண்ணாதாற்போலே, இங்கும் ல்யபந்தபதத்தாலே அங்கமாகச் சொல்லுகிற உபாயாந்தரத்யாகத்தையொழிய ஸ்வீகாரம் அநுபபந்நம் என்னுமிடம் வித்தமிறே. ஆகை

---

1. அர்த்தத்வயாத்மகம் - பூர்வார்த்தம் உத்தரார்த்தம் என்னும் இரண்டு அர்த்தங்களின் வடிவாக இருப்பது. 2. உபாயாந்தர பரித்யாகம் - வேறு உபாயங்களை அடியோடுவிடுகை: ஆகிஞ்சந்ய ஸித்திக்காக இதுவேணும். பக வானாகிற உபாயத்தை ஸ்வீகரித்தலால், அநந்யகதித்வம் ஸித்திக்கும்.

யால், "ஸர்வதர்மாந் பரித்யஜ்ஸ்த்திதஶ்சேத்" என்று 1. துஷ்கரத்வ புத்தியாலே ஸ்வதꞏப்ராப்தமான உபாயாந்தரபரித்யாகத்தை அநுவதித்து ஸித்தோபாயஸ்வீகாரத்தை விதிக்கிறதென்கிற 2 அநுவாத பக்ஷம் அயுக்தமென்றதாயிற்று.

'ஆனால், 3. ஸுகரத்வாதிகளாலே 4. ராகப்ராப்தமான இதுக்கு விதிதான் வேணுமோ?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(கஅகூ) ராகப்ராப்தமான உபாயந்தானே 5 வைதமானால் கடுகப்பரிக்ரஹிக்கைக்கு உடலாயிருக்குமிறே.

(வ்யா.) 'ராகப்ராப்தமான' என்று தொடங்கி. அதாவது-போக்யதையாலே ராகப்ராப்தமான க்ஷீரத்தைப் பித்தரோகத்துக்கு மருந்தாகக் கொடுக்கச்சொல்லி விதித்தால் ஶீக்ரமாகக் கைக்கொள்ளுகைக்கு உடலாமாபோலே, உபாயாந்தரங்களிற் காட்டில் இதுக்கு உண்டான வைலக்ஷண்யத்தாலே சேதநனுடைய ராகதꞏ ப்ராப்தமாயிருந்துள்ள உபாயந்தானே இத்தை ஸ்வீகரியென்னும் விதிப்ரயுக்தமுமானால் ஶீக்ரமாக ஸ்வீகரிக்கைக்கு உடலாயிருக்குமிறே யென்கை.

இனி, இதுக்கு ப்ரதிபதம் அர்த்தம் அருளிச்செய்வதாகப் பூர்வார்த்தபதஸங்க்யையை அருளிச்செய்கிறார்

மூ.—(ககூ0) இதில் பூர்வார்த்தம் ஆறுபதம்.

(வ்யா.) 'இதில் பூர்வார்த்தம் ஆறுபதம்' என்று.

அதில் ப்ரதமபதத்தை உபாதாநம் பண்ணுகிறார்.

மூ (ககூக) ஸர்வதர்மாந் = எல்லாத்தர்மங்களையும்.

---

1. துஷ்கரத்வபுத்தி - செய்வதற்குஅரியதென்றஎண்ணம். ஸ்வதꞏப்ராப்தமான உபாயாந்தரம் - தானாகச் செய்யும்படி ஏற்பட்ட கர்மம் ஜ்ஞாநம் முதலிய வேறுஉபாயங்கள். ப்ரபத்தியென்னும் உபாயத்தைக்காட்டிலும் வேறுபட்டனவாதலால், அவை உபாயாந்தரங்கள் எனப்படும். 2. அநுவாத பக்ஷத்தில் ஸ்திதꞏ சேத் என்ற பதங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டியிருத்தலால் அத்யாஹாரதோஷமும், உபாயாந்தரத்யாகத்துக்கு விதியில்லாமையாலே த்யாகஸ்வீகாரங்களுக்கு அங்காங்கிபாவமேற்படாமையால் விட்டேபற்ற வேணுமென்கிற நியமத்துக்குக் குறைவும் முதலியன விளையும். 3. ஸுகரம்- எளிதிற் செய்யக்கூடியது. 4. ராகப்ராப்தம் - விருப்பத்தினால் வந்தது. 5. வைதம் - விதி ப்ரயுக்தம்.

(வ்யா.) 'ஸர்வதர்மாந்' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார், 'எல்லாத் தர்மங்களையும்' என்று.

அதுதான் தர்மமும் பஹுவசநமும் ஸர்வஶப்தமுமாய் த்ரிப்ரகாரமாயிருக்கையாலே இம்மூன்றுக்கும் அர்த்தம் அருளிச்செய்வதாக ப்ரதமம் தர்மலக்ஷணத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(௧௧௨) தர்மமாவது - பலஸாதநமாயிருக்குமது.

(வ்யா.) 'தர்மமாவது-1 பலஸாதநமா யிருக்குமது' என்று. தர்மஶப்தம் 2 த்ருஷ்டபலஸாதநத்திலும் 3 வ்யாப்தமாகையால் அத்தை வ்யாவர்த்திக்கிறார்

மூ.—(௧௧௩) இங்குச் சொல்லுகிற தர்மஶப்தம் த்ருஷ்ட பலஸாதநங்களைச் சொல்லுகை யன்றிக்கே, மோக்ஷபலஸாதநங்களைச் சொல்லுகிறது.

(வ்யா.) 'இங்குச்சொல்லுகிற தர்மஶப்தம்' என்று தொடங்கி. அதாவது-பூர்வோபாயங்கள்தன்னை உபதேஶிக்கிறபோதே த்ருஷ்டபல ஸாதநங்கள் 4, வ்யாவ்ருத்தங்க ளாகையாலும், மோக்ஷோபாயங்களை உபதேஶித்து வருகிற ப்ரகரணமாகையாலும், இவ்விடத்திற் சொல்லுகிற தர்மஶப்தம் புத்ரபஶு அந்நஆதிஐஹிகமாயும் ஸ்வர்க்காதி ஆமுஷ்மிகமாயும் இருந்துள்ள த்ருஷ்டபலங்களுக்கு ஸாதநங்களானவற்றைச் சொல்லுகை யன்றிக்கே, பகவத்ப்ராப்திரூபமான மோக்ஷபலத்துக்கு ஸாதநமாயுள்ளவற்றைச் சொல்லுகிற தென்கை.

இனிமேல், பஹுவசநார்த்தத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(௧௧௪) அவைதான்-ஶ்ருதிஸ்ம்ருதி விஹிதங்களாயப் பலவாயிருக்கையாலே பஹுவசநப்ரயோகம் பண்ணுகிறது.

---

1. பலஸாதநம் - பலனைப் பெற உபாயமானது. 2. த்ருஷ்டபலம் - கண்ணாற்காணக் கூடிய புத்திரர் பசுக்கள் உணவுகள் முதலியன: ஸ்வர்க்கமும் இதனில் அடங்கும். 3. வ்யாப்தம் - வ்யாபிக்கை: அத்ருஷ்டபல ஸாதநங்களைக் காட்டுவதல்லாமல் தர்மம் த்ருஷ்டபலசாதநங்களையும் காட்டவல்லது என்றபடி. 4. வ்யாவ்ருத்தங்கள் - வேறுபடுத்தப்பட்டவை.

(வ்யா.) 'அவைதான்' என்று தொடங்கி. அதாவது-அந்த மோக்ஷபலஸாதநங்கள்தாம் 1 உபப்ரும்ஹ்ய உபப்ருஹ்மணங்களா யிருந்துள்ள ஶ்ருதி ஸ்ம்ருதிகளாலே 2 விஹிதங்களாய்க்கொண்டு அநேகங்களா யிருக்கையாலே 'தர்மாந்' என்று பஹுவசந ப்ரயோகம் பண்ணுகிற தென்கை.

'அப்படியிருந்துள்ளவைதாம் எவை?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(ககூரு) அவையாவன-கர்மஜ்ஞாந பக்தியோகங்களும், அவதாரரஹஸ்யஜ்ஞாநம் புருஷோத்தமவித்யை தேஶவாஸம் திருநாமஸங்கீர்த்தநம் திருவிளக்கெரிக்கை திருமாலையெடுக்கை தொடக்கமான உபாயபுத்த்யா செய்யுமவையும்.

(வ்யா.) 'அவையாவன' என்று தொடங்கி. அதாவது - கீழ்ப் பலவாகச் சொல்லப்பட்ட அவையாவன - (கடுக) "கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய: - தஸ்மாதஸக்தஸ் ஸததம் கார்யம் கர்ம ஸமாசர" [கர்மணைவஹிஸம்ஸித்தி மாஸ்திதாஜநகாதய: -தஸ்மாதஸக்தஸ் ஸததம் கார்யம் கர்மஸமாசர] என்று 3 ஸ்வதந்த்ர ஸாதநமாக உக்தமான கர்மயோகமும், (ககூ0) "ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே" [ஸர்வம்சர்மாகிலம்பார்த்த ஜ்ஞாநேபரி ஸமாப்யதே] (ககூக) "நஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரமிஹ வித்யதே - ஜ்ஞாநாக்நிஸ் ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதே ததா" [நஹிஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரமிஹவித்யதே - ஜ்ஞாநாக்நிஸ்ஸர்வ கர்மாணி பஸ்மஸாத்குருதேததா] என்று சொல்லப்பட்ட 4 கர்மஸாத்யமான ஜ்ஞாநயோகமும், (ககூஉ) "பக்த்யா த்வநந்யயா ஶக்ய:" [பக்த்யாத்வநந்யயாஶக்ய:] (ககூ௩) "ஸ்நேஹபூர்வமநுத்யாநம் ...

---

1. ஸ்ம்ருதி முதலியவற்றால் உபப்ருஹ்மணஞ் செய்யப்படுவதாகையால், வேதம் உபப்ரும்ஹ்ய மெனப்படும்; வேதத்தின் பொருளைத் தெளிவாக விரிப்பதனால் ஸ்மிருதிகள் உபப்ருஹ்மண மெனப்படும் : உபப்ருஹ்மணம் - வளர்ப்பது. 2. விஹிதங்கள் - விதிக்கப்பட்டன. 3. ஸ்வதந்த்ரஸாதநமாக உக்தமான - அங்கமாக இராமல் தானேஸாதநமென்று சொல்லப்பட்டுள்ள. கர்மம் ப்ரதாநஸாதநமாக இருக்கும்போது ஜ்ஞாநபக்திகள் உத்தராங்கமாகவரும். 4. கர்ம ஸாத்யமான ஜ்ஞாநயோகம் - கர்மத்தைப் பூர்வாங்கமாகக்கொண்டு ஸாதிக்கப்படத்தகுந்த ஜ்ஞாநயோகம் : இதற்குப் பக்தி உத்தராங்கமாக வரும்.

𑌕𑍍𑌷𑌃" [மந்மநாபவமத்பக்த:] இத்யாதிகளாலே சொல்லப்பட்ட 1 கர்மஜ்ஞாநஸஹக்ருதமான பக்தியோகமும் ஆகிற இவையும், (௧௫௪) "𑌜𑌨𑍍𑌮 𑌕𑌰𑍍𑌮 𑌚 𑌮𑍇 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍍 𑌏𑌵𑌂 𑌯𑍋 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃। 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌹𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌨𑍈𑌤𑌿 𑌮𑌾𑌮𑍇𑌤𑌿 𑌸𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨" [ஜந்மகர்மசமேதிவ்யம் ஏவம்யோ வேத்தி தத்த்வத:— த்யக்த்வாதேஹம்புநர்ஜந்ம நைதிமாமேதிஸோர்ஜுந] என்று விரோதிநிவ்ருத்திபூர்வகமான பகவத்ப்ராப்திக்கு ஸாதநமாகச் சொல்லப்பட்ட 2 அவதார ரஹஸ்யஜ்ஞாநம், (௧௫௫) "𑌏𑌤𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌶𑍍𑌚 𑌭𑌾𑌰𑌤" ஏதத்புத்த்வா புத்திமாந்ஸ்யாத் க்ருதக்ருத்யஸ்சபாரத] என்று அபிமத பலலாபத்தாலே க்ருதக்ருத்யனுக்கு மென்கிற புருஷோத்தமவித்யை (௧௫௬) "𑌦𑍇𑌶𑍋𑌽𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍" [தேஸோயம் ஸர்வகாமதுக்] என்று 3 ஸர்வகாம பல ப்ரதமாகச் சொல்லுகிற புண்யக்ஷேத்ர வாஸம் (௧௫௭) "𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌮𑌾 𑌯𑌾𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍" [ஸர்வபாப விஸுத்தாத்மா யாதிப்ரஹ்மஸநாதநம்] என்று ஸர்வபாபவிமோசந பூர்வகமான பகவத்ப்ராப்தியைப் பலமாகச்சொல்லுகிற திருநாமஸங்கீர்த்தநம் (௧௫௮) "𑌘𑍃𑌤𑍇𑌨 𑌵𑌾𑌽𑌥 𑌤𑍈𑌲𑍇𑌨 𑌦𑍀𑌪𑌂 𑌯𑍋 𑌜𑍍𑌵𑌾𑌲𑌯𑍇𑌨𑍍𑌨𑌰𑌃। 𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇 𑌵𑌿𑌧𑌿𑌵𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍁𑌣𑍍𑌯𑌫𑌲𑌂 𑌶𑍃𑌣𑍁॥ 𑌵𑌿𑌹𑌾𑌯 𑌸𑌕𑌲𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌃। 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍍𑌮𑌤𑌾 𑌵𑌿𑌮𑌾𑌨𑍇𑌨 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌲𑍋𑌕𑍇 𑌮𑌹𑍀𑌯𑌤𑍇" [க்ருதேநவாத தைலேந தீபம்யோஜ்வாலயேந்நர:—விஷ்ணவே விதிவத்பக்த்யா தஸ்ய புண்யபலம்ஸ்ருணு - விஹாயஸகலம்பாபம் ஸஹஸ்ராதித்ய ஸந்நிப:—ஜ்யோதிஷ்மதா விமாநேந விஷ்ணுலோகே மஹீயதே] என்று பாபநிவ்ருத்திபூர்வகமான பகவத்ப்ராப்திக்கு ஸாதநமாகச் சொல்லப்படுகிற திருவிளக்கெரிக்கை அப்படி விரோதிநிவ்ருத்தி பூர்வகபகவத்ப்ராப்திஸாதநமாகச் சொல்லப்படும் திருமாலையெடுக்கை முதலாக ஸாதநபுத்யா செய்யப்படுமவையும் என்கை.

---

1. கர்மஜ்ஞாநஸ்ஹக்ருதமான - கர்மஜ்ஞாநங்களை ஸஹாயமாக [அங்கமாக]க்கொண்ட. 2. புருஷோத்தம வித்யையாவது - பகவான் க்ஷரம் அக்ஷரம் என்று முறையே சொல்லப்படுகிற பத்த முக்தர்களை விபூதியாகவுடையனுய்த் தான் ஹேயகுணங்களுக்கு மாறுன கல்யாணகுணங்களைப் பெற்றிருத்தலால் தன்னுடைய விபூதியான அந்தப் பத்தமுக்தர்களைக்காட்டிலும் வேறுபட்டு மிகவும் ஸ்ரேஷ்டனுகிப் புருஷோத்தம னென்னப்படுவானென்று பகவானை ஸாக்ஷாத்கரிக்கை. 3. ஸர்வகாம பலப்ரதம் - ஸமஸ்தமான இஷ்டபலங்களைத் தருவது.

இனி, ஸர்வஶப்தார்த்தத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(கககூ) ஸர்வஶப்தத்தாலே அவ்வவஸாதந விஶேஷங்களை அநுஷ்டிக்குமிடத்தில் அவற்றுக்கு யோக்யதாபாதகங்களான நித்யகர்மங்களைச் சொல்லு கிறது.

(வ்யா.) 'ஸர்வஶப்தத்தாலே' என்று தொடங்கி. அதாவது-தர்ம விஶேஷணமான ஸர்வஶப்தத்தாலே பஹுவசநோக்தமான அவ்வவ ஸாதநவிஶேஷங்களை அநுஷ்டிக்கும் இடத்தில் (ககூகூ) "ஸந்த்யா ஹீநோ(அ)ஶுசிர் நித்யம் அநர்ஹஸ் ஸர்வகர்மஸு". [ஸந்த்யாஹீநோ(அ) ஶுசிர்நித்யம் அநர்ஹஸ்ஸர்வகர்மஸு] என்கிறபடியே அயோக்ய னாகாமல், தன்னை அநுஷ்டிக்கையாலே அவற்றுக்கு யோக்யதை கையை யுண்டாக்கிக் கொடுக்கும் ஸந்த்யாவந்தந 1 பஞ்சமஹாயஜ்ஞா திகளான நித்யகர்மங்களைச் சொல்லுகிற தென்கை.

உக்தத்தை நிகமிக்கிறார்

மூ.—(ககஎ) ஆக, ஶ்ருதிஸ்ம்ருதி சோதிதங்க ளாய் நித்யநைமித்திகாதி ரூபங்களான கர்மயோகாத் யுபாயங்களை என்றபடி.

(வ்யா.) 'ஆக' என்று தொடங்கி. அதாவது-ஆக, கீழ்ச்சொன்ன எல் லாவற்றாலும் (கஎ0) "சோதநாலக்ஷணோ(அ)ர்த்தோ தர்ம:" [சோத நாலக்ஷணோர்த்தோ தர்ம:] என்று சோதனையாகிற விதிவாக்யத்தை ப்ரமாணமாக வுடைத்தான அர்த்தம் தர்மம் என்கையாலே, ஶ்ருதி ஸ்ம்ருதிகளாகிற ப்ரமாணங்களாலே விதிக்கப்பட்டுள்ளவையாய் நித்யம் நைமித்திகம் முதலானவற்றை வடிவாக வுடைத்தான கர்மயோகம் தொடக்கமான உபாயங்களை யென்றபடி யென்கை.

ஸ்வரூபவிருத்தத்வாத் அதர்மமாகச் சொல்லவேண்டு மவற்றைத் தர்மம் என்கிறதுக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார்

---

1. பஞ்சமஹாயஜ்ஞங்களாவன - தேவயஜ்ஞம், ருஷியஜ்ஞம், பித்ருயஜ்ஞம், மநுஷ்யயஜ்ஞம், பூதயஜ்ஞம் என்பவை: தேவயஜ்ஞம்-தேவதைகளைக்குறித்து யாகம்பண்ணுகை ; ருஷியஜ்ஞம் - வேதமோதுகை ; பித்ருயஜ்ஞம் - பித்ருக் களுக்குத் தர்ப்பணஞ்செய்கை ; மநுஷ்யயஜ்ஞம் - அதிதிகட்கு விருந்திடுகை ; பூதயஜ்ஞம் - சிலபிராணிகட்குப் பலி யிடுகை. ஆதி சப்தத்தாலே - வைசுவ தேவத்தைச் சொல்லுகிறது.

மூ.—(கக்அ) இவற்றை, தர்மம் என்கிறது - ப்ரமித்த அர்ஜ்ஜுநன் கருத்தாலே.

(வ்யா.) ‘இவற்றை’ என்று தொடங்கி. அதாவது - பகவத்அத்யந்தபாரதந்த்ர்யமாகிற உத்தேஶ்யததுக்கு விரோதியா யிருக்கையாலே 1 அதர்மஶப்தவாச்யங்களாகப் ப்ராப்தங்களாயிருக்கிற 2 இவற்றைத் தர்ம மென்றுசொல்லுகிறது, ஸ்வதர்மமான யுத்தத்தை அதர்மம் என்றும் இவற்றைத் தர்மம் என்றும் ப்ரமித்த அர்ஜ்ஜுநனுடைய நினைவாலே யித்தனை யெனகை.

ஆக, ப்ரதமபதார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

அநந்தரம், த்விதீயபதத்தை உபாதாநம் பண்ணுகிறார்.

மூ—(கககூ) பரித்யஜ்ய.

(வ்யா.) ‘பரித்யஜ்ய’ என்று.

இதுவும் த்யாகமும் ல்யப்பும் உபஸர்க்கமு மாய்த் த்ரிப்ரகாரமா யிருக்கையாலே, அதில் த்யாகவேஷத்தை முந்துற அருளிச்செய்கிறார்

மூ.—(உOO) த்யாகமாவது - 3 உக்தோபாயங்களை அநுஸந்தித்து, ஶுக்திகையிலே ரஜதபுத்தி பண்ணுவாரைப் போலேயும் விபரீததிஶாகமநம் பண்ணுவாரைப்போலேயும் அநுபாயங்களிலே உபாயபுத்திபண்ணினோமென்கிற புத்திவிஶேஷத்தோடே த்யஜிக்கை.

(வ்யா.) ‘த்யாகமாவது’ என்று தொடங்கி. அதாவது - இவ்விடத்திற் சொல்லுகிற த்யாகமாவது - கேவலம் விடுகை அன்று : ‘கீழ்ச்சொல்லப்பட்ட உபாயங்களின்படியை அநுஸந்தித்து, ரஜதமில்லாத ஶுக்திகையிலே ரஜதபுத்தி பண்ணுவாரைப்போலேயும் ஸ்வகார்யஸித்திக்கு உடலான ஒருதிக்கிலே போகக்கோலித் தத்விபரீதமான திக்கை அதுவாக நினைத்துப் போவாரைப்போலேயும், பகவத்ப்ராப்த்யுபாயாபேக்ஷரான நாம உபாயமல்லாதவற்றிலே உபாயபுத்தி பண்ணினோம்’ என்கிற புத்திவிஶேஷத்தோடே விடுகை யென்றபடி.

இனி, உபஸர்க்கார்த்தத்தை அருளிச்செய்கிறார்

---

1. அதர்ம ஶப்தவாச்யங்கள் - அதர்மமென்ற சொல்லாற் சொல்லத்தக்கவை. 2. இவற்றை - கர்மயோகாதி உபாயங்களை. 3. உக்தஉபாயங்கள் - கீழ்ச்சொல்லப்பட்ட உபாயங்கள்.

மூ.—(உ0க) 'பரி' என்கிற உபஸர்க்கத்தாலே-பாதகாதிகளை விடுமாபோலே 1 ருசி 2 வாஸனைகளோடும் லஜ்ஜையோடுங்கூட 3 மறுவலிடாதபடி விடவேணுமென்கிறது.

(வ்யா.) 'பரி என்கிற' என்று தொடங்கி. அதாவது-'பரி ஸாகல்யே' என்று ஸாகல்யபரமாகக் கொள்ளுமளவில் அது ஸர்வஶப்தத்திலே உக்தமாகையாலே அபேக்ஷித மல்லாமையாலே, மிகுதிக்கு வாசகமான பரியென்கிற இந்த 4 உபஸர்க்கத்தாலே (களக) "ப்ரஹ்மஹத்யாஸுராபாநம் ஸ்தேயம் குர்வங்கநாகம:" [ப்ரஹ்மஹத்யா ஸுராபாநம் ஸ்தேயம் குர்வங்கநாகம:] என்கிற பாதகங்கள் முதலானவற்றை விடுமளவில் அவற்றில் புநரந்வயத்துக்கு உறுப்பான ருசிவாஸனைகளோடேகூட 'நாம் இதைச் செய்வதே!' என்கிற லஜ்ஜாஸஹிதனுய்க்கொண்டு விடுமாபோலே, (களஉ) "அத பாதகபீதஸ்த்வம்" [அத பாதகபீதஸ் த்வம்] என்று தர்மதேவதை பாதகமாகச் சொன்ன உபாயாந்தரங்களை விடுமளவில் புத்திபூர்வகமாக அவற்றிலே ப்ரவர்த்திக்கைக்கு உறுப்பான ருசியும் அபுத்திபூர்வகமாக மூளுகைக்கு உறுப்பான வாஸனையும் ஆகிற அவற்றோடேகூட 5. 'பகவதேகஸாதநதைகவேஷமான ஸ்வஸ்வரூபத்துக்கு 6. அத்யந்த விருத்தமானவற்றை நாம் செய்வதே!' என்கிற லஜ்ஜாஸஹிதனுய்க்கொண்டு மீளவும் அவற்றில் அந்வயம் வாராதபடி விடவேணு மென்று சொல்லுகிறது என்கை.

---

1. ருசி - புத்திபூர்வகமாக ஒன்றில் இறங்குவதற்குக் காரணமானது. 2. வாசனை-ஒன்றைச்செய்வதில்ப்ரீதியில்லாமலிருப்பினும் பழக்கத்தால் அபுத்திபூர்வகமாக அத்தொழிலில் மூளக் காரணமானது. 3. மறுவலிடுதல் - மீண்டும் அச்செயலில் சம்பந்தமுண்டாதல். 4. உபஸர்க்கமாவது - வினைக்குமுன் வந்து அதனை விசேஷித்துநிற்பது : 'பரித்யஜ்ய' என்ற இடத்தில், 'த்யஜ்' என்கிற தாதுவுக்கு [வினைக்கு] முன்வந்து அதனை விசேஷித்தலால், 'பரி'-உபஸர்க்கமாம்; இந்தப்பரிக்கு - ஸாகல்யம் மிகுதி என்று இருபொருளுண்டு: ஸாகல்யமாவது-ஸகலமுமாகை : ஸாகல்யமென்ற பொருளைக் கொண்டால், ஸகலத்தையும் விட்டு என்று கருத்தாகி, 'ஸர்வதர்மாந்' என்ற இடத்து ஸர்வசப்தத்தாற்கூறியதையே கூறியதா மாதலால் அப்பொருளைவிட்டு, மிகுதி யென்ற பொருளைக் கொள்ளவேணுமென்றபடி. 5. பகவதேகஸாதனதைகவேஷம் — பகவதேக - பகவானொருவனையே, ஸாதநதா - உபாயமாகக்கொள்ளுதலையே, ஏகவேஷம் - முக்கியஸ்வரூபமாகவுடைய. 6. அத்யந்தவிருத்தமானவற்றை - மிகவும் மாறுபட்டனவான உபாயாந்தரங்களை.

இனி, 'ல்யப்' அர்த்தத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(உ0உ) ல்யப்பாலே, "ஸ்நாத்வாபுஞ்ஜீத" என்னுமாபோலே உபாயாந்தரங்களைவிட்டே பற்றவேணும் என்கிறது.

(வ்யா.) 'ல்பப்பாலே' என்று தொடங்கி. அதாவது - 'த்யஜ்ய' என்கிற 1 ல்யப்பாலே (களங) "ஹுக்த்வா சாந்த்ராயணஂசரேத்" [புக்த்வா சாந்த்ராயணம்சரேத்] என்னுமாபோலன்றிக்கே, (களச) "ஸ்நாத்வா ஹுஞ்ஜீத" [ஸ்நாத்வாபுஞ்ஜீத] என்கிற விதி 'புஜிக்குமளவில் ஸ்நாநம்பண்ணியே புஜிக்கவேணும்' என்கிற 2. நியமத்தைச் சொல்லுமா போலே, ஸித்தோபாயத்தைப் பரிக்ரஹிக்குமளவில் த்யாஜ்யமான உபாயாந்தரங்களை த்யஜித்தே பரிக்ரஹிக்கவேணுமென்கிற நியமத்தைச் சொல்லுகிறது என்கை.

இப்படி விட்டேபற்றவேணு மென்கிற இதன் கருத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(உ0ங) "சசால சாபஞ்ச முமோச வீரஃ" என்கிறபடியே இவை அநுபாயங்களானமாத்ர மன்றிக்கே கால்கட்டு என்கிறது.

(வ்யா.) 'சசால' என்றுதொடங்கி. அதாவது-(களரு) "யோவஜ்ரபாதாஶநிஸந்நிபாதாந் நசுக்ஷுபேநாபிசசாலராஜா । ஸராமபாணாபிஹதோ ப்ருஶார்த்தஶ் சசாலசாபஞ்சமுமோசவீரஃ" [யோவஜ்ரபாதாஶநிஸந்நிபாதாந் நசுக்ஷுபேநாபிசசாலராஜா—ஸராமபாணாபிஹதோ ப்ருஶார்த்தஶ் சசாலசாபஞ்சமுமோசவீரஃ] என்கிற ஶ்லோகத்தில் ராவணன் ராம ஶரங்களாலே மிகவும் 3 ஈடுபட்டு நிலை

1. 'த்யஜ்ய' என்கிற இடத்தில் வந்துள்ள யகரம் - ல்யப் என்ற விகுதியென்று வடமொழிவ்யாகரணத்தா லேற்படும். 2. புஜித்தலென்பது பசியுள்ளவனுக்குத் தானே உண்டாகு மாதலால் விதிக்கவேண்டுவதில்லை; ஆகவே, புஜித்தலேற்பட்டுவிட்டதனுல் அதற்கு அங்கமாக ஸ்நாநஞ்செய்யவேணுமென்பதைத் தெரிவிப்பதற்காகவே 'ஸ்நாத்வாபுஞ்ஜீத' என்பது வந்துள்ளது. 'புக்த்வா சாந்த்ராயணம்சரேத்' என்ற இடத்திலோ சாந்த்ராயணஞ் செய்யவேண்டுமென்பது இந்த விதியினுலேயே யேற்படுதலால், புக்த்வா என்பது சாந்த்ராயணகரணத்துக்குக் காரணமாம். 3. ஈடுபட்டு - அடிபட்டு; நிலைகலங்கி-இருந்தவிடம்விட்டு.

கலங்கிப் போகப்பார்த்த வளவிலும் கையில் வில்லிருக்குமளவும் பெரு மாள் போகவொட்டாமையாலே பின்பு போகட்டவில்லு கையில் இரு ந்தபோது 1. ப்ரதிபக்ஷ ஜயத்துக்கு ஸாதநமாகாத மாத்ர மன்றிக்கே (கஎசு) "ஹ்வா நுஜாநாமி" [கச்சாநுஜாநாமி] என்று பின்பு பண்ணின அநும்தி பெருமாள் அப்போது பண்ணக்காணாமையாலே போகவு மொண்ணுதபடி 2. கால்கட்டானமையைச் சொல்லுகிறபடியே, உபா யாந்தரங்களான இவற்றிலே 3. ஈஷத்அந்வயங் கிடக்கிலும் இவை 4. பேற்றுக்கு ஸாதநமாகாதமாத்ர மன்றிக்கே பேற்றுக்கு ப்ரதிபந் தகமாய்த் தலைக்கட்டு மென்றபடி.

இன்னமும், இவற்றில் அந்வயம் இழவுக்கு உடலாமென்னு மத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார்

ஸூ.—(உ0ச) சக்ரவர்த்தியைப்போலே இழக்கைக் குறுப்பு.

(வ்யா.) 'சக்ரவர்த்தியைப்போலே இழக்கைக்குஉறுப்பு' என்று. அதாவது-முன்பே வரப்ரதாநத்தைப் பண்ணிவைத்து இப்போதாக மறுக்கவொண்ணுதென்று 5. ஆபாஸமான ஸத்யதர்மத்தைப்பற்றி நின்று (கஎஎ) "ராமோவிக்ரஹவாந்தர்மஃ" [ராமோவிக்ரஹவாந்தர்மஃ.] என்கிற பெருமாளோடே கூடி வாழ இருந்த பேற்றை யிழந்த சக்ர வர்த்தியைப்போலே ஆபாஸமான உபாயாந்தரங்களிலே அந்வயித்து நிற்கையாகிறது-(கஎஅ) "க்ருஷ்ணம்தர்மம்ஸநாதநம்" [க்ருஷ்ணம் தர் மம் ஸநாதநம்] என்று ஸநாதநதர்மமான பகவத்விஷயத்தோடே கூடி வாழுகையாகிற பேற்றை இழக்கைக்கு உறுப்பாய்விடு மென்கை.

இனி, இங்குச்சொன்ன ஸர்வதர்ம பரித்யாகத்தின் கருத்து அறி யாதார் சொல்லும் தூஷணத்தைப் பரிஹரிக்கைக்காக தத்பக்ஷத்தை 6 உத்க்ஷேபிக்கிறார்

ஸூ.—(உ0ரு) ஸர்வதர்மங்களையும்விட்டு என்று சொல்லுகையாலே சிலர் 'அதர்மங்கள் புகுரும்' என் றார்கள்.

1. ப்ரதிபக்ஷஜயம் - எதிராளியைஜயித்தல். 2. கால்கட்டு - ப்ரதிபந் தகம்: தடையாயுள்ளது. 3. ஈஷத்அந்வயம் - சிறிது சம்பந்தம். 4. பேற் றுக்கு - புருஷார்த்தத்துக்கு. 5. ஆபாஸமான - (தர்மம்போல) மேல்நோக்கில் தோன்றுவதான. 6. உத்க்ஷேபிக்கிறார் - கிளப்புகிறார், எடுத்துக்கொள்ளுகின்று ரென்றபடி.

(வ்யா.) 'ஸர்வதர்மங்களையும்' என்று தொடங்கி. அதாவது - த்யாஜ்யமான தர்மந்தான் 1 'இதம் குரு, இதம் மாகார்ஷீ:' என்று 2 விதி நிஷேதாத்மகமா யிருக்கையாலே 'ஸர்வதர்மங்களையும்விட்டு' என்று சொல்லுகையாலே 3 விஹிதாநுஷ்டாநத்தோபாதி நிஷித்தபரிஹாரமும் ஒக்கத் தள்ளுண்ணு மளவில், அடைத்த கதவைத் திறந்தால் 4 நிஹீந பதார்த்தங்கள் புகுருமாபோலே அதர்மங்களான நிஷித்த ப்ரவ்ருத்திகள் புகுரு மென்று சிலர் சொன்னார் என்கை.

அத்தைப் பரிஹரிக்கிறார்

மூ.—(உ0௬) அது கூடாது; 'அதர்மங்களைச் செய்' என்று சொல்லாமையாலே.

(வ்யா.) 'அதுகூடாது அதர்மங்களைச் செய் என்று சொல்லாமையாலே' என்று. அதாவது - ஸர்வதர்மங்களையும் விடச் சொன்ன இத்தால் அதர்மங்கள் புகுரு மென்கிற இது; ஸம்பவியாது; தர்மங்களை விடச்சொன்ன மாத்ர மொழிய அதர்மங்களைச் செய்யென்று சொல்லாமையாலே யென்கை.

'அதர்மநிவ்ருத்தியும் தர்மஶப்தவாச்ய மாகையாலே, அத்தை விடச் சொன்னால், அதர்மத்தைச் செய் யென்னுமிடம் 6 அர்த்தாத் உக்தமாகாதோ?' என்கிற 7 ப்ரதிவாத்யுக்தியை அநுவதிக்கிறார்

மூ.—(உ0எ) 'தன்னடையே சொல்லிற்றாகாதோ?' என்னில்,—

(வ்யா.) 'தன்னடையே சொல்லிற்றாகாதோ வென்னில்' என்று.

அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார்

மூ.—(உ0அ) ஆகாது; தர்மஶப்தம் அதர்மநிவ்ருத்தியைக் காட்டாமையாலே.

---

1. இதம் குரு - இதைச்செய்: இதம் மாகார்ஷீ: - இதைச்செய்யாதே 2. விதி ஆத்மகம் - உடன்பாட்டேவல் வடிவானது - நிஷேத ஆத்மகம் - எதிர்மறையேவல்வடிவானது. 3. விஹித அநுஷ்டாநத்து ஓபாதி - சாஸ்திரத்தில் விதித்தவற்றை அநுஷ்டித்தல்போலவே. நிஷித்த பரிஹாரமும் - சாஸ்திரத்திற்செய்யவேண்டா என்று நிஷேதிக்கப்பட்டுள்ளவற்றை விட்டிதலும். ஒக்க-ஒருசேர. 4. நிஹீநபதார்த்தம் - இழிந்தபொருள்: சுவானம்போன்றவை. 5. நிஷித்த ப்ரவ்ருத்திகள்-நிஷேதிக்கப்பட்ட அதர்ம வ்யாபாரங்கள். 6. அர்த்தாத் உக்தம்-கருத்துப்பொருளாற் சொல்லப்பட்டது. 7. ப்ரதிவாதி உக்தி - ப்ரதிவாயின்பேச்சு.

(வ்யா.) 'ஆகாது, தர்மஸப்தம் அதர்ம நிவ்ருத்தியைக் காட்டாமையாலே' என்று. அதாவது - 1 தர்மங்களை விடச்சொன்ன இத்தால், 'அதர்மங்களைச் செய்' என்னும் இடம் தன்னடையே சொல்லிற்றுகாது; தர்மஸப்தம் - 2 அதர்மநிவ்ருத்யாதி அங்கஸஹிதமாய்ப் ப்ரதாநமாயிருந்துள்ள விஹிதாநுஷ்டாநத்தைக் காட்டுமதொழிய, ஸாமாந்யேந அதர்மநிவ்ருத்திமாத்ரத்தைக் காட்டாமையாலே யென்கை.

'அதர்மநிவ்ருத்திக்கு தர்மஸப்த வாச்யத்வம் முக்யமாக இல்லையே யாகிலும், ஸர்வஸப்த [3] ஸாஹித்யத்தாலே தர்ம ஸப்தம் [4] விஸேஷணபூதமான இதுதன்னையுங் காட்டாதோ?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(உ0௧) காட்டினாலும், அத்தை ஒழிந்தவற்றைச் சொல்லிற்று மித்தனை.

(வ்யா.) 'காட்டினாலும்' என்று தொடங்கி. அதாவது = அப்படிக் காட்டிற்றாகிலும், அது இவ்விடத்தில் 5 விவக்ஷிதம் அல்லாமையாலே, அத்தையொழிந்த 6 விஹிதாநுஷ்டாநரூப தர்மங்களானவற்றைச் சொல்லிற்று மித்தனை யென்கை.

'இங்ஙன் ஒதுக்குகிறது என்கொண்டு?' என்ன, அருளிச்செய்கிறார்

---

1. தர்மம் - விதித்தனசெய்தலும் விலக்கியவற்றைத்தவிர்தலு மென இருவகையாகப் பகுக்கப்பட்டிருந்தாலும், தர்மத்தை விடச்சொன்ன இடத்தில் ப்ரவ்ருத்திரூபமான தர்மத்தைத் தவிரவேணுமென்று கருத்துக்கொள்ளவேணுமே தவிர, நிவ்ருத்திரூபமானதர்மத்தை விடவேணு மென்று கருத்துக்கொள்ளக்கூடா தென்றபடி. தர்மத்தை விடச்சொன்ன இடத்தில் நிவ்ருத்திரூபமான தர்மத்தையும் விடவேணு மென்று கருத்துக்கொண்டால்தான் அதர்மத்தையும் செய்யுமாறு ஏற்படும். 2. அதர்மநிவ்ருத்யாதி என்ற இடத்தில் ஆதிசப்தத்தால், ப்ரவ்ருத்திரூபமான அங்கங்களைக் கொள்ளவேணும். 3. ஸாஹித்யம் - சேர்க்கை. 4. விஸேஷணபூதமான இது தன்னையும் - அதர்மநிவ்ருத்திரூபமானதர்மம் என்று விஸேஷண மிட்டுச் சொல்லப்படுகிற இந்த அதர்மநிவ்ருத்தியையும். 5. விவக்ஷிதம் அல்லாமையாலே - வக்தாவின் கருத்துக்கு இசைந்ததல்லாமையாலே. ஸித்தோபாயம் நிரபேக்ஷமாகக் கார்யம் செய்யவல்ல தென்கிறதுக்குக் கொத்தை வாராமைக்காக ப்ரவ்ருத்திரூபமான தர்மம் எதுவும் வேண்டா என்ற கருத்துடன் ஸர்வதர்மாந்பரித்யஜ்ய என்று சொல்லப்பட்டதே தவிர, வேறு கருத்தினாற் சொல்லப்படாமையாலே யென்றபடி. 6. விஹிதாநுஷ்டாநம் - விதித்ததையநுஷ்டித்தல்.

மூ.—(உ௯0) தன்னையும் ஈச்வரனையும் பலத்தையும் பார்த்தால் அவை புகுரவழி இல்லை.

(வ்யா.) 'தன்னையும்' என்று தொடங்கி. அதாவது - அதர்மாநுஷ்டாநம் மோக்ஷத்துக்கு அநிஷ்டம் ஆகையாலே அவனுக்கு அதிசயகாரணமது ஒழிய அநிஷ்டகாரணத்தை சேராதபடியான ஸ்வரூபத்தையுடைய தன்னைப் பார்த்தாலும், 1 ஸஹாயாந்தர ஸம்ஸர்க்க அஸஹத்தையாலே இத்தலையில் ஸ்வயத்நநிவ்ருத்தி ஒழிய ப்ரவ்ருத்தி அம்சத்தில் ஒன்றையும் பொறாத உபாயபூதனான ஈச்வரனைப்பார்த்தாலும், இவனுடைய ப்ரவ்ருத்திக்கு பலம் அவனுடைய ப்ரீதியாகையாலே தாத்ருசமான பலத்தைப் பார்த்தாலும், இம்மூன்றுக்கும்,விருத்தங்களான அவை புகுரவழி இல்லையென்கை. ஆகையால், தர்மசப்தம் அதர்மநிவ்ருத்தியைக் 2 காட்டிற்றாகிலும், அத்தை ஒழிந்தவற்றைச் சொல்லிற்றாகக் கொள்ளவேணுமென்று கருத்து.

ஆக, த்விதீயபதார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

அநந்தரம் த்ருதீயபதத்தை உபாதாநம் பண்ணுகிறார்

மூ.—(உ௯௧) மாம்—ஸர்வரக்ஷகனாய், உனக்குக் கையாளாய், உன்னிசைவுபார்த்து, உன் தோஷத்தைப் போக்யமாகக்கொண்டு, உனக்குப்புகலாய், நீர்சுடுமாபோலே சேர்ப்பாரே பிரிக்கும்போதும் விடமாட்டாதே ரக்ஷிக்கிற என்னை.

(வ்யா.) 'மாம்' என்று, அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் 'ஸர்வரக்ஷகனாய்' என்றுதொடங்கி. அதாவது-'நம்முடைய ரக்ஷணம் இவன்பண்ணுமோ? பண்ணானோ?' என்று ஸம்சயிக்கவேண்டாதபடி ஸர்வருடையவும் ரக்ஷணத்திலே தீக்ஷிதனாய், 'தன்பெருமையையும் நம் சிறுமையையும் பார்த்து நம்மோடு 3 கலப்பு அற்று இருக்குமோ?' என்ன வேண்டாதபடி (௧௭௬) "ஸேநயோருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய" [ஸேநயோருபயோர்மத்யே ரதம்ஸ்தாபய] என்று ஏவிக் கார்யங்கொள்ளலாம்படி உனக்குக் கையாளாய், உன்னை ரக்ஷிக்கையில்

1. ஸஹாயாந்தரஸம்ஸர்க்க அஸஹத்தை - வேறு ஒரு உதவியின் ஸம்பந்தத்தைப் பொறுமை. 2. காட்டிற்றாகிலும் - மற்றையிடத்திற் காட்டினாலும் : இந்த இடத்திலேயென்று வருவித்துக்கொள்க. 3. கலப்பு அற்று இருத்தல் - சேராது ஒதுங்கி யிருத்தல்.

உண்டான நசையாலே (௧௮௦) "𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑌤𑍇" [ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே] என்கிறபடியே 1 ரக்ஷ்யபூதனான உன் 2 இசைவுபார்த்து, 'நங் குற்றங் கண்டு இகழுமோ!' என்று அஞ்ச வேண்டாதபடி 3. அஸ்த்தாநஸ்நேஹகாருண்யதர்மாதர்மதியாகுலனான உன்தோஷத்தைப் போக்யமாகக்கொண்டு, 4 அஶரண்யஶரண்யனுகையாலே நீயும் பிறரும் உனக்குத் தஞ்சமல்லாத தசையில் ஒதுங்கலாம்படியான 5 புகலாய், ஶைத்யமேஸ்வபாவமான ஜலம் 6 ஔஷ்ண்யத்தைப் பஜிக்குமாபோலே 7 அபராதக்ஷாமணம் பண்ணி கடிப்பிக்கும் புருஷகாரபூதரே * "தாமரையாளாகிலும் 8 சிதகுரைக்குமேல்" என்கிறபடியே குற்றத்தைக்காட்டி அகற்றும்போதும், விட க்ஷமனன்றிக்கே * "என்னடியா ரதுசெய்யார்" என்று 9 மறுதலித்து ஒருதலைநின்று ரக்ஷிக்கும் என்னை என்கை.

'மாம்' என்று விபவரூபத்தைக் காட்டுகையாலே, வ்யாவர்த்திக்கப்படுகிறவற்றை அருளிச்செய்கிறார்

மூ·—(௨௧௨) இத்தால் பரவ்யூஹங்களையும், தேவதாந்தர்யாமித்வத்தையும் தவிர்க்கிறது.

(வ்யா·) 'இத்தால்' என்று தொடங்கி. அதாவது-'என்னை' என்று அவதரித்துக் கண்ணுக்கு இலக்காய் அணுகிநிற்கிற தன்னை 10 வரணீயனாகச் சொன்ன இத்தாலே 11 தேஶவிப்ரக்ருஷ்டதையாலே காணவுங்கிட்டவும் ஒண்ணாதபடியிருக்கிற பரவ்யூஹங்களையும் 12 அஸாதா

---

1. ரக்ஷ்யபூதன் - ரக்ஷிக்கப்படத்தக்கவனானவன். 2. இசைவு-சம்மதம். 3. அஸ்தாந - ஸ்நேஹ காருண்யங்களுக்கு இடமல்லாவிடத்தில் (ஶத்ருபக்ஷத்தில்), ஸ்நேஹ காருண்ய - ஸ்நேஹமென்ன கருணையென்ன இவற்றாலே, தர்ம - க்ஷத்ரிய தர்ம(மாகிய ஶத்ருவதத்தில்,) அதர்ம தியா - அதர்மமென்கிற புத்தியினாலே, ஆகுலன் - வியாகுலப்பட்டவன். 4. அஶரண்யஶரண்யன் - தஞ்சமாக எவரையும் இல்லாதவர்கட்குத் தஞ்சமாகுபவன். 5. புகல் - தஞ்சம்: 6. இதுஎம்பெருமானுடையக்ருபாகுணத்தைப்பற்றச்சொல்லுகின்றது. ஔஷ்ண்யத்தைப் பஜித்தல் - சுடுந்தன்மையையடைதல். 7. அபராதக்ஷாமணம்பண்ணி கடிப்பிக்கும் - குற்றத்தைப் பொறுக்கும்படிசெய்து (பகவானோடு) சேர்ப்பிக்கிற. 8. சிதகு-குற்றம். 9. மறுதலித்து-எதிரிட்டு, ஒருதலைநின்று - ஒருபக்ஷமாகஇருந்து. 10. வரணீயன் - ஶரணமாக வரிக்கத்தகுந்தவன். 11. தேஶவிப்ரக்ருஷ்டதை - தூரமான தேஶத்திலிருப்பவனாகையென்றபடி. 12. அஸாதாரணவிக்ரஹயுக்தம் - தனக்கு என்று விஶேஷமாகவுள்ள திருமேனியோடே கூடியது.

ரண விக்ரஹயுக்தமன்றிக்கே உபாயாந்தர நிஷ்டர்க்கு உத்தேஶ்யமாயிருக்கிற அக்நி இந்த்ராதி தேவதாந்தர்யாமித்வத்தையும் 1 வ்யாவர்த்திக்கிறது என்கை.

தர்மங்களையெல்லாம் விட்டுத் தன்னைப் பற்றச்சொல்லுகையாலே 2. பலிதமானதொரு அர்த்த விஶேஷத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(உகரு) தர்மஸம்ஸ்தாபநம் பண்ணப்பிறந்தவன்தானே 'ஸர்வதர்மங்களையும் விட்டு என்னைப் பற்று' என்கையாலே ஸாக்ஷாத் தர்மம் தானேயென்கிறது.

(வ்யா.) 'தர்மஸம்ஸ்தாபநம்' என்று தொடங்கி. அதாவது- (கஅக) ''𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇'' [தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமியுகேயுகே] என்கிறபடியே 3 ஸ்வப்ராப்திக்கு உடலான தர்மத்தை ஸ்த்தாபிப்பதாகப் பிறந்தவன்தானே 'ஸர்வதர்மாந்பரித்யஜ்ய' என்று 'மோக்ஷஸாதநதயா ஶாஸ்த்ரஸித்தங்களான ஸர்வதர்மங்களையும்விட்டு என்னைப்பற்று'என்று சொல்லுகையாலே, அவை 4 ஸாக்ஷாத் தர்மங்களன்று, 5 ஸ்தாபநீயமான ஸாக்ஷாத் தர்மம் (கஅஉ) ''𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍'' [க்ருஷ்ணம்தர்மம்ஸநாதநம்] என்று ஸநாதநதர்மமான தானேயென்னுமிடம் சொல்லுகிறது என்கை.

'இத்தால் என் சொல்லுகிறது?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(உகச) இத்தால், விட்ட ஸாதநங்களில் ஏற்றஞ் சொல்லுகிறது.

(வ்யா.) 'இத்தால் விட்ட 6 ஸாதநங்களில் ஏற்றஞ்சொல்லுகிறது' என்று. அதாவது-இப்படிச்சொன்ன இத்தால், கீழ் விட்ட ஸாதநங்களிற் காட்டில் இந்த ஸாதநத்துக்கு உண்டான ஏற்றஞ்சொல்லுகிறது என்கை.

'அதுதான் எது?' என்ன, அருளிச்செய்கிறார்

---

1. வ்யாவர்த்திக்கிறது - தவிர்க்கிறது. 2. பலிதம் - கருத்தாக ஏற்பட்டது. 3. ஸ்வப்ராப்திக்கு உடலான தர்மத்தை - தன்னையடைவதற்கு ஸாதனமான தர்மத்தை. 4. ஸாக்ஷாத் தர்மம் - தான் நேரே பயனைக்கொடுக்குந்தர்மம். 5 ஸ்தாபநீயம் - நிலைநாட்டுதற்கு உரியது. 6. ஸாதநம் - உபாயம்.

மூ.—(உகரு) அதாவது - ஸித்தமாய், பரமசேதநமாய், ஸர்வஶக்தியாய், நிரபாயமாய், ப்ராப்தமாய், ஸஹாயாந்தர நிரபேக்ஷமாயிருக்கை.

(வ்யா.) 'அதாவது' என்று தொடங்கி. இத்தால், கீழ்விட்ட ஸாதநங்களிற் காட்டில் இதுக்கு ஏற்றமாவது - 1. சேதநப்ரவ்ருத்தியாலே தன்ஸ்வரூபஸித்தியாம்படி யிருக்கையன்றிக்கே 2 ஸநாதந தர்மமாகையாலே ஸித்தமாய், (கஅங) "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" [யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்] இத்யாதிகளிற் சொல்லுகிற 3 ஸர்வஜ்ஞவிஷயமாகையாலே பரமசேதநமாய், (கஅச) "பராஸ்யஶக்திர்விவிதைவஶ்ரூயதே" [பராஸ்யஶக்திர்விவிதைவஶ்ரூயதே] என்கிறபடியே 4 ஸர்வஶக்தியாய், 5. சேதநஸாத்யமாய், நடுவே அபாயங்கள் புகுருகைக்கு அவகாஶமுண்டாம்படி யிருக்கையன்றிக்கே ஸித்தவஸ்துவா யிருக்கையாலே நிரபாயமாய், பரதந்த்ரனான இச்சேதநனுடைய ஸ்வரூபத்துக்கு 6 அப்ராப்தமாயிராதே ப்ராப்தமாய், கீழ்ச்சொன்ன பரமசேதநத்வாதிகளாலே ஸஹாயாந்தரநிரபேக்ஷமாயிருக்கை யென்றபடி.

இந்த 7. ஸஹாயாந்தர நிரபேக்ஷத்வத்தை ஸஹேதுகமாக ஸ்தாபிக்கிறார்

மூ.—(உககூ) மற்றைஉபாயங்கள் ஸாத்யங்களாகையாலே, ஸ்வரூப ஸித்தியில் சேதநனை அபேக்ஷித்திருக்கும்; அசேதநங்களுமாய் அஶக்தங்களுமாயிருக்கையாலே கார்யஸித்தியில் ஈஶ்வரனை அபேக்ஷித்திருக்கும். இந்தஉபாயம் அவற்றுக்கு எதிர்த்தட்டா யிருக்கையாலே, இதரநிரபேக்ஷமா யிருக்கும்.

(வ்யா.) 'மற்றை உபாயங்கள்' என்றுதொடங்கி மேல்மூன்று வாக்யத்தாலே. அதாவது - இத்தையொழிந்தஉபாயங்கள் சேதநப்ரவ்ருத்தியாலே ஸாதிக்கப்படுமவை யாகையாலே தன்னுடைய ஸ்வரூபஸித்தி

---

1. சேதநப்ரவ்ருத்தி - சேதநனுடைய முயற்சி. 2. ஸநாதநதர்மம் - பழமையாயுள்ள தர்மம். 3. ஸர்வஜ்ஞவிஷயம் - ஸர்வஜ்ஞமான விஷயம். 4. ஸர்வஶக்தி - எல்லாவகையான சக்தியையுமுடையது. 5. சேதநனாலே ஸாதிக்கப்படுவதாயின் இடையில் விக்கினங்களுண்டாகும்; சேதநனால் ஸாதிக்கப்படுவதன்றாகையாலே இது விக்கினமற்றது என்றபடி; அபாயம் - விக்கினம். 6. அப்ராப்தம் - தகாதது. 7. ஸஹாயாந்தர நிரபேக்ஷத்வம் - வேறொரு துணையை வேண்டாமலிருக்கை.

யில் 1 ப்ரவ்ருத்திகரனான சேதநனை அபேக்ஷித்திருக்கும்; இவனுக்குச் செய்யவேண்டுமவை அறிகைக்கும் அது தன்னைச் செய்து தலைக்கட்டுகைக்கும் யோக்யதையில்லாத அசேதநங்களுமாய் அஶக்தங்களுமா யிருக்கையாலே, சேதநனுடைய இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரரூபமான கார்யத்தினுடையஸித்தியில் (கஅடு) "ஃஃமத உப பத்தேஃ" [பலமத உபபத்தேஃ] என்கிறபடியே 2. பலப்ரதத்வோபயோகியான 3. ஸர்வஶக்தித்வாதி உபபத்தியுடைய ஈஶ்வரனை அபேக்ஷித்திருக்கும்; இந்த உபாயம் ஸித்தத்வ பரமசேதநத்வ ஸர்வஶக்தித்வங்களாலே அவற்றுக்கு எதிர்த்தட்டா யிருக்கையாலே, அந்யநிரபேக்ஷமாயிருக்கு மென்கை.

இனி இப்பதத்திலே ஆஶ்ரயண ஸௌகர்ய ஆபாதகங்களான குணவிஶேஷங்களெல்லாம் ப்ரகாஶிக்கிறபடியை அருளிச்செய்கிறார்

மூ.—(உகஎ) இதிலே, வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஶீல்ய ஸௌலப்யங்களாகிற குண விஶேஷங்கள் நேராக ப்ரகாஶிக்கிறது.

(வ்யா.) 'இதிலே' என்று தொடங்கி. அதாவது-அதர்மபுத்தியாலே தர்மத்தினின்றும் நிவ்ருத்தனான அர்ஜ்ஜுநனுக்குக் குற்றம் பாராதே 4. அபேக்ஷிதார்த்தங்களை அருளிச்செய்கையாலே, வாத்ஸல்யம் ப்ரகாஶிக்கிறது; தன்னுடைய பரத்வத்தைப் பலகாலும் அருளிச்செய்த அளவன்றிக்கே அர்ஜ்ஜுநன் ப்ரத்யக்ஷிக்கும்படி பண்ணுகையாலே, ஸ்வாமித்வம் ப்ரகாஶிக்கிறது; (கஅசு) "ஹே க்ருஷ்ண ஹேயாதவ" [ஹேக்ருஷ்ணஹேயாதவ] என்று அர்ஜ்ஜுநன் தானே சொல்லும்படி இவனோடே கலந்து பரிமாறுகையாலே, ஸௌஶீல்யம் ப்ரகாஶிக்கிறது; அப்ராக்ருதமான திருமேனியைக் கண்ணுக்கு இலக்காம்படி பண்ணுகையாலே, ஸௌலப்யம் ப்ரகாஶிக்கிறது என்கை. "குணவிஶேஷங்கள்" என்றது, ஆஶ்ரயணத்துக்கு அபேக்ஷிதங்களானவையென்று தோற்றுகைக்காக. 'நேராகப்ரகாஶிக்கிறது' என்றது, ஸ்புடமாக ப்ரகாசிக்கிற தென்றபடி.

---

1. ப்ரவ்ருத்திகரன் - முயற்சியைச் செய்பவன். 2. பலப்ரதத்வ உபயோகியான - பயனைக் கொடுப்பவனுதற்கு உதவியான. ஸர்வஶக்தித்வ என்கிற இடத்திலுள்ள ஆதிஶப்தத்தாலே ஸர்வஜ்ஞத்வாதிகளைக் கொள்ளலாம். 3. உபபத்தி -தகுதி, யோக்யதை. 4. அபேக்ஷிதார்த்தம் - தேஹாத்மவிவேகம் முதல் ப்ரபத்தி வரையிலும்.

இவை எல்லாவற்றிலும் வைத்துக்கொண்டு, மிகவும் அபேக்ஷி தம் ஸௌலப்யமாகையாலே, அவதாரப்ரயுக்தமான ஸௌலப்யத் தளவன்றிக்கே 1. ஸாரத்யேவஸ்த்திதனுய்நிற்கிற ஸௌலப்ய அதி ஶயத்தைத் தர்ஶிப்பித்தமையை அருளிச்செய்கிறார்

மூ.—(உகஅ) கையும் உழவுகோலும், பிடித்த சிறுவாய்க்கயிறும், ஸேநாதூளிதூஸரிதமான திருக்குழ லும், தேருக்குக்கீழே நாற்றின திருவடிகளுமாய் நிற் கிற ஸாரத்யவேஷத்தை 'மாம்' என்று காட்டுகிருன்.

(வ்யா.) 'கையும் உழவுகோலும்' என்று தொடங்கி. அதாவது-குதிரைகளை ப்ரேரித்து நடத்துகைக்காகத் திருக்கையிலே தரித்த 2. உழவுகோலும், அவற்றை 3. இடவாய் வலவாய்த்திருப்புகைக்காக வும் நிறுத்தருளவேண்டும் இடத்திலே தாங்கி நிறுத்துகைக்காகவும் பிடித்தசிறுவாய்க்கயிறும், திருமுடியில் 4. ஒன்று ஆச்சாதியாமல் நிற் கையாலே ஸேநாதூளியாலே புழுதிபுடைத்த திருக்குழலும், *"தேர் கடவிய பெருமான்கனைகழல்" என்கிறபடியே, சாத்தின சிறுசதங் கையுந் தானுமாகத் தேருக்குக்கீழே 5. நாற்றின திருவடிகளுமாய் நிற்கிற ஸாரத்யவேஷத்தை 'என்னை' என்று காட்டுகிருன் என்கை.

ஆக, த்ருதீயபதார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று. அநந்த ரம், சதுர்த்தபதத்தை உபாதாநம் பண்ணுகிறார்

மூ.—(உகக) ஏகம்

(வ்யா.) ஏகம் என்று அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார்

மூ.—(உஉ0) இந்த ஏகஶப்தம் ஸ்த்தாநப்ரமாணத் தாலே அவதாரணார்த்தத்தைக் காட்டுகிறது.

(வ்யா.) 'இந்த ஏகஶப்தம்' என்று தொடங்கி. அதாவது - இவ் வுபாயவிஶேஷத்தைச் சொல்லும் இடங்களிலே பலவிடங்களிலும் 6 அவதாரண ப்ரயோகம் உண்டாகையாலே, உகாரம்போலே இந்த ஏகஶப்தமும் ஸ்தாநப்ரமாணத்தாலே அவதாரணமாகிற அர்த்தத்தைக் காட்டுகிறது என்கை.

1. ஸாரத்யே அவஸ்திதன் - தேரையோட்டுதலில் நிலைநின்றவன். 2. உழவுகோல் - குதிரையைத் தூண்டுங்கோல் 3. இடவாய் வலவாய் - இடப்பக்க வலப்பக்கங்களில். 4. ஒன்று ஆச்சாதியாமல் - எதுவும் மறைக்காமல் 5. நாற்றின - தொங்கவிட்ட. 6. அவதாரணப்ரயோகம் - தேற்றப்பொருளைக் காட்டுகிற சொல்லின் ப்ரயோகம்.

*திருவாய் - ரு - சு - ௧0.

1. இவ்வுபாயத்தை நிர்த்தேஶித்த அநந்தரம் அவதாரணப்ர யோகம் பண்ணின வசநங்கள் பலவற்றையும் இதுக்கு உதாஹரணமாக அருளிச்செய்கிறார்

மூ.—(உஉக) “மாமேவ யே ப்ரபத்யந்தே”, “தமேவசாத்யம்”, “த்வமேவோபாயபூதோமேபவ”, *“ஆறெனக்கு நின்பாதமேசரணாகத்தந்தொழிந்தாய்” என்றுஞ் 2. சொல்லுகிறபடியே.

(வ்யா.) ‘மாமேவ’ என்று தொடங்கி. அதாவது - (கஅஎ) “ஶாமெவ யெ ப்ரபத்யந்தெ” [மாமேவ யே ப்ரபத்யந்தே] என்று என்னையே யாவர்சிலர் ப்ரபத்திபண்ணுகிறார்கள் என்றும், (கஅஅ) “தமெவசாத்யம் புருஷம் ப்ரபத்யெ” [தமேவசாத்யம் புருஷம் ப்ரபத்யே] என்று ஆத்யனான அந்தப் புருஷனையே ப்ரபத்திபண்ணு கிறேன் என்றும், (கஅகூ) “த்வமெவொபாயபூதொமெபவ” [த்வமேவோபாய பூதோமேபவ] என்று நீயே எனக்கு உபாயமாக வேணும் என்றும், “*ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்” என்று எனக்கு உபாயந்தருகிற இடத்தில் உன் திருவடிகளையே உபாயமாகத் தந்தாயென்றுஞ் சொல்லுகிற இவ்விடங்களில், “மாமேவ” “தமேவ” “த்வமேவ” “நின்பாதமே” 3 என்று ஸ்வீகார்ய வஸ்து நிர்த்தேஶாநந்தரம் அவதாரணத்தைச் சொல்லுகிற ப்ரகாரத்திலே யென்கை.

4 ‘ஏதத் வ்யாவர்த்யம் ஏது?’ என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(உஉஉ) இத்தால் ‘வ்ரஜ’ என்கிற ஸ்வீகாரத்தில் உபாயபாவத்தைத் தவிர்க்கிறது.

(வ்யா.) ‘இத்தால்’ என்று தொடங்கி. அதாவது-உபாயாந்தரங்கள் வ்யாவர்த்யமாமளவில் 5 பௌநருக்த்யம் ப்ரஸங்கிக்கையாலும்,

---

1. இவ்விஷயத்தை-ஸாத்யோபாயத்தை; நிர்தேஶித்த அநந்தரம்-சொல்லிக்காட்டினபிறகு. 2. சொல்லுகிறபடியே என்று மூலத்திலுள்ள இந்தச் சொல், அவதாரணார்த்தத்தைக் காட்டுகிறது என்று கீழோடே அந்வயிக்கும் 3. ஸ்வீகார்யவஸ்து - உபாயமாகப் பற்றப்படுகிற பொருள். 4. ஏதத்வ்யாவர்த்யம்-அவதாரணார்த்தத்தை யுடைய இந்தஏகசப்தத்தால் தவிர்க்கப்படத்தகுந்தது. 5. பௌநருக்த்யம்ப்ரஸங்கித்தல் - கூறியது கூறலென்ற குற்றமுண்டாதல். ‘ஸர்வதர்மாந் பரித்யஜ்ய’ என்ற இடத்திலேயே உபாயாந்தரங்கள் தவிர்க்கத்தக்கவை யென்று ஏற்பட்டு விட்டபடியால் இங்கே ஏகஶப்தம் உபாயாந்தரங்களைத் தவிர்க்குமென்ன வொண்ணாதென்க.

* திருவாய்-ரு-எ-க0.

தேவதாந்தரங்கள் வ்யாவர்த்யமாமளவில் 'மாம்' என்று 1 அஸா தாரணாகாரத்தைச் சொல்லுகையாலே அது கீழே விததமாகையா லும், இந்த அவதாரணத்தால் 'வ்ரஜ' என்று மேல்சொல்லுகிற 2 ஸ்வீ காரத்தில் உபாயத்வத்தைக் கழிக்கிறது என்கை. இந்த 3 ஸ்வீகா ரந்தானும் அந்வய வ்யதிரேகத்தாலே ஸாதநம் என்று நினைக்கலா யிருக்கையாலே, இதன் ஸாதநத்வம் அவஶ்யங் கழிக்கவேணுமிறே.

4 * 'ஸ்வீகாரானந்தரமொழிய உபாயம் கார்யகரமாகாமையாலே பேற்றுக்கு இது அவஶ்யம் வேண்டியிருக்க, இதில் உபாயத்வத் தைக் கழிக்கிறபடிதான் எங்ஙனே?' என்ன, அருளிச்செய்கிறார்

சூ—(உஉங) ஸ்வீகாரந்தானும் அவனாலே வந் தது.

(வ்யா.) 'ஸ்வீகாரந்தானும் அவனாலே வந்தது' என்று. அதா வது - ஸ்வீகாராநந்தரம் இவனுக்கு அநிஷ்டநிவ்ருத்தியும் இஷ்ட ப்ராப்தியும் பண்ணுகையாகிற இது அவனாலே ஆனாற்போலே 6. தத் பூர்வபாவியான ஸ்வீகாரந்தானும் அவனாலே உண்டானது என்கை. இத்தால், ஸ்வீகாரத்துக்கு 7 உபாயகார்யத்வமொழிய உபாயத்வம் இல்லை என்றதாயிற்று.

---

1. அஸாதாரணஆகாரம் - அவனுக்கு என்று விசேஷமாக ஏற்பட்ட வடிவு: விபவத்திலெழுந்தருளியுள்ள ஸ்ரீ க்ருஷ்ணன் தன்னை 'மாம்' என்று சுட்டிக்காட்டுவதால் 'மாமென்று அஸாதாரணாகாரத்தைச் சொல்லுகையாலே' என்கிறார். 2. ஸ்வீகாரத்தில் உபாயத்வத்தை - பகவானைச் சரணமாகப் பற்றுவதென்ற செய்கையே நாம் ஈடேறுதற்கு உபாயமாமென்பதை. 3. அந்வய மாவது - ஸ்வீகார முண்டானால், மோக்ஷம் வித்திப்பது: வ்யதிரேகமாவது - ஸ்வீகார மில்லாவிட்டால் மோக்ஷம் வித்தியாமற்போவது: ஒன்று இருப்பின் தானும் உண்டாய், அதுஇல்லாமற்போனால் தானும் இல்லாமற்போனால் அது அதற்குச் சாதனமென்பது, லோகசித்தம்: ஆகவே, இந்த ஸ்வீகாரம் ஸாதந மென்று தோன்றுமாதலால் அதனைக்கழிக்க வேண்டியது அவசியமாதலால் ஏகசப்தம் அதைக் கழிக்கின்றதென்க. 4. ஸ்வீகாராநந்தரம் - ஸ்வீகாரத் திற்குப்பிறகு. 5. பேற்றுக்கு - புருஷார்த்தத்துக்கு. இது-ஸ்வீகாரம். 6. தத் பூர்பாவியான - இஷ்டப்ராப்தியையும் அநிஷ்டநிவ்ருத்தியையும் செய்வ தற்கு முன்பு உண்டான. 7. உபாயகார்யத்வம் - உபாயமான பகவானாலே செய்யப்பட்டதாகுகை. சேதநன் பகவானை உபாயமாக ஸ்வீகரிப்பதற்குங் காரணம் வித்தோபாயமாக வுள்ள அந்தப்பகவானேயென்பதை மேல்வாக் கியம் விளக்கும்.

* ஸ்வீகாரமொழிய என்னும் பாடமுண்டு.

'அவனாலே வருகையாவது என்?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(உஉச) ஸ்ருஷ்ட்யவதாராதி முகத்தாலே பண்ணின க்ருஷிபலம்.

(வ்யா.) 'ஸ்ருஷ்டி' என்று தொடங்கி. அதாவது- 1 கரணகளேபரவிதுரனாய்ப் போகமோக்ஷஶூந்யனாய் 2 அசிதவிஶேஷிதனாய்க் கிடக்கிற தசையிலே கரணகளேபர 3 விஶிஷ்டனாய் ஜ்ஞாநவிகாஸயுக்தனாம்படி ஸ்ருஷ்டித்து, * 4 "எதிர்சூழல்புக்கு" என்கிறபடியே இவனை அங்கீகரிக்கைக்காக அநேக அவதாரங்களைப்பண்ணி அவதரித்த இடங்களிலே 5 ஆஶ்ரயண ருசி விஶ்வாஸ ஜநகமான தன்குண சேஷ்டிதாதிகளை ப்ரகாஶிப்பித்து இவ்வழியாலே அவன்பண்ணின க்ருஷியாலே பலித்தது, இதுவென்கை.

இவ்வர்த்தத்தில் ப்ரமாணம் காட்டுகிறார்.

மூ.—(உஉரு) "அதுவும் அவனதுஇன்னருளே."

(வ்யா.) "அதுவும்வனதின்னருளே" என்று, அதாவது-† "உணர்விலும்பரொருவனை யவனதருளா லுறற்பொருட்டு என்னுணர்வினுள்ளே யிருத்தினேன்" என்று உணர்வுமிக்கிருக்கக்கடவரான நித்யஸூரிகளுடைய 6. ஸத்தாதிகளுக்கு நிர்வாஹகனான அத்விதீயனானவனை அவனுடைய அருளாலே ப்ராபிக்கைக்காக என்னுடைய அபேக்ஷாரூபஜ்ஞாநத்துக்குள்ளே யிருத்தினேன் என்று தம்முடையஸ்வீகாரத்தை யருளிச்செய்த அநந்தரம், † "அதுவுமவனதின்னருளே" என்று அந்த ஸ்வீகாரந்தானும் அவனுடைய நிர்ஹேதுக

1. கரண களேபர விதுரன் - (கை கால் முதலிய) உறுப்புக்கள், உடம்பு என்றிவற்றைப்பெறாதவன். 2. அசித் அவிஶேஷிதனாய் - அசித்தைக்காட்டிலும் வேறுபட்டுத் தோன்றாதவனாய்: ஜ்ஞாநஹீநனாய் என்றபடி. 3. விஶிஷ்டன் - கூடினவன். 4. எதிர்சூழல்புக்கு - சேதநன் பிறக்குந்தோறும் அவனைத் திருத்திச்சேர்த்துக்கொள்வதற்காக எதிரான பல அவதாரங்களைக் கொண்டு. 5. ஆஶ்ரயணருசி - பகவானை ஆஶ்ரயிப்பதில் பிரீதி. ஆஶ்ரயண விச்வாஸம் - இவனை ஆச்ரயித்தால் இவன் நம்மைக் காப்பாற்றுவனென்ற நம்பிக்கை. ஜநகம் - உண்டாக்குவது. தன்குண சேஷ்டிதங்கள் - குணங்களும் செய்கைகளும். 6. ஸத்தாதிகள் - ஸத்தை முதலியவை; ஸத்தை - ஸ்திதி: ஆதிசப்தத்தால் ப்ரவ்ருத்தி முதலானவை கொள்ளப்படும்.

* திருவா - உ - எ - சு. † திருவா - அ - அ - ரு.

க்ருபையினாலே உண்டானது என்று ஆழ்வாரருளிச்செய்கையாலே, ஸ்வீகாரமும் அவனுடைய க்ருஷிபல மென்றே கொள்ளவேணு மென்கை.

இப்படி யாகையால் இந்தஸ்வீகாரத்தில் 1. சரக்கற நினைக்கக் கடவ னென்கிறார்

மூ.—(உ௨சு) இத்தை ஒழியவும் தானே கார்யஞ் செய்யும் என்று நினைக்கக்கடவன்.

(வ்யா.) 'இத்தையொழியவும்' என்று தொடங்கி. அதாவது- இந்த ஸ்வீகாரத்துக்கும் தானே க்ருஷிபண்ணுவா னொருவன் ஆகை யாலே, இதுக்காக வன்று அவன் நமக்குக் கார்யஞ்செய்கிறது; இத்தை ஒழியவும் இவ்வாத்மோஜ்ஜீவநகரணன தானே நம்முடைய இஷ்டஅநிஷ்டப்ராப்தி பரிஹாரரூபமான கார்யத்தைச் செய்யுமென்று ப்ரதிபத்தி பண்ணக்கடவ னென்கை.

'இப்படி நினைக்கவேண்டுகிறது என்?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(உ௨எ) அல்லாதபோது உபாயநைரபேக்ஷ்யம் ஜீவியாது.

(வ்யா.) 'அல்லாதபோது' என்றுதொடங்கி. அதாவது - 'இத்தை யொழியவுங் கார்யஞ்செய்யுமென்று நினையாதே, இதுவும்வேணும் அவன் கார்யஞ்செய்கைக்கு' என்று நினைக்குமளவில், உபாயத்தினு டைய ஸஹாயாந்தரநைரபேக்ஷ்யம் 3. ஜீவிக்கப்பெறா தென்கை.

'ஆனால், இந்த ஸ்வீகாரந்தான் எது ஆவது?' என்ன, அருளிச் செய்கிறார்

மூ.—(உ௨அ) இது ஸர்வமுக்திப்ரஸங்கபரிஹாரார்த்தம்; புத்திஸமாதாநார்த்தம்; சைத்ந்யகார்யம்; ராகப்ராப்தம்; ஸ்வரூபநிஷ்டம்; அப்ரதிஷேதத்யோதகம்.

(வ்யா.) 'இது' என்று தொடங்கி. அதாவது-'இந்த ஸ்வீகாரம், இத்தலையில் ஒன்றுமின்றிக்கே யிருக்க ஈஸ்வரன்தானே உஜ்ஜீவிப் பிக்குமளவில், எல்லாரும் பின்னை முக்தராகவேண்டாவோ?' என்

---

1. சரக்கு அற - உபாயத்வபுத்தி நீங்க. 2. ப்ரதிபத்தி - எண்ணம்.
3. ஜீவிக்கப்பெறாது - நிலைநிற்காது.

கிற ஸர்வமுக்திப்ரஸங்கபரிஹாரத்துக்கு உறுப்பு; இதுதான், 'நெடுங்காலம் நம்மை ரக்ஷியாதவன் இன்று நம்மை ரக்ஷிக்குமென்று இருக்கிறது நாம் என்கொண்டு?' என்று இவன் தளும்பாமல் புத்திஸமாதாநம் பிறந்திருக்கைக்கு உறுப்பு; இவன் தான் அசேதநமன்றிக்கே சேதநனாகையாலே, 'அவனே உபாயம்' என்கிற அத்யவஸாயம் இவன் சைதந்யத்தினுடைய கார்யம்; வைதமாக அன்றிக்கே 1. இதில் ரஸஜ்ஞனான இவனுடைய ராகத்தாலே ப்ராப்தமான இது, 2. ஸ்வரூபாதிரேகியன்றிக்கே ததேகரக்ஷ்யத்வரூபமான ஸ்வரூபத்திலே நிற்குமது; அநாதிகாலம் ஸ்வரக்ஷணாதிகளாலே அவன் பண்ணும் ரக்ஷணத்தை விலக்கிப்போந்த இவன் அது தவிர்ந்தமைக்குப் ப்ரகாசகமென்கை.

இனி, 'மாம்' என்கிற பதத்துக்குக் கீழும், இங்கும்* ஈஸ்வரனுடைய செயல்களை அருளிச்செய்கிறார்

மூ.—(உஉகூ) கீழ் தானும் பிறருமான நிலையைக் குலைத்தான், இங்குத் தானும் இவனுமான நிலையைக் குலைக்கிறான்.

(வ்யா.) 'கீழ்' என்று தொடங்கி. அதாவது - "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்ற இடத்தில் - ஸகலஉபாயங்களையும் விடச் சொல்லுகையாலே, பலப்ரதனான 3. தானும் உபாயாந்தரங்களுமாய்க் கூடிநிற்கிற நிலையைக் குலைத்தான்; "ஏகம்" என்கிற இடத்தில் ஸ்வீகாரத்தில் உபாயபாவத்தைக் கழிக்கையாலே, உபாயபூதனான தானும்

---

1. இதில் ரஸஜ்ஞன் - எம்பெருமானையே ஶரணமாகப்பற்றுவதிலுள்ள ருசியை யறிந்தவன். 2. ஸ்வரூப அதிரேகி - ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறுபட்டது: பகவானுக்கு ஶேஷப்பட்டு அவனால் ரக்ஷ்ய [ரக்ஷிக்கப்படுமது]மான ஆத்மா-நான் உன்னையே ஶரணமாகப் புத்திபண்ணுகிறேன் என்பது தன் ஸ்வரூபத்தையே சொன்னதாதல் காண்க. 3. ஸ்ரீ கீதையில் சரமஶ்லோகத்துக்கு முன்பு அருளிச்செய்துள்ள கர்மம் முதலிய உபாயங்களை யெல்லாம் விலக்கி அங்கு ரக்ஷகனைச் சொன்ன தன்னையே இங்கு உபாயமாகச் சொன்னதனால், கர்மாதிகள் உபாயமாம்போது தான் ரக்ஷகனாகவேண்டுமென்றநிர்ப்பந்தம் உள்ளதுபோலத் தானே உபாயமாம்போது வேறொரு உபாயம் வேண்டியதில்லை யென்று பெறப்படுதல் காண்க. பகவானாகிய தான் அங்கியாகநிற்க, உபாயாந்தரங்கள் அங்கமாக இருக்க, இவ்வாறு இரண்டும் கூடவேண்டுமென்பது - உபாயாந்தரங்களைப் பரிக்கிரஹித்தவர்க்கே யென்றபடி.

* 'மேலும்' என்று பிரத்தி பேதம்.

1 தன் ஸ்வீகாரத்தில் உபாயபுத்திபண்ணி நிற்கிற இவனுமான நிலையைக் குலைக்கிறு னென்கை. உபாயாந்தரங்களைப் பிறர் என்றது - *"உன்னாலல்லால் யாவராலும்" என்றாற்போலே.

இனி, ஸாதகபுத்த்யா இவன் பண்ணும் ஸ்வீகாரத்தினுடைய தோஷத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(உ௬0) அவனை இவன் பற்றும்பற்று அஹங்கார கர்ப்பம், அவத்யகரம்.

(வ்யா.) 'அவனை' என்று தொடங்கி. அதாவது-2 நிருபாதிகரக்ஷகனான அவனை, தத்ரக்ஷ்யபூதனான இவன், தன் ரக்ஷணத்துக்கு உறுப்பாக 3 ஸ்வீகரிக்கிற ஸ்வீகாரம், 4 ஸ்வகர்த்ருத்வரூப அஹங்கார கர்ப்பமுமாய், 5 பிதாவுக்குப் புத்ரன் எழுத்து வாங்குமாபோலே 6. அவத்யகரமுமா யிருக்கு மென்கை.

'ஆனால், ரக்ஷகமாவது தான் எது?' என்ன அருளிச்செய்கிறார்

மூ.—(உ௬க) அவனுடைய ஸ்வீகாரமே ரக்ஷகம்.

(வ்யா.) 'அவனுடைய ஸ்வீகாரமே ரக்ஷகம்' என்று. அதாவது - இவ்வாத்மாவினுடைய ரக்ஷணத்துக்குக் 7 கடவனான அவன் 'இவனை நாம் ரக்ஷிக்கக்கடவோம்' என்று அபிமாநித்துக்கொள்ளுகையாகிற ஸ்வீகாரமே இவனுக்கு, 8 ரக்ஷகமாயறுவது என்கை.

---

1. தன் ஸ்வீகாரத்தில் உபாயபுத்தி பண்ணிநிற்கிற இவன் ஆன நிலை - 'நாம் எம்பெருமானை உபாயமாகப் பற்றினதனாலன்றோ அவன் நம்மை ரக்ஷிக்கப்போகிறான்' என்று தான் ஈஸ்வரனை உபாயமாக ஸ்வீகரித்ததில் உபாயத்வ புத்தியைக் கொள்ளுகிற இந்தச் சேதநன் நிலைமை. 2. நிருபாதிக ரக்ஷகன் - காரணமில்லாமலே (ஸ்வதஸ்ஸித்தமான பந்தத்தாலே) ரக்ஷிப்பவன். 3. ஸ்வீகரிக்கிற ஸ்வீகாரம் - அவனே உபாய மென்று மாநஸமாகக் கொள்ளுகிற நினைவு. 4. ஸ்வகர்த்ருத்வரூப அஹங்கார கர்ப்பம் - 'எம்பெருமான் நம்மைப் பாதுகாக்கும்வகையில் நம்மைத் தன் திருவடிகளை உபாயமாகப் பற்றும்படி செய்ததும் ஒருவகை' என்று நினைவு கொள்ளாமல், 'நான் இந்த ப்ரபத்தியை என்னை ரக்ஷித்துக்கொள்ளச் செய்தேன்' என்று எண்ணுகிற இறுமாப்பைத் தன்னிடத்திற் கொண்டது. 5. பிதாவுக்குப் புத்ரன் எழுத்துவாங்குதல் - பிதாவினிடத்திலே 'நான் உன்னை ரக்ஷிக்கிறேன்' என்று கையெழுத்திடும்படி புத்திரன் கையெழுத்துக் கேட்டு வாங்குதல். 6. அவத்யகரம் - அவத்யத்தைச் செய்வது: அவத்யம் - பழிப்பு. 7. கடவன் - உரியவன். 8. ரக்ஷகமா யறுவது - ரக்ஷகமாகத் தீர்வது.

*திருவாய். ௫, அ, ௬.

'சேதநப்ரவ்ருத்தியில் ஒன்றையும் இவ்வுபாயம் ஸஹியாது' என்னுமத்தைத் தெளிவிக்கைக்காக, உபாயாந்தரங்களுக்கும் இவ்வுபாயத்துக்கும் உண்டான விஶேஷத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(உகூஉ) மற்றை உபாயங்களுக்கு நிவ்ருத்தி தோஷம், இதுக்கு ப்ரவ்ருத்தி தோஷம்.

(வ்யா.) 'மற்றை' என்று தொடங்கி. அதாவது-ஸித்தோபாயமான இத்தை யொழிந்த உபாயங்களுக்கு, 1. சேதநப்ரவ்ருத்தியாலே ஸ்வரூபஸித்தி ஆக வேண்டுகையாலே, இவனுடைய ஸ்வயத்ந நிவ்ருத்தி தோஷமாயிருக்கும்; இந்தஉபாயத்துக்கு, 2. ஸஹாயாந்தரஸம்ஸர்க்கம் அஸஹ்ய மாகையாலே, இச்சேதநனுடைய ப்ரவ்ருத்தி என்பது ஒன்றுமே தோஷமா யிருக்கு மென்கை.

'சேதநவ்யாபாரம் ஒன்றும் வேண்டா ?' என்னுமிடத்துக்கு ப்ரமாணங் காட்டுகிறார்

மூ.—(உகூகூ) * "சிற்றவேண்டா."

(வ்யா.) *'சிற்றவேண்டா' என்று. அதாவது-ஸித்தோபாய ஸ்வீகாரஞ் சொல்லுகிற *"மற்றொன்றில்லை" என்கிற பாட்டிலே, *'சிற்ற வேண்டா' என்று - 'சிற்றுதல் - சிதறுதலாய், பரக்க ஒரு வ்யாபாரம் பண்ணவேண்டா' என்கையாலே, இவ்வுபாயத்தில் இழியுமவனுக்கு ஒரு வ்யாபாரம் பண்ணவேண்டா என்னு மிடஞ் சொல்லிற்றிறே யென்கை.

இதுதான் இஶ்ஶ்லோகந்தனக்குள்ளே சொல்லிற்றென்கிறார்

மூ.—(உகூச) நிவ்ருத்தி, கீழே சொல்லிற்று.

(வ்யா.) 'நிவ்ருத்தி கீழே சொல்லிற்று' என்று. அதாவது-'ஸர்வதர்மாந்பரித்யஜ்ய' என்று - ஸகல ப்ரவ்ருத்தியினுடையவும் நிவ்ருத்தியே இவனுக்கு வேண்டுவது என்னுமிடம், கீழே சொல்லிற்று என்கை.

'ஆனால், உபகாரஸ்ம்ருதிதான் வேணுமோ? அது 3 உபாயத்தில் முதலிடாதோ?' என்ன அருளிச்செய்கிறார்

---

1. சேதநப்ரவ்ருத்தி - சேதநனுடைய முயற்சி. 2. ஸஹாயாந்தர ஸம்ஸர்க்கம் - வேறு ஒரு துணையின் சம்பந்தம். 3. உபாயத்தில் முதலிடுதல் - தானே உபாய மென வழங்குமாறு சேர்தல்.

*திருவாய். கூ-க-எ.

மூ—(உ௬௫) உபகாரஸ்ம்ருதியும் சைதந்யத்தாலே வந்தது; உபாயத்தில் அந்தர்ப்பவியாது.

(வ்யா.) 'உபகாரஸ்ம்ருதியும்' என்று தொடங்கி. அதாவது-* "என்னைத் 1 தீமனங்கெடுத்தாய்" † 2 "மருவித் தொழும்மனமே தந்தாய்" இத்யாதியாலே இவ்வுபாயவிஷயத்தில் இவன் பண்ணும் உபகாரஸ்ம்ருதியும், இவனுடைய சைதந்யப்ரயுக்தமாய்வந்த தித்தனை; இது உண்டாகையாலேயன்றோ ஈஸ்வரன் கார்யஞ்செய்தது 3 என்று உபாயத்தில் உட்புகாது என்கை.

ஆக, 4 சதுர்த்தபதார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

இனி, பஞ்சமபதத்தை உபாதாநம் பண்ணுகிறார்.

மூ.—(உ௬௬) ஶரணம்=உபாயமாக.

(வ்யா.) 'ஶரணம்' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார், 'உபாயமாக' என்று.

அர்த்தாந்தரங்களையுங் 5காட்டவற்றாயிருக்க, இவ்விடத்தில்இது, உபாயத்தையே காட்டுகிறமையைஸஹேதுகமாக அருளிச்செய்கிறார்

மூ.—(உ௬௭) இந்த ஶரணஶப்தம்-ரக்ஷிதாவையும் க்ருஹத்தையும் உபாயத்தையும் காட்டக்கடவதேயாகிலும், இவ்விடத்தில் உபாயத்தையே காட்டுகிறது; கீழோடே சேரவேண்டுகையாலே.

(வ்யா.) 'இந்தஶரணஶப்தம்' என்று தொடங்கி. அதாவது-(௧௧௦) 'உபாயே க்ருஹரக்ஷித்ரோஶ்ஶப்தஶ்ஶரணமித்யயம்-வர்த்ததே' [உபாயே க்ருஹரக்ஷித்ரோஸ் ஶப்தஸ்ஶரணமித்யயம்-வர்த்ததே] என்கிறபடியே ஶரணஶப்தமான இது-ரக்ஷிதாவையும் க்ருஹத்தையும் உபாயத்தையும் காட்டக்கடவதேயாகிலும், (௧௧௧) "ஸாம்ப்ரதஞ்சைஷ உபாயார்த்தைகவாசகః" [ஸாம்ப்ரதம்சைஷ உபாயார்த்தைகவாசகः] என்கிறபடியே இந்த ஸ்தலத்திலே உபாயத்தையே காட்டுகிறது.

---

1. தீமனம் - துஷ்டமனம். 2. மருவித்தொழுதல் - எப்பொழுதுமாகக் கிட்டி நின்று அடிமைசெய்தல். 3. 'என்று' என்பதன்பின்னே நினைக்குமாறு என்று வருவித்துக்கொள்க. 4. சதுர்த்தபதம் - நான்காவது பதம். 5. காட்டவற்று - காட்ட வல்லமையுள்ளது.

* திருவாய். உ, எ, அ. † திருவாய். உ, எ, எ.

ஸர்வதர்மங்களையும் விட்டுத் தன்னையேபற்றச்சொல்லுகிற ப்ரகரணமாகையால், 1 கீழோடே சேரவேண்டுகையாலே யென்கை.

2 'ஆனால், கீழ்ச்சொன்ன ஸாதநாந்தரபரித்யாகந்தானே ஸ்வீகார்ய வஸ்துவின் உபாயத்வத்தைத் தோற்றுவிக்குமதா யிருக்க, ஶரணஶப்தப்ரயோகந்தான் வேணுமோ?' என்னில், - வேணும். 3ப்ராபகஸமயத்திற்போலே ப்ராப்யஸமயத்திலும் 4 நதீநிஸ்தரணாநந்தரத்தில் 5 ப்லவபரித்யாகம்போலே ஸாதநாந்தர பரித்யாகம் ஸமாநமாகையாலே, 6 தத்விசிஷ்டமேயாகிலும் ஸ்வீகாரமாத்ரம் வ்யவச்சேதகமாகமாட்டாமையாலே.

---

1. கர்மாதி உபாயங்களை யெல்லாங் கேட்டு அவை சுலபமாகச் செய்யக்கூடியனவல்லவென்றும் ஸ்வரூபவிருத்தமென்றும் நினைத்து 'நாம் கரையேறும் உபாயம் என்னோ?' என்று கவலைகொண்டுள்ள அர்ஜுநனைக் குறித்து இந்தச் சரமஶ்லோகம் அருளிச்செய்யப்படுவதால், அதற்கு ஏற்ப, க்ருஹம் ரக்ஷகன் என்ற பொருளை விட்டு உபாய மென்ற பொருளைக் கொண்டால்தான் கர்மாதிகளை உபாயமாகக் கொள்ளுதலை விட்டிடவேணு மென்றிருக்கிற அந்த அர்ஜுநனுக்குச் சமாதானஞ் சொல்லுகிறதென்று கீழோடு ஒட்டிவரு மென்றபடி.

2. ஶரணஶப்தத்துக்கு ப்ரகரணபலத்தாலே உபாயமென்ற பொருளைக் கொண்டுவரவேண்டுவ தானால், ஶரணஶப்த மில்லாமலே 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய - மாமேகம் - வ்ரஜ' என்ற இம்மாத்திரமே சொன்னாலும், ப்ரகரணத்தாலே 'வ்ரஜ' என்பதற்கு - (உபாயமாகப்) புத்திபண்ணு என்று அர்த்தம் கொண்டு விடலாமே? இந்த ஶரணஶப்தம் எதுக்கு? என்று ஆக்ஷேபம்: அதற்கு ஸமாதாநம்:—எம்பெருமானை ப்ராப்யமாக [உபேயமாகப்] பற்றும்போதும், நதியைக் கடந்தவனுக்கு ஓடத்தின் தேவையில்லாததுபோல் ஸாதநாந்தரங்கள் ஒன்றும் வேண்டியதில்லை யாகையால், 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் வ்ரஜ' என்பதற்கு - எல்லாச்சாதனங்களையும் விட்டு உபேயமாக எம்பெருமானொருவனையே பற்று என்று பொருள்கொள்ளவும் இடமுண்டாகையால், 'ஶரணம் வ்ரஜ' என்னாமல் 'வ்ரஜ' என்றுமாத்திரம் விதிக்கும் ஸ்வீகாரம் - அப்படி உபேயமாகப் பற்றுதலைத் தவிர்க்காது: ஆகவே, ஸர்வதர்மங்களையும்விட்டு உபேயமாக ஸ்வீகரித்தலைத் தவிர்ப்பதற்காக 'ஶரணம்' என்பது அவஶ்யம் வேண்டுமென்றபடி 3. ப்ராபகஸமயம் - எம்பெருமானை உபாயமாகப் பற்றுகிற ஸமயம். 4. நதீநிஸ்தரணம்-நதியைக்கடத்தல். 5. ப்லவபரித்யாகம் - ஓடத்தை விட்டிடுதல். 6. தத்விஶிஷ்டமேயாகிலும் - ஸாதநாந்தர பரித்யாகத்தோடு கூடியதேயானாலும். ஸ்வீகாரமாத்ரம் - ஶரணஶப்தமில்லாமல் வ்ரஜ என்பதனாற் சொல்லப்படும் ஸ்வீகாரம். வ்யவச்சேதகமாகமாட்டாது - உபேயமாகப் பற்றுதலை விலக்கமாட்டாது.

'அங்ஙனஞ்சொல்லலாமோ? 1 இந்த உபாயாந்தரத்யாகம் ஸ்வீகாரத்துக்கு அங்கமாக விதிக்கப்படுகின்றதாகையாலே, ஸ்வீகார்யத்தினுடைய உபாயத்வத்தைக் காட்டவற்றாகையால், ஶரணஶப்தப்ரயோகத்துக்கு ப்ரயோஜநம் இல்லையே?' என்னில்,- அப்படிச் சொல்லவொண்ணாது; 2 ஆர்த்தமாகவருமதிற் காட்டில் ஶாப்தமாகச் சொல்லுமது யுக்தம் ஆகையாலே; (கசஉ) "ஆக்ஷேபதஃப்ராப்தாத் ஆபிதாநிகஸ்யைவக்ராஹ்யத்வாத்" [ஆக்ஷேபதஃப்ராப்தாத் ஆபிதாநிகஸ்யைவக்ராஹ்யத்வாத்] என்றிறே பாஷ்யகாரரும் அருளிச்செய்தது.

ஆக, உபாயவாசியான இந்த ஶரணஶப்தத்தாலே இவ்வஸ்துவுக்கு ப்ராப்யதயாஸ்வீகார்யத்வமும் ப்ராபகதயாஸ்வீகார்யத்வமும் உண்டானவையாலே, அதில் ப்ராப்யதயா ஸ்வீகாரத்தை 3 வ்யவச்சேதித்ததாயிற்று.

இனி, ஷஷ்டபதத்தை உபாதாநம்பண்ணுகிறார்

மூ.—(உருஅ) வ்ரஜ = புத்திபண்ணு.

(வ்யா.) 'வ்ரஜ' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் 'புத்திபண்ணு' என்று.

அது தன்னை விஶதீகரிக்கிறார்

மூ.—(உருகூ) கத்யர்த்தமாவது புத்த்யர்த்தமாய், அத்யவஸி யென்றபடி

(வ்யா.) 'கத்யர்த்தமாவது' என்று தொடங்கி. அதாவது-* 'வ்ரஜ கதௌ' என்கிற தாதுவிலே கத்யர்த்தமாய், 4. [கத்யர்த்தாஃபுத்த்யர்த்தாஃ] என்கிற ந்யாயத்தாலே, கத்யர்த்தமாவது - புத்த்யர்த்தமாய், அத்யவஸி யென்றபடி யென்கை. "இந்தப் புத்தியாகிறது - 5 த்யா

1. யத்யத் ஸாங்கம் தத் தத் ஸாதநம் - [எது எது அங்கத்தோடு கூடியதோ, அது அது உபாயம்] என்ற நியாயத்துக்கு ஏற்ப 'வ்ரஜ' என்ற விதிக்கு அங்கமாக 'ஸர்வதர்மாந்பரித்யஜ்ய' என்று உபாயாந்தரத்யாகத்தைச் சொல்லியிருத்தலால், இந்த 'வ்ரஜ' என்பதனால் விதிக்கப்படுகிற ஸ்வீகாரம் உபாயமாகஸ்வீகரித்தலையே காட்டக்கூடியதாகையால், இந்த ஶரணஶப்தம் வேண்டியதில்லை யென்று மறுபடியும் ஆக்ஷேபம். 2. ஆர்த்தமாகவருமது - அர்த்தபலத்தாலே சொல்லப்படுவது. 3. வ்யவச்சேதித்தது - தவிர்த்தது. 4 கத்யர்த்தாஃ - போதலென்ற பொருளுள்ள வினைச்சொற்கள், புத்த்யர்த்தாஃ - அறிதலென்ற பொருளிலும் வரத்தக்கவை: இது, வையாகரணர்களின் நியாயம். 5. த்யாஜ்யகோடியில் உத்தீர்ணமாய் - விடத்தக்கவை யென்று ஏற்பட்ட உபாயாந்தரங்களிற் சேராததாய்: உத்தீர்ணம் - கடந்தது.

*யாதவ: பாடி:

ஜ்யகோடியில் உத்தீர்ணமாய், உபாயகோடியில் அநநுப்ரவிஷ்டமாய், ப்ராபகாந்தரபரித்யாக பூர்வகமாய், பகவத்ரக்ஷகத்வாநுமதிரூபமாய், சைதந்யகார்யமாய், ப்ரார்த்தநாகர்ப்பமாய், பகவந்முகவிகாஸஹேது வாய், ஸ்வரூபாநுரூபமாய் 1. வ்யபிசாரவிளம்பவிதுரமா யிருப்பதொரு அத்யவஸாயாத்மக ஜ்ஞாநவிஸேஷம்'' என்று பரந்தபடியில் இவர் அருளிச்செய்த இது இவ்விடத்திலே அநுஸந்தேயம்.

'ஸாமாந்யேந கதிவாசியான இது மாநஸவாசிககாயிகரூபமான கதித்ரயத்தையும் காட்டவற்றாயிருக்க, மாநஸமான அத்யவஸாயமாத்ரத்திலே ஒதுக்குகிறது என்?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(உ௪0) வாசிக காயிகங்களும் இதுக்கு அபேக்ஷிதங்களா யிருக்கச்செய்தேயும், ஜ்ஞாநாந்மோக்ஷமாகையாலே மாநஸமானஅநுஷ்டாநத்தைச் சொல்லுகிறது.

(வ்யா.) 'வாசிக காயிகங்களும்' என்று தொடங்கி. அதாவது- * ''சிந்தையாலுஞ் சொல்லாலுஞ் செய்கையினாலும்'' என்கிறபடியே கரணத்ரயத்தாலும் உண்டான ஸ்வீகாரம் 2 அதிகாரபூர்த்திக்கு உடலாகையாலே 3. வரணோக்திரூபமான வாசிகமும் அஞ்சலிஆதி ரூபமான காயிகமும் இந்த ஸ்வீகாரத்துக்கு அபேக்ஷிதங்களா யிருக்கச் செய்தேயும், ''ஜ்ஞாநாந்மோக்ஷ:'' ஆகையாலே அவையிரண்டையுமொழிய, மாநஸமான அநுஷ்டாநமாத்ரத்தைச் சொல்லுகிறதென்கை.

ஆக, ப்ரதிபதம் அர்த்தம் அருளிச்செய்தாராயிற்று.

இனி, பூர்வார்த்தத்தாற் சொல்லுகிற அர்த்தத்தை அநுவதித்து நிகமிக்கிறார்

மூ.—(உ௪க) ஆக, த்யாஜ்யத்தைச்சொல்லி, த்யாகப்ரகாரத்தைச் சொல்லி, பற்றப்படும் உபாயத்தைச் சொல்லி, 4 உபாயநைரபேக்ஷ்யஞ்சொல்லி, உபாயத்வஞ் சொல்லி, உபாயஸ்வீகாரம் சொல்லுகிறது.

---

1. வ்யபிசாரம் - பயனை விளைக்காமல் தவறிப்போகை. 2. அதிகாரபூர்த்தி-யோக்யதைநிறைகை. 3. வரணோக்தி - ஶரணமாக வரித்ததைச் சொல்லுதல். 4. உபாயநைரபேக்ஷ்யம் - எம்பெருமானாகிற உபாயம் வேறோருபாயத்தை வேண்டாததாக இருக்கை.

* திருவாய். ௬-௫-கக.

(வ்யா.) 'ஆக, த்யாஜ்யத்தைச்சொல்லி' என்று தொடங்கி. அதாவது - ஆக, பூர்வார்த்தத்தால் 'ஸர்வதர்மாந்' என்று - த்யாஜ்யத்தைச் சொல்லி, 'பரித்யஜ்ய' என்று - த்யாகப்ரகாரத்தைச் சொல்லி, 'மாம்' என்று-பற்றப்படும் உபாயத்தைச் சொல்லி, 'ஏகம்' என்று - 1 உபாய நைரபேக்ஷ்யஞ் சொல்லி, 'ஶரணம்' என்று - உபாயத்வஞ்சொல்லி, 'வ்ரஜ' என்று - உபாயஸ்வீகாரஞ் சொல்லுகிறது என்கை.

அநந்தரம், உத்தரார்த்தத்துக்கு அர்த்தம் அருளிச்செய்வதாகக் கோலி, அதில் ப்ரதமபதத்தை உபாதாநம் பண்ணுகிறார்

மூ.—(உசஉ) அஹம்.

(வ்யா.) 'அஹம்' என்று.

இவ்வுத்தரார்த்தத்தில் ஈஸ்வரன் செய்தருளுகிற அம்ஶத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(உசக) ஸ்வக்ருத்யத்தை அருளிச்செய்கிறான்.

(வ்யா.) 2 'ஸ்வக்ருத்யத்தை அருளிச்செய்கிறான்' என்று. அதாவது - 3 அதிகாரிக்ருத்யமிறே பூர்வார்த்தத்திற் சொல்லிற்று; உபாயபூதனை தன்னுடைய க்ருத்யத்தை அருளிச்செய்கிறது, இதிலேயிறே.

இனி, இப்பதத்துக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார்

மூ.—(உசச) ஸர்வஜ்ஞனுய், ஸர்வஶக்தியாய், ப்ராப்தனுன நான்.

(வ்யா.) 'ஸர்வஜ்ஞனுய்' என்று தொடங்கி. அதாவது - (ககூங) "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" [யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்] என்கிறபடியே ஸர்வத்தையும் அறியுமவனுய், (ககூச) "பராஸ்யஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே" [பராஸ்யஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே] என்கிறபடியே எல்லாஸாமர்த்யத்தையும் உடையனுய், ஶேஷியாகையாலே ப்ராப்தனுயிருக்கிற நான் என்கை.

---

1. உபாய நைரபேக்ஷ்யம் - எம்பெருமானுகிற உபாயம் வேறொருபாயத்தை வேண்டாததாக இருக்கை. 2. ஸ்வக்ருத்யம் - தன்தொழில். 3. அதிகாரிக்ருத்யம் - ப்ரபந்நனென்கிற அதிகாரி செய்யவேண்டிய தொழில்.

அல்லாத குணங்கள்எல்லாம் கிடக்க, 1 இந்தக் குண விஶேஷங்களை இவ்வஹம் ஶப்தம் காட்டுகிற இதுக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார்

மூ.—(உசரு) இவன் கீழ்நின்ற நிலையும் மேல் போக்கடியும் அறிகைக்கும் அறிந்தபடியே செய்து தலைக்கட்டுகைக்கும் ஏகாந்தமான குணவிஶேஷங்களையும், தன்பேறாகச்செய்து தலைக்கட்டுகைக்கீடான பந்த விஶேஷத்தையும் காட்டுகிறது.

(வ்யா.) 'இவன் கீழ்நின்ற நிலையும்' என்று தொடங்கி. அதாவது—இச்சேதநனுக்கு அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்ராப்திகளைப் பண்ணுமளவில், இவன் பூர்வத்தில்நின்ற நிலையும், மேல்போகத்தக்க வழியும் அறிகைக்கும், அறிந்தபடியே அவற்றைச்செய்து தலைக்கட்டுகைக்கும் தக்கவையாயிருந்துள்ள ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வங்களாகிற குணவிஶேஷங்களையும், இவன் கார்யஞ் செய்யுமிடத்தில் இவனுக்காக அன்றிக்கே தன்பேறாகச்செய்து தலைக்கட்டுகைக்கு ஈடான ஶேஷித்வரூப பந்தவிஶேஷத்தையும் ப்ரகாஶிப்பிக்கிறது என்கை. 'மாம்' என்கிற இடத்தில் ஆஶ்ரயணத்துக்கு ஏகாந்தமான குணவிஶேஷங்கள் ப்ரகாஶித்தாற்போலே, 'அஹம்' என்கிற இடத்திலும் 2 கார்யகரத்வத்துக்கு ஏகாந்தமான குணவிஶேஷங்கள் ப்ரகாஶிக்குமிறே; 3 வாத்ஸல்யாதிகள் இல்லாதபோது ஆஶ்ரயணங் கூடாதாபோலே, ஜ்ஞாநஶக்த்யாதிகள் இல்லாதபோது 4 கார்யகரத்வம் கடியாமையாலே. இவ்விடத்தில் ஜ்ஞாநஶக்திகளும் ப்ராப்தியுஞ் சொன்ன இது, பூர்த்திக்கும் உபலக்ஷணம்.

---

1. இந்தக் குணவிஶேஷங்கள் - ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வ ப்ராப்தத்வங்கள். 2. கார்யகரத்வத்துக்கு ஏகாந்தமான - இவனுக்கு வேண்டிய காரியத்தைச் செய்பவனாகைக்கு முக்கியமான. 3. ஆஶ்ரயணவேளையில் வந்தமையாலே 'மாம்' என்பதில் வாத்ஸல்யாதிகள் ப்ரகாசிக்கு மெனக் கொண்டதுபோல, இரண்டாம் அடியிலுள்ள 'அஹம்' என்பதும் 'அஸ்மத்' ஶப்தத்தைச் சேர்ந்ததாயிருந்தாலும் உபாயமாகப் பற்றப்பட்ட ஈஶ்வரன் தன்னுடைய க்ருத்யத்தை யருளிச்செய்யும் ப்ரகரணத்தில் வந்துள்ளதனால், இந்த அஹம் ஶப்தத்தில் கார்யகரத்வத்துக்கு ஏற்ற ஜ்ஞாநம் முதலிய குணங்கள் ப்ரகாசிக்கு மெனக் கொள்ளவேணு மென்பது கருத்து. 4. கார்யகரத்வம் கடியாமையாலே — கார்யத்தைச் செய்பவனாகை யென்பது பொருந்தாதாகையாலே.

இப்பதத்தில் 'மாம்' என்கிற இடத்தில், ஸாரதியாய்நின்ற பாரதந்த்ர்யத்துக்கு எதிர்த்தட்டான தன்ஸ்வாதந்த்ர்யத்தை ப்ரகாசிப்பித்தமையை அருளிச்செய்கிறார்

மூ.—(௨௪௯) 1. தனக்காகக்கொண்ட ஸாரத்யவேஷத்தை அவனையிட்டுப் பாராதே தன்னையிட்டுப் பார்த்து, அஞ்சின அச்சந்தீரத் தானான தன்மையை 'அஹம்' என்று காட்டுகிறான்.

(வ்யா.) 'தனக்காகக்கொண்ட' என்று தொடங்கி. அதாவது - 'மாம்' என்று ஸாரத்யவேஷத்தோடே நிற்கிற தன்னைப் பற்றச் சொன்னபோது, அர்ஜ்ஜுநன், தன்னுடைய ரக்ஷணார்த்தமாக ஏறிட்டுக்கொண்ட ஸாரத்யவேஷத்தை 'ஸர்வாதிகனானவன் இப்படித் தாழநின்றது, தன்குணத்தாலேயிறே' என்று 2 அவனை யிட்டுப் பாராதே, 'நமக்கு இழிதொழில் செய்து ஸாரதியாய் நிற்கிறவனன்றோ?' என்று 3 தன்னையிட்டுப்பார்த்து, 'ஸர்வதர்மங்களையும் விட்டு என்னைப்பற்று என்னாநின்றான்; இது என்னாகக்கடவது?' என்று அஞ்சின அச்சம்தீர, ஸ்வாதீந 4 த்ரிவிதசேதநாசேதந ஸ்வரூபஸ்த்திதி ப்ரவ்ருத்திகனாய்க்கொண்டு 5 நிரங்குசஸ்வதந்த்ரனாயிருக்கிற தன்னுடைய, 6 யதாவஸ்த்திதவேஷத்தை 'அஹம்' என்று தர்சிப்பிக்கிறானென்கை.

ஏவம்பூதனானவன் பரதந்த்ரனானதும், தனக்கு ஸ்வரூபமாய்ச் செய்ததன்று என்னுமிடத்தை அருளிச்செய்கிறார்

---

1. தனக்காகக் கொண்ட - அர்ஜ்ஜுநனான தன்னை ரக்ஷிப்பதற்காக மேற்கொண்ட. 2. அவனையிட்டுப்பாராதே - ஆஸ்ரிதபாரதந்த்ரனான அப்பெருமானுடைய குணத்தை யநுஸந்தித்து ஆராயாமல். 3. தன்னை யிட்டுப்பார்த்து - அந்த ரதத்துக்கு ஸ்வாமியாயிருக்கிற தன்நிலையை நினைத்துப்பார்த்து. 4. த்ரிவிதமான சேதநங்களென்ன அசேதநங்களென்ன இவற்றினுடைய ஸ்வரூபத்தையும் ஸ்திதியையும் ப்ரவ்ருத்தியையும் ஸ்வாதீநமாகவுடையவனெனக: சேதநர் - பத்தர் முக்தர் நித்யர் என்று மூன்றுவகைப் பட்டிருப்பர்; அசேதநங்களும் - சுத்தஸத்வமான அசித்தும், குணத்ரய ஸ்வரூபமாயிருத்தலாலே மிஸ்ரஸத்வமென்னப்படுகின்ற ப்ரக்ருதியும், ஸ்ருஷ்டி முதலியவற்றிற்கு நிர்வாஹகமாய் ஸத்வசூந்ய மென்னப்படுகின்ற காலமும் என மூவகைப்பட்டிருக்கும். 5. நிரங்குசஸ்வதந்த்ரன் - எங்குந் தடைப்படாத ஸ்வாதந்த்ர்யத்தை யுடையவன். 6. யதா அவஸ்திதவேஷம் - இயற்கையாயுள்ள தான் ஸ்வரூபம்.

மூ.—(உசஎ) கீழில் பாரதந்த்ர்யமும், இந்த ஸ்வா தந்த்ர்யத்தினுடைய எல்லைநிலமிறே.

(வ்யா.) 'கீழில்' என்று தொடங்கி. அதாவது - கீழ் ஸாரதியாய் நின்ற பாரதந்த்ர்யமும், நினைத்தது செய்யுமளவில் தனக்கு ஒரு [1] நிவாரகரில்லாதபடியான இந்த ஸ்வாதந்த்ர்யத்தினுடைய ஸீமாபூமியிறே யென்கை.

அநந்தரம், த்விதீயபதத்தை உபாதாநம் பண்ணுகிறார்

மூ.—(உசஅ) த்வா - அஜ்ஞனாய், அஶக்தனாய், அப்ராப்தனாய், என்னையே உபாயமாகப் பற்றியிருக்கிற உன்னை.

(வ்யா.) 'த்வா' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் 'அஜ்ஞனாய்' என்று தொடங்கி. அதாவது-உன்கார்யங்கள் அறிகைக்குத் தக்க ஜ்ஞாநமில்லாதவனாய், அறிந்தாலும் செய்து தலைக்கட்டிக் கொள்ளுகைக்கு ஶக்தியில்லாதவனாய், அதுதான் உண்டானாலும் உன்னுடைய ரக்ஷணத்தில் உனக்கு 2 ப்ராப்தியில்லாதவனாய், இப்படியிருக்கையாலே ஸர்வதர்மங்களையும் விட்டு என்னையே 3 நிரபேக்ஷ உபாயமாகப் பரிக்ரஹித்திருக்கிற உன்னை யென்கை.

அநந்தரம், த்ருதீயபதத்தை உபாதாநம் பண்ணுகிறார்

மூ.—(உசகூ) ஸர்வபாபேப்ய: = மத்ப்ராப்திப்ரதிபந்தகங்கள் என்று யாவையாவை சிலபாபங்களைக் குறித்து அஞ்சுகிறாய், அவ்வோபாபங்கள் எல்லாவற்றில் நின்றும்.

(வ்யா.) 'ஸர்வபாபேப்ய:' என்று. இதுவும்-பாபமும் பஹுவசநமும் ஸர்வஶப்தமுமாய் த்ரிப்ரகாரமாய் இருக்கையாலே, இம்மூன்றையும் உட்கொண்டு இப்பதத்துக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் 'மத்ப்ராப்திப்ரதிபந்தகங்கள்' என்று தொடங்கி. அதாவது-பாபமாகிறது-இஷ்டவிரோதியாயும் அநிஷ்டஹேதுவாயும் இருக்குமதாகையாலும், மோக்ஷப்ரகரணமாகையாலே இவ்விடத்தில் இஷ்டவிரோதிக

---

1. நிவாரகர் - தடைசெய்பவர். 2. ப்ராப்தி - தகுதி. 3. நிரபேக்ஷ உபாயம் - வேறொரு உதவியை வேண்டாத உபாயம்.

ளாகிறன - 1 பகவல்லாப விரோதிக ளாகையாலும், அதில் 2 ஜ்ஞாந விரோதியும் ருசிவிரோதியும் 3 உபாயவிரோதியும் 4 பண்டே நிவ்ருத்த மாகையாலும், இனி உள்ளது ப்ராப்திவிரோதி யாகையாலே 5. நீ என்னை ப்ராபிக்கைக்கு ப்ரதிபந்தகங்கள் என்று யாவையாவை சிலபாபங்களை உத்தேசித்துப் பயப்படுகிறாய், அந்தஅந்தப் பாபங்க ளெல்லாவற்றில்நின்று மென்கை.

அதில் பஹுவசநவிவக்ஷிதங்களை அருளிச்செய்கிறார்

மூ.—(உ௫0) "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும்" என்கிறபடியே, அவித்யா கர்ம வாஸநா ருசி ப்ரக்ருதிஸம்பந்தங்களைச் சொல்லுகிறது.

(வ்யா.) "பொய்ந்நின்ற ஞானமும்" என்று தொடங்கி. அதாவது - * "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும்" என்று - 6 'உத்பத்தி விநாஶாதி யோகத்தாலே அஸத்ய

1. பகவல்லாபம் - பகவானையடைகை. 2. ஜ்ஞாநவிரோதி - அர்த்த பஞ்சக ஜ்ஞாந விரோதி; இது - திருமந்த்ரம் அர்த்தபஞ்சகத்தைத் தெரிவித்தலாற் கழியுண்ணும்; முக்கியமாக, அங்குள்ள நமஸ்ஸாலும் கழியுண்ணும்: அங்கு 'இத்தால் விரோதியைக் கழிக்கிறது: விரோதிதான் மூன்று' முதலிய சூர்ணிகையால் அருளிச்செய்திருத்தல் காண்க. ருசிவிரோதி - உபாயத்தில் 'நான் இந்த உபாயத்தைச் செய்கிறேன்' என்ற புத்தி தோன்றுதலும், உபேயமான கைங்கர்யத்தில் 'என்னுடைய திருப்திக்காக நான் கைங்கர்யஞ் செய்கிறேன்' என்ற புத்தி தோன்றுதலும்; சரமஶ்லோகத்தில் 'இத்தால் வ்ரஜ என்கிற ஸ்வீகாரத்தில் உபாயபாவத்தைத் தவிர்க்கிறது' முதலிய சூர்ணிகைகளால் உபாயருசி விரோதியைத் தவிர்த்தலையும்; த்வயத்தில், 'நம:-கைங்கர்யத்திற் களையறுக்கிறது' முதலிய சூர்ணிகைகளால் உபேயருசிவிரோதியைத் தவிர்த்தலையும் காண்க. 3. உபாயவிரோதி - உபாயாந்தரங்கள்: உபாயாந்தரங்கள் 'ஸர்வதர்மாந்பரித்யஜ்ய' என்பதனால் தவிர்க்கப்பட்டமை காண்க. 4. பண்டே - முன்பே: திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் இந்த ஶ்லோகத்துப் பூர்வார்த்தத்திலு மென்றபடி: முமுக்ஷுவான தசையிலும் வரணதசையிலு மென்றுமாம். இப்போது சொல்லப்படுவது - ப்ராப்திதசையாகும். 5. நீ - அநந்ய ஸாதநனை நீ, என்னை - அநந்யஸாத்யனை என்னை, ப்ராபிக்கைக்கு-அடைகைக்கு. 6. உத்பத்தி விநாஶாதி என்று ஷட்பாவவிகாரத்திலே 'ஜாயதே' 'விநஶ்யதி' என்பவற்றாற் சொல்லப்படுகிற இரண்டு விகாரங்களைச் சொல்லி, ஆதிஶப்தத்தாலே அஸ்திமுதலிய நான்கு விகாரங்களைக் காட்டவைத்தார். யோகம - ஸம்பந்தம். அஸத்யஶப்தவாச்யம் - அஸத்யமென்ற சொல்லாலே சொல்லத்தக்கது: அஸத்யம் - நிலையில்லாதது.

* திருவிருத் - க.

ஶப்தவாச்யமான 1 அசேதநவிஷயத்தில் ஆத்ம ஜ்ஞாநமும், அந்தத்தேஹாத்மாபிமாந மடியான ஸாம்ஸாரிகதுஷ்கர்ம ப்ரவ்ருத்தியும், அந்தக் கர்மமடியாக வரக்கடவதான மாம்ஸ 2 அஸ்ருகாதி மலரூப தேஹஸம்பந்தமும்' என்று சொல்லுகிறபடியே அவித்யையும் 3 கர்மமும் வாஸனையும் ருசியும் ப்ரக்ருதிஸம்பந்தமு மாகிற அவற்றைச் சொல்லுகிறது என்கை.—இவற்றில், அவித்யையாவது - 4 ஜ்ஞாநாநுதய ரூபமாயும் 5 அந்யதாஜ்ஞாநரூபமாயும் 6 விபரீதஜ்ஞாந ரூபமாயும் மூன்றுவகைப்பட்ட அஜ்ஞாநம். கர்மமாவது - புண்யபாபம்; மோக்ஷத்தைப்பற்ற, பாபத்தோபாதி புண்யமும் த்யாஜ்யமாம்; (கசுரு) ‘‘புண்யபாபே விதூய’’ [புண்யபாபேவிதூய] என்னக்கடவதிறே. 7 வாஸனையாவது - அஜ்ஞாநவாஸனையும், கர்மவாஸனையும், ப்ரக்ருதி ஸம்பந்தவாஸனையும். ருசியும் - விஷயபேதத்தாலே பஹுவிதையாயிருக்கும். ப்ரக்ருதிஸம்பந்தமாவது - ஸ்தூலஸூக்ஷ்மரூபமாயிருந்துள்ள அசித் ஸம்பந்தம்.

இனி, ஸர்வஶப்தவிவக்ஷிதத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(உருக) த்ருணச்சேத கண்டூய நாதிகளைப் போலே ப்ரக்ருதிவாஸனையாலே அநுவர்த்திக்குமவையென்ன, லோகாபவாத பீதியாலும் கருணையாலும்

---

1. அசேதந விஷயத்தில் ஆத்மஜ்ஞாநம் - அசேதநமான உடம்பில் ஆத்மா என்கிற ஜ்ஞாநம். 2. அஸ்ருக் - ரக்தம். 3. கர்மமும் வாஸனையும் ருசியும் என்பன - பொல்லா ஒழுக்கு என்பதன் பொருள்; பொல்லா ஒழுக்கு - தீயநடத்தை. 4. ஜ்ஞாநாநுதயம்-ஜ்ஞாநமே யுண்டாகாமலிருக்கை; தேஹம் - வேறு ஆத்மா வேறு என்ற அறிவைப் பெறாதிருக்கை. 5. அந்யதாஜ்ஞாநம் - ஒருப்ரகாரமாயிருப்பதை வேறுப்ரகாரமாய் உள்ளதாக நினைக்கும் அறிவு: பகவானுக்கு ஶேஷமான ஆத்மவஸ்துவைத் தேவதாந்தரஶேஷ மென்று நினைக்கை. 6. விபரீதஜ்ஞாந மாவது - விஶேஷ்யம் ஒருவகையாக இருக்க, வேறுவிதமா யிருப்பதாக நினைக்கும் அறிவு: பகவத் பரதந்த்ரமான ஆத்மவஸ்துவை ஸ்வதந்த்ரமென்று நினைக்கை. 7. வாஸனை யின்னதென்பது கீழ்ச்சொல்லப்பட்டது. அஜ்ஞாநம் மூன்றுவகைப் பட்டிருப்பதால், அஜ்ஞாந வாஸனையும் மூன்று படிப்படும்; அஜ்ஞாநவாஸனை - விஷ ஶஸ்த்ராதிகளைக் கண்டால் பயாதிகள் உண்டாகக் காரணமான த்ரிவித அஜ்ஞாநவாஸனை. கர்மவாஸனை - புண்ய பாபரூப கர்மங்களிலுண்டாகும் வாஸனை. ப்ரக்ருதிஸம்பந்தவாஸனை - விஷயாந்தரங்களிலே சாபலத்துக்கு ஹேதுவான ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் தோன்றும் வாஸனை.

கலக்கத்தாலும் செய்யுமவையென்ன, எல்லாவற்றை யுட நினைக்கிறது.

(வ்யா.) 'த்ருணச்சேத' இத்யாதியாலே; அதாவது - துரும்பு நறுக்குகை தினவுநின்றவிடம்சொறிகை தொடக்கமானவைபோலே அபுத்திபூர்வகமாக ப்ரக்ருதி வாஸனையாலே அநுவர்த்திக்கும் 1 உத்தராகங்களென்ன: நாம் இவற்றைச் செய்யாதபோது 'லோகம் நம்மை அபவாதஞ்சொல்லுமே' என்கிற பயத்தாலும் 2. 'நம்மைக்கண்டு லௌகிகர்இவற்றைத் தவிருவர்களாகில் அவர்களுக்கு விநாஶமாமே; ஐயோ!' என்கிற க்ருபையாலுஞ் செய்யும் நித்ய நைமித்திக கர்மங்களென்ன: ரஜஸ்தமஸ்ஸுக்காளாலே கலங்கி 3. த்யக்த உபாயங்களிலே அந்வயித்தல் புநঃப்ரபத்திபண்ணுதல் செய்யுமவையென்ன: எல்லாவற்றையும் நினைக்கிறது என்கை.

'ஸாதநபுத்யா செய்யாதவையும் வஸ்துகத்யா ஸாதநகோடியிலே அந்வயிக்கும்' என்னுமத்தை ஶங்காபூர்வகமாக அருளிச்செய்கிறார்

மூ.—(உருஉ) 'உந்மத்தப்ரவ்ருத்திக்குக்ராமப்ராப்தி போலே த்யஜித்த உபாயங்களிலே இவை அந்விதங்களாமோ?' என்று நினைக்கவேண்டா.

(வ்யா.) 'உந்மத்த' இத்யாதியாலே. அதாவது - (கசுசு) "உந்மாதஶ்சித்தவிப்ரமঃ" [உத்மாதஸ்சித்தவிப்ரமঃ] என்கிறபடியே சித்தவிப்ரமம் பிறந்தானொருவன், 'இன்னவூருக்குப் போகிறோம்' என்கிற நினைவுஇன்றிக்கே ஒருவழியே போகாநின்றால், அவ்வழிக்கு ஒருரோடே ஸம்பந்தமுண்டாயிருக்கையாலே அவ்வூரிலே சென்று சேருமாபோலே, 4. ஸாதநபுத்திரஹிதமாக 5 லோகாபவாத பீத்யாதிகளாலே செய்யப்படுகிற இவை - விட்ட உபாயங்களிலே அந்விதங்களாமோவென்றுநினைக்கவேண்டா; 6. அந்விதங்களாயேவிடு

1. உத்தர அகம் - ப்ரபத்தி செய்தபின்பு உண்டாகும் பாபங்கள். 2. பகவத் கைங்கர்யரூபமாக நித்யகர்மாநுஷ்டாநங்கள் செய்கிறேனென்று ஸங்கல்பித்துக் கொள்ளாமல் லோகாபவாத பரிஹாரார்த்தம் கரிஷ்யே என்று ஸங்கல்பித்துக் கொண்டு செய்பவை. 3. த்யக்த உபாயங்களிலே அந்வயித்தல் - விட்ட உபாயங்களில் உபாயத்வ புத்தியைக் கொள்ளுதல்; 4 ஸாதந புத்திரஹிதமாக - ஸாதனமென்கிற எண்ணமில்லாமல். 5. லோகாபவாத பீதி - உலகத்தார் பழிக்கப்போகிறார்களே என்ற அச்சம். 6. அந்விதங்கள் - ஸம்பந்தத்தைப்பெறும்.

மென்றபடி. 1 "ஆந்ருஸம்ஸ்யப்ரதாநராய் அநுஷ்டிக்தாலும், 2 எறிட்ட கட்டி ஆசாரத்திலே நில்லாதாபோலே, அவையும் ஒரு பலத்தோடே ஸந்திப்பிக்கக்கடவது; ஆகையாலே, அவையும் பாபஸப்த வாச்யமாகக் கடவது" என்றிறே, தனிசரமத்தில் இவர்தாமே அருளிச்செய்தது.

'அதுதானேயாகிறது:- புநஃப்ரபத்திக்கு தோஷம் எது?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(உருரு) கலங்கி உபாயபுத்த்யா பண்ணும் ப்ரபத்தியும் பாதகத்தோடு ஒக்கும்.

(வ்யா.) 'கலங்கி' என்று தொடங்கி. அதாவது - ஸக்ருத் அநுஷ்டாநமொழியப் புநரநுஷ்டாநத்தைஸஹியாத ப்ரபத்திஸ்வபாவத்தை அறியாதே கலங்கி அநிஷ்டநிவ்ருத்திக்காகவாதல் இஷ்டப்ராப்திக்காக வாதல் உபாயபுத்த்யா மீண்டு பண்ணும் ப்ரபத்தியும் (ககூஎ) "அபாதகஸீதஸ்த்வம்" [அதபாதகபீதஸ்த்வம்] என்று உபாயாந்தரம் போலே பாதகஸம மென்கை.

அநந்தரம், சதுர்த்தபதத்தை உபாதாநம் பண்ணுகிறார்

மூ.—(உருச) மோக்ஷயிஷ்யாமி = முக்தனும்படி பண்ணக்கடவேன்.

(வ்யா.) 'மோக்ஷயிஷ்யாமி' என்று. அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார், 'முக்தனும்படி பண்ணக்கடவேன்' என்று. அதாவது - இவற்றில்நின்றும் விடப்பட்டவனும்படி பண்ணக்கடவே னென்கை.

இனி, ஙிஜார்த்தத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(உருரு) ஙிச்சாலே நானும் வேண்டா, நீயும் வேண்டா, அவை தந்நடையே விட்டுப் போங்காணென்கிறான்.

1. ஆந்ருஸம்ஸ்யப்ரதாநராய் - (நாம் அநுஷ்டாநம் செய்யாவிட்டால் இவ்வளவு ஞானவானே கர்மாதிகளை விட்டபோது நாம் என் அவற்றைச் செய்ய வேண்டுமென்று லௌகிகர் நினைத்துக் கர்மாதிகளை விட்டிட்டாராகில் அதனால் அவர்கட்குப் பகவதாஜ்ஞையை மீறின பாபம் நேருமே! என்ற) கருணையை முக்கியமாகக் கொண்டவர்களாய். 2. எறிட்ட - உயர எறிந்த.

(வ்யா.) 'ணிச்சாலே' என்று தொடங்கி. அதாவது - "மிஷ்யாமி" என்கிற ணிச்சாலே ஸ்வயம்கர்த்தாவாகைபன்றிக்கே தான் 1. ப்ரயோஜககர்த்தாவாய், விடுவிக்கக்கடவே னென்கையாலே, நானும் இதுக்கு ஒருயத்நம் பண்ணவேண்டா, நீயும் இதுக்கு ப்ரார்த்திக்க வேண்டா; நீ என்னை ஆஸ்ரயித்த 2. ராஜகுல மாஹாத்ம்யத்தாலே உன்னைக்கண்டு தாமே பயப்பட்டு, * "கானோவொருங்கிற்றுக் கண்டிலமால்" என்கிறபடியே போனவழி தெரியாதபடி தன் நடையே விட்டுப்போங்கா ணென்று அருளிச்செய்கிறு னென்கை.

இப்படி அருளிச்செய்ததன் கருத்தை வெளியிடுகிறுர்

மூ.—(உருகூ) 'என்னுடைய நிக்ரஹபலமாய் வந்தவை நான் இரங்கினுற் கிடக்குமோ?' என்கை.

(வ்யா.) 'என்னுடைய' என்று தொடங்கி. அதாவது - பாபங்களாகிறன, குப்பையில் ஆமணக்குப் போலே யெழுந்து, பாம்புபோலே மிடற்றைப் பிடிப்ப தொன்றன்றிறே; சேதநன் பண்ணின கர்மங்கள் க்ஷணத்வம்ஸிகளாகையாலே, அப்போதே நஸித்துப்போம்; அஜ்ஞனாகையாலே கர்த்தாவான இவனும் மறந்து போக, ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனாய் ஒன்றுமழியாமல் உணர்ந்திருந்து 3. ப்ராப்தகாலங்களிலே தப்பாமல் நிறுத்து அநுபவிப்பிக்கிற என்னுடைய நிக்ரஹரூப மாகையாலே, அந்த நிக்ரஹபலமாய் வந்தவை, நிக்ரஹத்துக்கு 4. ப்ரதிகோடியான அநுக்ரஹத்தை நான் பண்ணினுல் 5. அவ்விஷயத்திற் பின்னை கிடக்குமோ? என்கை, இதுக்குக் கருத்து என்றபடி.

தன்நடையே விட்டுப்போம் என்கிற இடத்தில் 6. அபிப்ரேதத்தை அருளிச்செய்கிறுர்

---

1. ப்ரயோஜக கர்த்தா - ஏவுதற்கர்த்தா; அரசன் கோயிலைக் கட்டுவித்தா னென்றுல் அரசனுடைய மகிமையாற் கோயில்கட்டுகை நிகழ்ந்தது என்று ஏற்படுதல் காண்க. 2. ராஜகுல மாஹாத்ம்யம் - அரசனுடைய அரண்மனையை யடைந்ததனுலான மேன்மை. ஒருவனுக்கு ராஜாவினுடைய க்ருஹத்தில் போக்குவரத்து மிகுந்தால், அதைக்கண்டு, 'இவன் ராஜாவுக்கு அந்தரங்கன்' என்று யாவரும் கௌரவிக்க, அவனுக்கு ப்ரதிகூலரும் அரசனுடைய முயற்சியாவது இவனுடையமுயற்சியாவது இல்லாதிருக்கையில் தானே ப்ராதிகூல்யம் நீங்கப்பெறுவதைத் திருஷ்டாந்தமாகக் காண்க. 3. ப்ராப்தகாலம் - தக்க காலம்; 4. ப்ரதிகோடி - எதிர்த்தட்டானது. 5. அவ்விஷயத்தில்-அநுக்ரஹஞ் செய்த இடத்தில். 6. அபிப்ரேதம் - ஈஸ்வரன் அபிப்ராயப்பட்டிருப்பது.

* பெரியதிருவ-ருச.

மூ.—(உருஎ) அநாதிகாலம் பாபங்களைக் கண்டு நீ பட்டபாட்டை அவைதாம் படும்படி பண்ணுகிறேன்.

(வ்யா.) 'அநாதிகாலம்' என்று தொடங்கி. அதாவது - அநாதியான காலமெல்லாம் து:காவஹமான பாபங்கள் வந்து மேலிடப்புக்கால் அவற்றைக் கண்டு நீ நடுங்கின நடுக்கமெல்லாம் மதாஶ்ரயணராஜகுலமாஹாத்ம்யமுடைய உன்னைக் கண்டு, அவை தான் 1. குடல் கரிந்து நடுங்கும்படி பண்ணக்கடவேனென்கை. "அவைதாமே விட்டுப்போம்படி பண்ணுகையாவது - இவை நமக்கு முன்பு உண்டாய்க்கழிந்தவை என்று தோற்றாதபடி போக்குகை; அதாகிறது - இவை ஸ்ம்ருதி விஷயமானாலும் 2. தன்னுடைய ஸ்வாபாவிகவேஷத்தைப் பார்த்து ஸ்வப்நங்கண்டாற்போலே இவை நமக்கு 3. வந்தேறியாய்க்கழிந்தவையென்றிருக்கையும், ஸ்ம்ருதியாலே து:கம் அநுவர்த்தியாதிருக்கையும்" என்று *தனிசரமத்தில் இவர்தாமே அருளிச்செய்தது இவ்விடத்தில் அநுஸந்தேயம்.

"மோக்ஷயிஷ்யாமி" என்கிற 4. உத்தமனில் அபிப்ரேதமான அர்த்தவிஶேஷத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(உருஅ) இனி உன்கையிலும் உன்னைக் காட்டித்தாரேன். என்னுடம்பிலழுக்கை நானே போக்கிக்கொள்ளேனோ?

(வ்யா.) 'இனி' என்று தொடங்கி. அதாவது-இத்தனை காலமும் 'நம்கார்யத்துக்கு நாம் கடவோம்' என்று நீ திரிகையாலே, தன்கார்யம் தானேசெய்துகொள்ளுகிறான் 5. என்றிருந்த இத்தனை போக்கி, 'எனக்கு நீ ஶரீரதயா ஶேஷம்' என்று அறிந்து என்பக்கலிலே 6. ந்யஸ்தபரனான பின்பு உன்னுடைய பாபவிமோசநார்த்தமான யத்நம் நீ பண்ணிக்கொள்ளென்று உன்கையிலும் உன்னைக் காட்டித்தாரேன்; எனக்கு ஶரீரபூதனான உன்னுடைய அவித்யாரூபமாலிந்யத்தை ஶரீரியான நானே போக்கிக்கொள்ளேனோ? என்கை. 'என்னுடம்பிலழுக்கை

1. குடல் கரிந்து - குடல் வெந்து. 2. தன்னுடைய ஸ்வாபாவிக வேஷம் - ப்ரபந்நனான தன்னுடைய பகவத் அநந்யார்ஹஶேஷத்வம். 3. வந்தேறி - அசித்ஸம்பந்தத்தாலே வந்து சேர்ந்தவை. 4. உத்தமன் - படர்க்கை. 5. என்று இருந்த இத்தனை போக்கி - என்று இருந்தேனே யல்லது என்றபடி. 6. ந்யஸ்தபரன் - ரக்ஷணபாரத்தை வைத்தவன்.

*'தனிஶ்லோகத்தில்' என்று பாடாந்தரம்.

நானே போக்கிக்கொள்ளேனே' என்றது,—யத்ந 1 பலித்வங்கள் இர ண்டும் தன்னதென்று தோற்றுகைக்காக; ஆகையால், உன்னுடைய விரோதியில் கிடப்பதொன்றில்லை யென்றபடி. "விரோதி நிவ்ருத்தியும், அபிமதப்ராப்தியும் இரண்டும் பலமாயிருக்க, ஒன்றைச் சொல்லுவா னேன்? என்னில்—ஒன்றைச் சொன்னால் மற்றையது தன்னடையே வருகையாலே 2 சொல்லிற்றில்லை; (கக௮) "மாமேவைஷ்யஸி" [மாமேவைஷ்யஸி] என்று கீழில் உபாயத்துக்குச் சொன்ன பல மொழிய இவ்வுபாயத்துக்கு வேறு பலம் இல்லாமையாலே சொல்லிற் றில்லை யென்னவுமாம்; 'ஆனால், விரோதிநிவ்ருத்திதன்னைச் சொல்லு வானேன்?' என்னில்,—அது அதிகமாகையாலேசொல்லிற்று. 3விரோதி நிவ்ருத்தி பிறந்தால் பலம் ஸ்வதஸ்ஸித்தமா யிருக்கையாலே, தனித் துச் சொல்ல வேண்டாவிறே" என்று ஸங்க்ரஹேண ஸ்ரீயःபதிப்படி ரஹஸ்யத்திலும், விஸ்தரேண பரந்தபடி * தனிசரமங்களிலும் அரு ளிச்செய்த ஶங்காபரிஹாரங்கள் இவ்விடத்திலே அநுஸந்தேயம்.

அநந்தரம், சரமபதத்தை உபாதானம் பண்ணுகிறார்

மூ.—(உ௬௧) மாஶுச:= 'நீ உன் கார்யத்திலே அதி கரியாமையாலும், நான் உன்கார்யத்திலே அதிகரித் துக்கொண்டு போருகையாலும், உனக்கு ஶோகநிமித் தம் இல்லைகாண்' என்று அவனுடைய ஶோகநிவ்ருத்தி யைப் பண்ணிக்கொடுக்கிறான்.

(வ்யா.) 4. 'மாஶுச:' என்று. அதுக்குஅர்த்தம் அருளிச் செய்கிறார், 'நீ உன்கார்யத்திலே' என்று தொடங்கி. அதாவது- 'நீ உன் கார்யத்திலே அதிகரித்து நின்றாயாகில், 'நம்கார்யத்துக்கு என் செய் வோம்!' என்று கரைந்து ஶோகிக்க ப்ராப்தம்; நான் உன்கார்யத்திலே அதிகரியா திருந்தேனாகில், 'நம்கார்யத்தில் இவன் உதாஸீநனாயிரா நின்றான்; நாம் எங்ஙனே உஜ்ஜீவிக்கப் போகிறோம்?' என்று ஶோகிக்க

1. பலித்வம் - பலனையடைபவனாகை. 2. சொல்லிற்றில்லை யென்பதற்கு முன் இரண்டையும் என்றாவது மற்றொன்றை யென்றாவது அத்தியாஹாரஞ் செய்துகொள்க. 3. விரோதி நிவ்ருத்தி - விரோதி கழிகை. 4. 'மா ஶுச:' என்ற இரண்டுபதமும் சேர்ந்து ஓரர்த்தத்தை ப்ரதிபாதிப்பதுபற்றி மூல கர்த் தாவாகிய ஸ்ரீ பிள்ளைலோகாசார்யர் இவற்றை ஒன்றாக அருளிச்செய்திருத்த லால் ஆர்ஷமான இந்த 'மாஶுச:' என்பது உபபதஸமாஸம் பெற்று ஒரு பத மாக ஆய்விட்டதென்று திருவுள்ளம்பற்றி இவ்வாறு அருளிச்செய்கிறார்.

* 'தனிஸ்லோகத்தில்' என்று பாடாந்தரம்.

ப்ராப்தம்; இங்ஙன் அன்றிக்கே, 'யத்நபலித்வங்கள் இரண்டும் உனக்கு இல்லாதபடியான ஸ்வரூபபாரதந்த்ர்யத்தை உணர்ந்து, நீ உன்னுடைய ரக்ஷணகார்யத்திலே அதிகரியாதொழிகையாலும், உன்னுடைய ரக்ஷணத்தில் யத்நபலித்வங்கள் இரண்டும் என்னதாம்படி ஸ்வாமியான நான் உன்பக்கத்தில் தடைபறுக்கையாலே உன்னுடைய ரக்ஷணகார்யத்திலே அதிகரித்துக்கொண்டுபோருகையாலும், உனக்கு ஶோகிக்கைக்கு நிமித்தம் இல்லைகாண்' என்று முன்பு ஶோகாவிஷ்டனாய் நின்ற அவனுடைய ஶோகத்தினுடைய நிவ்ருத்தியைப் பண்ணிக் கொடுக்கிறானென்கை.

இத்தால், 'அஹம் த்வா' என்கிற பதங்களாலே சொல்லப்பட்ட 1. ரக்ஷகரக்ஷ்யபூதரான இருவருடைய ஸ்வபாவத்தையும் அநுவதித்துக்கொண்டு 2. ஶோகாபநோதநம் பண்ணினபடியை அருளிச்செய்தாராயிற்று.

இனிமேல், 3. நிவர்த்தகனான தன்னுடையவும் 4. நிவர்த்யங்களான பாபங்களினுடையவும் ஸ்வபாவங்களைச் சொல்லி, ஶோகாபநோதநம் பண்ணினபடியை அருளிச்செய்கிறார்

மூ.—(௨௬௦) நிவர்த்தகஸ்வரூபத்தைச் சொல்லி, நிவர்த்யங்கள் உன்னை வந்து மேலிடாதென்று சொல்லி, உனக்கு ஶோகநிமித்தம் இல்லைகாண் என்கிறான்.

(வ்யா.) 'நிவர்த்தகஸ்வரூபத்தை' என்று தொடங்கி. அதாவது— "அஹம்" என்று ஸர்வஜ்ஞத்வாதிகுணவிஶிஷ்டனாய்க்கொண்டு விரோதிநிவர்த்தகனாயிருக்கிற தன் ஸ்வரூபத்தைச் சொல்லி, "த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று ணிச்சால் நிவர்த்யங்களான பாபங்கள் உன்னைக் கண்டு தாமே அஞ்சி ஓடிப்போமொழிய, என்னையே உபாயமாக ஸ்வீகரித்திருக்கிற உன்னை வந்து மேலிடாது என்னுமிடம் சொல்லி, அநந்தரம் "மாஶுச" என்கையாலே 'இப்படியானபின்பு உனக்கு ஶோகிக்க நிமித்தமில்லை' என்கிறானென்கை.

---

1. ரக்ஷகபூதர் ரக்ஷ்யபூதர் என்று இரண்டிடத்தும் சேர்த்துக்கொள்க. 2. ஶோகாபநோதநம் - சோகத்தைப்போக்குதல். 3. நிவர்த்தகன் - பாபத்தைப்போக்குபவன். 4. நிவர்த்யம் - போக்கத்தக்கது.

1 இத்தலையில் விரோதியைப் போக்குகைக்குத் தான் ஒருப்பட்டு நிற்கிற படியை அறிவித்து, இவனுடைய ஶோகத்தைப் போக்குகிறமையை 2 அபியுக்தோக்தியை நிதர்ஶநமாக்கிக்கொண்டு அருளிச்செய்கிறார்

மூ.—(உசுக) * "எத்தினாலிடர்க்கடற்கிடத்தியேழை நெஞ்சமே!" என்கிறான்.

(வ்யா.) 'எத்தினால்' என்று தொடங்கி. அதாவது - திருமழிசைப்பிரான் தம்முடைய திருவுள்ளத்தைக்குறித்து 'ஸர்வேஸ்வரன் இத்தலையில் விரோதியைப்போக்கி அடிமைகொள்வதாக 3. † என்றுகொடுவந்து புகுந்திருக்கிறபடியைச்சொல்லி, இனி எதுக்காக நீ து:க ஸாகரத்திலே அழுந்துகிறாய்?' என்றாற்போலே, ஈஶ்வரனும் இப்போது இத்தலையில் ஸகலபாபங்களையும் போக்குவதாகத் தானே ஏறிட்டுக்கொண்டமையை அறிவித்து, 'இனி எதுக்காக ஶோகிக்கிறாய்?' என்று இவனைக்குறித்து அருளிச்செய்கிறானென்கை.

இனி, இவனுடையஶோகம் 4 மறுவலிடாமல் போக்குகைக்கு உறுப்பானதொரு பகவதபிப்ராயவிஶேஷத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(உசுஉ) பாபங்களை நான் பொறுத்துப் புண்யமென்று நினைப்பிடாநிற்க, நீ ஶோகிக்கக்கடவையோ?

(வ்யா.) 5 'பாபங்களை நான் பொறுத்து' என்று தொடங்கி. அதாவது - நீ செய்த பாபங்களை நான் முந்துற என்னுடைய க்ஷமாவிஷயமாக்கி, அவ்வளவு மன்றிக்கே பின்னை உன்பக்கல் எனக்கு உண்டான வாத்ஸல்யத்தாலே ‡ "செய்தகுற்றம் நற்றமாகவேகொள்" § "செய்தாரேல் நன்றுசெய்தார்" என்கிறபடியே அவைதன்னைப் பாபமாக நினையாதே புண்யமென்று நினைப்பிடாநிற்க, இனி நீ ஶோகிக்கக்கடவையோ? என்கை.

---

1. இத்தலையில் - ஶரணாகதனிடத்தில். 2. அபியுக்த உக்தி - பெரியோரின் பாசுரம். நிதர்சனம் - மேற்கோள். 3. என்று கொடு வந்து - ஏற்றுக்கொண்டுவந்து. 4. மறுவலிடாமல் - திரும்பவும் நேராமல். 5. இந்த வாக்யமும் 'மாஶுச:' என்பதன் கருத்தே.

* திருச்சந்தவி. கக௫. † தன்னுள்ளே வந்து என்றும் பாடம்.

‡ திருச்சந்த வி - ககக. § பெரியாழ்வார் திரு ச - கூ - உ.

ஆக, இவ்வுத்தரார்த்தத்தில் அஞ்சுபதத்தாலும்— 1. நிவர்த்தக ஸ்வரூபத்தையும், 2. நிவர்த்யாஶ்ரயத்தையும், நிவர்த்யங்களான பாபங்களையும், அவற்றினுடைய நிவ்ருத்திப்ரகாரத்தையும், தத்கார்யமான ஶோகநிவ்ருத்தியையும் சொல்லிற்றாயிற்று.

இனி, இந்த ஶ்லோகார்த்தத்தில் ருசி ஒருவனுக்கு உண்டாகையில் உள்ள அருமையையும், இந்தஶ்லோகந்தனக்கு இன்னதிலே நோக்கு என்னுமத்தையும், இதில் விஶ்வாஸ உத்பத்தியின் அருமையையும், ஈஶ்வரன்தான் முதலிலே இத்தை உபதேஶியாமைக்கு ஹேதுவையும், வேதபுருஷன் உபாயாந்தரங்களை விதிக்கைக்கு ஹேதுவையும், உபாயாந்தரங்களை 3. ஸ்வரூபேண த்யஜிக்குமளவில் தோஷமில்லை என்னுமத்தையும், அவைதான் 4. முகாந்தரேண அந்விதங்கள் ஆகையாலே ஸ்வரூபேண 5. த்யக்தங்கள் அன்று என்னுமிடத்தையும், பேற்றுக்கு ஸாதநம் இன்னது என்னுமத்தையும், பலஸித்திக்கு இவன்பக்கல் வேண்டும் அம்ஶத்தையும், ஈஶ்வரனுக்கு இவனுடைய ஸுக்ருதம் அநிஷ்டம் என்னுமத்தையும், இவ்வர்த்தத்தில் ஆஸ்திக்யாதிகள் உண்டாய்ப் பிழைத்தல் இல்லையாகில் நஶித்தலித்தனை என்னுமத்தையும், 6. வ்யவஸாயஹீநன் இதில் அந்வயித்தால் விநாஶபர்யந்தமாம் என்னுமத்தையும், இதுக்கு அதிகாரிகள் இன்னார் என்னுமத்தையும் அடைவே அருளிச்செய்து தலைக்கட்டுகிறார்.

அவற்றில் ப்ரதமத்தில் இதில் ஒருவனுக்கு ருசிபிறக்கையில் உள்ள அருமையைத் தர்ஶிப்பிக்கைக்காக ஓர் ஐதிஹ்யத்தை அருளிச்செய்கிறார்

மூ:—(உகரு) உய்யக்கொண்டார்விஷயமாக உடையவர் அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.

---

1. நிவர்த்தகஸ்வரூபத்தையும் - உபாயபூதனான ஈஶ்வரஸ்வரூபத்தையும்: 'அஹம்' பதத்தால் இது சொல்லப்பட்டது. 2. நிவர்த்ய ஆஶ்ரயம்-பகவானால் நிவர்த்திக்கப்படத்தகுந்த பாபங்களுக்கு ஆஶ்ரயமான ஶரணாகதன்: 'த்வா' சப்தத்தால் இவன் சொல்லப்பட்டுள்ளான். 3. ஸ்வரூபேணத்யஜித்தல்-உபாயமாகச் செய்யாமல் விட்டிடுதல். 4. முகாந்தரேண அந்விதங்கள் - வேறோராகாரத்தால் வருமவை. 5. த்யக்தங்கள் - விடப்பட்டவைகள். 6. வ்யவஸாயஹீநன் - த்ருடாத்யவஸாயமில்லாதவன்.

(வ்யா.) 'உய்யக்கொண்டார் விஷயமாக' என்று தொடங்கி. அதாவது-1. தத்த்வநிர்ணயம் பண்ணின உய்யக்கொண்டார் பக்திநிஷ்டராயிருக்கையாலே, அவரை ப்ரபத்தி நிஷ்டராம்படி பண்ணவேணுமென்று, அவருக்கு இந்த ஶ்லோகார்த்தத்தை அருளிச்செய்த அளவிலே; 2. 'அர்த்தஸ்திதி அழகிதாயிருந்தது; ஆகிலும், 3. அத்தை விட்டு இத்தைப் பற்றத் தக்க ருசி எனக்கு இல்லை' என்ன, "வித்வானாகையாலே அர்த்தத்துக்கு இசைந்தாய்; பகவத்ப்ரஸாதம் இல்லாமையாலே ருசி பிறந்ததில்லை" என்று அவர்விஷயமாக உடையவர் அருளிச்செய்த வார்த்தையை நினைப்பது என்கை.

இனி, இந்த ஶ்லோகத்துக்கு இன்னதிலே 4. நோக்கு என்னுமத்தை அருளிச்செய்கிறார்

மூ—(உகூச) இதுக்கு ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்திலே நோக்கு.

(வ்யா.) 'இதுக்கு ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்திலே நோக்கு' என்று. அதாவது - ஶாஸ்த்ரங்களெல்லாம் ஒருதலையும், தான் ஒருதலையுமாயிருக்கிற இந்த ஶ்லோகத்துக்கு - ஶாஸ்த்ரவிஹிதமான ஸகலதர்மங்களையும் ஸவாஸநமாக விடுவித்து, இச்சேதநனுக்குத் தானே நிரபேக்ஷ ஸாதநமாய், ப்ராப்தி ப்ரதிபந்தக ஸகலபாபங்களையும் தள்ளிப்புகட்டு, ஸ்வப்ராப்தியைப் பண்ணிக்கொடுக்கும் 5. ஸ்வாதீந ஸகலப்ரவர்த்தகனான ஈஶ்வரனுடைய ஸ்வாதந்த்ர்யத்திலே தாத்பர்யமென்கை.

இனி, 6. இதில் விஶ்வாஸ உத்பத்தியில் அருமையை அருளிச்செய்கிறார்

மூ.—(உகூரு) "இதுதான் அநுவாதகோடியிலே" என்று வங்கிப்புரத்து நம்பி வார்த்தை.

---

1. தத்வநிர்ணயம்பண்ணின - சித் அசித் ஈஶ்வரன் என்ற தத்வத்ரயங்களையும் நிர்ணயம் பண்ணின. 2. அர்த்தஸ்திதி - பகவானுக்குப்பரதந்த்ரமான இவ்வாத்மா உபாயாந்தரங்களைவிட்டு அவனையே பற்றுகை என்கிற விஷயத்தின் நிலை. 3. அத்தை - உபாயாந்தரத்தை. 4. நோக்கு - தாத்பர்யம். 5. ஸ்வாதீநஸகலப்ரவர்த்தகன் - தன்னதீனமான ஸமஸ்தமான வ்யாபாரத்தையுடையவன்: தன்னிச்சைப்படியே எதையும் செய்ய வல்லவனென்றபடி. 6. இதில் - த்யாகபூர்வகஸ்வீகாரத்தில், விஶ்வாஸ உத்பத்தி - விஶ்வாஸம் உண்டாதல்.

(வ்யா.) 'இதுதான்' என்று தொடங்கி. அதாவது - 1. இந்த ஸ்லோகார்த்தந்தான் 2. அநுவாதத்தினுடைய கோடியிலே என்று 3. ஆப்ததமரான வங்கிப்புரத்துநம்பி அருளிச்செய்யும் வார்த்தையென்கை.

'அது எத்தாலே?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(௨௯௯) அர்ஜுநன், க்ருஷ்ணனுடைய ஆனைத்தொழில்களாலும், ருஷிகள் வாக்யங்களாலும், க்ருஷ்ணன் தன்கார்யத்திலே அதிகரித்துக்கொண்டு போருகையாலும், 'இவனே நமக்குத் தஞ்சம்' என்று துணிந்தபின்பு தன்னைப்பற்றச் சொல்லுகையாலே.

(வ்யா.) 'அர்ஜுநன்' என்று தொடங்கி. அதாவது - இதுக்கு அதிகாரியான அர்ஜுநன் பால்யமே தொட்டுக் க்ருஷ்ணனுடைய 4 அகடிதகடநாஸாமர்த்ய ப்ரகாஸகமான 5 அதிமாநுஷசேஷ்டிதங்களாலும், (௧௯௯) "ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:। நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்" [எஷ நாராயணஸ்ரீமாங் க்ஷீரார்ணவநிகேதந:-நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோமதுராம்புரீம்] (௨௦௦) "புண்யா த்வாரவதீ யத்ர தத்ராஸ்தே மதுஸூதந:। ஸாக்ஷாத்தேவ: புராணோ(அ)ஸௌ ஸ ஹி தர்ம: ஸநாதந:" [புண்யாத்வாரவதீயத்ர தத்ராஸ்தே மதுஸூதந:—ஸாக்ஷாத்தேவ: புராணோஸௌ ஸஹிதர்மஸ்ஸநாதந:] (௨௦௧) "யத்ர நாராயணோ தேவ: பரமாத்மா ஸநாதந:। தத்ர க்ருத்ஸ்நம் ஜகத் பார்த்த தீர்த்தாந்யாயதநாநி ச" [யத்ரநாராயணோதேவ: பரமாத்மா ஸநாதந:, தத்ரக்ருத்ஸ்நம்ஜகத்பார்த்த தீர்த்தாந்யாயதநாநிச] (௨௦௨) "யே ச வேதவிதோ விப்ரா: யே சாத்யாத்மவிதோ ஜநா:। தே வதந்தி மஹா

---

1. இந்த ஸ்லோகார்த்தந்தான் - உபாயாந்தரத்யாகமும், ஸித்தோபாய ஸ்வீகாரமும். 2 அநுவாதத்தினுடையகோடியிலே - அநுவாதித்துச் சொல்லுகையிலே சேருமென்றபடி. அநுவாதம் - வேறொருவகையால் ஏற்பட்டதைப் பின்னும் எடுத்துச்சொல்லுதல். 3. ஆப்ததமர் - மிகவும் நம்பத்தக்கவர்: ப்ரபந்நாக்ரேஸரரென்றபடி. 4. அகடிதகடநாஸாமர்த்ய ப்ரகாசகம்-சேராதவற்றைச் சேர்ப்பிக்குந் திறமையை வெளிப்படுத்துவது. 5 அதிமாநுஷ சேஷ்டிதம் - மநுஷ்யரது தன்மையை மீறிச்செய்யுஞ் செயல்.

தாநம் க்ருஷ்ணம் யஜ்ஞம் ஸநாதநம்” [யேச வேதவிதோ விப்ரா: யேசாத்யாத்மவிதோஜநா:-தேவதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்] (௨௦௫) “பவித்ராணாம் ஹி கோவிந்த: பவித்ரம் பரமுச்யதே। புண்யாநாமபி புண்யோ(அ)ஸௌ மங்களாநாஞ்ச மங்களம்” [பவித்ராணும்ஹிகோவிந்த: பவித்ரம்பரமுச்யதே-புண்யாநாமபிபுண்யோஸௌ மங்களாநாஞ்ச மங்களம்] (௨௦௪) “க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாம் உத்பத்திரபி சாப்யய:। க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூதம் இதம் விச்வம் சராசரம்” [க்ருஷ்ணஏவஹிலோகாநா முத்பத்திரபிசாப்யய:। க்ருஷ்ணஸ்யஹிக்ருதேபூதம் இதம்விஸ்வம்சராசரம்] என்றும் இத்யாதிகளா யிருந்துள்ள 1 பராவரதத்த்வயாதாத்ம்ய வித்துக்களான ருஷிகள் வாக்யங்களாலும், 2 பால்யாத்ப்ரப்ருதி புரவாஸதஸையோடு வநவாஸதஸையோடு வாசியற க்ருஷ்ணன் 3 தன் கார்யத்துக்குக் கடவனாய் நோக்கிக்கொண்டுபோருகையாலும், ‘இவன் சொல்லுகிற உபாயங்கள் எல்லாம் நமக்குத் தஞ்சமன்று; இவனே நமக்குத் தஞ்சம்’ என்று விஸ்வஸித்த பின்பு ‘ஆனால் என்னைப்பற்று’ என்று சொல்லுகையாலே யென்கை.

இதுதன்னை முதலிலே உபதேஸியாமைக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார்

மூ.—(௨௯௭) புறம்பு * பிறந்தது எல்லாம், இவன் நெஞ்சைச் சோதிக்கைக்காக.

(வ்யா.) ‘புறம்பு’ என்று தொடங்கி. அதாவது - (௨௦௫) “யச்ச்ரேயஸ்ஸ்யாந்நிச்சிதம் ப்ரூஹி தந்மே சிஷ்யஸ்தே(அ)ஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்” [யச்ச்ரேயஸ்ஸ்யாந்நிஸ்சிதம்ப்ரூஹிதந்மே ஸிஷ்யஸ்தேஹம்ஸாதிமாம்த்வாம்ப்ரபந்நம்] என்ற இவனுக்கு உபாயோப

---

1. பராவர தத்த்வ யாதாத்ம்ய வித்துக்கள் - சிறந்த ப்ரஹ்மாமுதலிய தேவர்கள் எதனோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தாழ்ந்தவர்களாகத் தோன்றுவர்களோ, அப்படிப்பட்ட பரப்ரஹ்மம்-பராவரமெனப்படும்; பராவரதத்த்வ-ஈஸ்வரதத்த்வத்தினுடைய, யாதாத்ம்ய - உண்மையை, வித்துக்கள் - அறிந்தவர்களான, ருஷிகள். 2. பால்யாத் ப்ரப்ருதி - பால்யம் முதற்கொண்டு, புரவாஸதஸை - நகரத்தில் வஸித்த நிலை. 3. தன் கார்யத்துக்குக் கடவன் - தன் கார்யத்தை உரியபடி நடத்துபவன். நோக்குதல் - ரக்ஷித்தல்.

* ‘பரந்தது எல்லாம்’ என்று சில ஸ்ரீகோசம்.

தேஶம்பண்ணத் தொடங்குகிறவளவிலே முதலிலே இத்தை உப தேஶியாதே உபாயாந்தரங்களைப் 1 பரக்க நின்று உபதேஶித்தது எல்லாம், 2 'அவ்வளவிலே பர்யவஸித்துவிடுமோ? அவற்றினுடைய தோஷதர்ஶநத்தாலே 3 இவ்வுபாய உபதேஶத்துக்கு அதிகாரியா மோ?' என்று இவனுடைய ஹ்ருதயத்தை ஶோதிக்கைக்காக என்கை.

'ஆனால், இவனன்றோ இப்படி 4 ஹ்ருதயஶோதநார்த்தமாக உபா யாந்தரங்களை உபதேஶித்தவன்? வேதபுருஷன் 5 அவற்றை விதிப் பான் என்?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(உகஅ) வேதபுருஷன் உபாயாந்தரங்களை விதித்தது- கொண்டிப்பசுவுக்குத் தடிகட்டி விடுவாரைப் போலே, அஹங்காரமமகாரங்களால் வந்த களிப்பு அற்று ஸ்வரூபஜ்ஞாநம் பிறக்கைக்காக.

(வ்யா.) 'வேதபுருஷன்' என்று தொடங்கி. அதாவது - ஆப்த தமனான வேதபுருஷன் (உ०கூ) "விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத" [விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத] (உ०எ) "ஓமித்யாத்மாநம் த்யாயத" [ஓமித்யாத்மாநம்த்யாயத] (உ०அ) "ஆத்மாநமேவ லோகமுபாஸீத" [ஆத்மாநமேவலோகமுபாஸீத] (உ०கூ) "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" [ஆத்மாவா அரேத்ரஷ் டவ்யஃ ஸ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்யஃ] இத்யாதிகளாலே உபாயாந்தரங்களை மோக்ஷஸாதநமாக விதித்தது - பட்டிதின்று திரிகிற பசுவுக்கு 6 இடைஞ்சு வஶப்படுகைக்காகக் கழுத்திலே தடியைக் கட்டிவிடுவாரைப் போலே, அஹங்காரமமகாரவஶ்யனாய்க் களித் துத் திரிகிற இவனுக்கு, (உகo) "ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாந ஸமாதிபி:" [ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாந

---

1. பரக்கநின்று - விஸ்தாரமாய் ஏகரீதியாக. 2. அவ்வளவில் ப்ரயவஸித்தல் - இதுவே சிறந்தஉபாய மென்று நினைத்து அவ்வுபாயாந்தரங்களில்தானே நிற்றல். 3. இவ்வுபாய உபதேஶத்துக்கு - இந்த ஸித்தோபாய உபதேஶத் துக்கு. 4. ஹ்ருதய ஶோதநம் - மனஸ்ஸைப் பரீக்ஷித்தல். 5. அவற்றை விதிப்பான் என் - அவ்வுபாயாந்தரங்களைச் செய் என்று சொல்லுவது ஏன்? 6. இடைஞ்சு - பட்டிமேய்வதினின்றும் விலகி.

ஸமாதிபி:] என்கிறபடியே 1 காயக்லேஶரூபமான கர்மாநுஷ்டாநம் இந்த்ரியஜயம் முதலான 2 அருந்தேவைகளாலே 3 செறுப்புண்டு அந்தக்களிப்புப்போய் பகவத்பாரதந்த்ர்யமாகிற ஸ்வரூபஜ்ஞாநம் பிறக்கைக்காக என்கை.

'ஆனல், இப்படி 4 ஸ்வரூபஜ்ஞாந உதய ஹேதுவான இவற்றை விட்டால் குற்றமாகாதோ?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(உகூக) ஸந்யாஸி முன்பு உள்ளவற்றை விடுமாபோலே இவ்வளவு பிறந்தவன் இவற்றைவிட்டால் குற்றம் வாராது.

(வ்யா.) 'ஸந்யாஸி' என்று தொடங்கி. அதாவது - 5 சரமாஶ்ரமத்திலே அந்விதனானவன் பூர்வாஶ்ரமதர்மங்களை விடுகிறாப்போலே, அந்யோபாயங்களினுடைய ஸ்வரூபவிரோதித்வாதிகளாலே ஸித்தோபாயத்திலே இழியும்படி இவ்வளவான 6 ஜ்ஞாநபாகம் பிறந்தவன் இவ்வுபாயாந்தரங்களை விட்டால் தோஷமாகாது என்றபடி.

'இவைதான் ஆகாராந்தரத்தாலே அந்விதங்களாகையாலே, இவற்றில் இவன் தனக்கு 7 ஸ்வரூபத்யாகம் இல்லை' என்னுமத்தை அருளிச்செய்கிறார்

மூ.—(உஎ0) இவன்தான் இவைதன்னை நேராக விட்டிலன்.

(வ்யா.) 'இவன்தான் இவைதன்னை நேராகவிட்டிலன்' என்று. அதாவது - ஸாதநாந்தரபரித்யாக பூர்வகமாக ஸித்தஸாதநபரிக்ரஹம் பண்ணின இவ்வதிகாரிதான், கர்மஜ்ஞாநாதிகள் ஆகிற இவைதன்னை ஸ்வரூபேண த்யஜித்திலனென்கை.

'அது எங்ஙனே?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(உஎக) கர்மம்-கைங்கர்யத்திலே புகும்; ஜ்ஞாநம் - ஸ்வரூபப்ரகாஶத்திலே புகும்; பக்தி - ப்ராப்யருசி

---

1. காயக்லேஶ ரூபமான - உடம்பை வருத்துகையை ஸ்வரூபமாக வுடைய. 2. அருந்தேவை - அருஞ்செயல். 3. செறுப்புண்டு - ஸங்கோசித்து. 4. ஸ்வரூப ஜ்ஞாந உதயஹேதுவான - ஸ்வரூப ஜ்ஞாநம் உண்டாவதற்குக் காரணமான. 5. சரமஆஶ்ரமத்திலே அந்விதன் - நான்காவது ஆஶ்ரமமான ஸந்யாஸ ஆஶ்ரமத்திலே இருப்பவன். 6. ஜ்ஞாநபாகம் - பக்குவமான ஜ்ஞாநம். 7. ஸ்வரூபத்யாகம் - கர்மாதிகளைச் செய்யாமல் விட்டிடுதல்.

யிலே புகும்; ப்ரபத்தி - ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநத்தி லே புகும்.

(வ்யா.) 'கர்மம்' என்று தொடங்கி. அதாவது - 1 ஸ்வவர்ண ஸ்வாஸ்ரம உசிதமாக இவன் அநுஷ்டிக்கும் 2 விஹித கர்மம் - ஸாதந புத்தியன்றிக்கே 3 ஆந்ருஸம்ஸ்யத்தாலே பரார்த்தமாக அநுஷ்டிக் கையாலே, ஈஸ்வரனுக்கு மிகவும் உகப்பாகையாலே, தத்ப்ரீதிஹேது வாகப் பண்ணும் 4 கைங்கர்யத்திலே அந்தர்ப்பவிக்கும். * "நுண் ணறிவு" என்கிறபடியே, ஸ்வஸ்வரூபஜ்ஞாந பூர்வகமாகப் பரஸ்வரூ பத்தை ஸாக்ஷாத்கரிக்கைக்கு உறுப்பான ஸூக்ஷ்மஜ்ஞாநம் - ஸாதந புத்தி கழிந்தவாறே ஸ்வரூபத்தினுடைய ப்ரகாஸத்திலே அந்தர்ப் பவிக்கும். (உகக) "ஹேத்வா கு நந்யாஸ்ஹ:" [பக்தபாத்வநப யாலப்ப:] என்கிறபடியே பகவத்ப்ராப்திக்கு ஸாதநமான பக்தி - அந்த ஸாதநபுத்தி போனவாறே போஜநத்துக்கு 5 க்ஷுத்துப்போலே ப்ராப்யமான கைங்கர்யத்துக்குப் பூர்வக்ஷணத்திலே அநுவர்த்திக்கக் கடவதான ருசியிலே அந்தர்ப்பவிக்கும். ஸித்தோபாய வரணரூபை யான ப்ரபத்தி - ஏகபதத்திலே சொல்லுகிறபடியே ஸாதநபாவம் கழிந்தவாறே அத்யந்தபாரதந்த்ரதயா அநந்யஸரணமாயிருந்துள்ள ஸ்வ ரூபத்தினுடைய யாதாத்ம்யஜ்ஞாநத்திலே அந்தர்ப்பவிக்குமென்கை.

'பக்தி ப்ரபத்திகள் இரண்டையுங் கழித்தால் இவன்தனக்கும் பலஸாதநமாவது எது?' என்ன, அருளிச்செய்கிறார்

---

1. ஸ்வவர்ணம் - தன்னுடைய ஜாதி; ப்ராஹ்மண்யம் முதலியன. 2. விஹிதகர்மம் - ஸாஸ்த்ரங்களிற் செய்யவேணுமென்று விதிக்கப்பட்டுள்ள ஸந் த்யாவந்தநாதி கர்மங்கள். 3. ஆந்ருஸம்ஸ்யம் - கருணை. 4. கைங்கர்யம் - கிங் கரனது தன்மை: கிங்கரன் - ஸ்வாமி ஏவியதைச்செய்வோன். கைங்கர்யத் திலே அந்திர்ப்பவிக்கும் - கைங்கர்யத்திலே தானும் சேருமென்றபடி. 'ஸர்வ பாபேப்ய:' என்கிற இடத்தில் ஸாதனபுத்தியைவிட்டுக் கருணையாலும் கலக் கத்தாலும் செய்யுமவையும் பாபங்கள்' என்று சொல்லிவிட்டு, இங்கே கர்மம் கைங்கர்யத்திலே புகுமென்பது எப்படி பொருந்தும்? எனில், -அங்குச் சொன் னது - கேவலம் தன்னுற்றாமையாலே செய்யுமதைச் சொல்லுவதென்றும், இங்குச் சொல்லுகின்றது - நாம் இப்படி இருப்பதுதான் பகவந்முகோல்லா ஸமாகும் என்ற எண்ணத்தினுல் செய்யுமது என்றும் வேறுபாடு கூறுவர். 5. க்ஷுத்து - பசி.

* திருவாய். ரு - எ - க.

மூ.—(உஎஉ) ஒருபலத்துக்கு அரிய வழியையும், எளியவழியையும் உபதேஶிக்கையாலே, இவை இரண்டும் ஒழிய பகவத்ப்ரஸாதமே உபாயமாகக்கடவது.

(வ்யா.) 'ஒருபலத்துக்கு' என்று தொடங்கி. அதாவது - பகவத்ப்ராப்தியாகிற ஒருபலத்துக்கு (உகஉ) "𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌷𑍁 𑌤𑌪𑍋𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌮𑌾𑌧𑌿𑌭𑌿𑌃 । 𑌨𑌰𑌾𑌣𑌾𑌂 𑌕𑍍𑌷𑍀𑌣𑌪𑌾𑌪𑌾𑌨𑌾𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌤𑍇" [ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாநஸமாதிபி: - நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி:ப்ரஜாயதே] என்கிறபடியே அநேகஜந்மங்களிலே கர்மஜ்ஞாநாதிகளாகிற அங்கங்களாலே ஸாதிக்கப்படுமதாகையாலே அரிதாயிருந்துள்ள பக்திமார்க்கத்தையும், "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்று ஸகலப்ரவ்ருத்தி நிவ்ருத்திபூர்வகமாக ஸக்ருதநுஷ்டேயமாகையாலே எளிதாயிருந்துள்ள ப்ரபத்திமார்க்கத்தையும் உபதேஶிக்கையாலே, 1 ஸாதந கௌரவ லாகவங்களில் தாத்பர்யமின்றிக்கே 2 தத்தத் வ்யாஜேந பலப்ரதனாகாநின்றுள்ள அவனுடைய ப்ரஸாதமே ப்ரதாநமாகையாலே, பக்திப்ரபத்திகளாகிற இவையிரண்டுமொழிய பகவானுடைய ப்ரஸாதம் உபாயமாகக்கடவது என்கை.

'ஆனாலும், 3 பேற்றுக்கு இவன்பக்கலிலும் ஏதேனும் உண்டாகவேண்டாவோ?' என்ன, அருளிச்செய்கிறார்

மூ.—(உஎங) பேற்றுக்கு வேண்டுவது-விலக்காமையும், இரப்பும்.

(வ்யா.) 'பேற்றுக்கு' என்று தொடங்கி. அதாவது - பலஸித்திக்குச் சேதநன்பக்கல் உண்டாகவேண்டுவது - ஸ்வயத்நத்தாலே 4 அவன் பண்ணும் ரக்ஷணத்தை விலக்காதொழிகையும், அது புருஷார்த்தமாகைக்கு உறுப்பான இரப்புமென்கை.

'இங்ஙனன்றிக்கே, இவன்பக்கலிலும் சிலஸுக்ருதம் உண்டானால் ஆகாதோ?' என்ன, அது உபாயபூதனுக்கு அநிஷ்டமென்னுமத்தை அருளிச்செய்கிறார்

---

1. ஸாதந கௌரவ லாகவங்களில் - உபாயமாகக் கொண்டுள்ளவற்றின் அருமையிலும் எளிமையிலும். 2. தத்தத் வ்யாஜேந பலப்ரதன் - அந்தப் பக்தியையும் ப்ரபத்தியையும் வ்யாஜமாகக்கொண்டு பயனைத் தருபவன். 3. பேற்றுக்கு - புருஷார்த்தத்துக்கு. 4. அவன் - எம்பெருமான்.

மூ.—(உஎச) சக்ரவர்த்தித் திருமகன் பாபத்தோடே வரிலும் அமையு மென்றான்; இவன் புண்யத்தைப் போகட்டு வரவேணு மென்றான்.

(வ்யா.) ‘சக்ரவர்த்தித்திருமகன்’ என்று தொடங்கி. அதாவது—(உகங) ‘‘ராமோ விக்ரஹவாந் தர்ம:’’ [ராமோ விக்ரஹவாந் தர்ம:] என்கிற சக்கரவர்த்தித்திருமகன் (உகச) ‘‘யதிவா ராவணஸ்ஸ்வயம்’’ [யதிவாராவணஸ்ஸ்வயம்] என்று 1 ‘பாபிஷ்டனான ராவணன்தானாகி லும் அழைத்துவாரும்’ என்கையாலே பாபம் பேற்றுக்கு ஹேதுவாக நினைக்கைக்கு உடல் அல்லாமையாலே, 2 ‘பாபத்தோடே வரிலும் அமையும்’ என்றான்; (உகரு) ‘‘க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்’’ [க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்] என்கிறஇவன் ‘ஸர்வதர்மாந் பரித்யஜ்ய’ என்கையாலே பேற்றுக்குஹேதுவாக நினைக்கைக்கு உடலான புண்யத்தைப் போகட்டுவரவேணு மென்றான் என்கை. ஆகையால், 3. ஸஹாயாந்தர ஸம்ஸர்க்க அஸஹனான உபாயபூதனுக்கு இவன்பக்கல் ஸுக்ருதம் அநிஷ்டம் என்று கருத்து.

இவ்வர்த்தத்தில் இழிந்தவனுக்கு ஆஸ்திகனாய் உஜ்ஜீவித்தல், நாஸ்திகனாய் நசித்தல் ஒழிய, மத்யமஸ்திதியில்லை என்னுமத்தைப் பூர்வாசார்ய வசநந்தாலே அறிவிக்கிறார்

மூ.—(உஎரு) ‘‘ஆஸ்திகனாய் இவ்வர்த்தத்தில் ருசி விஸ்வாஸங்களுடையனாய் உஜ்ஜீவித்தல், நாஸ்திகனாய் நசித்தல் ஒழிய நடுவில் நிலையில்லை’’ என்று பட்டர்க்கு எம்பார் அருளிச்செய்த வார்த்தை.

---

1. ராவயதி [உலகத்தாரைத் தன் கொடுஞ்செயலாலே கதறச்செய்பவன்] என்கிற வ்யுத்பத்தியாலே ராவணஶப்தம் உண்டானதாகையால், அதற்கு அர்த்தம் அருளிச்செய்கிற இடத்தில், ‘பாபிஷ்டனான ராவணன்’ என்கிறார். ராவணன்தானாகிலும் - ராவணனாகவே யிருந்தாலும் என்றபடி: இங்கே உள்ள சொற்போக்கில், இப்போது நம்மைச் சரணமாக அடைந்தவன் விபீஷணனன்றிக்கே ராவணனாயிருந்தால் நலம் என்ற அர்த்தம் தோன்றும். 2. பாபம் எம்பெருமானுடைய நிரபேக்ஷ உபாயத்வத்தைத் தடுக்காமல் அதை ப்ரகாஶப்படுத்துமாகையால், ‘பாபத்தோடே வரிலும் அமையு மென்றான்’ என்றது; அங்ஙனன்றி, புண்யம் எம்பெருமானது நிரபேக்ஷ உபாயத்வத்தைத்தவிர்க்கக்கூடிய தாகையால், அவற்றை விட வேண்டியதாயிற்று. 3. ஸஹாயாந்தர ஸம்ஸர்க்க அஸஹன் - வேறொரு ஸஹாயத்தின் ஸம்பந்தத்தைப் பொறாதவன்.

(வ்யா.) 'ஆஸ்திகனாய்' என்று தொடங்கி. அதாவது- 'இவ்வர்த்தத்தில் அந்விதனானவன் பகவத்ப்ரபாவத்தால் 'இது ஸத்யம்' என்று ஆஸ்திகனாய் இவ்வர்த்தத்தில் ருசியும் 'இது தப்பாது' என்கிற விஶ்வாஸமு முடையனாய் உஜ்ஜீவித்தல், ஶாஸ்த்ரங்களெல்லாம் ஒருதலையும் இது ஒருதலையுமாய் இப்படி யிருப்பதொன்றுண்டோ?' என்று 1 நாஸ்திகனாய் இத்தை அநாதரித்து நஶித்தலித்தனையொழிய, 2 நடுவிலொருநிலையில்லை' என்று ஸகலஶாஸ்த்ர வித்தமரான பட்டருக்கு ஆப்ததமரான எம்பார் அருளிச்செய்த வார்த்தை யென்கை.

3. 'வ்யவஸாயஹீநனுக்கு இதில் அந்வயம் விநாஶத்துக்கு உடலாம்' என்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார்

ஸூ—.(உஎசு) வ்யவஸாயம் இல்லாதவனுக்கு இதில் அந்வயம், ஆமத்தில் போஜநம்போலே.

(வ்யா.) 'வ்யவஸாயம்' என்று தொடங்கி. அதாவது - இதிற் சொல்லுகிற த்யாக ஸ்வீகாரங்களுக்கு ஈடான வ்யவஸாயம் இல்லாதவனுக்கு 4 இதிலுண்டான அந்வயம், அஜீர்ணதஶையிற் பண்ணின போஜநம் மரணஹேதுவாமாபோலே விநாஶஹேதுவாய்ப் பர்யவஸிக்கு மென்கை.

இதுதனக்கு அதிகாரிகள் இன்னா ரென்னுமத்தை அருளிச்செய்கிறார்

ஸூ.—(உஎஎ) * "விட்டுசித்தர் கேட்டிருப்பா" என்கிறபடியே, அதிகாரிகள் நியதர்.

(வ்யா.) *'விட்டுசித்தர்கேட்டிருப்பரென்கிறபடி யேஅதிகாரிகள் நியதர்' என்று. அதாவது - * "செம்மையுடைய திருவரங்கர்தாம் பணித்த, மெய்ம்மைப்பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்'

---

1. நாஸ்திகன் - கீதா சாஸ்த்ரங்களெல்லாம் பக்த்யுபாயத்தை ப்ரதிபாதிக்க, இந்த ஶ்லோகம் மாத்திரம் ப்ரபத்தியை ப்ரதிபாதிப்பதால் இது ஶாஸ்த்ரநிஷ்க்ருஷ்டமான அர்த்தந்தானென்று இவ்வர்த்தத்தில் நம்பிக்கையில்லாதவன். 2. நடுவில் ஒரு நிலையில்லை - ஐசுவர்ய கைவல்யங்களி லிருப்பில்லை: கர்மம் முதலிய உபாயங்களில் பலஸங்கத்தையும் கர்த்ருத்வத்தையும் விட்டிட்டதனாலும், இவ்வர்த்தத்தில் நம்பிக்கை யில்லாமையாலும் ஐசுவரிய கைவல்யங்களும் இல்லையாயின. 3. வ்யவஸாய ஹீநன் - மஹாவிஶ்வாஸமற்றவன். 4. இதில் - இந்தப்ரபத்தியில்.

*நாச்சியார்தி. - கO - கO.

என்று 1. 'கரணத்ரயத்தாலும் செவ்வியராய் 2. அதுதன்னை அர்த்த க்ரியாகாரியாய்க்கொண்டு கோயிலிலேசாய்ந்தருளினவர்தாம், அர்ஜுந வ்யாஜத்தாலே திருத்தேர்த்தட்டிலேநின்று அருளிச்செய்த யதார்த்தமுமாய்ச் 3 சீரியதுமாய் ஸுலபமுமான "மாமேகம்ஶரணம்வ்ரஜ" என்கிற வார்த்தையைப் பெரியாழ்வார் கேட்டு, தந்நிஷ்டரா யிருப்பர்' என்கிறபடியே இவ்வர்த்தத்துக்கு அதிகாரிகள் இதுகேட்டால் 4. இதன்படியே நியதராயிருக்குமவர்களென்கை,

இவ்வர்த்தநிஷ்டரான ஆழ்வார்களுடைய திவ்யஸூக்தியில் இதுக்கு அர்த்தமாக, அநுஸந்திக்கப்படுமவற்றை அருளிச்செய்து இதுதன்னை நிகமிக்கிறார்

மூ.—(உஎஅ) * "வார்த்தையறிபவர்" என்கிற பாட்டும், † "அத்தனாகி" என்கிறபாட்டும் இதுக்கு அர்த்தமாக அநுஸந்தேயம்.

சரமஶ்லோகப்ரகரணம் முற்றிற்று

(வ்யா.) 'வார்த்தையறிபவர்' என்று தொடங்கி. அதாவது - * "வார்த்தையறிபவர் - பேர்த்தபிறப்பொடு நோயொடுமூப்பொடு இறப்பவை பேர்த்துப் பெருந்துன்பம் வேரறநீக்கித் தன்தாளின்கீழ்ச் சேர்த்து அவன்செய்யுஞ் சேமத்தை யெண்ணித் தெளிவுற்று - மாயவற்கு ஆளன்றி யாவரோ" என்று ' "மாமேகம் ஶரணம்வ்ரஜ - ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்ற நல்வார்த்தையை அறியுமவர்கள் - 5 பரணிக்கூடு ‡ எரிந்தாற்போலே இவ்வாத்மாவைச் சூழப் பொதிந்துகிடக்கிற ஜந்மங்களோடும், அவைபுக்கவிடத்தே புகக்கடவதான வ்யாதியோடும், அங்ஙனேயாகிலும் சிறிதுநாள் செல்லாதபடி இடிவிழுந்தாற்போலே வரும் ஜரையோடும், அங்ஙனேயாகிலும் இருக்கவொண்ணாதபடி இவனுக்கு அநபிமதமான விநாஶமு மாகிற

1. கரணத்ரயம் - மநோவாக்காயம். 2. அதுதன்னை அர்த்தக்ரியாகாரியாய் - அந்தச் சரமஶ்லோகத்திற் சொன்ன அர்த்தத்தைத் தன் செயலாலே நடத்துபவராய். 3. சீரியது - சிறந்தது. 4. இதன்படியே நியதர் - இந்த ஶ்லோகத்திற் சொன்னபடியே நியமமுள்ளவர். 5. பரணிக்கூடு வரிந்தாற்போலே - ஒருவகைப்பூச்சி தன்னைச் சுற்றிக்கொள்ளும்படி தன் வாயெச்சிலினாற் கூண்டை அமைத்துக்கொண்டாற்போல.

* திருவாய் - எ - ரு - கo. † திச்சந்த விருத்தம் - ககரு.

‡ 'பரந்தாற்போலே' என்று சில ஸ்ரீகோசம்.

இவற்றை 1. விரகர் நெடுஞ்சுவர் தள்ளுமாபோலே தள்ளி, அவை போன அநந்தரம் வரக்கடவதான கைவல்யமாகிற மஹாதுஃகத்தை ஸவாஸநமாகப் போக்கி, பாதரேகைபோலே தன் திருவடிகளின் கீழே சேரும்படி பண்ணி, புநராவ்ருத்தியறும்படி அவன்பண்ணும் ரக்ஷையை அநுஸந்தித்து, 2. வ்யவஸிதராய்க்கொண்டு தங்களுக்கு ஆஸ்ரயணீயனாய் விரோதிநிவர்த்தகனான ஆஸ்சர்யபூதனுக்கு ஒழிய வேறொருவர்க்கு ஆளாவரோ?' என்று நம்மாழ்வாரருளிச்செய்த "வார்த்தையறிபவர்" என்கிற பாட்டும், — * "முத்தனார் முகுந்தனார் - ஒத்தொவ்வாத பல்பிறப்பொழித்து நம்மையாட்கொள்வான் - அதததுகி யன்னையாகி யாளுமெம்பிரானுமாய்ப் புகுந்து - நம்முள் மேவினார்; ஏழைநெஞ்சமே! எத்தினால் இடர்க்கடல்கிடத்தி" என்று 3. 'ஹேயப்ரத்யநீகராகையாலே 4. அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தராய் முக்திபூமிப்ரதரானவர் ஸகல தேஹவர்த்திகளான ஆத்மாக்களும் ஜ்ஞானைகாகாரதயா ஒத்துத் தேவாதிபேதத்தாலே ஒவ்வாமலிருக்கும் பலவகைப்பட்ட ஜந்மங்களைப் போக்கி, நித்யஸம்ஸாரிகளாய்ப் போந்த நம்மை நித்யஸூரிகள் கொள்ளும் அடிமையைக் கொள்ளுகைக்காக ஹிதமே ப்ரவர்த்திப்பிக்கும் பிதாவாயும் ப்ரியமே ப்ரவர்த்திப்பிக்கும் மாதாவாயும் அடிமைகொள்ளக்கடவ நம்முடைய ஸ்வாமியாயும் இப்படி ஸர்வவித பந்துவுமாய், நம்முடைய 5. தண்மையையும் தம்முடைய பெருமையையும் பாராதே நம்முடைய 6. ஸர்வபரத்தையும் தாமே யேறிட்டுக்கொண்டு செய்வாராக ஹேயமான நம்முள்ளே புகுந்து ஒருநீராகப் பொருந்தினார்; அறிவிலியான நெஞ்சே! நம்முடைய ஹிதம் அறிகைக்கு நாம் ஸர்வஜ்ஞராயோ அவன் அஜ்ஞனாயோ, ஹிதத்தைப் ப்ரவர்த்திப்பிக்கைக்கு நாம் ஸக்தராயோ அவன் அஸக்தனாயோ, கார்யஞ் செய்துகொள்ளுகைக்கு நாம் ப்ராப்தராயோ அவன் அப்ராப்தனாயோ, தன்மேன்மைபாராதே தாழநின்று உபகரிக்குமவனா

---

1. விரகர் - யுக்தியாகத்தொழில்செய்ய வல்லவர். 2. வ்யவஸிதராய் - மஹாவிஸ்வாஸமுடையராய். 3. ஹேயப்ரத்யநீகர் - நிஹீநமானவற்றுக்கு மாறாயிருப்பவர். 4. அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தர் - ஸம்ஸாரத்தின் வாஸனை தானும் தீண்டப்பெறாதவர். 5. தண்மை - தாழ்வு. 6. ஸர்வபரம் - ஸமஸ்தமான பாரம்.

* திருச்சந்தவிரு. ௧௧௫.

யிருக்க எத்தாலே நீ து:கஸாகரத்தில் கிடக்கிறது?' என்று திருமழி சைப்பிரா னருளிச்செய்த "அத்தனாகி" என்கிற பாட்டும் இந்த ஶ்லோகத்துக்கு அர்த்தமாக அநுஸந்தேய மென்கை.

ஆக, இத்தால் ஸ்வீகாராங்கதயா த்யாஜ்யமான தர்மவிஶேஷங் களையும், அந்தத் தர்மங்களினுடைய த்யாகப்ரகாரத்தையும், அந்தத் தர்மத்யாக பூர்வகமாகப் பற்றும் விஷயத்தினுடைய ஸௌலப்யாதி குணயோகத்தையும், அக்குணவிஶிஷ்ட வஸ்துவினுடைய ஸஹாய அஸஹத்வலக்ஷணமான நைரபேக்ஷ்யத்தையும், நிரபேக்ஷ வஸ்துவி னுடைய உபாயபாவத்தையும், அத்தை உபாயத்வேந ஸ்வீகரிக்கை யையும், ஸ்வீக்ருதமான உபாயத்தினுடைய ஜ்ஞாநஶக்த்யாதிகுண யோகத்தையும், அக்குணவிசிஷ்டவஸ்துவிலே ந்யஸ்தபரனான அதி காரியையும், அதிகாரிக்கு விரோதியான பாபஸமூஹத்தையும், அப்பாபவிமோசந ப்ரகாரத்தையும், அப்பாபவிமோசகனைப் பற்றின அதிகாரியுடைய 1. நைர்ப்பர்யத்தையும் சொல்லிற்றாயிற்று.

சரமஶ்லோகப்ரகரண வ்யாக்யாநம் முற்றிற்று.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

சீயர் திருவடிகளே ஶரணம்.

முமுக்ஷுப்படி ஸவ்யாக்யாநம்

ஸம்பூர்ணம்.

---

1. நைர்ப்பர்யம் - பாரமற்றிருக்கை.

திருமந்த்ரார்த்தத்தின்

ப்ரமாணத்திரட்டு.

தைத்தரீயோபநிஷத் - ஆநந்த. 6 - அநு.

க. அஸந்நேவ ஸ பவதி । அஸத் ப்ரஹ்மேதி வேத சேத் ।
அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத । ஸந்தமேநம் ததோ விது: ॥

(இதன்பொருள்.) ப்ருஹ்ம - ப்ருஹ்மத்தை, வேத இதி - அறிகிருன் என்பது, அஸத் சேத் - (ஒருவனுக்கு) இல்லையாகில், ஸ:—அவன், அஸத் ஏவ- (இருந்தும்) இல்லாதவனுகவே, பவதி - ஆகிருன் — ப்ருஹ்ம வேத - ப்ருஹ்மத்தை அறிகிருனென்பது, அஸ்தி சேத் - (ஒருவனுக்கு) உள்ளதாஞல், தத:—அதனல், ஏநம் - இவனை, ஸந்தம் - ஸத்தாக, விது:— அறிகிருர்கள்; (என்றவாறு.) ப்ருஹ்மஜ்ஞாநமுள்ளவன் ஸத்து: இல்லாதவன் அஸத்து என்று கருத்து. இப்படி இந்த ஶ்ருதிக்கு அர்த்தம் கொள்ளாமல், 'ப்ருஹ்மத்தை இல்லையென்று அறிந்தவன் அஸத்து, உண்டு என்று அறிந்தவன் ஸத்து' என்ருல், அப்போது ப்ருஹ்மமுண்டு என்ருவது இல்லை என்ருவது அறியாதவனை ஸத்து என்ருவது அஸத்து என்ருவது சொல்ல வழியில்லாமற் போவது காண்க.

ஆழ்வான் அருளிச்செய்த முக்தகம்.

உ. லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் ।
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ॥

(இ-ள்.) லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் - ஶ்ரிய:பதியைத் தொடக்கத்திலுடையதும், நாதயாமுந மத்யமாம் - ஶ்ரீமந்நாதமுனிகளையும் யமுனைத்துறைவரையும் நடுவிலுடையதும், அஸ்மத் ஆசார்ய பர்யந்தாம் - எம்முடைய ஆசார்யர் வரையிலுமுள்ளதுமான, குரு பரம்பராம் - குருபரம்பரையை, வந்தே - நமஸ்கரிக்கிறேன்; (எ-று.)

ங. ஸ்வஜ்ஞாநம் ப்ராபகஜ்ஞாநம் ப்ராப்யஜ்ஞாநம் முமுக்ஷுபி: ।
ஜ்ஞாநத்ரயமுபாதேயம் ஏதத் அந்யந்ந கிஞ்சந ॥

(இ-ள்.) ஸ்வ ஜ்ஞாநம் - தன்னுடைய ஜ்ஞாநமும், [ஸ்வரூபஜ்ஞாநமும்] ப்ராபகஜ்ஞாநம் - உபாய ஜ்ஞாநமும், ப்ராப்ய ஜ்ஞாநம், - புருஷார்த்த ஜ்ஞாநமும், (ஆகிய), ஜ்ஞாந த்ரயம்-மூன்று வகைஞானமும், முமுக்ஷுபி:—முமுக்ஷுக்களால், உபாதேயம் - கொள்ளத்தக்கது; ஏதத் அந்யத் - இதைக்காட்டிலும் வேறொன்று, கிஞ்சந - கொஞ்சமும், ந-வேண்டியதில்லை; (எ-று.)

ஸ்ரீஸஹஸ்ரநாமபாஷ்யம்.

ச. மந்தாரம் த்ராயத இதி மந்த்ர: ॥

(இ-ள்.) மந்தாரம் - மநநம் செய்பவரை, த்ராயதே - காப்பாற்று கிறது, இதி - என்கிற காரணத்தினாலே, மந்த்ர:—மந்த்ர மென்று சொல்லப் படுகிறது; (எ-று.)

அஷ்டஶ்லோகீ - 4.

ரு. தேஹாஸக்தாத்மபுத்திர்யதி பவதி பதம் ஸாது வித்யாத் த்ருதீயம் ஸ்வாதந்த்ர்யாந்தோ யதி ஸ்யாத் ப்ரதமம் இதரஶேஷத்வதீஶ்சேத் த்விதீயம் । ஆத்மத்ராணோந்முகஶ்சேந் நம இதி ச பதம் பாந்தவாபாஸலோல: ஶப்தம் நாராயணாக்யம் விஷயசபலதீஶ்சேச் சதுர்த்தீம் ப்ரபந்ந: ॥

(இ-ள்.) ப்ரபந்ந:—ப்ரபந்நனானவன், தேஹ - சரீரத்தில்தானே, ஆஸக்த - சேர்ந்த, ஆத்மா - ஆத்மா என்கிற, புத்தி:—நினைவை உடையவனாக, பவதி யதி - ஆவனே யானால், [சரீரமே ஆத்மா என்கிற மயக்கத்தை யுடையவனானல்], த்ருதீயம் பதம் - (ஜ்ஞாநத்தை யுடைய தென்று தெரிவிப்பதன் மூலமாய்த் தேஹத்தில் வேறுபட்டது ஆத்மாவென்றுகாட்டுகிற) மூன்றாவதான பதத்தை [மகாரத்தை], ஸாது - நன்றாக [அர்த்தத்தோடு], வித்யாத் - அறியக் கடவன்; ஸ்வாதந்த்ர்ய அந்த:—ஸ்வாதந்த்ர்யத்தால் அறிவுகெட்டவனாக [தான் ஸ்வதந்த்ர னென்று எண்ணுகிற அறியாமையை உடையவனாக], ஸ்யாத் யதி - ஆவனேயானல், ப்ரதமம் - (ஈஶ்வரசேஷமென்று தெரிவிக்கிற ப்ரணவத்தின்) முதல்பதத்தை [அகாரத்தை], (வித்யாத்—;)இதர - (ஸ்ரீமந்நாராயணனைக் காட்டிலும்) மற்றவர்களுக்கு, ஶேஷத்வ - அடிமையென்கிற, தீ: சேத் - புத்தி உண்டாகுமாயின், த்விதீயம் - (அந்ய சேஷத்வத்தைத் தவிர்க்கிற) இரண்டாவதான பதத்தை [உகாரத்தை], (ஸாது வித்யாத்—;) ஆத்ம த்ராண - தன்னைத் தானே காப்பாற்றுதலில், உந்முக: சேத் - முயற்சியுடையவனாக இருப்பானானல் [தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்பவனென்ற எண்ணத்தை யடைந்தால்], நம: இதி பதம் - (ஸ்வரக்ஷணத்தில் தனக்கு ஸம்பந்த மில்லாமையைத் தெரிவிக்கிற) நம: என்னும் பதத்தை, (ஸாது வித்யாத்—;) பாந்தவ ஆபாஸ லோல: (சேத்) - ஆபாஸ பந்துக்களிடத்தில் [கர்மஸம்பந்தத்தால் பிதாபுத்ராதி பந்துக்கள்போலத் தோன்றுகின்றவர்களிடத்தில்] ஆசையுடையவனாக இருப்பானாகில், நாராயணாக்யம் ஶப்தம்- (ஈஶ்வரனே எல்லாஉறவும்முறையுமென்று தெரிவிக்கின்ற) நாராயணனென்கிற பதத்தை, (ஸாது வித்யாத்—;) விஷய சபல தீ: சேத்—பஞ்சேந்த்ரிய விஷயங்களிற் செல்லுகிற புத்தியை யுடையவனாகில், சதுர்த்தீம்— (பகவத்கைங்கர்யப்ரார்த்தநா ப்ரகாசகமான) வ்யக்தசதுர்த்தியை, (ஸாது வித்யாத்—;) (எ-று.)

வ்ருத்தஹாரீதஸ்ம்ருதி - 3 - 45.

௬. ஜெவொயஜ-ஂஷிஸாாமி தமெவாயவணாநிவ ।
ஸவஷாக்ஷராநஸ்ஂ யவ்ாந்யவிவாஜயழ ॥

(இ-ள்.) ருச:—ருக்வேதங்களும், யஜூம்ஷி-யஜுர்வேதங்களும், ஸாமாநி-ஸாமவேதங்களும், ததைவ - அப்படியே, அதர்வணாநி ச - அதர்வண வேதங்களும், அந்யத் - (இவைகளைக் காட்டிலும்) வேறாய், வாங்மயம் - ஶப்தஸ்வரூபமா யிருக்கிற, யத் ச - யாதொரு வேத உபப்ரும்ஹணங்களான ஸ்ம்ருத்யாதிகளுண்டோ, (அவையும்), ஸர்வம் - (ஆகிய) எல்லாமும், அஷ்டாக்ஷர - திருமந்த்ரத்தினுடைய, அந்த: - உள்ளே, ஸ்தம் - இருப்பனவாம்; (எ-று.)

நான்குவேதங்களும் அவைகட்கு உபப்ரும்ஹணங்களான ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களாகிய எல்லாமும் திருமந்த்ரத்தினற் ப்ரதிபாதிக்கப்படுகின்ற அர்த்தபஞ்சகங்களையேப்ரதிபாதிப்பன என்றபடி. அஷ்டாக்ஷராந்தஸ்தம்என்பதற்கு - திருவஷ்டாக்ஷரத்தினுள்ளே அடங்கியிருக்கின்ற ப்ரணவத்திலேயே வேதம் முதலியன எல்லாம் அடங்கி யிருக்கின்றன என்று சொல்லுதலும் உண்டு.

நாரதீயகல்பத்தில்அஷ்டாக்ஷரப்ருஹ்மவித்யையில் 1 - 11.

௭. ஜநாணாம்ஂவாரொமொநா ஶஹ்யாநாஂஶஹ்யஜதஂ।
வவிதஂவவிதாணாஂ ஜஙுஜநஸநாதந: ॥

(இ-ள்.) ஸநாதந:—மிகவும் பழமையானதான, மூலமந்த்ர:—எல்லாமந்த்ரங்கட்கும் மூலமான மந்த்ரமாகிய திருவஷ்டாக்ஷரமானது,—மந்த்ராணும் - மந்த்ரங்கட்குள்ளே, பரம:—மிகவும் சிறந்த, மந்த்ர:—மந்த்ரமாகும்; குஹ்யாநாம் - ரஹஸ்யங்களுக்குள்ளே, உத்தமம் குஹ்யம் - உத்தமமான ரஹஸ்யமாகும்; பவித்ராணும் - பவித்திரங்களுக் கெல்லாம், பவித்ரம் ச - பவித்ரமுமாகும்.

௮. ஶாாஂவகாஶயெஜீாநு ஜஂயதெநமொவயெசு ।
அவ காஶவகாஶாஹ்யாஂ க்ஷீயெதெஸஂவஷாயாஷீ ॥

(இ-ள்.) தீமாந் - புத்திமானனவன், குரும் - ஆசார்யனை, ப்ரகாஶயேத்-ப்ரகாசிப்பிக்கக்கடவன்; மந்த்ரம் - (தன்னை) அநுஸந்திப்பார்க்கு ரக்ஷகமான மந்த்ரத்தை, யத்நேந-முயற்சியினலே, கோபயேத் - (அநதிகாரிகள்செவிப்படாதபடி) ரக்ஷிக்கக்கடவன்; அப்ரகாஶ ப்ரகாஶாப்யாம் - (ஆசார்யனை) ப்ரகாசப்படுத்தாததனலும் (மந்த்ரத்தை) ப்ரகாசப்படுத்துவதாலும், ஸம்பத் ஆயுஷீ - ஸம்பத்தும் ஆயுஸ்ஸும், க்ஷீயேதே - நசித்துப்போம்; (எ-று.)

விஹகேந்த்ரஸம்ஹிதை, 22 - படலம்

௯. ஶெஷாயீநஂ ஜஶதவஂ ஜஂதாயீநதெெஷவதழ ।
தஂதஂபாாஹணாயீநஂ தஸா ஷாஹணெெஷவதழ ॥

(இ-ள்.) ஸர்வம் ஜகத் - எல்லாஜகத்தும், தைவ அதீநம் - தைவத்திற்கு அதீனமாயிருக்கும்; தைவதம் - அந்தத் தெய்வமானது, மந்த்ர அதீநம் - மந்த்ரத்திற்கு அதீனமாயிருக்கும்; தத் மந்த்ரம் - அந்த மந்த்ரம், ப்ராஹ்மண அதீநம் - ஆசார்ய அதீநமாயிருக்கும்; தஸ்மாத்-ஆகையால், ப்ராஹ்மண:—ப்ரஹ்ம ஜ்ஞான ப்ரதனான ஆசார்யனே, தைவதம்-தெய்வமாகிறான்; (எ-று.)—ப்ரஹ்ம நயதி [பரப்ராஹ்மத்தை யடைவிக்கிறான்] என்ற வ்யுத்பத்தியால், ப்ராஹ்மணஶப்தம் ஆசார்யனென்ற அர்த்தத்தைத் தந்தது.

விஷ்ணுதத்வம்.

கo. மந்த்ரே தத்தேவதாயாஞ்ச ததா மந்த்ரப்ரதே குரௌ ।
த்ரிஷு பக்திஸ்ஸதா கார்யா ஸா ஹி ப்ரதமஸாதநம் ॥

(இ-ள்.) மந்த்ரே - மந்திரத்தினிடத்திலும், தத் தேவதாயாம் ச - அதனுடைய தைவத்தினிடத்திலும். ததா - அப்படியே, மந்த்ர ப்ரதே - மந்த்ரத்தை யுபதேசித்த, குரௌ - ஆசார்யனிடத்திலும், த்ரிஷு - இம்மூவரிடத்திலும், பக்தி:—பக்தியானது, ஸதா - எப்போதும், கார்யா - செய்யத்தக்கது; ஸா - அந்தப் பக்தி, ப்ரதம ஸாதநம் ஹி - முதலான ஸாதநமன்றோ? (எ-று.) ததா என்பதற்கு - தேவதையோடு ஒத்தவனான என்றுமாம்.

பகவச்சாஸ்த்ரம்.

கக. தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: ।
நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச ॥

(இ-ள்.) பரமாத்மந:— ஈஶ்வரனுக்கு, ஸர்வே ஆத்மாந:—எல்லா ஆத்மாக்களும், ஸ்வத:—ஸ்வரூபத்தினாலே, தாஸ பூதா: ஹி - ஶேஷபூதர்களாய்ஸத்தை பெற்றவர்களன்றோ? தேஷாம் - அவர்களுக்கு, பந்தே - பத்தாவஸ்தையிலும், ததைவ ச - அப்படியே, மோக்ஷே - முக்தாவஸ்தையிலும், அந்யதா - வேறான ஸ்வாதந்த்ரயம், லக்ஷணம் ந - அஸாதாரணதர்ம மன்று; (எ-று.) - இத்தால், ஶேஷத்வம் சேதந அசேதநங்கட்குப் பொதுவானதாயிருந்தாலும், ஆத்மாவுக்கு முக்கியமான ஸ்வரூபம்: ஜ்ஞாத்ருத்வ மில்லா விட்டாலும், ஸ்வரூப ஹாநி யில்லை யென்பது தோன்றும்.

தைத்திரீய நாராயணாநுவாகம் ‖.

கஉ. பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம்.

(இ-ள்.) விஶ்வஸ்ய - உலகங்களுக்கு, பதிம் - ஸ்வாமியாயும், ஆத்ம ஈஶ்வரம் - தனக்குத்தானே ஈஶ்வரனாயும்; (எ-று.)

விஷ்ணுதத்வம்.

கங. ஸ்வக்ரோடநிஸ்ஸஞ்ஜாதம் ஸ்வாபிக்யம் ப்ரஹ்மணி ஸ்திதம் ।
உபயோரேஷ ஸம்பந்தோ ந பரோ ஹி மதோ மம ॥

